# மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையில்

## தரம் III ற்கு ஆட்சேர்ப்பு

### செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2014 (2015) வழிகாட்டிநூல்

**மொழித்திறன்**

**உளச்சார்பு**

*கடந்த கால பரீட்சை வினாக்கள் விரிவான விடைகளுடன்*

P. Umashankar

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாகாண

# அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை வழிகாட்டி நூல் - 2014 (2015)

- ☆ உளச்சார்புப் பரீட்சை விடயங்களும் கடந்தகால மாதிரி வினாவிடைகளும்
- ☆ மொழித்திறன் விடயங்களும் கடந்தகால மாதிரி வினாவிடைகளும்
  - கிரகித்தல்
  - சுருக்கம்
  - கட்டுரையாக்கம்
  - கடிதம்


ஆக்கியோன் :

**P. Umashankar**

M.Com (Kelaniya)

Lecturer

Sri Lanka Technical College

Colombo - 10.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்....

நூலின் பெயர் : **மாகாண அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை வழிகாட்டி நூல் - 2014 (2015)**

ஆசிரியர் : P. உமாசங்கர்

பதிப்பு : 1ம் பதிப்பு 2015 பெப்ருவரி

பதிப்புரிமை : ஆசிரியருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

மாகாண அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை வழிகாட்டி நூல் - 2014 (2015) எனும் நூலினூடாக உங்களை சந்திப்பதையிட்டு பெரு மகிழ்ச்சி யடைகிறேன்.

இப்போட்டிப் பரீட்சைகளுக்கு உளச்சார்பு, மொழித்திறன் ஆகிய பாடங்களினூடாக பரீட்சை நடாத்தப்படவுள்ளது. இப்பரீட்சை தொடர்பான சகல விடயங்களும் மற்றும் கடந்தகால வினா விடைகளும் மிக விரிவான முறையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகள் இந்நூலில் காட்டப்பட்டுள்ளவாறு விடயங்களை தொடர்ந்து பயிற்சி செய்து மனனம் செய்வதன் மூலம் சிறந்த புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பது எனது நம்பிக்கை.

இப்போட்டிப் பரீட்சைகளுக்குத் தோற்றும் அனைத்து மாணவர்களும் சிறந்த புள்ளிகளைப் பெற்று தாய்நாட்டிற்கு சிறந்த சேவையை வழங்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

இந்நூல் தொடர்பான குறைகளை என்னிடமும், நிறைகளை மற்றவர்களிடமும் கூறுங்கள்.

**" எழுதுகருவி உள்ளவரை தொடரும் எனது நூற்பணி**
**இதனால் பயனடையும் தமிழ் பேசும் மாணவமணி "**

- ஆசிரியர்
01-02-2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடத்திட்டம்

**எழுத்துப் பரீட்சை :**

(1) மொழித்திறன் - 100 புள்ளிகள் - 2 1/2 மணித்தியாலம்

(2) உளச்சார்பு - 100 புள்ளிகள் - 1 மணித்தியாலம்

**உளச்சார்புப் பரீட்சை :**

இவ்வினாத்தாள் பரீட்சாத்தியின் எணகணிதத் திறன் தர்க்க ரீதியாக சிந்திக்கும் ஆற்றல், பொது விவேகம் என்பனவற்றை அளவிடும் வகையில் தயாரிக்கப்பட்ட வினாக்களுடன் தொடர்புபட்ட பாடத்தினைக் கொண்டிருக்கும். இந்த வினாப்பத்திரமானது பல்தேர்வு வினாக்களையும் குறுகிய விடைகளுக்கான வினாக்களையும் உள்ளடக்கிய 50 வினாக்களைக் கொண்டது எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

**மொழித்திறன் பரீட்சை :**

வெளிப்படுத்தல், கிரகித்தல், எழுத்துக் கோர்வை, மொழி மற்றும் கட்டுரை, தரப்படும் கடிதம் ஒன்றை வரைதல், கொடுக்கப்படும் தரவுகளைக் கொண்டு வரைபுகள் மற்றும் அட்டவணைகளைத் தயாரித்தல், கொடுக்கப்படும் பந்திகளைச் சுருக்கி எழுதுதல், சில வாக்கியங்களின் உள்ளடக்கத்தினை ஒரு வாக்கியமாக எழுதுதல், எளிய இலக்கண விதிகளைப் பிரயோகித்தல் ஆகியவற்றில் பரீட்சாத்தியின் திறனைச் சோதிப்பதற்கு வடிவமைக்கப்பட்ட வினாக்களுடன் தொடர்புபட்ட பாடத்தினை இவ் வினாத்தாள் கொண்டிருக்கும். எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாத்தாள் பற்றிய ஆசிரியர் நோக்கு

இப்போட்டிப் பரீட்சைக்கான மொழித்திறன் வினாத்தாளானது வழமையாக நடைமுறையிலுள்ள வினாப்பத்திரத்தை விட சற்று மாறுபட்ட முறையில் வடிவமைக்கப்படவுள்ளது. இதன் காரணமாகவே இவ்வினாத்தாளுக்கான கால அளவும் 2 1/2 மணித்தியாலங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் இவ் வினாத்தாளானது எளிய இலக்கண விதிகளை பிரயோகித்தலுடன் கூடிய பல்தேர்வு வினாக்கள், கட்டுரையாக்கம், கடிதம் வரைதல், பந்திகளை சுருக்கி எழுததல், சில வாக்கியங்களின் உள்ளடக்கத்தினை ஒரு வாக்கியமாக எழுதுதல். பந்தி ஒன்று தரப்பட்டு அதனுடன் தொடர்புடைய வினாக்களுக்கு விடையளித்தல் போன்ற தன்மைகளில் வடிவமைக்கப்படவுள்ளது.

அடுத்து உளச்சார்பு வினாத்தாளானது இந்நூலில் காட்டப்பட்டுள்ளவாறு சகல உளச்சார்பு பகுதிகளையும் உள்ளடக்கியதாக 50 பல்தேர்வு மற்றும் சுருக்க விடைகளுக்கான வினாக்களாக வடிவமைக்கப்படவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01. உளச்சார்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளச்சார்பு விடயங்கள்

## 1. மொழித்திறன்

பொதுவாக எந்த ஓர் வினாத்தாளிலும் 1 தொடக்கம் 5 வரையான வினாக்கள் வரை இடம்பெறலாம். தரம் 10-11 தமிழ்மொழி அரச பாடநூலில் உள்ள அருஞ் சொற்கள், ஒத்தகருத்து, எதிர்க்கருத்து பதங்கள் தொடர்பாக பரந்த அறிவு இருத்தல் வேண்டும். ஒரே கருத்துடைய சோடிச் சொற்கள், எதிரான கருத்துடைய சொற்கள் என்ப வற்றை தெரிவு செய்யும்போது முதலில் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ள சொற்களுக்கிடையேயான தொடர்பை தெளிவாக இனங்காணுதல் வேண்டும். மேலும் சில எழுத்துக்களை நீக்கி உருவாக்கப்படும் புதிய சொற்கள் கருத்துள்ள சொற்களாக இருத்தல் வேண்டும்.

## 2. இரகசியக் குறியீட்டுத்திறன்

இப் பகுதியில் குறித்த விடயங்கள் நேரடியாக வெளிப்படுத்தப் படாது மறைமுகமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கும். இம் மறைமுக விடயங்களை கூடவே தரப்பட்டிருக்கும் சகல விடயங் களையும் ஒருங்கிணைத்து அவதானிப்பதன் மூலம் விடைகளைப் பெற முடியும். இங்கு இலகுவாக கண்டறியக்கூடிய விடயங்களில் இருந்து கடினமாக விடயங்களை நோக்கிச் செல்வதன் மூலம் முழுமையான விடைகளை இலகுவாக பெற முடியும்.

## 3. தகவல் ஒழுங்கமைப்பு

தகவல்கள் ஒழுங்கமைப்பு எனும் விடயத்தில் தரப்பட்டுள்ள தகவல்களின் மையக் கருத்தை அவதானித்து தரப்பட்ட விடை களின் உதவியுடன் ஒழுங்கமைக்க முடியும். இங்கு தகவல்கள் சிறு தகவல்களாகவோ, அல்லது படங்களாகவோ அல்லது சிறு விபரண கதைகளாகவோ தரப்படலாம். அடுத்து தகவல்களை தர்க்க ரீதியாக ஒழுங்கமைக்கும் போது இங்கு மூன்று தகவல் களே சம்பந்தப்படும். முதலாவது தகவல் சாதாரண தகவலாகவும், இரண்டாவது தகவல் முதலாவது தகவலின் காரணமாக அல்லது முதலாவது தகவலை விளக்குவதாக அமையும். மூன்றாவது தகவல் முதலாம், இரண்டாம் தகவல்களின் முடிவாக அமைதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. வரிசை ஒழுங்கமைப்பு

இப்பகுதியினுள் குறித்த ஓர் விடயம் தொடர்பாக குறித்த சில நபர்களை ஈடுபடுத்தி அவர்களது ஒழுங்கு முறையை மாற்றிய நிலையில் வினாக்கள் அமைக்கப்பட்டிருக்கும். இதன்போது தரப்பட்ட தரவு களையும் தரப்பட்ட வினாக்களின் விடைகளையும் ஒருங்கே தொடர்பு படுத்தி அவற்றை நிலைக்குத்தாகவோ, கிடையாகவோ அல்லது வட்ட வடிவமாகவோ ஒழுங்கமைக்க வேண்டும். இவ்வாறு சீராக ஒழுங்கமைக்கும் போது வினவப்படும் வினாக்களுக்கு இலகுவாக விடையளிக்க முடியும்.

அடுத்து குழுக்களின் ஒழுங்கமைத்தலின் போதும் தரப்பட்ட நிபந்தனைகளை உரியவாறு பூர்த்திசெய்யக் கூடிய வகையில் அட்டவணைப்படுத்தப்படின் அவ்வகை வினாக் களுக்கும் இலகுவாக விடையளிக்க முடியும்.

## 5. கூற்றுக்கள்

இப்பகுதியின் கீழ் பின்வரும் தன்மையதான வினாக்கள் இடம்பெறும். அதாவது இவ் வினாக்கள் பந்தி ஒன்று தரப்பட்டோ அல்லது கூற்றுக்களாகவோ வினவப்படலாம்.

கீழே தரப்பட்டவாறு வினாக்கள் வினவப்படுமாயின் தரப்பட்ட பந்திக்கு அல்லது கூற்றுக்கு மிகப் பொருத்தமான கருத்தைத் தரும் விடையைத் தெரிவு செய்தல் வேண்டும்.

* உண்மையான கூற்றை தெரிவுசெய்தல்.
* எக்கூற்றின் மூலம் முடிவு மிகவும் உறுதிப்படுத்தப்படும்.
* எக் கூற்று உண்மையாக இருப்பின் முடிவு மிகவும் உறுதிப் படுத்தப்படும்.
* திருத்தமான கூற்றை தெரிவு செய்தல்.
* சாத்தியமான கூற்றை தெரிவு செய்தல்.
* எது பந்தியுடன் தொடர்புறுகின்றது.
* மிகச் சிறந்த முடிவு
* நியாயமான கூற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பந்தியின் பிரதான கருத்தை மிகச்சரியான முறையில் விளக்குவது.
* உய்த்தறியக் கூடிய கூற்று.
* நேரடியாக விளக்குவது.
* கூடிய இயல்தகவு உள்ள நிகழ்ச்சி
* பெறத்தக்க அனுமானம்
* பலப்படுத்தும் விடயம்
* அடிப்படையாக அமைந்த எடுகோள்
* வாதத்தை புலப்படுத்துவது
* ஊகிக்க கூடிய கருத்து
* ஆதரவாக அமையும் கூற்று
* மிக சிறந்த தலைப்பு
* ஆசிரியர் நோக்கம்
* குறிப்பாக உணர்த்தப்படுவது
* மிகவும் வலிமையாக ஆதரிக்கும் கூற்று
* உட்கிடையாக கருதப்படுவது.

கீழே தரப்பட்டவாறு வினாக்கள் வினவப்படுமாயின் தரப்பட்ட பந்திக்கு அல்லது கூற்றுக்கு எதிரான கருத்துள்ள விடையைத் தெரிவு செய்தல் வேண்டும்.

* எக் கூற்றின்மூலம் முடிவு பலமற்றதாக இருக்கும்.
* பந்தியில் கூறப்பட்ட விடயத்திலிருந்து பெற முடியாதது.
* சாத்தியமற்ற நிகழ்ச்சியை தெரிவு செய்தல்.
* குறைந்த இயல்தகவு உள்ள நிகழ்ச்சி.
* கருத முடியாத விடயம்
* முடிவை வலுவிழக்க செய்யும் கூற்று
* ஆதரவாக அமையாத கூற்று
* வாதத்தின் மிக முக்கிய குறைபாடு

அடுத்து இரண்டு கூற்றுக்கள் தரப்பட்டு அவற்றை நியாயித்து சரியான விடையை தெரிவு செய்யும்போது முதலில் தரப்பட்ட இரண்டு கூற்றுக்கள் தொடர்பான சரியான விளக்கத்தைப் பெற்ற பின்னரே ஐந்து வகை நியாயித்தலுடன் கூடிய அறிவுறுத்தல்களுடன் ஒப்பிட்டு சரியான விடையைத் தெரிவு செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து இரண்டு கூற்றுக்களுடன் ஒரு பிரச்சினையும் தரப்பட்டு அப்பிரச்சினைக்கு தீர்வு காணும் போது முதலில் தரப்பட்ட இரண்டு கூற்றுக்களின் அல்லது ஒரு கூற்றின் மூலமாக பிரச்சினைக்கு தீர்வு பெறப்படுவதை அவதானிக்க வேண்டுமே தவிர விடை அல்லது தீர்வு பெறப்பட வேண்டிய அவசியமில்லை. பின்னர் தரப்பட்ட ஐந்து வகை நியாயித்தலுடன் கூடிய அறிவுத்தல்களுடன் ஒப்பிட்டு சரியான விடையை தெரிவு செய்தல் வேண்டும்.

அடுத்து அபிப்பிராயத்தை தெரிவு செய்யும்போது ஒருவரது சுயமான கருத்தை வெளிப்படுத்தும் விடையை தெரிவு செய்தல் வேண்டும்.

அடுத்து மெய்ம்மையை தெரிவு செய்யும் போது ஏற்கனவே பெறப்பட்ட முடிவுகளை அல்லது உண்மைகளை வெளிப்படுத்தும் விடையை தெரிவு செய்தல் வேண்டும்.

# 6. கோலங்களும் வடிவங்களும்

இப்பகுதியினுள் கோலங்கள், வடிவங்கள் ஆகிய பகுதிகள் இடம்பெறும். கோலங்கள் எனும் போது எண்கோலங்கள், ஆங்கில எழுத்துக் கோலங்கள், உருக் கோலங்கள் என்பன இடம்பெறும்.

எண்கோலங்களின் போது தரப்பட்ட எண்களுக் கிடையே ஏற்படுத்தப்பட்டுள்ள கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல், வர்க்கித்தல், கனமூலமாக்குதல் ஆகியவற்றுள் பிரயோகிக்கப் பட்டுள்ள பொருத்தமான தொடர்பை மிக விரைவாக இனங் காண்பதன் மூலம் விடைகளைப் பெறலாம். அடுத்து ஆங்கில எழுத்துக் கோலங்களின் போது அவற்றுக்கிடையே ஏற்படுத்தப் பட்டுள்ள தொடர்பை A = 1, B = 2, C = 3 ...... என பிரதியிட்டு அவதானிப்பதன் மூலம் இலகுவாக அறிந்து கொள்ளலாம். அடுத்து உருக்களின் போது தரப்பட்ட வெற்றிடங்களை பூர்த்தி யாக்குவதற்கு மேற்தரப்பட்ட அணுகு முறைகளையும், நிரல்கள் நிரைகளை கூட்டுவதன் அல்லது கழிப்பதன் மூலமும் விடை களைப் பெற முடியும். இதன் போது உருக்களுக்கிடையேயான தொடர்பை அவ் உருவை மட்டும் மையப்படுத்தி பெறல் வேண்டும். மாறாக, அவற்றை ஏனைய உருக்களுடன் ஒப்பிடலாகாது. அடுத்து உருக்களைப் பயன் படுத்தி அமைக்கப்படும் கோலங்களில் வேறுபட்ட உரு, வெற்றிடத்தில் வரவேண்டிய உரு என்பவற்றுக்கு தெளிவாக அவற்றை அவதானிப்பதன் மூலம் அறியலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவங்களின் போது பின்வரும் வகையிலான வினாக்கள் இடம்பெறலாம். அதாவது உரு ஒன்றை குறித்த திசையில் அவதானிக்கும் போது அவற்றை தரப்பட்ட விடைகளுடன் குறித்த திசையினூடு அவதானித்தல் வேண்டும். அடுத்து சதுரமுகிகள் தொடர்பில் அதன் ஒரு பகுதியை நீக்குதல் அல்லது சேர்த்தல், புதிய சதுரமுகியை அமைத்தல் போன்றவற்றின் போது தரப்பட்ட விடைகளுடன் வினாவை அவதானித்தல் வேண்டும். அடுத்து தாயக்கட்டை வினாக்களின் போது குறித்த திசைக்கு திருப்பும் போது அல்லது உருட்டும் போது இடம்பெறும் உருவை அழி றபரின் உதவியுடன் அல்லது கற்பனை ரீதியாக அவதானிக்கலாம். அடுத்து சமச்சீர் தன்மையதான வினாக்களின் போது தரப்பட்ட தராசில் இடம்பெறும் உருக்களின் பொது முடிவை பெறுவதன் மூலம் தராசு வெற்றிடத்தை பூர்த்தி செய்யலாம். அடுத்து உரு ஒன்றில் உள்ள வடிவங்களின் எண்ணிக்கையை கணக்கிடும் போது அவற்றை ஒரு ஒழுங்கு முறையில் எண்ணிச் செல்வதன் மூலம் அல்லது அவ்வுரு சமமான நிரைகள், நிரல்களை கொண்டிருப் பின் $x^2+(x-1)^2+(x-2)^2$ எனும் சமன்பாட்டை அதாவது இங்கு மூன்று நிரைகள், நிரல்கள் காணப்படுமாயின் $3^2+2^2+1^2=14$ என அறியலாம். அடுத்து விம்பத் தோற்றங்களை அவதானிக்கும் போது உருக்களாயின் தலை கீழாகவும் எழுத்துக்களாயின் தாளின் பின் புறமாகவும் அவதானித்தல் வேண்டும்.

# 7. கணிதத்திறன்

இப்பகுதியினுள் இடம்பெறும் வினாக்கள் பரீட்சார்த்தியின் கணிதத்திறனையும், புத்திக் கூர்மையையும் அளவிடும் வினாக்களாகும். இவ்வகை வினாக்களுக்கு இலகுவாக விடையளிப்பதற்கு இவை போன்ற வினாக்களை கூடியளவு பயிற்சி செய்தல் வேண்டும். மேலும், கணித வினாக்களை முதல் தடவை வாசிக்கும் போதே அவற்றை ஏதோ ஒரு குறியீட்டு முறையில் இடுவதன் மூலம் நேரத்தை மீதப்படுத்துவதுடன் கூடியளவுக்கு சமன்பாடுகளைப் பிரயோகிக்காது இலகுவழியினூடாக விடைகளைப் பெற முயற்சிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. வரைபுகளும், அட்டவணைகளும்

வரைபுகள் எனும் விடயத்தின்கீழ் விஞ்ஞான வரைபுகள், சலாகை வரைபுகள், வட்ட வரைபுகள் என்பன உள்ளடங்கும். இதில் விஞ்ஞான வரைபுகள் எனும் போது ஆரம்பத்தில் தரப்பட்ட விபரணத்திற்கேற்ப பொருத்தமான வரைபை அவற்றின் வேகம், நேரம், ஆர்முடுகல், அமர்முடுகல் என்பவற்றின் தன்மைக்கேற்ப தெரிவு செய்தல் வேண்டும். அடுத்து சலாகை மற்றும் வட்ட வரைபுகள் என்பதன் கீழ்தரப்பட்ட வரைபையும் ஏனைய தகவல்களையும் இணைத்து உரிய கணிப்பீடுகள் மூலம் தரப்பட்ட வினாவுக்கு விடையளித்தல் வேண்டும்.

# 9. பாய்ச்சற்கோட்டுப்படங்கள்

அடுத்த பாய்ச்சற் கோட்டுப் படங்கள் எனும் போது குறித்தவோர் விடயம் தொடர்பான விபரணம் அதற்குரிய மாற்று நடவடிக்கைகளுடன் தரப்பட்டிருக்கும். இதற்கேற்ப தரப்பட்ட அறிவுறுத்தல்களுக் கமைய பாய்ச்சற் கோட்டுப்படத்தை பூர்த்தி செய்யும் போது ஒரே சீரான பாதையில் நேடியாக செல்லும் போது மாற்று நடவடிக்கைகள் இன்றி பூர்த்தி செய்யக் கூடியதாகவும், மாறாக அப்பாய்ச்சற் கோட்டுப் படத்தில் வலப்பக்கமாக செல்வதன் மூலம் மாற்று நடவடிக்கை களையும் பூர்த்தி செய்து மீள நேரடியான பாதைக்கு வந்து முடிவிடத்தை அடையும். இதன்போது பாய்ச்சற் கோட்டுப் படத்தில் உள்ள வெற்றிடங்களை பூர்த்தி செய்யும்போது அவ் வெற்றிடத்திற்கு முன், பின் உள்ள தகவல்களையும் இணைத்து அவதானிப்பதன் மூலம் இலகுவாக விடைகளைப் பெறலாம்.

# 10. கிரகித்தல் மற்றும் நிபந்தனை வினாக்கள்

இவ்வகை வினாக்களின்போது குறித்த நிலைமைகள் அல்லது சந்தர்ப்பங்கள் நிபந்தனைகளுடன் தொடர்புபடுத்தப்பட்டதாக தரப் பட்டிருக்கும். இங்கு வினாக்கள் மேற்படி குறித்த நிலைமைகளின் போது மேற்படி நிபந்தனைகளை பூர்த்தி செய்யக் கூடியவாறு பல்வேறுபட்ட கோணங்களில் அமைக்கப்பட்டிருக்கும். இதன்போது தரப்பட்ட நிபந்தனைகளை கிரகித்துக் கொண்டு தரப்பட்ட விடைகளின் உதவி யுடன் செவ்வை பார்த்து செல்வதன்மூலம் மிக இலகுவாக விடையளிக்க முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாகாண அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில்**
**வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான**
**திறந்த போட்டிப் பரீட்சை – 2014 (2015)**

உளச்சார்பு. **01** I மணித்தியாலம்

- 1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள இரு சொற்களுக்குமிடையே இருக்கும் தொடர்புடைமை இருக்கும் சொற்களைக் கீழே தரப்பட்டுள்ள நான்கு விடைகளிலிருந்தும் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

1. மழை : வெள்ளம்
   (1) வரட்சி : பஞ்சம் (2) காடு : காட்டுத் தீ
   (3) வெள்ளம் : சுனாமி (4) ஓட்டம் : வெற்றி (.........)

2. கறையான் : புற்று
   (1) கவிஞன் : எழுத்தாணி
   (2) எழுத்தாளர் : நூல்
   (3) கட்டுப்பாட்டாளர் : ஊழியர்கள்
   (4) மருத்துவர் : நோயாளி (.........)

3. ஆசிரியர் : மாணவர்
   (1) மருத்துவர் : தாதி
   (2) பெண் : ஆண்
   (3) கட்டுப்பாட்டாளர் : ஊழியர்கள்
   (4) பிக்கு : பிக்குணி (.........)

4. இலகு : கடுமை
   (1) மதுரம் : இனிமை (2) காது : காதுகள்
   (3) குணம் : குணமின்மை (4) காலம் : பரிதி (.........)

5. அத்தியாயம் : பக்கம்
   (1) யாகம் : ஓமம் (2) சுத்தம் : தூய்மை
   (3) நாடு : மாகாணம் (4) படிப்படியாக : மெதுவாக(.........)

- 6 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் நான்கு கணிதச் சமன்பாடுகள் தரப்பட்டுள்ளன. அச்சமன்பாடுகளில் ÷, = ஆகியன மாத்திரம் நியம அர்த்தத்தில் பிரயோகிக்கப்பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றில் உள்ள + இற்குப் பதிலாக - ஐயும் - இற்குப் பதிலாக x ஐயும் x இற்குப் பதிலாக + ஐயும் இடும்போது சரியான சமன்பாட்டினைத் தெரிந்தெடுத்து. அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

6. (1) $8 \times 4 - 5 + 10 = 37$ (2) $8 - 4 \times 10 + 5 = 37$
(3) $8 + 4 \div 5 + 10 = 37$ (4) $8 \times 4 + 5 - 10 = 37$ (.........)

7. (1) $10 - 15 \times 6 + 4 = 152$ (2) $10 + 15 - 6 \times 4 = 152$
(3) $10 \times 15 - 6 \div 4 = 152$ (4) $10 \div 15 \times 6 - 4 = 152$ (.........)

8. (1) $30 \div 6 + 6 - 2 = 36$ (2) $30 + 6 - 6 \times 2 = 36$
(3) $30 + 6 \times 6 - 2 = 36$ (4) $30 - 6 \div 6 \times 2 = 36$ (.........)

9. (1) $50 - 25 + 5 \times 2 = 173$ (2) $50 + 25 - 5 \times 2 = 173$
(3) $50 - 25 \times 5 + 2 = 173$ (4) $50 \times 25 - 5 + 2 = 173$ (.........)

10. (1) $10 + 15 - 10 \times 2 = 158$ (2) $10 + 15 - 10 + 2 = 158$
(3) $10 - 15 \times 10 \div 2 = 158$ (4) $10 + 15 + 10 \times 2 = 158$ (.........)

- 11 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் ஒரு பரீட்சையில் ஐந்து மாணவர்கள் பெற்ற புள்ளிகள் பற்றி பின்வரும் தகவல்களை அடிப்படையாய்க் கொண்டவை. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைக் கீழே தரப்பட்டுள்ள நான்கு விடைகளிலிருந்தும் தெரிந்தெடுத்து. அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

❖ அருணனின் புள்ளி கண்ணனின் புள்ளியின் இருமடங்காகும்.
❖ கண்ணனின் புள்ளி முரளியின் புள்ளியின் 4 1/2 மடங்காகும்.
❖ முரளியின் புள்ளி ரவியின் புள்ளியின் அரைவாசியாகும்.
❖ ரவியின் புள்ளி மோகனின் புள்ளியின் அரைவாசியாகும்.
❖ மோகனின் புள்ளி அருணனின் புள்ளியிலும் குறைந்ததும் முரளியின் புள்ளியிலும் கூடியதும் ஆகும்.

11. குறைந்த புள்ளியைப் பெற்றவர் யார்?
(1) அருணன் (2) கண்ணன்
(3) முரளி (4) ரவி (.........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. மோகனின் புள்ளி பின்வரும் எந்த இருவரினதும் புள்ளிகளிலும் குறைவாகும்?
(1) ரவியும் முரளியும் (2) அருணனும் கண்ணனும்
(3) அருணனும் முரளியும் (4) ரவியும் கண்ணனும் (.........)

13. மோகனின் புள்ளி பின்வரும் எந்த இருவரினதும் புள்ளிகளிலும் கூடியதாகும்?
(1) கண்ணனும் ரவியும் (2) முரளியும் ரவியும்
(3) அருணனும் முரளியும் (4) அருணனும் கண்ணனும் (.........)

14. கூடுதலான புள்ளியைப் பெற்றவர் யார்?
(1) அருணன் (2) கண்ணன்
(3) முரளி (4) ரவி (.........)

15. பெறப்பட்ட புள்ளிகளுக்கேற்ப மாணவர்கள் இறங்குவரிசையில் ஒழுங்குபடுத்தப்பட்ட விடை யாது?
(1) அருணன் - கண்ணன் - மோகன் - முரளி - ரவி
(2) கண்ணன் - ரவி - மோகன் - அருணன் - முரளி
(3) முரளி - ரவி - மோகன் - கண்ணன் - அருணன்
(4) அருணன் - கண்ணன் - மோகன் - ரவி - முரளி (.........)

- 16 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் 6 சொற்கள் தரப்பட்டுள்ளன. இச்சொற்களை ஒரு குறித்த கோட்பாட்டிற்கேற்ப இரு கூட்டங்களாகலாம். சரியான கூட்டமாக்கலைக் காட்டும் விடையைக் கீழே தரப்பட்டுள்ள நான்கு விடைகளிலிருந்தும், தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

16. 1. ஓடம் 2. உடு 3. கப்பல் 4. சந்திரன் 5. சூரியன் 6. வள்ளம்
(1) (1, 2, 4) (3, 5, 6) (2) (1, 3, 6) (2, 4, 5)
(3) 1, 4, 6) (2, 3, 5) (4) (1, 2, 5) (3, 4, 6) (.........)

17. 1. மேசை 2. கத்தி 3. கதிரை 4. கத்தரிக்கோல் 5. வாள் 6. அலுமாரி
(1) (1, 2, 6) (3, 4, 5) (2) (2, 3, 5) (1, 4, 6)
(3) (2, 5, 6) (1, 3, 4) (4) (1, 3, 6) (2, 4, 5) (.........)

18. 1. மருத்துவர் 2. சட்டவறிஞர் 3. பயங்கரம் 4. தூய்மை 5. பொறியிலாளர் 6. இனிமை
(1) (1, 4, 6) (2, 3, 5) (2) (2, 4, 6) (1, 3, 5)
(3) (1, 2, 5) (3, 4, 6) (4) (1, 2, 6) (3, 4, 5) (.........)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. 1. அணங்கு 2. குருடு 3. அரிவை 4. செவிடு 5. கோதை 6. ஊமை

(1) (1, 2, 5) (3, 4, 6) (2) (1, 4, 5) (2, 3, 6)


(3) (1, 3, 5) (2, 4, 6) (4) (1, 4, 6) (2, 3, 5) (........)

20. 1. அ 2. ச 3. க 4. உ 5. ஓ 6. வ


(1) (1, 4, 6) (2, 3, 5) (2) (2, 4, 6) (1, 3, 5)

(3) (2, 4, 5) (1, 3, 6) (4) (1, 4, 5) (2, 3, 6) (........)


- 21 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் பின்வரும் வென் வரிப்படங்களை அடிப்படையாய்க் கொண்டவை. ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள வென் வரிப்படத்திற்குப் பொருத்தமான கருத்தைத்தரும் விடையைத் தரப்பட்டுள்ள நான்கு விடைகளிலிருந்தும் தெரிந்தெடுத்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

21. 


(1) மொழி - சிங்களம் - தமிழ்
(2) கலைத்திட்டம் - அதிபர் - பிரிவுத் தலைவர்
(3) தமிழ் - சிங்களம் - ஆங்கிலம்
(4) அதிபர் - பிரதி அதிபர் - பிரிவுத் தலைவர் (........)

22. 


(1) தமிழ் - வேற்றுமை - கூட்டுச்சொல்
(2) மொழி - தமிழ் - இலக்கணம்
(3) மொழி - தமிழ் - ஆங்கிலம்
(4) தமிழ் - வரலாறு - கணிதம் (........)

23. 

(1) இந்துசமயம் - கணிதம் - விஞ்ஞானம்
(2) சிங்களம் - தமிழ் - ஆங்கிலம்
(3) சமயம் - இந்துசமயம் - கணிதம்
(4) மொழி - ஆங்கிலம் -தமிழ் (........)

24. 

(1) சமூக விஞ்ஞானம் - இயற்கை விஞ்ஞானம் - கணிதம்
(2) பாடசாலை - ஆரம்பநிலை - இடைநிலை
(3) வேற்றுமை - கூட்டுச்சொல் - சந்தி
(4) கலைத்திட்டம் - ஆசிரியர் - அதிபர் (........)

25. 

(1) சிங்களம் - தமிழ் - ஆங்கிலம்
(2) நூல் - அத்தியாயம் - பந்தி
(3) பாடசாலைகள் - IAB பாடசாலை - IC பாடசாலை
(4) மொழி - சமஸ்கிருதம் - பாளி (........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 26 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் பின்வரும் தகவலை அடிப்படையாய்க் கொண்டவை. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

ஒரு மாணவனிடம் 8 நூல்கள் உள்ளன. அவை A, B, C, D, E, F, G, H எனப் பெயரிடப்பட்டுள்ளன. இவற்றைப் பற்றிய சில தகவல்கள் பின்வரும் அட்டவணையில் காணப்படுகின்றன.

| நூலின் பெயர் | தகவல்கள் | | | |
|---|---|---|---|---|
| A | U | W | S | T |
| B | Z | R | V | T |
| C | U | W | V | X |
| D | Q | W | S | X |
| E | Z | R | V | T |
| F | U | R | S | X |
| G | Y | W | V | T |
| H | Y | R | S | T |

ஆங்கில எழுத்துகளினால் காட்டப்படும் தகவல்கள் பின்வருவன வாகும்.

U = நவீனங்கள்
Z = நாடகங்கள்
Q = செய்யுள் நூல்கள்
Y = சிறுகதைகள்
W = தமிழ் நூல்கள்
R = மொழி பெயர்ப்புகள்
S = மாணவன் வாங்கிய நூல்கள்
V = மாணவனுக்குப் பரிசாகக் கிடைத்த நூல்கள்
T = 1990 இற்கு முன்னர் அச்சிடப்பட்ட நூல்கள்
X = 1990 இற்குப் பின்னர் அச்சிடப்பட்ட நூல்கள்

26. மாணவன் வாங்கிய தமிழ் நவீனம் யாது? (.........)

27. மாணவனுக்குப் பரிசாகக் கிடைத்ததும் 1990 இற்குப் பின்னர் அச்சிடப் பட்டதுமான நூல் யாது? (.........)

28. மாணவன் வாங்கியதும் மொழி பெயர்க்கப்பட்டதும் 1990 இற்கு முன்னர் அச்சிடப்பட்டதுமான நூல் யாது? (.........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. மாணவனுக்குப் பரிசாகக் கிடைத்த நூல்களிடையே 1990 இற்கு முன்னர் அச்சிடப்பட்ட நூல்களில் பெரும்பாலானவையின் வகுதி யாது?

(.......... ..........)

30. மாணவனுக்குப் பரிசாகக் கிடைத்த இரு மொழிபெயர்ப்பு நூல்களும் யாவை? (.........., ..........)

- 31 தொடக்கம் 35 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு குறித்த விடயத்துடன் தொடர்புபட்ட 6 வாக்கியங்கள் A தொடக்கம் F வரைக்கும் எழுத்திடப்பட்டுத் தரப்பட்டுள்ளன. அவ்வாக்கியங்களிடையே A முதலாம் வாக்கியமும் F இறுதி வாக்கியமும் ஆகும். ஏனைய நான்கு வாக்கியங்களினதும் ஒழுங்குகள் மாற்றப்பட்டு B, C, D, E எனக் காட்டப்பட்டுள்ளன. இந்த நான்கு வாக்கியங்களையும் சரியாக அமைக்க வேண்டிய ஒழுங்கைக் கீழே காட்டப்பட்டுள்ள நான்கு விடைகளிலிருந்தும் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

31. A - இலங்கையில் எழுத்தறிவுச் சுட்டி உயர்ந்திருப்பதாகத் தெரியவில்லை.

B - கல்விக்காக அரசாங்கம் வழங்கும் வசதிகள் தேவையான பேறுகளைத் தரவில்லையெனத் தோன்றுகின்றது.

C - இப்பிரச்சினை தொடர்பாக அனைவரும் கவனஞ் செலுத்த வேண்டும்.

D - கல்வியில் பங்குபற்றுபவர்கள் குறைகின்றமை இதற்குக் காரணமாகும்.

E - அவ்வாறே பாடசாலையை இடையில் விட்டுச் செல்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

F - இல்லாவிட்டால், இலங்கையில் கற்காதவர்களின் நாடாகிவிடும்.

(1) CBDE (2) BCED

(3) DCEB (4) DEBC (..........)

32. A - அனைவருக்கும் கல்வி என்பதை நாம் ஒரு கொள்கையாக ஏற்றுக் கொண்டுள்ளோம்.

B - அவற்றில் ஒன்று தேவையான வசதிகளை எல்லோருக்கும் சமமாக வழங்குவதில் உள்ள பிரச்சினையாகும்.

C - அவ்வாறே கல்வியைப் பெறுவதற்குச் சில பகுதிகளில் தேவை இல்லாமையும் ஒரு முக்கிய பிரச்சினையாக உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

D - எவ்வாறாயினும் அனைவருக்கும் கல்வியை வழங்குதல் பெரிய பிரச்சினையாக உள்ளது.

E - வேறொரு பிரச்சினை எல்லாப் பாடசாலைகளுக்கும் உகந்த ஆசிரியர்களை நியமித்தல் தொடர்பான பிரச்சினையாகும்.

F - இப்பிரச்சினைகள் யாவற்றையும் வென்று அனைவரையும் கல்வியை நோக்கி ஈர்ப்பதற்குச் செயற்படுதல் நம் அனைவரதும் கடமையாகும்.

(1) EDCB (2) BCED (3) DBEC (4) CBDE (.........)

33. A - இலங்கை வறுமையினால் பீடிக்கப்பட்டுள்ளது

B - இளைஞர்கள் நாட்டில் வருமானத்தை உழைப்பதற்கு ஈடுபடுத்தப் படத்தக்க ஊழியர்படையாகையால் அவர்களில் கவனஞ் செலுத்த வேண்டும்.

C - இதனால் இளைஞர்களுக்குக் கல்வியை வழங்குதலும் தொழில் களை அளித்தலும் முக்கிய பிரச்சினையாக உள்ளது.

D - இளைஞர்கள் விரக்கியடைதல் அரசியல் நெருக்கடி ஏற்படு வதற்குக் காரணமாக அமையாலம்.

E - இப்பிரச்சினை காரணமாக இளைஞர்கள் மிகவும் விரக்தியடைந் திருப்பதாகத் தோன்றுகின்றது

F - ஆகவே, அரசாங்கமும் பொதுமக்களும் இப்பிரச்சினை தொடர்பாகக் கூடுதலான கவனத்தைச் செலுத்த வேண்டும்

(1) DCEB (2) CDEB (3) CEBD (4) BCED (.........)

34. A - கடும் வரட்சி இன்னும் முடிவடையவில்லை.

B - தற்போது எல்லாப் பயிர்களும் காய்ந்துபோய் உள்ளன.

C - மேலும் மழை பெய்யாவிட்டால் பட்டினி ஏற்படும் சாத்தியக்கூறு அதிகரிக்கும்.

D - பட்டினி ஏற்பட்டால் வாழ்க்கை மேலும் இடர்மிக்கதாகி விடும்.

E - இன்னும் பல வாரங்களுக்கு மழை பெய்யும் அறிகுறிகள் இல்லை.

F - நாட்டினைப் பட்டினியிலிருந்து பாதுகாப்பதற்கு தற்போதிலிருந்தே பரிகாரங்களைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டும்.

(1) EBCD (2) BDCE (3) ECDB (4) DBEC (.........)

35. A - எல்லாப் பட்டதாரி ஆசிரியர்களும் பட்டப்பின் கல்வி டிப்ளோமாச் சான்றிதழைப் பெறவேண்டும்.

B - அது மட்டுமன்று பாடநெறியைப் பின்பற்றுவதன் விளைவாக மாணவர்களின் உளப் பின்னணியைப் புரிந்து கொள்ளத் தேவை யான ஆற்றலும் ஆசிரியர்களுக்குக் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

C - மேலும் இப்பாடநெறியைப் பின்பற்றுவதன் விளைவாக அவர்கள் மிக்க நம்பிக்கையுடன் வகுப்பறைக்குச் செல்லும் ஆற்றலைப் பெறுவர்'.

D - அப்பயிற்சி காரணமாகக் கற்பிக்கும்போது ஏற்படும் தவறுகளை இழிவளவாக்கலாம்.

E - அப்பாடநெறியின் மூலம் கிடைக்கும் பயிற்சி வகுப்பறையில் கற்பிக்க வேண்டிய விதம் தொடர்பாகப் பட்டதாரி ஆசிரியர் களுக்குச் சிறந்த விளக்கத்தை அளிக்கும்.

F - பட்டப் பின் கல்வி டிப்ளோமாப் பாடநெறியைப் பின்பற்றுவதற்கு எல்லாப் பட்டதாரி ஆசிரியர்களையும் ஊக்குவிக்க வேண்டும்.

(1) BCED (2) EDBC (3) ECDB (4) BCDE (.........)

- 36 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு பிரச்சினையும் அப்பிரச்சினையைத் தீர்க்கப் பயன்படுத்தத்தக்க 1. 2 என்னும் இரு கூற்றுகளும் தரப்பட்டுள்ளன.
  பிரச்சினையைத் தீர்ப்பதற்கு
  - தேவையான தகவல்கள் கூற்று 1 இல் மாத்திரம் இருக்குமெனின் A யையும்
  - தேவையான தகவல்கள் கூற்று 2 இல் மாத்திரம் இருக்குமெனின் B யையும்
  - கூற்று 1 இல் உள்ள தகவலையும் கூற்று 2 இல் உள்ள தகவலையும் ஒருமிக்க பயன்படுத்த வேண்டுமெனின் C யையும்
  - கூற்று 1 இல் உள்ள தகவலை வேறாகவும் கூற்று 2 இல் உள்ள தகவலை வேறாகவும் பயன்படுத்த வேண்டுமெனின் D யையும்
  - கூற்று 1 இலும் கூற்று 2 இலும் உள்ள தகவல்கள் போதியனவல்ல எனின் E யையும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

36. வட்டம் X இன் பரிதி யாது?
    (1) வட்டம் Y ஆனது வட்டம் X இலும் பார்க்கச் சிறியதாக இருக்கும் அதே வேளை அதன் பரிதி 6 2/7cm ஆகும். இரு வட்டங்களினதும் விட்டங்கள் 1:3 எனும் விகிதத்தில் உள்ளன.
    (2) வட்டம் X இன் ஆரை வட்டம் Y யின் ஆரையிலும் பார்க்க 50% இனால் கூடியதாகும். (.........)

37. நிசாரும் மோகனும் 20 இற்கும் 40 இற்கும் இடைப்பட்ட சில எண்களைப் பிரதி செய்தனர். நிசார் பிரதி செய்த எண்களின் சராசரி 28 ஆகும். மோகன் எத்தனை எண்களைப் பிரதி செய்தான்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) நிசார் பிரதி செய்த முதன் மூன்று எண்களினதும் சராசரி 25 ஆகும்.

(2) நிசார் பிரதி செய்த கடைசி இரு எண்களினதும் சராசரி 29 ஆகும். (.........)

38. கல்யாணி, ரேவதி, சாமா என்ற மூன்று ஆசிரியர்களினதும் சேவைக் காலங்களின் மொத்தம் 9 ஆண்டுகளாகும். சாமாவின் சேவைக் காலம் கல்யாணியினதும் ரேவதியினதும் சேவைக் காலங்களின் மொத்தத் திற்குச் சமம். ரேவதியின் சேவைக்காலம் யாது?

(1) கல்யாணியினதும் சாமாவினதும் சேவைக்காலம் ரேவதியின் சேவைக்காலத்தின் இருமடங்காகும்.

(2) மேலும் 15 ஆண்டுகளில் கல்யாணியின் சேவைக்காலம் சாமாவின் சேவைக் காலத்தின் அரைவாசியாகும். (.........)

39. பாமா பாடசாலையிலிருந்து வீட்டிற்கு நடந்து சென்றாள். இப் பயண த்தின் முதல் அரைவாசிக்கு எடுத்த நேரத்திலும் பார்க்க கூடுதலான நேரம் இரண்டாம் அரைவாசிக்கு எடுத்ததெனின், பாமா பாடசாலை யிலிருந்து வீட்டிற்கு வருவதற்கு எவ்வளவு நேரம் எடுத்தாள்?

(1) பயணத்தின் முதல் அரைவாசிக்குச் பாமா 45 நிமிடம் எடுத்தாள்.

(2) பயணத்தின் இரண்டாம் அரைவாசியின்போது அவள் $2kmhr^{-1}$ கதியில் சென்றாள். (.........)

40. ஓர் ஓட்டப்போட்டியில் சுனிலாவிலும் பார்க்க விரைவாக கயனி ஓடுகின்றாள். ருவினியிலும் பார்க்க விரைவாக நிமாலி ஓடுகின்றாள். மிகக் குறைந்த கதியுடன் ஓடுபவர் யார்?

(1) ருவினியிலும் பார்க்க கயனி வரைவாக ஓடுகின்றாள்.

(2) சுனிலாவிலும் பார்க்க நிமாலி விரைவாக ஓடுகின்றாள். (.........)

- 41 தொடக்கம் 43 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு குறித்த பிரச்சினையும் அப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படு வதாகக் கருதப்படும் I, II என்னும் இரு கூற்றுகளும் தரப்பட்டுள்ளன. அக்கூற்றுகளில்
  - ❖ கூற்று I ஐ மாத்திரம் பயன்படுத்திப் பிரச்சினையைத் தீர்க்க முடியுமெனின் 1 எனவும்,
  - ❖ கூற்று II ஐ மாத்திரம் பயன்படுத்திப் பிரச்சினையைத் தீர்க்க முடியுமெனின் 2 எனவும்,
  - ❖ கூற்று I, கூற்று II ஆகிய இரண்டையும் வேறுவேறாகப் பயன்படுத்திப் பிரச்சினையைத் தீர்க்க முடியுமெனின் 3 எனவும்,
  - ❖ கூற்று I, கூற்று II ஆகிய இரண்டையும் ஒருமிக்கப் பயன்படுத்திப் பிரச்சினையைத் தீர்க்க முடியுமெனின் 4 எனவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ கூற்று I, கூற்று II ஆகிய இரண்டும் பிரச்சினையைத் தீர்க்க போதியன அல்லவெனின் 5 எனவும், வினாவுக்கு எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

41. பிரச்சினை : ஓர் உண்டியலில் ரூ. 1 நாணயங்கள், ரூ. 5 நாணயங்கள், ரூ. 10 நாணயங்கள் நிரப்பப்பட்டுள்ளன. அதில் உள்ள ரூ. 10 நாணயங்களின் எண்ணிக்கை ரூ. 5 நாணயங்களின் இருமடங்காகும். அத்துடன், அதில் உள்ள ரூ. 1 நாணயங்களின் எண்ணிக்கை ரூ. 10 நாணயங்களின் எண்ணிக்கையின் மூன்று மடங்காகும். இதற்கமைய உண்டியலில் எத்தனை ரூ. 5 நாணயங்கள் உள்ளன?

கூற்று : I. உண்டியலில் உள்ள பணத்தின் மொத்த அளவு ரூ. 1 550 ஆகும்.

கூற்று : II. உண்டியலில் உள்ள நாணயங்களின் மொத்த எண்ணிக்கை 450 ஆகும். (..............)

42. பிரச்சினை : ஒரு நிரையில் மாதவி, நவோமி, அமாமி, நிலுக்கா, வருணி என்ற ஐந்து பெண்கள் நிற்கின்றனர். அந்நிரையில் நிலுக்காவுக்கு முன்னால் மாதவி நிற்கின்றாள். மாதவிக்கு முன்னால் அமாமி நிற்கின்றாள். எனின், நிரையிலே மிகவும் பின்னால் நிற்பவர் யார்?

கூற்று : I. அந்நிரையில் அமாமிக்கு முன்னால் நவோமி நிற்கின்றார்.

கூற்று : II. அந்நிரையில் மாதவிக்குப் பின்னால் வருணி நிற்கின்றார். (..............)

43. பிரச்சினை : ஒரு குறித்த கடையிலிருந்து ஒரு கணிப்பானை வாங்கும்போது காஞ்சனாவுக்கு மீதிப் பணமாகக் குறித்த பணத்திலும் பார்க்க ரூ. 90 மேலதிகமாகக் கிடைத்தது. அதற்குக் காரணம் கடை உரிமையாளர் ரூ. 20 தாள்களை , ரூ. 50 தாள்களாகவும், ரூ. 50 தாள்களை ரூ. 20 தாள் களாகவும் தவறுதலாகக் கருதி மீதிப் பணத்தைக் கொடுத்தமையாகும். இங்கு மீதிப்பணத்தைக் கொடுப் பதற்குக் கடை உரிமையாளர் ரூ. 20 தாள்களையும், ரூ. 50 தாள்களையும் மாத்திரம் பயன்படுத்தியிருந்தால், கணிப்பானுக்காகக் காஞ்சனா கொடுத்த பணம் யாது?

கூற்று : I. கணிப்பானை வாங்குவதற்குக் காஞ்சனா கடை உரிமை யாளருக்குக் கொடுத்த நாணயத் தாள்களின் பெறுமானம் ரூ. 1000 ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற்று : II. கடை உரிமையாளர் மீதிப் பணத்தைக் கொடுப்பதற்குப் பயன்படுத்திய தாள்களின் மொத்த எண்ணிக்கை 7 ஆகும். (..............)

- 44 தொடக்கம் 48 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையைக் கீழே தரப்பட்டுள்ள நான்கு விடைகளிலிருந்தும் தெரிந்தெடுத்து. அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

44. இலங்கையின் சுதந்திர தின விழாவில் அணிவகுப்பின் ஒரு பகுதியின் நிரையில் 40 பிள்ளைகள் நின்றனர். அதில் இத்தகைய 15 நிரைகள் இருந்தன. ஒரு நிரையில் 24 பிள்ளைகள் வீதம் நிற்கச் செய்தால், எத்தனை நிரைகளை ஏற்படுத்தலாம்?

(1) 32 (2) 30 (3) 18 (4) 25 (.........)

45. 10 ஆண்டுகளுக்கு முன்னர் சேகரின் வயது முகுந்தனின் வயதின் அரைவாசியாக இருந்தது. அவர்கள் இருவரதும் தற்போதைய வயது களுக்கிடையே உள்ள விகிதம் 3:4 எனின், அவர்களுடைய வயதுகள் முறையே

(1) 12, 16 (2) 15.20 (3) 24, 32 (4) 30, 40 (.........)

46. A, B, C, D என்ற பிள்ளைகளிடம் உள்ள பணத் தொகைகளின் மொத்தம் ரூ. 6400 ஆகும். B இடம் உள்ள பணம் A இடமும் D யிடமுள்ள பணத் தொகைகளின் மொத்தத்திற்குச் சமம். C இடம் உள்ள பணம் B இடம் உள்ள பணத்தின் இரு மடங்காகும். எனினும். C இடம் உள்ள பணத்தொகை யாது?

(1) ரூ. 800 (2) ரூ. 1600 (3) ரூ. 2400 (4) ரூ. 3200 (.........)

47. சேந்தன் 10 மணித்தியாலத்தில் செல்லும் தூரத்திலும் பார்க்க 4km கூடுதலாக அருணன் 8 மணித்தியாலத்தில் செல்கிறான். அருணன் 3 மணித்தியாலத்தில் செல்லும் தூரத்திலும் பார்க்க 3km கூடுதலாக சங்கர் 6 மணித்தியாலத்தில் செல்கிறான். அருணனும் சேந்தனும் ஒரு மணித்தியாலத்தில் செல்லும் தூரங்கள் முறையே யாவை?

(1) 2km, 3km (2) 5km, 6km
(3) 4km, 3km (4) 3km, 2km (.........)

48. நவனீ ஒரு நவீனத்தின் 3/5ஐ முதல் நாளிலும் மீதியில் 1/3ஐ அடுத்த நாளிலும் வாசிக்கின்றாள். அப்போது வாசிப்பதற்கு 20 பக்கங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஞ்சியிருக்குமெனின், நவீனத்தில் மொத்தமாக எத்தனை பக்கங்கள் உள்ளன?


(1) 40 (2) 60 (3) 75 (4) 100 (.........)


- 49 தொடக்கம் 50 வரையுள்ள ஒவ்வொரு வினாவின் கீழேயும் குறித்த தொடர்புடன் கூடிய உருவச் சோடிகள் இரண்டு வெற்றிடத்துடன் தரப்பட்டுள்ளன. அவற்றுள் முதலில் தரப்பட்ட உருவச் சோடிகளுக் கிடையில் காணப்படும் தொடர்புக்குச் சமனான தொடர்பொன்று இரண்டாவது உருவச் சோடிகளுக்கிடையேயும் காணப்படுவதற்காக ? என்ற குறியீட்டுடன் கூடிய இடத்திற்கு இடக்கூடிய உருவத்தைத் தெரிவு செய்து அத்தெரிவின் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

49. 



(1) (2) (3) (4) (.........)

50. 



(1) (2) (3) (4) (.........)

✸✸✸



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாகாண அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில்**
**வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான**
**திறந்த போட்டிப் பரீட்சை – 2014 (2015)**

உளச்சார்பு **01** 1 மணித்தியாலம்

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 1 | 21. | 1 | 41. | 5 |
| 2. | 2 | 22. | 2 | 42. | 4 |
| 3. | 3 | 23. | 3 | 43. | 3 |
| 4. | 3 | 24. | 2 | 44. | 4 |
| 5. | 3 | 25. | 1 | 45. | 2 |
| 6. | 2 | 26. | A | 46. | 4 |
| 7. | 1 | 27. | C | 47. | 3 |
| 8. | 3 | 28. | H | 48. | 2 |
| 9. | 4 | 29. | B, E, G | 49. | 1 |
| 10. | 3 | 30. | B, E | 50. | 2 |
| 11. | 3 | 31. | 4 | | |
| 12. | 2 | 32. | 3 | | |
| 13. | 2 | 33. | 4 | | |
| 14. | 1 | 34. | 1 | | |
| 15. | 4 | 35. | 3 | | |
| 16. | 2 | 36. | C | | |
| 17. | 4 | 37. | E | | |
| 18. | 3 | 38. | E | | |
| 19. | 3 | 39. | E | | |
| 20. | 4 | 40. | C | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாகாண அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில்**
**வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான**
**திறந்த போட்டிப் பரீட்சை – 2014 (2015)**

**உளச்சார்பு** **02** **1 மணித்தியாலம்**

- 1 தொடக்கம் 5 வரையுள்ள ஒவ்வொரு வினாக்களின் கீழேயும் குறித்தவொரு தொடர்புடன் கூடிய மூன்று சொற்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அச் சொற்களிடையே காணப்படும் தொடர்புக்கு மிகவும் கிட்டிய தொடர்பைக் காட்டும் வேறு மூன்று சொற்களை உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1. வாகனங்கள் : லொறிகள் : அரச வாகனங்கள்
   (1) தொழிற்சாலைகள் : கடதாசிக் கைத்தொழிற்சாலைகள் : களிமண் கைத்தொழிற்சாலைகள்
   (2) புத்தகங்கள் : சிறுகதைப் புத்தகங்கள் : மொழிபெயர்ப்புப் புத்தகங்கள்
   (3) ஆயுதங்கள் : குண்டுகள் : யுத்த விமானங்கள்
   (4) காட்டு மிருகங்கள் : மான்கள் : தாவர உண்ணிகள் (............)

2. பாடப் புத்தகங்கள் : கடதாசிகள் : லொத்தர் சீட்டுகள்
   (1) காப்புகள் : தங்கம் : சங்கிலிகள்
   (2) கட்டில்கள் : மரத்துண்டுகள் : கதிரைகள்
   (3) பானைகள் : களிமண் : சட்டிகள்
   (4) யோக்கட் : பால் : பட்டர் (............)

3. கருவாடு : மீன் : இறைச்சி
   (1) கருப்பட்டி : பாணி : பால்
   (2) சங்கிலி : தங்கம் : வெள்ளி
   (3) கொப்பறா : தேங்காய் : பாக்கு
   (4) சாறி : ஆடை : அணிகலன்கள் (............)

4. ஆசிரியர்கள் : கணித ஆசிரியர்கள் : பட்டதாரி ஆசிரியர்கள்
   (1) பூக்கள் : மல்லிகைப் பூக்கள் : வெள்ளைப் பூக்கள்
   (2) பழங்கள் : பழுத்த பழங்கள் : புளிப்புச் சுவையுடைய பழங்கள்
   (3) இரட்டை எண்கள் : நான்கின் மடங்குகள் : எட்டின் மடங்குகள்
   (4) சிறைக்கைதிகள் : திருடர்கள் : குற்றவாளிகள் (............)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. கிரிக்கட் : றகர் : உள்ளக விளையாட்டுக்கள்
   (1) காற்சட்டைகள் : பெனியன்கள் : ஆபரணங்கள்
   (2) பேனாக்கள் : பென்சில்கள் : காகிதாதிகள்
   (3) காய்ச்சல் நோயாளிகள் : இருதய நோயாளிகள் : வைத்தியர்கள்
   (4) விஞ்ஞான ஆசிரியர்கள் : பட்டதாரி ஆசிரியர்கள் : மாணவர்கள்
   (..........)

- 6 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் குறித்தவொரு விளையாட்டுச் சங்கத்தில் உள்ள ஆறு விளையாட்டு வீரர்கள் தொடர்பான பின்வரும் தகவல்களைச் சார்ந்து உள்ளன.

  ❖ A, B, C, D, E, F என்போர் குறித்த வொரு விளையாட்டுக் குழுவில் விளையாடும் ஆறு விளையாட்டு வீரர்களாவார்கள்.

  ❖ கீழே காட்டியவாறு அவர்கள் எல்லோரும் உதைபந்து, கிரிக்கட், டெனிஸ், கூடைப்பந்து, பட்மின்ரன், கரப்பந்து போன்ற விளையாட்டுக்களுள் குறித்த ஒரு விளையாட்டில் ஈடுபடுகின்றனர்.

    ★ A யும் D யும் விட உயரமான துஷார என்பவர் டெனிஸ் விளையாட்டில் ஈடுபடுவார்.

    ★ இந்த விளையாட்டு வீரர்களில் உள்ள மிக உயரமானவர் கூடைப்பந்து விளையாட்டில் ஈடுவார்.

    ★ கரப்பந்து விளையாடுபவர் அவர்களுள் மிகவும் உயரம் குறைந்தவர் ஆவார்.

    ★ A பட்மின்ரன் விளையாடுபவரை விட உயரம் கூடியவர்.

    ★ C கரப்பந்து விளையாடுவார்.

    ★ E என்பவர் உயரத்தில் A மற்றும் உதைபந்து விளையாடும் B ஆகியோருக்கிடையில் உள்ளார்.

  இந்தத் தகவல்களுக்கேற்ப பின்வரும் ஒவ்வொரு வினாக்களுக்கு முரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

6. உயரத்தில் C மற்றும் A ஆகியோருக்கிடையில் இருப்பவர் யார்?
   (1) B   (2) E   (3) F   (4) D   (..........)

7. பட்மின்ரன் விளையாடுபவர் யார்?
   (1) B   (2) C   (3) D   (4) F   (..........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. தன்னைவிட உயரத்தில் கூடிய மூவருள்ளும் உயரத்தில் குறைந்த இருவருள்ளும் ஒருவராகக் கருதப்படுபவர் யார்?

(1) B (2) A (3) D (4) E (..........)

9. ஒவ்வொரு விளையாட்டிற்கும் எதிரே அந்த விளையாட்டு வீரனின் பெயரைச் சரியாகக் காட்டுவது பின்வருவனவற்றுள் எது?

(1) பட்மின்ரன் - F (2) கிரிக்கட் - A

(3) கூடைப்பந்து - A (4) கூடைப்பந்து - D (..........)

10. விளையாட்டு வீரரின் உயரம் தொடர்பாகத் தரப்பட்ட கூற்றுக்களுள் எந்தக்கூற்று தவறானதாகும்?

(1) A என்பவர் D விட உயரம் குறைந்தவர்.

(2) B என்பவர் D விட உயரமானவர்.

(3) E என்பவர் F விட உயரம் குறைந்தவர்.

(4) F என்பவர் B விட உயரமானவர். (..........)

- 11 தொடக்கம் 15 வரையுள்ள ஒவ்வொரு வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்து. அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

11. தேசிய நிகழ்வு நடாத்துதல் தொடர்பான கூட்டம் ஒன்றில் கலந்து கொண்ட 10 அலுவலர்கள் கூட்டம் முடிவடைந்த பின்னர் ஒருவருக்கு ஒருவர் கைலாகு கொடுத்து விடைபெற்றனர். அவ்வாறு கைலாகு கொடுக்கும் நிகழ்வுகள் எத்தனை நடைபெறும்?

(1) 20 (2) 45 (3) 55 (4) 90 (..........)

12. குறித்தவொரு வகுப்பொன்றில் 160 சென்றிமீற்றரை விட உயரமான 18 ஆண் பிள்ளைகள் உள்ளனர். இந்த அளவினர் வகுப்பில் உள்ள ஆண் மாணவர்களின் எண்ணிக்கையின் நான்கில் மூன்றாகும். அந்த வகுப்பில் உள்ள மொத்த ஆண் மாணவர்களின் வகுப்பில் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கையின் மூன்றில் இரண்டாகும். அந்த வகுப்பில் உள்ள பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

(1) 24 (2) 18 (3) 12 (4) 6 (..........)

13. முஸாஜி 48 வினாக்களைக் கொண்ட குறித்தவொரு வினாத்தாள் ஒன்றுக்கு வழங்கிய தவறான விடைகளின் எண்ணிக்கை அந்த வினாத்தாளுக்கு அவர் வழங்கிய சரியான வினாக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிக்கையின் இரு மடங்காகும். மாணவனால் வினாத்தாளிலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கப்பட்டிருப்பின் அவரால் சரியாக விடையளிக்கப்பட்ட வினாக்களின் எண்ணிக்கை யாது?

(1) 16 (2) 18 (3) 24 (4) 32 (..............)


14. வகுப்பொன்றில் உள்ள ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கை அந்த வகுப்பில் உள்ள பெண் பிள்ளைகளின் எண்ணிக்கையின் மூன்று மடங்காகும். அதற்கேற்ப அந்த வகுப்பில் உள்ள முழு மாணவர்களின் எண்ணிக்கை இல்லாது இருப்பது கீழுள்ள எதிலாகும்?

(1) 40 (2) 42 (3) 44 (4) 48 (..............)

15. கார்கிள்ஸ் விற்பனை நிலையத்தில் விற்பதற்காக உள்ள பேனையொன்றின் விலை 7 ரூபாய்களாகும். பென்சில் ஒன்றின் விலை 5 ரூபாய்களாகும். அந்த விற்பனை நிலையத்தில் சில பேனாக்களையும் சில பென்சில்களையும் விலைக்கு வாங்கிய குமாரிற்கு அதற்காக 38 ரூபாய்களைச் செலுத்த நேர்ந்தது. அதற்கேற்ப குமார் விலைக்கு வாங்கிய பேனாக்களின் எண்ணிக்கை யாது?

(1) 2 (2) 3 (3) 4 (4) 5 (..............)

- 16 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் குறித்த நபர்கள் அடங்கிய சில குழுக்கள் தொடர்பான கீழே தரப்பட்ட வரிப்படம். அது தொடர்பான தகவல்கள் உரியவற்றைச் சார்ந்து உள்ளன.




★ இந்த வரிப்படத்தில் செவ்வகத்தினால் அரச ஊழியர்களும் முக்கோணத்தினால் நகர வாசிகளும் குறிப்பிடப்படுகின்றனர்.

★ அவ்வாறே பட்டதாரிகள் வட்டத்தினாலும் எழுதுவினைஞர்கள் சதுரத்தினாலும் குறிப்பிடப்படுகின்றனர்.

★ மேலும் இந்த வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு வலயங்களி னுள்ளும் ஒவ்வொரு நபர்கள் அடங்கிய குழுக்கள் 1 தொடக்கம் 11 வரையில் உள்ள எண்கள் இடப்பட்டு அடையாளமிடப்பட்டுள்ளன.

இந்தத் தகவல்களுக்கேற்ப கீழேயுள்ள ஒவ்வொரு வினாக்களுக்குமுரிய சரியான விடையைத் தெரிவுசெய்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. பின்வரும் கூற்றுக்களுள் சரியான கூற்று எது?
   (1) எல்லா எழுதுவினைஞர்களும் அரச ஊழியர்களாவார்கள்.
   (2) சில அரச ஊழியர்கள் பட்டதாரிகளாவதோடு எழுதுவினைஞர் களுமாவார்கள்.
   (3) பட்டதாரிகள் அல்லாத சகல அரச உழியர்களும் எழுதுவினைஞர் களாவார்கள்.
   (4) எல்லா எழுதுவினைஞர்களும் அரச ஊழியர்களாக இருப்பினும் பட்டதாரிகள் இல்லை. (............)

17. பின்வரும் கூற்றுக்களுள் தரப்பட்ட தகவல்களுக்கேற்ப உண்மை அல்லாத கூற்று எது?
   (1) சகல நகரவாசிகளும் பட்டதாரிகள் இல்லை.
   (2) சில எழுதுவினைஞர்கள் அரச ஊழியர்களாவதோடு பட்டதாரிகளு மாவார்கள்.
   (3) அரச ஊழியர்கள் அல்லாத சகல பட்டதாரி எழுதுவினைஞர்கள், நகரவாசிகள் ஆவார்.
   (4) எழுதுவினைஞர்கள் அல்லாத சகல நகரவாசிகளும் பட்டதாரிகள் ஆவார்கள்.

18. பின்வரும் கூற்றுக்களைக் கருத்திற்கொள்க.
   I. சகல அரச ஊழியர்களும் எழுதுவினைஞர்கள் ஆவார்கள்.
   II. பட்டதாரி எழுதுவினைஞர்கள் சகலரும் நகரவாசிகளாவார்கள்.
   III. சில எழுதுவினைஞர்கள் அரச ஊழியர்களாவார்கள்.
   IV. நகரவாசிகளான பட்டதாரிகள் சகலரும் எழுதுவினைஞர் களாவார்கள்.

   இவற்றுள் உண்மையானது.
   (1) I, II மாத்திரம் (2) I, III மாத்திரம்
   (3) II, III மாத்திரம் (4) III, IV மாத்திரம் (............)


19. அரச ஊழியர்கள் அல்லாத பட்டதாரி நகரவாசிகளான எழுது வினைஞர்கள் இவ்வரிப்படத்தில் எவ்வலயம் மூலம் குறிப்பிடப்படு கின்றனர்?
   (1) 11 (2) 8 (3) 7 (4) 6 (............)

20. தரப்பட்ட நபர்கள் அடங்கிய நான்கு குழுக்களுள்ளும் ஏதாவது ஒரு நபர் அடங்கிய இரு குழுக்களில் மாத்திரம் உள்ளடக்கப்படும் குழுவினரைக் குறித்து நிற்கும் வலயம் எது?
   (1) 2, 4, 8 (2) 2, 4, 5, 7, 8, 11
   (3) 2, 4, 7, 8, 11 (4) 2, 4, 5, 8, 11 (............)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


- 21 தொடக்கம் 25 வரையுள்ள ஒவ்வொரு வினாக்களின் கீழேயும் குறித்தவொரு எண் கோலத்திற்கேற்ப ஒழுங்கமைக்கப்பட்ட உருக்கள் ஒவ்வொன்று தரப்பட்டுள்ளன. அக்கோலத்திற்கேற்ப ஒவ்வொரு உருவிலும் ? என்ற குறியீட்டுடன் கூடிய இடத்திற்கு இடுவதற்கு மிகவும் சிறந்த எண்ணைத் தெரிவு செய்து. அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

21.





(1) 190 (2) 221
(3) 236 (4) 255 (..........)

22.





(1) 359 (2) 438
(3) 469 (4) 471 (..........)

23.





(1) 206 (2) 215
(3) 226 (4) 248 (..........)

24.




(1) 20 (2) 22
(3) 23 (4) 25 (..........)

25.




(1) 5 (2) 8
(3) 9 (4) 14 (..........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 26 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்கள் குறித்த ஏழு மாணவர்கள் பரீட்சைத் தொடர் ஒன்றிற்கு தோற்றிப் புள்ளிகள் பெற்றுக்கொண்ட முறையைக் காட்டும் பின்வரும் தகவல்களைச் சார்ந்து உள்ளன.
    - ❖ P, Q, R, S, T, U, V என்ற பெயரையுடைய ஏழு பேர் குறித்தவொரு பரீட்சைத் தொடரொன்றில் கீழே குறிப்பிட்டவாறு புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.
        - எந்த இரு மாணவர்களும் ஒரே சமனான புள்ளிகளைப் பெற்றிருக்கவில்லை.
        - V என்பவர் எப்போதும் P ஐ விடக் கூடிய புள்ளியைப் பெறுவார்.
        - P என்பவர் எப்போதும் Q ஐ விட அதிகமான புள்ளியைப் பெறுவார்.
        - எப்போதும் ஒன்றில் R அதிக புள்ளியைப் பெறுவதுடன் T மிகக் குறைந்த புள்ளியைப் பெறுவார். இல்லையேல் S அதிக புள்ளியைப் பெறுவதுடன் U அல்லது Q என்போர் மிகக் குறைந்த புள்ளியைப் பெறுவர்.

இத்தகவல்களுக்கேற்ப கீழேயுள்ள ஒவ்வொரு வினாக்களுக்குமுரிய சரியான விடையைத் தெரிவு செய்து. அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

26. புள்ளிகளின்படி S இரண்டாவது ஆக இருப்பின், கீழ் காட்டப்பட்டுள்ள வற்றுள் எந்தக்கூற்று உண்மையாக இருக்கக்கூடும்?
    (1) U என்பவர் V ஐ விட அதிக புள்ளிகளைப் பெறுவார்.
    (2) V என்பவர் S ஐ விட அதிக புள்ளிகளைப் பெறுவார்.
    (3) P என்பவர் R ஐ விட அதிக புள்ளிகளைப் பெறுவார்.
    (4) P என்பவர் V ஐ விட அதிக புள்ளிகளைப் பெறுவார். (............)

27. புள்ளிகளைப் பெறுவதில் R இரண்டாவதாகவும் Q ஐந்தாவதாகவும் காணப்படின் பின்வரும் கூற்றுக்களில் உண்மையான கூற்று எது?
    (1) S மூன்றாவதாகும். (2) T ஆறாவதாகும்.
    (3) P முதலாவதாகும். (4) V நான்காவதாகும். (............)

28. புள்ளிகளின் எண்ணிக்கைகளில் V ஐந்தாவது இடத்தைப் பெறுவார். எனின் பின்வரும் கூற்றுக்களில் எது கண்டிப்பாக உண்மையாக இருக்க முடியும்
    (1) S கூடிய புள்ளிகளைப் பெறுவார்.
    (2) R இற்கு இரண்டாவது இடம் கிடைக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) T யிற்கு மூன்றாவது இடம் கிடைக்கும்.

(4) Q யிற்கு நான்காவது இடம் கிடைக்கும். (..........)

29. புள்ளிகளின் எண்ணிக்கைப்படி S ஆறாவதாக Q ஐந்தாவதாக இருப்பின் பின்வரும் கூற்றுக்களில் உண்மையாக இருக்கக்கூடியது எது?

(1) V என்பவர் முதலாவது அல்லது நான்காவதாவார்.

(2) R என்பவர் இரண்டாவது அல்லது மூன்றாவதாவார்.

(3) P என்பவர் இரண்டாவது அல்லது ஏழாவதாவார்.

(4) U என்பவர் மூன்றாவது அல்லது நான்காவதாவார். (..........)

30. R என்பவர் அதிகூடிய புள்ளிகளைப் பெறுவார் எனின் பின்வரும் கூற்றுக்களில் உண்மையாக இருக்க முடியாதது எது?

(1) V இரண்டாவதும் P மூன்றாவது இடமுமாகும்.

(2) P நான்காவதும் Q ஐந்தாவது இடமுமாகும்.

(3) U ஆறாவதும் Q ஏழாவது இடமுமாகும்.

(4) S இரண்டாவதும் V மூன்றாவது இடமுமாகும். (..........)

- 31 தொடக்கம் 35 வரையுள்ள வினாக்கள் குறித்த குறியீடுகள் சிலவற்றினால் காட்டப்படும் கணிதம் தொடர்பான பின்வரும் தகவல்களைச் சார்ந்து உள்ளன.
  - + என்ற குறியீட்டால் குறிப்பிடப்படுவது "முதல் மாறியானது இரண்டாவது மாறியை விட அதிகம்" என்பதாகும்.
  - – என்ற குறியீட்டால் குறிப்பிடப்படுவது "முதல் மாறியானது இரண்டாவது மாறியை விட குறைவு" என்பதாகும்.
  - × என்ற குறியீட்டால் குறிப்பிடப்படுவது "முதல் மாறியானது இரண்டாவது மாறியை விட அதிகம் இல்லை" என்பதாகும்.
  - ÷ என்ற குறியீட்டால் குறிப்பிடப்படுவது "முதல் மாறியானது இரண்டாவது மாறியை விடக் குறைவு இல்லை" என்பதாகும்.
  - # என்ற குறியீட்டால் குறிப்பிடப்படுவது "முதல் மாறியானது இரண்டாவது மாறிக்குச் சமனானது இல்லை" என்பதாகும்.

இந்தத் தகவல்களுக்கேற்ப பின்வரும் ஒவ்வொரு வினாக்களுக்குமுரிய சரியான விடையைத் தெரிவு செய்து. அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. a − b − c என்பது குறிக்கும் கணிதத் தொடர்புக்குச் சமனான தொடர்பைக் காட்டுவது கீழ்வருவனவற்றுள் எதுவாகும்?
(1) a−b+c (2) b+a−c (3) c×b+a (4) b+a÷c (........)

32. a+b−c என்பது குறிக்கும் கணிதத் தொடர்புக்குச் சமனான தொடர்பைக் காட்டுவது கீழ்வருவனவற்றுள் எதுவாகும்?
(1) b−c−a (2) c−b+a (3) c+b−a (4) a+b÷c (........)

33. a×b÷c என்பது குறிக்கும் கணிதத் தொடர்புக்குச் சமனான தொடர்பைக் காட்டுவது கீழ்வருவனவற்றுள் எதுவாகும்?
(1) a+b−c (2) c×b÷a (3) a#b#c (4) b÷a÷c (........)

34. a+b+c என்பது குறிக்கும் கணிதத் தொடர்புக்குச் சமனான தொடர்பைக் **காட்டாதது** கீழ்வருவனவற்றுள் எதுவாகும்?
(1) b−a+c (2) c−b−a (3) c−a+b (4) b−a−c (........)

35. a#b#c என்பது குறிக்கும் கணிதத் தொடர்புக்குச் சமனான தொடர்பைக் காட்டுவது கீழ்வருவனவற்றுள் எதுவாகும்?
(1) a+b+c (2) a−b−c
(3) a÷b÷c (4) இதில் எதுவுமில்லை. (........)

- 36 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் குறித்தவொரு விளையாட்டொன்றிற்காக தயாரிக்கப்பட்ட நிறப் பலகை ஒன்றில் சித்திரம் வரையப்பட்ட முறைகள் தொடர்பான பின்வரும் தகவல் களைச் சார்ந்து உள்ளன.
  - ❖ வரிப்படத்தில் காட்டப்படுவது குறித்தவொரு விளையாட்டொன்றிற் காக தயாரிக்கப்பட்ட நிறப்பலகை ஒன்றாகும். அப்பலகை அதில் காட்டப்பட்டவாறு 1 தொடக்கம் 25 வரை எண்கள் இடப்பட்ட 25 சதுரங்களில் முடிவடைகின்றது.
  - ❖ அவ் ஒவ்வொரு சதுரத்திலும் கீழே காட்டப்பட்டுள்ள நிபந்தனை களுக்கமைய நீலம், சிவப்பு, பச்சை, மஞ்சள் போன்ற ஏதாவதொரு நிறத்தினால் மட்டும் சித்திரம் வரையப்பட்டுள்ளது.
    - ◆ பலகையில் உள்ள எந்தவொரு விளிம்புகளினாலும் ஒன்றிற் கொன்று அடுத்துள்ளதாக அமையும் எந்த இரு சதுரங்களும் ஒரே நிறத்தினால் வரையப்பட **முடியாது**.
    - ◆ பலகையின் சரி மத்தியில் உள்ள சதுரம் நிறந்தீட்டப்பட்டு இருப்பது சிவப்பு நிறத்தினாலாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அவ்வாறே 19 வது சதுரம் நீல நிறத்தினாலும் 9 வது சதுரம் மஞ்சள் நிறத்தினாலும் நிறந்தீட்டப்பட முடியும்.
- 7 மற்றும் 17 ஆகிய சதுரங்கள் சிவப்பு நிறத்தினாலோ அல்லது பச்சை நிறத்தினாலும் நிறந்தீட்டப்பட **முடியாது**.
- மேலும் 16, 20, 10, 6 ஆகிய சதுரங்கள் நிறந்தீட்டப்படக் கூடியதாய் இருப்பது முறையே நீலம், சிவப்பு, பச்சை, மஞ்சள் ஆகிய நிறங்களினாலாகும்.

இந்தத் தகவல்களுக்கேற்ப பின்வரும் ஒவ்வொரு வினாக்களுக்குமுரிய சரியான விடையைத் தெரிவு செய்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 |

36. பலகையில் 7 மற்றும் 17 ஆகிய சதுரங்கள் நிறந்தீட்டப்பட்டிருப்பது முறையே எண் நிறங்களினாலாகும்?
    (1) நீலம் மற்றும் மஞ்சள் (2) நீலம் மற்றும் பச்சை
    (3) சிவப்பு மற்றும் மஞ்சள் (4) மஞ்சள் மற்றும் பச்சை (............)

37. பலகையில் 8, 12, 14, 18 போன்ற சதுரங்கள் நிறந்தீட்டப்படக் கூடிய முறைகள் தொடர்பான கீழேயுள்ள எந்தக் கூற்று உண்மையாகும்?
    (1) 8, 18 ஆம் சதுரங்கள் நீல நிறத்தினாலும் 12, 14 ஆம் சதுரங்கள் பச்சை நிறத்தினாலும் நிறந்தீட்டப்பட முடியும்.
    (2) 8, 12 ஆம் சதுரங்கள் நீல நிறத்தினாலும் 14, 18 ஆம் ச்துரங்கள் சிவப்பு நிறத்தினாலும் நிறந்தீட்டப்பட முடியும்.
    (3) 8, 12, 14, 18 போன்ற சகல சதுரங்களும் பச்சை நிறத்தினால் நிறந் தீட்டப்பட முடியும்.
    (4) 8, 12, 14, 18 போன்ற சகல சதுரங்களும் நீல நிறத்தினால் நிறந் தீட்டப்பட முடியும். (............)

38. நிறந்தீட்டும்போது முறையே 2, 4 ஆகிய சதுரங்களுக்குப் பயன் படுத்தக்கூடிய நிறச்சோடிகள் எவை?
    (1) நீலம், சிவப்பு (2) பச்சை, நீலம்
    (3) சிவப்பு, மஞ்சள் (4) நீலம், மஞ்சள் (............)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. முதல் நான்கிலும் அமைந்துள்ள நான்கு சதுரங்களும் நிறந்தீட்டப்படக் கூடியதாக இருப்பது இடது புறத்தே அல்லது வலது புறத்தேயுள்ள இரு சதுரங்களும் ஒரே நிறத்தினால் ஆகுமாறு இரு நிறங்களினால் மட்டும் எனின் அச் சதுரங்கள் கீழே காட்டிய எந்த முறைப்படி நிறந்தீட்டப்பட முடியாது?

(1) 1, 21-பச்சை, 5,25-நீலம் (2) 1, 21-சிவப்பு, 5,25-பச்சை
(3) 1,21-சிவப்பு, 5,25-நீலம் (4) 1,21-பச்சை, 5,25-மஞ்சள் (............)

40. 1 மற்றும் 5 ஆகிய சதுரங்கள் ஒரே நிறத்தினாலும் 21 மற்றும் 25 ஆகிய சதுரங்கள் வேறு ஒரு நிறத்தினாலும் நிறந்தீட்டப்பட முடியும் எனின் கீழேயுள்ள நிறங்களுள் அதற்காகப் பயன்படுத்தக்கூடிய இரு நிறங்களும் முறையே எவையாகும்?

(1) நீலம் மற்றும் சிவப்பு (2) பச்சை மற்றும் மஞ்சள்
(3) சிவப்பு மற்றும் நீலம் (4) சிவப்பு மற்றும் பச்சை (............)

- 41 தொடக்கம் 45 வரையுள்ள வினாக்கள் குறித்தவொரு வர்த்தக நிறுவனமொன்றினது ஆறு கிளைகளுக்கும் பொறுப்பாக இருக்கும் சில்வா, பெருமாள், அருணன், ரஞ்சித், கமால், மற்றும் சமீர் என்ற ஆறு முகாமையாளர்களின் சிரேஷ்ட தன்மைக்கேற்ப அவர்கள் கடந்த வருடங்களில் அந்நிறுவனத்திற்கு பெற்றுக் கொடுத்த இலாபத்திற்கேற்ப ஒழுங்கமைத்துப் பெற்றுக் கொண்ட கீழேயுள்ள தகவல்கள் மீது சார்ந்துள்ளன.

  - சிரேஷ்ட தன்மைக்கேற்ப சில்வா மற்றும் பெற்றுக் கொடுத்த இலாபத்திற்கேற்ப பெருமாள் ஒரே மட்டத்தில் இருக்கின்றனர்.
  - பெற்றுக் கொடுத்த இலாபத்திற்கேற்ப சில்வா மற்றும் சிரேஷ்ட தன்மைக்கேற்ப பெருமாள் ஒரே மட்டத்தில் இருக்கின்றனர்.
  - பெற்றுக் கொடுத்த இலாபத்தை விட சிரேஷ்ட தன்மையில் சில்வா மேலே உள்ளார்.
  - பெற்றுக் கொடுத்த இலாபத்திற்கேற்ப ஒழுங்கமைக்கும்போது பெருமாள், ரஞ்சித், சமீர் மற்றும் சில்வா ஆகியோர் ஒழுங்கு முறையில் மேல் மட்டத்தில் இருந்து கீழ் மட்டம் வரை இருக்கின்றனர்.
  - பெருமாளை விட சிரேஷ்ட தன்மையில் குறைந்த இருவர் உள்ளனர்.
  - சிரேஷ்ட தன்மைக்கேற்ப கமால் மற்றும் பெற்றுக் கொடுத்த இலாபத்திற்கேற்ப அருணன் ஒரே மட்டத்தில் இருக்கின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ அருணன் மற்றும் ரஞ்சித் ஆகியோர் சிரேஷ்ட தன்மைக்கேற்ப சில்வாவை விடக் கீழேயும் பெருமாளை விட மேலேயும் இருக்கின்றனர்.

இத்தகவல்களுக்கேற்ப கீழேயுள்ள ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவு செய்து அத்தெரிவின் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

41. சிரேஷ்ட தன்மைக்கேற்ப ஆகக் கீழே இருப்பவர் யார்?
(1) நிச்சயமாக கமால் (2) நிச்சயமாக சமீர்
(3) கமால் அல்லது அருணன் (4) கமால் அல்லது சமீர் (..........)

42. சிரேஷ்ட தன்மைக்கேற்ப ஆக மேலே இருப்பவர் யார்?
(1) சில்வா (2) அருணன் (3) ரஞ்சித் (4) பெருமாள் (..........)

43. பெற்றுக் கொடுத்த இலாபத்திற்கேற்ப மிகவும் கீழே இருப்பவர் யார்?
(1) நிச்சயமாக அருணன் (2) நிச்சயமாக கமால்
(3) கமால் அல்லது அருணன் (4) கமால் அல்லது சமீர் (..........)

44. பெற்றுக் கொடுத்த இலாபத்திற்கேற்ப ஆக மேலே இருப்பவர் யார்?
(1) ரஞ்சித் (2) சமீர் (3) பெருமாள் (4) சில்வா (..........)


45. சிரேஷ்ட தன்மைக்கேற்ப நிச்சயமாக கூறக்கூடியது இவற்றுள் எது?
(1) அருணனிற்கு கீழே ரஞ்சித் இருக்கின்றார்.
(2) அருணனிற்கு கீழே பெருமாள் இருக்கின்றார்.
(3) ரஞ்சித்திற்கு கீழே அருணன் இருக்கின்றார்.
(4) கமாலிற்கு கீழே பெருமாள் இருக்கின்றார். (..........)


- 46 தொடக்கம் 49 வரையுள்ள வினாக்கள் நான்கு தனியாள் தற்றிறன்களுக்கிடையே உள்ள தொடர்புடைமைகளை வகை குறிப்பதற்கு வரையப்பட்ட பின்வரும் வரிப்படத் தொகுதிகளையும் அவற்றுடன் தொடர்புபட்ட தகவல்களையும் அடிப்படையாகக் கொண்டவை.


❖ பின்வரும் A, B, C, D, E, F, G என்னும் ஏழு வரிப்படங்களின் மூலம் நேர்மை, கெட்டித்தனம், விடாமுயற்சி, மரியாதை என்னும் நான்கு தனியாள் தற்றிறன்களுக்கிடையேயும் தொடர்புடைமைகள் இருக்கத்தக்க சில விதங்கள் காட்டப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



A



B


C


D


E


F


G

- ❖ இங்கு ஒவ்வொரு வரிப்படத்திலும் வட்டத்தினால் நேர்மையும். முக்கோணியினால் கெட்டித்தனமும் செவ்வகத்தினால் விடா முயற்சியும். சதுரத்தினால் மரியாதையும் வகை குறிக்கப்படுகின்றன.
- ❖ அத்தற்றிறன்களிடையே ஒரு குறித்த நபரிடம் இருக்கும் தற்றிறன் களை நிச்சயமாக இனங்காணும்போது அந்நபரை இவ்வுருக்களில் எவ்வுருவில் எப்பிரதேசத்தில் இடலாமென நிச்சயமாகத் தீர்மானிக்கலாம்.
- ❖ இதற்கேற்பப் பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் I, II, III என்ற மூன்று நபர்கள் அவர்களிடம் இருக்கும் தற்றிறன்களுடன் காட்டப் பட்டுள்ளனர். இங்கு ஒவ்வொரு நபரிடமும் இங்கு காட்டப்பட்டுள்ள தற்றிறன்கள் மாத்திரம் நிச்சயமாக உள்ளனவெனக் கருதுதல் வேண்டும்.

இத்தகவல்களுக்கேற்ப பின்வரும் ஒவ்வொன்றிலும் காட்டப்பட்டுள்ள நபர்கள் மூவரையும் தனித்தனியாக இடத்தக்க பிரதேசங்கள் இடம் பெறும் உருவை / உருவங்களைத் தெரிந்தெடுத்து அதற்குரிய விடையைக் குறித்து நிற்கும் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

46. I - கெட்டித்தனம், நேர்மை, மரியாதை
    II - கெட்டித்தனம். விடாமுயற்சி
    III - மரியாதை. கெட்டித்தனம்

    (1) A (2) B (3) F (4) G (.........)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


47. I - கெட்டித்தனம், விடாமுயற்சி, மரியாதை
II - கெட்டித்தனம், கெட்டித்தனம்
III - நேர்மை, விடாமுயற்சி
(1) D (2) E (3) F (4) G (.........)

48. I - நேர்மை, விடாமுயற்சி, மரியாதை
II - விடாமுயற்சி, கெட்டித்தனம், நேர்மை
III - மரியாதை, விடாமுயற்சி, கெட்டித்தனம்
(1) A (2) G
(3) A யும் G யும் (4) B யும் G யும் (.........)

49. I - விடாமுயற்சி, நேர்மை, கெட்டித்தனம்
II - கெட்டித்தனம், விடாமுயற்சி
III - நேர்மை, மரியாதை
(1) A யும் B யும் (2) A யும் G யும்
(3) B யும் F வும் (4) B யும் G யும் (.........)

- கீழேயுள்ள கடிகாரத்தின் முகத்தில் உள்ள முட்களின் அமைவிடம் குறித்தவொரு கோலத்திற்கேற்ப தோற்றம் விதத்தை காட்டும் 5 கடிகாரங்களின் முகங்கள் தரப்பட்டுள்ளன. இக் கோலத்திற்கேற்ப ஒவ்வொரு உருவிலும் ? என்ற குறியீட்டுடன் கூடிய இடத்திற்கு அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

50. 

(1) (2) (3) (4) (...........)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாண அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில்
வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான
திறந்த போட்டிப் பரீட்சை – 2014 (2015)

உளச்சார்பு **02** 1 மணித்தியாலம்

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 2 | 21. | 4 | 41. | 4 |
| 2. | 1 | 22. | 3 | 42. | 1 |
| 3. | 2 | 23. | 2 | 43. | 3 |
| 4. | 3 | 24. | 3 | 44. | 3 |
| 5. | 2 | 25. | 1 | 45. | 2 |
| 6. | 4 | 26. | 1 | 46. | 3 |
| 7. | 3 | 27. | 2 | 47. | 2 |
| 8. | 2 | 28. | 1 | 48. | 1 |
| 9. | 2 | 29. | 4 | 49. | 3 |
| 10. | 1 | 30. | 3 | 50. | 3 |
| 11. | 3 | 31. | 2 | | |
| 12. | 3 | 32. | 3 | | |
| 13. | 1 | 33. | 2 | | |
| 14. | 2 | 34. | 4 | | |
| 15. | 3 | 35. | 4 | | |
| 16. | 2 | 36. | 1 | | |
| 17. | 4 | 37. | 3 | | |
| 18. | 3 | 38. | 2 | | |
| 19. | 1 | 39. | - | | |
| 20. | 1 | 40. | 4 | | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாகாண அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில்**
**வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான**
**திறந்த போட்டிப் பரீட்சை – 2014 (2015)**

**உளச்சார்பு** **03** **1 மணித்தியாலம்**

- 1 தொடக்கம் 5 வரையுள்ள ஒவ்வொரு வினாக்களின் கீழேயும் ஆரம்பத்தில் குறித்த தொடர்புடன் கூடிய சொற்சோடி ஒன்று தரப் பட்டுள்ளது. அச்சொற்சோடிக்கிடையில் காணப்படும் தொடர்புக்கு மிகவும் கிட்டிய தொடர்பைக் காட்டும் சொற்சோடியைத் தெரிவு செய்து, அதற்குரிய தெரிவின் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக

1. அமைச்சு : திணைக்களம்
   (1) சூரியன் : கோள்
   (2) வருடம் : மாதம்
   (3) மீற்றர் : கிலோமீற்றர்
   (4) அலுவலகம் : முகாமைத்துவ உதவியாளர் (............)

2. போட்டி : வெற்றி
   (1) வரட்சி : பஞ்சம் (2) விபத்து : காயம்
   (3) வியாபாரம் : இலாபம் (4) போர் : அழிவு
   (............)

3. எதிர்வு : எதிர்காலம்
   (1) மீண்டுவரும் : மூலதனம் (2) எதிர்பார்ப்பு : தற்காலம்
   (3) நினைவுகூறல் : கடந்தகாலம் (4) எதிர்வுகூறல் : வானிலை(............)

4. மரங்கள் : காடுகள்
   (1) புற்கள் : புல்வெளி (2) வீடுகள் : நகரம்
   (3) நட்சத்திரம் : ஆகாயம் (4) நீர் : சமுத்திரம் (............)

5. மீற்றர் : சென்ரி மீற்றர்
   (1) அங்குலம் : அடி (2) கிலோகிராம் : கிராம்
   (3) ரூபாய் : சதம் (4) லீற்றர் : மில்லிலீற்றர் (............)

- 6 தொடக்கம் 10 வரையுள்ள ஒவ்வொரு வினாக்களின் கீழேயும் குறித்த எண் தொகுதிகள் நான்கு தரப்பட்டுள்ளன. அவற்றுள் மூன்று எண் தொகுதிகளும் அவற்றுள் உள்ளடக்கிய எண்களுக்கிடையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட தொடர்பைக் காட்டுகின்றன. அவ்வாறு அல்லாத எஞ்சிய எண் தொகுதியைத் தெரிவு செய்து. அதற்குரிய தெரிவின் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

6. (1) [70, 80] (2) [54, 60] (3) [28, 32] (4) [21, 24] (............)

7. (1) [13, 21] (2) [15, 23] (3) [19, 27] (4) [16, 24] (............)

8. (1) [5, 20] (2) [6, 30] (3) [7, 42] (4) [8, 54] (............)

9. (1) [1 (5) 2] (2) [3 (19) 4] (3) [2 (20) 4] (4) [7 (113) 8] (............)

10. (1) [7 (15) 8] (2) [2 (21) 5] (3) [6 (24) 8] (4) [3 (27) 6] (............)

- 11 தொடக்கம் 15 வரையுள்ள ஒவ்வொரு வினாக்களின் கீழேயும் ஆங்கில அகராதியின் எழுத்துக்கள் குறித்த ஒழுங்கு முறைகளுக் கேற்ப ஒழுங்கமைக்கப்பட்ட எழுத்துக்கூட்டங்கள் நான்கு தரப்பட்டு ள்ளன. அவற்றுள் மூன்று எழுத்துக் கூட்டங்களில் ஆங்கில எழுத்துக்கள் அமைந்துள்ள ஒழுங்கு முறையில் குறித்த சமனான தொடர்பினைக் காட்டுகின்றன. அவ்வாறான தொடர்பினைக் **காட்டாத** எஞ்சிய எழுத்துக்கூட்டத்தைத் தெரிவு செய்து. அதற்குரிய தெரிவின் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

11. (1) SVUT (2) FHIG (3) CFED (4) ILKJ (............)

12. (1) BCHG (2) FGKL (3) HIMN (4) OPTU (............)

13. (1) SUWY (2) MOQS (3) CEGI (4) HJMO (............)

14. (1) DACB (2) GDFE (3) KHIJ (4) JGIH (............)

15. (1) IHJG (2) OMPN (3) RQSP (4) YXZW (............)

- 16 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் குறித்தவொரு பரீட்சை ஒன்றில் மாணவர்களால் பெற்றுக் கொள்ளபட்ட விசேட திறமைகள் தொடர்பான கீழேயுள்ள தகவல்களைச் சார்ந்து உள்ளன.
  - ❖ கணினி விஞ்ஞானம், பௌதிகவியல், வரலாறு, கணிதம், நடனம் போன்ற ஐந்து வினாத்தாள்களை மட்டும் கொண்ட குறித்த பரீட்சை ஒன்றிற்குத் தோற்றிய A, B, C, D, E என்ற ஐந்து மாணவர் களால், கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அந்த பாடங்களுக்கான விசேடசித்திகள் பெறப்பட்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- B, E என்ற இரு மாணவர்களும் நடனம், கணினி விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு விசேட சித்திகளைப் பெற்றிருந்தனர்.
- கணினி விஞ்ஞானம், பௌதிகவியல் ஆகிய பாடங்களுக்கு A, B என்ற இரு மாணவர்களும் விசேட சித்திகளைப் பெற்றிருந்தனர்.
- பௌதிகவியல், வரலாறு ஆகிய பாடங்களுக்கு A, C, D என்ற மூன்று மாணவர்களும் விசேட சித்திகளைப் பெற்றிருந்தனர்.
- A, C ஆகிய இரு மாணவர்களும் பௌதிகவியலுக்கும் கணிதத்திற்கும் விசேட சித்திகளைப் பெற்றிருந்தனர்.
- வரலாறு, நடனம் ஆகிய பாடங்களுக்கு D, E என்ற இரு மாணவர்களும் விசேட சித்திகளைப் பெற்றிருந்தனர்.

இத்தகவல்களுக்கேற்ப பின்வரும் ஒவ்வொரு வினாக்களுக்கும் சரியான விடையைத் தெரிவுசெய்து, அதற்குரிய தெரிவின் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

16. பௌதிகவியல், வரலாறு, கணிதம் ஆகிய பாடங்களுக்கு மாத்திரம் விசேட சித்திகளைப் பெற்றிருந்தவர் யார்?

(1) A (2) B (3) C (4) E (..........)

17. B, D என்ற இரு மாணவர்களும் விசேட சித்திகளைப் பெற்றிருந்த பாடச் சோடி யாது?

(1) பௌதிகவியல், கணினி விஞ்ஞானம்
(2) பௌதிகவியல், நடனம்
(3) வரலாறு, பௌதிகவியல்
(4) வரலாறு, நடனம் (..........)

18. கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பாடச்சோடிக்காக இந்த ஐந்து மாணவர்களுள் எவருக்குமே விசேட சித்திச் சோடியைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாது போயுள்ளது. அது பின்வரும் எந்தப் பாடச் சோடிக்காகும்?

(1) கணினி விஞ்ஞானம், கணிதம் (2) வரலாறு, கணிதம)
(3) பௌதிகவியல், நடனம் (4) கணிதம், நடனம் (..........)

19. D யிற்கு விசேட சித்தியைப் பெற்றுக்கொள்ள முடியாதுபோன பாடச் சோடிக்காக விசேட சித்திச் சோடியைப் பெற்று இருப்பவர் யார்?

(1) A (2) B (3) C (4) E (..........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. கீழேயுள்ள ஒவ்வொரு பாடத்திற்கும் எதிரே அதற்காக விசேட சித்தியைப் பெற்றிருந்த மாணவர்களைச் சரியாகக் **காட்டாதது** எது?

(1) பௌதிகவியல் - A, B, C, D

(2) நடனம் - B, D, E

(3) வரலாறு - A, B, D, E

(4) கணினி விஞ்ஞானம் - A, B, E (..........)

- 21 தொடக்கம் 25 வரையுள்ள ஒவ்வொரு வினாக்களின் கீழேயும் A, B, C, D என்றவாறான குறித்த நிகழ்வுத்தொடர் அல்லது தகவல் தொடர் ஒன்று சரியான ஒழுங்குமுறையின்றித் தரப்பட்டுள்ளன. அந்த நிகழ்வு அல்லது தகவல் தொடரினை ஒழுங்கமைக்கக்கூடிய சரியான ஒழுங்கு முறையைத் தெரிவு செய்து, அதற்குரிய தெரிவின் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

21. A - உமக்கு இன்னமும் தகவல்கள் அவசியப்பட்டால் இங்கே குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திற்கு உமது பிரச்சினைகளை முன்வையுங்கள்.

B - இந்தத் தகவல் படிவத்தில் காட்டப்பட்டுள்ள அறிவுறுத்தல் களைப் பின்பற்றுவதன் மூலம் உமது சில பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு உமக்கு சந்தர்ப்பம் கிடைக்கும்.

C - செலவுகளுக்கு நிகராக வருமானங்கள் கிடைக்கப் பெறாது இருப்பது உங்களில் அனேகமானவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினையாகும்.

D - இந்தப் படிவத்தில் நீங்கள் முகங்கொடுத்த பிரச்சினை தொடர் பாக உங்களது அவதானத்தைச் செலுத்துங்கள்.

(1) DCBA (2) BCDA (3) CBDA (4) CDBA (..........)

22. A - பாத்திரத்தின் நான்கில் மூன்று பங்கு பாலினால் நிரப்பப் பட்டுள்ளது.

B - பாத்திரத்தின் அரைவாசி பாலினால் நிரப்பப்பட்டுள்ளது.

C - உமா என்பவர் பாத்திரத்தின் அரைவாசிக்கு சமனான பாலின் அளவினை பாத்திரத்திற்குச் சேர்த்தார்.

D - உமா பாத்திரத்தில் இருந்த பாலின் அளவின் அரைவாசியைப் பருகினார்.

(1) ACDB (2) BCDA (3) BDCA (4) ADCB (..........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. A - அந்தப் பாதையாலே மைதானத்திற்கு செல்ல வேண்டுமெனின், நீர் பொலிஸ் நிலையத்தைக் கடந்து வலது பக்கமாக திரும்பிச் செல்ல வேண்டும்.

B - மைதானத்திற்குச் செல்லக்கூடிய இலகுவான பாதை அதுவாகும்.

C - மைதானத்தை விரைவில் சென்றடைவதற்கு வேண்டுமெனின் நீர் மற்றைய பாதையில் பயணஞ் செய்ய வேண்டும்.

D - நூல் நிலையத்துக்கு அருகிலுள்ள மைதானத்திற்கு செல்லக்கூடிய பாதை வாகனங்கள் அதிகமானதும் தூரம் கூடிய பாதையுமாகும்.

(1) DABC (2) DCAB (3) ACDB (4) ABDC (..........)

24. A - தேவையற்ற எல்லா கோப்புகளையும் வேறாக்க வேண்டும்.

B - தேவையற்ற கோப்புகள் பரீட்சிக்கப்பட்டு இனங்காணப்பட வேண்டும்.

C - எல்லா கோப்புகளும் பரீட்சிக்கப்பட வேண்டும்.

D - வேறாக்கப்பட்ட தேவையற்ற கோப்புகள் தொடர்பாக பட்டியலொன்று தயாரிக்கப்பட வேண்டும்.

(1) CBAD (2) CADB (3) ADCB (4) CABD (..........)

25. A - சேகரன் நேரான சிந்தனை கொண்ட பேச்சாளராக விசேட பெயரைப் பெற்றுக் கொண்ட நபராவார்.


B - சேகரன் வாழ்க்கையை ஆரம்பிக்கும்போது முகாமைத்துவ உதவி அலுவலராகவே இருந்தார்.

C - வடமத்திய மாகாணத்தில் பிறந்த சேகரன் பல்வேறு திறமைகளினால் முன்னேறிய நபராவார்.

D - சேகரன் நேரான சிந்தனை தொடர்பாக பிரபல்யமான புத்தகங்களையும் எழுதி இருந்தார்.

(1) BCAD (2) CBAD (3) ACDB (4) ADCB (..........)

- 26 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்கள் கீழே காட்டப்பட்டுள்ள முக்கோணி, சதுரம், சரிவகம் ஆகியவற்றை கொண்டமைந்த வரிப்படத்தை சார்ந்து உள்ளன.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வரிப்படத்தில் உள்ள தகவல்களுக்கேற்ப கீழேயுள்ள ஒவ்வொரு வினாக்களுக்குமுரிய சரியான விடையைத் தெரிவுசெய்து, அதற்குரிய தெரிவின் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

26. இந்த வரிப்படத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள மூன்று உருவங்களுக்கும் பொதுவான எண் எது?
(1) 8 (2) 7 (3) 6 (4) 4 (..........)

27. இங்கே இரு உருவங்களுக்கு மட்டும் பொதுவான எண்களின் கூட்டுத்தொகை எவ்வளவு?
(1) 10 (2) 14 (3) 18 (4) 25 (..........)

28. முக்கோணத்தில் மட்டும் உள்ளடக்கப்பட்டுள்ள எண்களின் கூட்டுத்தொகை மூன்று உருவங்களுக்கும் பொதுவான எண்ணினால் பெருக்கப்படும்போது பெறப்படும் எண் யாது?
(1) 120 (2) 105 (3) 90 (4) 60 (..........)

29. எண்களை அதிகளவில் உள்ளடக்கிய உருவத்தினுள் உள்ள எண்களின் கூட்டுத்தொகையிலிருந்து எண்களைக் குறைந்த எண்ணிக்கையில் உள்ளடக்கிய உருவத்தில் உள்ள எண்களின் கூட்டுத்தொகையைக் கழிக்கும் போது, பெறப்படும் விடை யாது?
(1) 11 (2) 22 (3) 27 (4) 28 (..........)

30. முக்கோணத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ள எண்களின் கூட்டுத் தொகையை, சரிவகத்தில் மட்டும் உள்ளடக்கிய எண்களின் கூட்டுத்தொகையினால் பெருக்கும் போது பெறப்படும் விடை யாது?
(1) 600 (2) 510 (3) 225 (4) 195 (..........)

- 31 தொடக்கம் 35 வரையுள்ள வினாக்கள் இலவசமாக சேவையை வழங்குவதற்காக குறிப்பிட்ட நிலையமொன்றிற்கு வருகை தரும் அலுவலர் குழு தொடர்பான பின்வரும் தகவல்களைச் சார்ந்து உள்ளன.
    - ❖ A, B, C, D, E, F, G, H என்ற பெயரையுடைய எட்டு அலுவலர்கள் இலவச சேவையை வழங்குவதற்காக வாரத்தின் எல்லா நாட்களிலும் குறிப்பிட்ட நிலையத்திற்கு வருகை தருகின்றனர்.
    - ❖ அந்த நிலையம் இலவச சேவையை வழங்குவதற்காக செவ்வாய்க் கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரையான எல்லா நாட்களிலும் முற்பகல் 9.00 மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரையும் பிற்பகல் 2.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறந்திருக்கும். அந்த நாட்களில் முற்பகல் 9.00 மணியளவில் வைத்திய நிலையத்தை திறந்தபின் ஒவ்வொரு மணித்தியாலமும் ஒரு அலுவலர் வீதம் ஒரு மணித்தியாலம் சேவை செய்வதற்காக அங்கு வருவார்கள்.

- அவ்வாறே திங்கட்கிழமைகளில் குறித்த நிலையம் முற்பகல் 9.00 தொடக்கம் பிற்பகல் 11.00 வரையும் முற்பகல் 11.30 தொடக்கம் பிற்பகல் 1.30 வரை மாத்திரம் திறந்திருக்கும். அந்த நாட்களில் முற்பகல் 9.00 மணியளவில் குறித்த நிலையம் திறந்தபின் ஒவ்வொரு அரைமணித்தியாலத்திற்கும் ஒருமுறை ஒரு அலுவலர் வீதம் அரை மணித்தியாலம் சேவை செய்வதற்கு அங்கு வருவார்கள்.
- இந்த குறித்த நிலையம் செவ்வாய் முதல் ஞாயிறு வரை எல்லா நாட்களிலும் பிற்பகல் 1.00 தொடக்கம் பிற்பகல் 2.00 வரையும் திங்கட்கிழமைகளில் முற்பகல் 11.00 தொடக்கம் முற்பகல் 11.30 வரை மாத்திரம் மதிய உணவிற்காக மூடியிருக்கும்.
- மேலும், இந்த அலுவலர் குழுவினர் கீழேயுள்ள நிபந்தனை களுக்கு அமைய திங்கட்கிழமை உள்ளடங்கலாக ஒவ்வொரு நாளும் சேவை செய்வதற்காக நிலையத்திற்கு வருகை தருகின்றனர்.
    - ஒவ்வொரு நாளும் அலுவலர்கள் வருகை தருவது ஒரு குறித்த ஒழுங்கு முறைப்படியே ஆகும்.
    - B அலுவலருக்கு முன்னரோ F அலுவலருக்கு பின்னரோ எந்த வைத்தியரும் வருகை தருவதில்லை.
    - மதிய உணவு இடைவேளை முடிவடைந்த பின்னர் உடனடி யாக H அலுவலர் வருவதுடன் அதன் பின்னர் C அலுவலர் வருகை தருவார்.
    - மதிய உணவிற்குப் பின் A அலுவலர் வருவது மதிய உணவிற்கு முன் D என்ற அலுவலர் வரும் ஒழுங்குமுறைக் கேற்பவே வருகை தருவார்.
    - இங்கு ஒவ்வொரு அலுவலரும் எந்த நாளிலும் நிலையத்திற்கு வருகை தருவது ஒரு முறைமாத்திரமே ஆகும்.

இந்தத் தகவல்களுக்கேற்ப பின்வரும் ஒவ்வொரு வினாக்களுக்கு முரிய சரியான விடையைத் தெரிவுசெய்து, அதற்குரிய தெரிவின் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. செவ்வாய்க்கிழமைகளில் A என்ற அலுவலர் சேவையை ஆரம்பிக்கும் நேரம் யாது?

(1) முற்பகல் 10.00 (2) நண்பகல் 12.00
(3) பிற்பகல் 4.00 (4) பிற்பகல் 5.00 (..........)

32. திங்கட்கிழமைகளில் E என்ற அலுவலர் சேவையை நிறைவு செய்யும் நேரம் யாது?

(1) முற்பகல் 9.00 அல்லது முற்பகல் 10.30
(2) முற்பகல் 10.00 அல்லது முற்பகல் 11.00
(3) முற்பகல் 11.00 அல்லது பிற்பகல் 1.00
(4) பிற்பகல் 12.30 அல்லது பிற்பகல் 1.00

33. புதன்கிழமை ஒன்றில் பிற்பகல் 4.15 இற்கு குறித்த சேவையைப் பெற வருகைதரும் சேவை நாடுநருக்கு சந்திக்கக்கூடிய அலுவலர் யார்?

(1) A (2) C (3) F (4) E (..........)

34. குறித்த காரணமொன்றினால் திங்கட்கிழமை தவிர்ந்த நாளொன்றில் மதிய உணவு இடைவேளையும் அதற்கு மேலதிகமாக எல்லா சேவை நேரத்தையும் 15 நிமிடங்களால் குறைப்பதற்கு நேரிட்டால் அந்தநாளில் F என்ற அலுவலர் என்ன நேரத்தில் சேவையை வழங்க ஆரம்பிப்பர்?

(1) பிற்பகல் 3.15 (2) பிற்பகல் 4.00
(3) பிற்பகல் 4.15 (4) பிற்பகல் 4.45 (..........)

35. பின்வரும் கூற்றுகளுள் நிச்சயமாக உண்மை **அல்லாதது** எது?

(1) அலுவலர் B சேவையை நிறைவு செய்தபின்னர் உடனடியாக அலுவலர் G சேவையை ஆரம்பிப்பார்.
(2) அலுவலர் D சேவையை நிறைவு செய்தபின்னர் உடனடியாக அலுவலர் G சேவையை ஆரம்பிப்பார்.
(3) அலுவலர் B சேவையை நிறைவு செய்தபின்னர் உடனடியாக அலுவலர் E சேவையை ஆரம்பிப்பார்.
(4) அலுவலர் E சேவையை நிறைவு செய்தபின்னர் உடனடியாக அலுவலர் G சேவையை ஆரம்பிப்பார். (..........)

- 36 தொடக்கம் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாக்களின் கீழேயும் I, II, III என்றவாறு குறித்த மூன்று கூற்றுக்களும் அந்தக் கூற்றுகள் ஒவ்வொன்றிடையேயும் காணப்படும். தொடர்பை விபரித்துக் காட்டும் கூற்றைத் தெரிவுசெய்து, அதன் தெரிவின் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. கூற்று I : மலர் பிறந்தது வெள்ளிக்கிழமை ஒன்றிலாகும்.

கூற்று II : கடந்த வருடம் மலரின் பிறந்தநாள் வந்தது வெள்ளிக் கிழமை ஒன்றிலாகும்.

கூற்று III : அடுத்தவருடம் மலரின் பிறந்தநாள் வருவது வெள்ளிக் கிழமை ஒன்றில் அல்ல.

(1) I உண்மையெனில். II. III ஆகியன உண்மையாக இருக்க முடியும்.

(2) I உண்மை அல்லது பொய்யாக இருப்பின் II உண்மை எனின் III உம் உண்மையாக இருக்க முடியும்.

(3) I பொய் எனின், II, III ஆகியனவும் பொய்யாக இருக்க முடியும்.

(4) I பொய் எனின் III உண்மையாக இருக்க முடியும். (..........)

37. கூற்று I : விளையாட்டு கழகமொன்றின் ஒவ்வொரு உறுப்பினர்களும் கரப்பந்து அல்லது கிரிக்கட் ஆகியவற்றுள் எந்த ஒரு விளையாட்டொன்றில் மட்டும் ஈடுபடுவார்கள்.

கூற்று II : விளையாட்டுக் கழகத்தின் உறுப்பினர்களில் 75% மானோர் கிரிக்கட் விளையாடுபவர்.

கூற்று III : விளையாட்டு கழகத்தின் உறுப்பினர்களில் 50% மானோர் கரப்பந்து விளையாடுபவர்.

(1) I, II, III ஆகியன மூன்றும் ஒன்றாக உண்மையாக இருக்கும்.

(2) I உண்மையெனின் II உண்மையாக இருக்கும்போது III பொய்யாக இருக்கும்.

(3) I உண்மை எனின் கட்டாயமாக II, III ஆகியன பொய்யாக இருக்கும்.

(4) I உண்மை அல்லது பொய்யாக இருப்பினும் II உண்மை எனின் III உண்மையாக இருக்க முடியும். (..........)

38. கூற்று I : திரு. கமலன் அவர்களினால் முகாமைத்துவம் தொடர்பாக பல புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன.

கூற்று II : "சிறந்த அலுவலக முகாமைத்துவம்" என்ற பெயரையுடைய புத்தகம் திரு. வெத்தசிங்கத்தினால் எழுதப்பட்டது.

கூற்று III : திரு. கமலன் அவர்கள் எழுதியது கட்டடக்கலை சம்பந்த மான புத்தகம் மட்டுமேயாகும்.

(1) I உண்மையாகும் எனின், II உண்மையாக இருக்கமுடியாது.

(2) I, II ஆகியன உண்மையாகும் எனின் III உண்மையாக இருக்க வேண்டும்.

(3) III உண்மையாக இருப்பது I பொய்யாக இருந்தால் மாத்திரமே யாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) I, II, III ஆகியன மூன்றும் ஒன்றாக உண்மையாக இருக்க முடியும்.

39. கூற்று I : ஆண்டி என்பவர் காண்டியை விட உயரத்தில் கூடிய வராயினும் அவர் நித்தியைப்போன்று உயரம் இல்லை.

கூற்று II : நிமல் என்பவர் காண்டியை விட உயரத்தில் கூடிய வராயினும் அவர் அகிலனைப்போன்று உயரமில்லை.

கூற்று III : ஆண்டி என்பவர் நிமலலையும் காண்டியையும் விட உயரமானவர்.

(1) I, II ஆகியன ஒன்றாக உண்மையாக இருக்க முடியும்.
(2) II, III ஆகியன ஒன்றாக உண்மையாக இருக்க முடியும்.
(3) I, III ஆகியன ஒன்றாக உண்மையாக இருக்க முடியும்.
(4) I,II,III ஆகியன மூன்றும் ஒன்றாக உண்மையாக இருக்க முடியும்.

40. கூற்று I : குறித்த தொகை மாபிள்கள் 3 : 2 : 5 என்னும் விகிதத்திலும் அதற்கு சமனான எண்ணிக்கையான பென்சில்கள் 4 : 3 : 8 என்ற விகிதத்திலும் A, B, C ஆகியோருக்கு பிரிக்கப்படு கின்றது.

கூற்று II : A யிற்கு கிடைத்த பேனாக்களின் எண்ணிக்கை B க்கு கிடைத்த பென்சில்களின் எண்ணிக்கைக்குச் சமனாகும்.

கூற்று III : A யிற்கு கிடைத்த மாபிள்களின் எண்ணிக்கை C யிற்கு கிடைத்த பென்சில்களின் எண்ணிக்கையை விடக் குறைவாகும்.

(1) I உண்மையாகும் போது II உண்மையாகும் III பொய்யாகும்.
(2) I உண்மையாகும் போது II பொய்யாகும் III உண்மையாகும்.
(3) I, II, III ஆகிய மூன்றும் ஒன்றாக உண்மையாகும்.
(4) I, II, III ஆகியன மூன்றும் ஒன்றாக பொய்யாகும். (............)

- 41 தொடக்கம் 44 வரையுள்ள வினாக்கள் குறித்த ஏழு நண்பர்கள் ஒரு பரீட்சைத் தொடருக்குத் தோற்றிப் புள்ளிகளைப் பெற்ற விதம் தொடர்பான பின்வரும் தகவல்களை அடிப்படையாய்க் கொண்டவை.
  - ❖ P, Q, R, S, X, Y, Z என்ற ஏழு மாணவர்கள் ஒரு குறித்த பரீட்சைத் தொடருக்குத் தோற்றிப் பின்வருமாறு புள்ளிகளைப் பெறுகின்றனர்.
    - Z எப்போதும் P யிலும் பார்க்கக் கூடிய புள்ளிகளைப் பெறு கின்றான்.
    - P எப்போதும் Q விலும் பார்க்கக் கூடிய புள்ளிகளைப் பெறு கின்றான்.
    - எப்போதும் ஒன்றில் R கூடிய புள்ளிகளைப் பெறும் அதே வேளை X குறைந்த புள்ளிகளைப் பெறுகின்றான். அல்லது S கூடிய புள்ளிகளைப் பெறும் அதேவேளை Y அல்லது Q குறைந்த புள்ளிகளைப் பெறுகின்றான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ மேலும் இப்பரீட்சைத் தொடரில் எந்தச் சந்தர்ப்பத்திலும் இரு மாணவர்கள் சம புள்ளிகளைப் பெறுவதில்லை. இத்தகவல்களுக் கேற்பப் பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையைத் தெரிந்தெடுத்து, அதற்குரிய தெரிவின் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

41. S இரண்டாம் ஆளாகப் புள்ளிகளைப் பெற்றால், பின்வரும் கூற்றுகளிடையே எது உண்மையாக இருக்கலாம்?
   (1) Y ஆனவர் Z இலும் பார்க்கக் கூடுதலான புள்ளிகளைப் பெறுகின்றார்.
   (2) Z ஆனவர் S இலும் பார்க்கக் கூடுதலான புள்ளிகளைப் பெறுகின்றார்.
   (3) P ஆனவர் R இலும் பார்க்கக் கூடுதலான புள்ளிகளைப் பெறுகின்றார்.
   (4) P ஆனவர் Z இலும் பார்க்கக் கூடுதலான புள்ளிகளைப் பெறுகின்றார். (............)

42. புள்ளிகளைப் பொறுத்தவரை Z ஐந்தாம் இடத்தைப் பெற்றால், பின்வரும் கூற்றுகளிடையே எது கட்டாயம் உண்மையாக இருக்க வேண்டும்?
   (1) S கூடிய புள்ளிகளைப் பெறுகிறார்.
   (2) R இரண்டாம் இடத்தைப் பெறுகிறார்.
   (3) X மூன்றாம் இடத்தைப் பெறுகிறார்.
   (4) Q நான்காம் இடத்தைப் பெறுகிறார். (............)

43. புள்ளிகளைப் பொறுத்தவரை S ஆறாம் ஆளும் Q ஐந்தாம் ஆளுமெனின், பின்வரும் கூற்றுகளிடையே உண்மையாக இருப்பது யாது?
   (1) Z முதலாம் ஆள் அல்லது நான்காம் ஆள் ஆவார்.
   (2) R இரண்டாம் ஆள் அல்லது மூன்றாம் ஆள் ஆவார்.
   (3) P இரண்டாம் ஆள் அல்லது ஏழாம் ஆள் ஆவார்.
   (4) P மூன்றாம் ஆள் அல்லது நான்காம் ஆள் ஆவார். (............)

44. R கூடிய புள்ளிகளைப் பெற்றால் பின்வரும் எக்கூற்று உண்மையாக இருக்க மாட்டாது?
   (1) Z இரண்டாம் ஆளும் P மூன்றாம் ஆளும் ஆவர்.
   (2) P நான்காம் ஆளும் Q ஐந்தாம் ஆளும் ஆவர்.
   (3) Y ஆறாம் ஆளும் Q ஏழாம் ஆளும் ஆவர்.
   (4) S இரண்டாம் ஆளும் Z மூன்றாம் ஆளும் ஆவர். (............)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45. குறித்தவொரு குடும்பமொன்றில் தந்தையும் தாயும் இருப்பதுடன் அவர்களுக்கு நான்கு மகன்மாரும் அவர்களின் மனைவிமாரும் உள்ளனர். ஒவ்வொரு மகன்மாருக்கும் மூன்று மகன்களும் ஒரு மகளும் என்றவாறு உள்ளனர். அந்தக் குடும்பத்தில் உள்ள ஆண் உறுப்பினர் களின் எண்ணிக்கை, பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கையைவிட எவ்வளவால் கூடியதாகும்?

(1) 4 (2) 8 (3) 9 (4) 12 (............)


● 46 தொடக்கம் 50 வரையுள்ள ஒவ்வொரு வினாக்களின் கீழேயும் குறித்தவொரு கோலத்திற்கேற்ப அமைக்கப்பட்ட மூன்று உருவங்களும் ? என்ற குறியீடும் தரப்பட்டுள்ளன. அந்த கோலத்திற்கேற்ப ? என்ற குறியீட்டுடன் கூடிய இடத்திற்கு இடப் பொருத்தமான உருவத்தைத் தெரிவு செய்து, அதற்குரிய இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

46.




(1) (2) (3) (4) (..........)


47.





(1) (2) (3) (4) (..........)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48. 






(1) (2) (3) (4) (..........)

49. 

(1) (2) (3) (4) (..........)

50. 

(1) (2) (3) (4) (..........)

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாகாண அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில்**
**வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான**
**திறந்த போட்டிப் பரீட்சை - 2014 (2015)**

உளச்சார்பு | 03 | 1 மணித்தியாலம்

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 4 | 21. | 4 | 41. | 2 |
| 2. | 3 | 22. | 3 | 42. | 3 |
| 3. | 3 | 23. | 2 | 43. | 3 |
| 4. | 1 | 24. | 1 | 44. | 4 |
| 5. | 1 | 25. | 1 | 45. | 2 |
| 6. | 2 | 26. | 2 | 46. | 4 |
| 7. | 4 | 27. | 3 | 47. | 3 |
| 8. | 4 | 28. | 2 | 48. | 3 |
| 9. | 2 | 29. | 3 | 49. | 2 |
| 10. | 3 | 30. | 2 | 50. | 4 |
| 11. | 2 | 31. | 3 | | |
| 12. | 1 | 32. | 2 | | |
| 13. | 4 | 33. | 1 | | |
| 14. | 3 | 34. | 1 | | |
| 15. | 2 | 35. | 2 | | |
| 16. | 3 | 36. | 2 | | |
| 17. | 2 | 37. | 2 | | |
| 18. | 4 | 38. | 3 | | |
| 19. | 1 | 39. | 4 | | |
| 20. | 3 | 40. | 1 | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ०२. மொழித்திறன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. கிரகித்தல் பற்றிய அறிமுக விளக்கம்

இன்றைய நவீன கல்விச் சீர்திருத்தங்கள் மற்றும் பரீட்சைக் கட்டமைப்பின் புதிய மாற்றங்களுக்கேற்ப, அநேகமான போட்டிப் பரீட்சைகளில் கிரகித்தல் என்ற வினாப்பத்திரம் மூலம் பரீட்சார்த்திகளின் திறமை பரீட்சிக்கப்படுகின்றது. இக் கிரகித்தலானது மொழியறிவின் கூறுகளில் பிரதானமாகக் காணப்படுகின்றது.

## கிரகித்தல்

தரப்பட்ட விரிவான விடயம் பற்றிய சுருக்கமான சாரம்சத் தகவல்களை பெற்றுக் கொள்ளும் செயற்பாடே கிரகித்தல் எனப்படும். இதற்கு உதாரணம் வானொலியில் ஒலிபரப்பப்படும் செய்திகளைக் குறிப்பிடலாம். கிரகித்தல் என்பது ஒரு துறையில் மட்டும் பயன்படுவது ஒன்றல்ல. எனவே எல்லாத் துறை சார்ந்த விரிவான செய்திகளையும், ஆய்வு முடிவுகளையும் இத்துறை தன்னுள்ளே அடக்கியுள்ளது. இதனால் பரீட்சார்த்திகள் தமது புலன்களையும் சிந்தனைகளையும் விசாலப்படுத்திக்கொள்வது அவசியமாகின்றது. நுட்பமாகவும், கூர்மையாகவும், நிதானமாகவும், நோக்கி ஒருவருக்கு தாம் படிக்கும் செய்தியில் இருந்து தொகுப்பாகக் கிடைக்கும் செய்திப்பொருள் துலக்கம் பெறல் வேண்டும். சுருங்கக் கூறின் விரிந்ததொரு பொருளின் சுருங்கிய வடிவநிலையினை மொழியினை அடிப்படையாகக் கொண்ட ஓரிரு வாக்கியங்களின் மூலம் புலப்படுத்திக் காட்டும் மொழி வன்மையே கிரகித்தலாகும். கிரகித்தலின் அவசியமான கூறுகளாக சொல்விற்பண்ணம், அவதானம், விளக்கம் என்பன காணப்படுவதுடன் ஒரு விடயத்தை படிக்கும் பொழுதோ அல்லது வாசிக்கும் பொழுதோ கட்புல அவதானத் துடன் கருத்தியல் ரீதியான விளக்கத்தையும் இணைத்து மேற்கொள்ள வேண்டும்.

## கிரகித்தல் வினாப்பத்திரத்தின் நோக்கம்

கிரகித்தல் வினாப்பத்திரம் மூலம் பரீட்சார்த்தி ஒருவரின் பின்வரும் திறன்கள் அளவீடு செய்யப்படுவதே நோக்கமாகும். அவையாவன,

* தரப்பட்ட விடயத்தை தெளிவாக விளங்கிக் கொள்ளும் ஆற்றல்.
* விடயத்தைப் பொருள் மாறுபடாத வகையில் தமது சொந்த மொழி நடையில் தெளிவாக சுருக்கி எழுதும் ஆற்றல்.
* பிரதான கருத்துக்களை சரியாக விளங்கிக் கொள்ளும் ஆற்றல்.
* குறித்த விடயம் ஒன்று தொடர்பாக விபரித்து எழுதும் ஆற்றல்.
* தரப்பட்ட வினாக்களுக்கு சரியான விடையை நேரடியாக எழுதும் ஆற்றல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. கிரகித்தலின் போது பயன்படுத்தும் பிரதான வாசிப்பு நுட்பங்கள்

தரப்பட்ட பந்தியினை அல்லது விடயத்தினை வாசிக்கும்போது பின்வரும் நான்கு வாசிப்பு நுட்பங்களையும் தெரிந்து வாசித்தல், கிரகித்தல் செயற்பாட்டுக்கு வளம் சேர்க்கவல்லது. அவையாவன.

### I. உடன் தேடுதல்

* தரப்பட்ட விடயத்தில் ஒரு குறித்த தகவலை மாத்திரம் தேடுவதை இலக்காகக் கொண்டது.
* தரப்பட்ட விடயத்தை வாசிப்பதன் மூலம் எதைத் தேடுதலுக்கு உட்படுத்தியுள்ளோம் என்பதை தெளிவாக தெரிந்து கொண்டு வாசித்தல்.
* வாசிக்கும்போது அக்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக மட்டும் கவனம் அல்லது அவதானம் செலுத்தப்படல்.
* ஏனைய விடயங்களை புறந்தள்ளுதல்.

### II. சாரம்சம் தேடுதல்

* தரப்பட்ட விடயத்தின் சாரம்சம் அல்லது மையப்பொருள் என்பதை இலக்காகக் கொண்டு வாசித்தல்.
* தரப்பட்ட எல்லா விபரங்களும் உதாரணங்களும் தேவைப்படாது.
* பிரதான விடயத்தில் மட்டும் கவனம் செலுத்தி வாசித்தல்.
* கல்வி சார்ந்த, விஞ்ஞான ரீதியில் எழுதப்படும் விடயங்களில் பந்தியின் இறுதி வரிகளில் தொகுத்துக் கூறுதல் இடம்பெறுவது உண்டு.

### III. தெளிவான விளக்கத்தைப் பெற முழுமையாக வாசித்தல்

* தரப்பட்ட பகுதி முழுவதையும் முழுமையாக வாசித்தல்.
* தரப்பட்ட தகவல்களை முழுமையாக கவனத்தில் எடுத்தல்.
* அந்த தகவல்களை கொண்டு அனுமானங்களையும் முடிவுகளையும் மேற்கொள்ளல்.
* அனுமானித்துப் பெறப்படும் விடைகளைப் பெற கூடிய பயிற்சி பெறல்.

### IV. திறனாய்வு செய்தல் அல்லது மதிப்பிடல் என்பவற்றுக்காக வாசித்தல்

* வாசிக்கும் விடயத்தில் தமது கருத்தை கூறும் நோக்குடனான வாசிப்பு
* வாசித்த விடயத்தில் தர்க்கித்தல், நியாயித்தல், ஒப்பீட்டுரைத்தல் என்பனவும் இடம்பெறல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இது மிகக் கடினமான வாசிப்பு நுட்பமாகையால் இது விடயத்தை விளக்குவதுடன் எமது தீர்ப்பையும் கூறல்.
* தரப்பட்ட விடயத்தில் குறிப்பிட்ட சில சொற்களின் பொருள் தெரியாது விட்டால் அவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்காமல் அவற்றின் கருத்தை முன் பின் சொற்களினூடாக பெற முயற்சித்தல்.
* கிரகித்தல் தொடர்பான வினாக்களுக்கு விடையளிக்கும் போது தரப் பட்ட விடயத்துடன் மாத்திரம் பதிலளிப்பதுடன் அவை சொந்த மொழி நடையில் இடம்பெறவேண்டும்.

**கிரகித்தலுக்கு விரைவான வாசிப்பின் அவசியம்**

பொதுவாக கிரகித்தலுக்கு விரைவான வாசிப்பானது பின்வரும் காரணங்களுக்காக அவசியமாகக் காணப்படுகின்றது.

* சரியான விளக்கம் பெறுவதற்கு.
* வழங்கப்படும் நேரத்தினுள் விடையளிப்பதற்கு.

## கிரகித்தல் தொடர்பாக தரப்படும் பந்திகள் பற்றிய விளக்கமும் அவை தொடர்பான அணுகுமுறைகளும்.

* கிரகித்தல் தொடர்பாக தரப்படும் பந்திகள் பெரும்பாலும் கல்வி, பொரு ளாதார தகவல் சார்ந்த உயர்தரமுடையவையாக இருப்பதால் அப் பந்திகளின் அமைப்பு எவ்வாறு இருக்கும் என அறிதல் வேண்டும்.
* தரப்பட்ட விடயம் முழுவதின் சாரம்சம் தலைப்பாக அமையும்.
* தரப்பட்ட விடயத்தின் முதல் பந்தியின் முதல் வசனத்தில் பொதுவாக மையப்பொருள் அடங்கி இருத்தல்.
* தொடர்ந்து வரும் இரண்டு அல்லது மூன்று வசனங்கள் மையப் பொருளை ஒட்டிய கருத்துக்களையே கூறுவனவாக அமைதல்.
* அதன்பின் வரும் வசனம் மையப்பொருளுக்கு வலுச்சேர்க்கும் உதார ணங்கள், புள்ளிவிபரங்கள் அடங்கியதாய் அமைதல்.
* பெரும்பாலும் இறுதி வாக்கியம் மையப்பொருள் சார்ந்த முடிவை அல்லது அபிப்பிராயத்தை கூறுவதாக அமைதல்.
* எனவே கிரகித்தலுக்காக தரப்பட்ட விடயத்தில் முதல் பகுதியிலும் இறுதிப் பகுதியிலும் கூடிய கவனம் தேவை.
* பந்தியொன்றில் வருகின்ற விளக்கம், விபரம், புள்ளிவிபரங்கள் தவிர்த்து நோக்கின் சாரம்சம் பெறுவது இலகுவானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. கிரகித்தல் வினாப்பத்திரத்தில் பரீட்சிக்கப்படும் விடயங்கள்

கிரகித்தல் வினாப்பத்திரத்தில் பின்வரும் விடயங்கள் பரீட்சிக்கப்படும். அவையாவன,

I. தரப்பட்ட பந்தியை ஒரு வாக்கியத்தில் எழுதுதலும், தடித்த அல்லது கோடிட்ட எழுத்தில் உள்ள சொற்களை அல்லது சொற்றொடர்களை தரப்பட்ட பந்தியுடன் தொடர்புபடுத்தி விளக்குதலும்.

II. தரப்பட்ட பந்திக்கு மிகப் பொருத்தமான கூற்றைத் தெரிவுசெய்தல்.

III. சுருக்கம் எழுதுதலும் பந்திக்குப் பொருத்தமான தலையங்கம் இடுதலும்.

IV. தரப்பட்ட பந்தியை அடிப்படையாகக் கொண்டு கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளித்தல்.

**I. தரப்பட்ட பந்தியை ஒரு வாக்கியத்தில் எழுதுதலும் தடித்த அல்லது கோடிட்ட எழுத்தில் உள்ள சொற்களை அல்லது சொற்றொடர்களை பந்தியுடன் தொடர்புபடுத்தி விளக்குதலும்.**

தரப்பட்ட பந்தியை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படும் வாக்கியமானது எழுவாய், பயனிலை என்பவற்றை உள்ளடக்கி வசனம் முற்றுப் பெற்றிருக்க வேண்டும்.

**வாக்கியம் எழுதப்படும்போது கருத்திற் கொள்ளப்பட விடயங்கள்**

- வாக்கியத்தில் ஏழு தொடக்கம் பத்து வரையான சொற்கள் இடம்பெற்றிருத்தல் வேண்டும்.
- பிரதான கருத்தை அடிப்படையாகக் கொண்டு வாக்கியம் இடம்பெற்றிருத்தல் வேண்டும்.
- வசனம் இடையில் நிறுத்தப்படாத அதேவேளை பிரதான கருத்தும் மாறுபடாது தொடர்ச்சியாக இடம்பெற்றிருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தடித்த அல்லது கோடிட்ட எழுத்தில் உள்ள சொற்களை அல்லது சொற்றொடர்களை பந்தியுடன் தொடர்புபடுத்தி விளக்கும் போது கருத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்**

- ➢ தரப்பட்ட பந்தியுடன் கட்டாயம் தொடர்புபடுத்தி விளக்குதல்.
- ➢ தடித்த எழுத்தில் உள்ள அல்லது கோடிடப்பட்ட எழுத்தில் உள்ள சொற்கள் அல்லது சொற்தொடர் எதைக் கூற முனைகின்றது என்பதை விளக்குதல்.
- ➢ குறித்த சொற்கள் அல்லது சொற்றொடர் தரப்பட்ட பந்தியில் எவற்றை உள்ளடக்குகின்றது என்பதை விளக்குதல்.
- ➢ குறித்த சொற்கள் அல்லது சொற்றொடர் மூலம் எது செய்யப்பட வேண்டும் அல்லது எது செய்யப்படக்கூடாது என்பனவும், அவற்றின் அனுகூலங்கள், பிரதிகூலங்களும் விளக்கப்பட வேண்டும்.
- ➢ தரப்பட்ட பந்திக்கு வெளியில் சென்று விளக்குவதை தவிர்த்தல்.
- ➢ மூன்று தொடக்கம் ஐந்து வரையான வசனங்களுடன் விளக்கத்தை மட்டுப்படுத்தல்.

**உதாரணம்**

**பின்வரும் உரைப்பகுதியினை வாசித்து**

**(அ) அவை ஒவ்வொன்றிலும் உள்ள கருத்தை இயன்ற வரை சுருக்கமான ஒரு தனி வாக்கியமாக எழுதுக.**

**(ஆ) தடித்த அச்சில் தரப்பட்ட சொற்களின் கருத்தைப் பந்தியில் உள்ள விடயத்துடன் தொடர்புபடுத்தி விளக்குக.**

**a.** அபிவிருத்தியடைந்த நாடுகளில் பாடசாலைகள் தொழிநுட்பவியற் புரட்சிக்கு உட்படுகின்றன. நுண்கணணி அறிமுகஞ்செய்யப்பட்டமை **போதனைச் செயன்முறையில்** புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. / இது கடந்த காலத்தில் அச்சிட்ட பொருள் அறிமுகஞ்செய்யப்பட்டதனைத் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியுடன் ஒப்பிடத்தக்கது. / இணையத் தொடுப்புடன் கூடிய கணணியானது மாணவர்கள் பாடசாலை வேலையின் போதோ வீட்டிலோ எந்நேரத்திலும் ஆசிரியரின் வழிகாட்டுகையைப் பெறும் சாத்தியமாக்கியுள்ளது. / மாணவர்கள் பல்வேறு வலைகடப்பிடங்களை அடைந்து தேவையான விடயங்கள் பற்றிச் சொந்த முயற்சியில் கற்கலாம். / பல்லூடக எறிவைகள், CD ROM, வீடியோக்கள், வேறு தொழினுட்பவியல் துணைச்சாதனங்கள் ஆகியன வகுப்பறை போதனையின் தரத்தை மேம்படுத்த உதவுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**b.** உள்நாட்டு உல்லாசப் பயணிகளும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளும் மிகையாக வருவதனால் கடற்கரை மாசடைதல் கரையோரப் பகுதிகளில் பெருமளவில் காணப்படுகின்றது. / முறையான அடிப்படையில் குப்பை கூழங்களை துரிதமாக அகற்றாத உள்ளூராட்சி நிறுவனங்கள் உள்ள இடங்களில் இந்நிலைமை மோசமாக உள்ளது. / கடற்கரைப் பிரதேசங்களை சுற்றி வாழும் சாதாரண மக்கள் கூட மீதியான உணவுகள், பொலித்தீன், பிளாஸ்திக்குப் போத்தல்கள் ஆகியவற்றை குவிக்கும் குப்பைமேடாகக் கரையோரங்களை சுதந்திரமாக பயன்படுத்துகின்றது. / **வீட்டு மீன் சுற்றோட்ட தொழிநுட்பவியல்கள்** கிடைக்காத உணவகங்களின் உரிமையாளர்கள் சிலர் வெளியேற்றும் கழிவுகளால் கடல்நீர் மாசடைதல் எரியும் நெருப்பில் எண்ணை வார்ப்பது போல அமைந்துள்ளது. கடற்கரை உயிர்ப் பல்வகைமைக்கும் சுற்றாடலுக்கும் விளைவிக்கும் சேதம் கருத்திற் கொள்ளப்படாது கழிவுப் பொருட்களை உறிஞ்சியின் மூலம் கடலில் சேர்த்து விடுதல் செலவை மீதப்படுத்துவதாக கருதப்படுகின்றது.

**விடை.**

**a.** (அ) அபிவிருத்தியடைந்த நாடுகள் (1) நுண் கணணி அறிமுகம் (2). சுயமாக கற்றல் (3) தொழில்நுட்ப சாதனங்கள் போதனையின் தரத்தை மேம்படுத்தல். (4) இதில் இரண்டாவது வசனம் உவமானம் ஆகையால் தேவையற்றது. ஆகவே,

அபிவிருத்தியடைந்த நாடுகளில் நுண் கணணி அறிமுகம் சுயமாக கற்பதற்கும், தொழிநுட்ப சாதனங்கள் போதனையின் தரத்தை மேம்படுத்தவும் உதவுகின்றன.

(ஆ) பாடசாலையில் கல்விச் செயற்பாடுகள் செய்து காட்டுவதன் மூலம் நடைபெறல் வேண்டும். ஒரு பொருளை எவ்வாறு உருவாக்கல் வேண்டும் என்பது செய்து காட்டப்பட்டால் மட்டுமே பூரணமான கற்கையாகும். இவ்வாறான செயல் முறைகளை ஆசிரியர் செய்வது போல் கணணி, தொழில்நுட்ப சாதனங்கள் மூலம் சுயமாகவே கற்றல் முடிகின்றது.

**b.** (அ) உல்லாசப் பயணிகள் (1) கழிவுகள் அகற்றப்படாமை (2) கடற்கரை மக்கள் (3) மீன் சுற்றோட்டமின்மை (4) உணவக உரிமையாளர்கள் (5) கடற்கரை மாசடைகின்றது. (6) ஆகவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உல்லாசப் பயணிகளாலும், கழிவுகள் அகற்றப்படாமையாலும், உணவக உரிமையாளர்களாலும் கடற்கரை மாசடைகின்றது.

(ஆ) கழிவுப் பொருட்கள் தொழிநுட்ப சாதனங்கள் மூலம் மீண்டும் பாவனைப் பொருளாக மாற்றப்படல் வேண்டும். உதாரணமாக குப்பை கூழங்கள் கூட்டுப்பசளையாக மாற்றல், இவ்வாறு மீண்டும் மீண்டும் கழிவுகள் பயன்பொருளாக மாற்றுவது மீள் சுற்றோட்ட மாகும். மீள் சுற்றோட்ட தொழிநுட்பம் இன்மையால் உணவக உரிமையாளர்கள் கழிவுகளை பயன் பொருட்களாக மாற்ற முடியாமல் விடுவதால் கடற்கரைகள் மாசடைகின்றது.

## II. தரப்பட்ட பந்திக்கு மிகப் பொருத்தமான கூற்றை தெரிதல்

இதில் மிகவும் பொருத்தமான கூற்றை தெரிவு செய்தல் வேண்டும். மூன்று கூற்றுக்கள் தரப்படுகின்றன. அநேகமாக ஒரு கூற்று பந்திக்குப் பொருத்தமாக அமையும். ஆனால் பந்தியின் ஒரு சிறிய பகுதியை மட்டும் குறித்து நிற்கும். அடுத்து கூற்று பந்தியில் குறித்த விடயத்திற்கு எதிர்மாறாக அமைந்திருக்கும். இவை இரண்டும் பொருத்தமற்றதாகும். பந்தியின் பிரதான கருத்தை பிரதிபலிக்கும் கூற்றே பொருத்தமானதாகும்.

**உதாரணம்**

**பின்வரும் பந்திகள் ஒவ்வொன்றின் இறுதியிலும் உள்ள கூற்றுக்களி டையே அப்பந்தியினால் எடுத்துக் காட்டப்படும் கருத்திற்கு மிகவும் அண்மிய கூற்றைக் குறிப்பிடுக.**

(a) பதவி எதுவும் தற்காலிக வெற்றிடமாவதன் காரணமாக மாத்திரம் அப்பதவியின் பணிகளைச் செய்வதற்கு பதில் நியமனத்தைப் செய்தலாகாது. அத்தகைய பதவியின் கடமைகளைத் திணைக்களத்தின் ஏனைய அலுவலர் களிடையே வினைத்திறனுக்குக் கெடுதி ஏற்படாதவாறு பங்கிட்டளிக்க முடியும் போதெல்லாம் தற்காலிகமாக வெற்றிடமான பதவிக்குப் பதில் நியமனத்தைச் செய்யக்கூடாது.

அரசாங்க அலுவலர் ஒருவரிடம் எதிர்பார்க்கப்படும் திறன்களைப் பயன்படுத்தி நியாயமானளவில் செய்யப்படத்தக்க அரசகருமம் எதுவும் அவ்வலுவலரின் சாதாரண கடமை செயற்பரப்பெல்லையினுள்ளே கண்டிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக அமையாவிட்டாலும் அதனை அவ்வலுவலர் மேலதிக ஊதியக் கொடுப்பனவு எதுவுமின்றிச் செய்யவேண்டுமெனக் கட்டளையிடும் அதிகாரம் அரசாங்கத்திடம் உண்டு. நிலையான நியமனம் செய்யப்படும் வரைக்கும் ஒரு தற்காலிக நடவடிக்கையாக மாத்திரம் பதில் நியமனம் செய்யப்படுதல் வேண்டும். பதவிக்கு முழு நேர அலுவலரின் சேவைகள் தேவைப்படுமெனின், தாமதிமின்றி நிலையான நியமனம் செய்யப்படுதல் வேண்டும்.

(அ) திணைக்களம் ஒன்றின் பதவி எதுவும் தற்காலிகமாக வெற்றிட மாகி அப்பதவியின் பணியை வினைத்திறனுடன் நிறைவேற்ற முடியாத போது பதில் நியமனம் எதனையும் செய்தலாகாது.

(ஆ) தற்காலிகமாக வெற்றிடமாகியுள்ள ஒரு பதவியின் கடமைகளைத் திணைக்களத்தின் ஏனைய அலுவலர்களிடையே பங்கிட்டளிக்க முடியாவிட்டால் மாத்திரம் அப்பதவிக்கு ஒரு பதில் நியமனத்தைச் செய்யலாம்.

(இ) பதவியின் செயற்பரப்பெல்லையினுள்ளே அமையும் கடமை எதனையும் மேலதிக ஊதியமின்றிச் செய்யுமாறு அலுவலர் எவருக்கும் கட்டளையிடும் அதிகாரம் அரசாங்கத்திடம் உண்டு.

மேற்காட்டிய பந்தியின் பிரதான கருத்து பதில் நியமனம் எப்போது பொருத்தமானது என்பதாகும். இதில் (அ) என குறிப்பிடப்பட்டிருக்கும் கூற்று பந்தியின் பிரதான கூற்றுக்கு எதிர்மாறானதாகும். பந்தியில் தற்காலிக வெற்றிடம் ஏற்பட்டு அப்பதவியின் பணிகளை ஏனையவர்களுக்கு பங்கிட்டளிக்க முடியாதவிடத்து பதில் நியமனமும் முழு நேர அலுவலரின் சேவை தேவைப்படின் நிரந்தர நியமனமும் செய்யப்படலாம் என்றே குறிப் பிடப்பட்டுள்ளது. (இ) எனக் குறிப்பிடப்பட்ட கூற்று பந்தியுடன் பொருத்த மாக காணப்பட்டாலும் பிரதான கூற்றை அது பிரதிபலிக்கவில்லை. ஒரு பகுதியை மட்டும் பிரதிபலிக்கின்றது. (ஆ) என குறிப்பிடப்பட்ட கூற்றே பந்தி யின் பிரதான கூற்றாகிய பதில் நியமனம் எப்போது செய்யப்படல் வேண்டுமென குறிப்பிடுகின்றது. எனவே விடை பின்வருமாறு எழுதப்படல் வேண்டும்.

(a) - (ஆ)

(b) அரச தொழில் முயற்சிகள் வினைத்திறமை குன்றியவை. அதனால் அவை தனியார் மயமாக்கப்பட வேண்டும் என்பது பொதுவான ஒரு அபிப்பிராயமாகும். அரச தொழில் முயற்சிகள் பல வினைத்திறன் அற்றவை என்பது உண்மைதான். எனினும் மிக அவதானமாகப் பரிசீலிப்போமாயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றின் வினைத்திறனின்மைக்கு அரச உடமை காரணமானது அன்று. முகாமை தொடர்பில் அரசியல் தலையீட்டின் விளைவான சீரற்ற முகாமையே அதற்கு காரணமானது அன்று. முகாமை தொடர்பில் அரசியல் தலையீட்டின் விளைவான சீரற்ற முகாமையே அதற்குக் காரணம் என்பது தெளிவாகும். சமூகமுடைமைவாதம் எனும் பெயரில், சீர்தூக்கிப்பாராது தேசியமயமாக்குதல் அபிவிருத்திக்கும் சமூக நலனுக்கும் சொற்ப பங்களிப்பினையே நல்கின்றது. அதையொத்தவாறே சந்தைப் பொருளாதாரம் எனும் பெயரில் சீர்தூக்கிப்பாராது மேற்கொள்ளப்படும் தனியார் மயமாக்கத்தின் மூலம் அபிவிருத்திக்கும் சமூக நலனுக்கும் சொற்ப பலனே கிடைக்கின்றது.

சமூக நலனுக்கான அக்கறையுடன் நடைமுறைப்படுத்தும் சாத்தியக் கூறு பற்றியும் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். பொதுவான வழக்கமாக அரசு செய்ய வேண்டியது சமூகச் செலவுகளை ஏற்படுத்தாது, தனியார் தொழில்முயற்சிகள் வினைத்திறனுடன் நிறைவேற்றக்கூடிய விடயங்களை அவற்றிடம் விடுதலும் சமூகத்திற்கு தனியார் தொழில் முயற்சியினால் நிறைவேற்றப்பட முடியாதவற்றை அன்றேல் தனியார் உடமையின் கீழ் அதிகரிக்கும் செலவுடனேயே நிறைவேற்றப்படுவனவற்றை தான் கையேற்ற லும் ஆகும். அரசு தனியார் தொழில் முயற்சியை நசுக்குவதோ அதற்கு தீங்கிழைப்பதோ ஆகாது. சிறந்த தொழில்முயற்சிகளுக்கு ஊக்கமளித்தும் அநுகூலமற்றவற்றிற்கு ஊக்கமளித்தலை தவிர்த்தும் தனியார் தொழில் முயற்சியை அரசு வழிப்படுத்தி வருதல் வேண்டும்.

(அ) அரச தொழில் முயற்சிகளின் வினைத்திறமையின்மையை தவிர்ப் பதற்கு செய்ய வேண்டியது அவற்றை தனியார் மயப்படுத்துவது அன்று அரசியல் தலையீட்டுடன் சீர்குன்றிய முகாமையை சிறந்த முகாமையாக மாற்றுவதாகும்.

(ஆ) சமூகநலன் நடைமுறைப்படுத்தும் சாத்தியக் கூறு என்பவை குறித்து அக்கறை செலுத்தாது அவசரப்பட்டு தேசிய மயமாக் குதல் அல்லது தனியார் மயமாக்குதல் புத்திசாதுரியமான செயல் அன்று.

(இ) சரியான பாதையில் செல்லாத தனியார் தொழில் முயற்சிகளை மூடுதல் அல்லது தேசிய மயமாக்குதல் அரசின் கடமையாகும்.

மேற்காட்டிய பந்தியின் பிரதான கருத்து எத்துறைகள் என்ன காரணத் தினால் அரசு உடைமையாயிருத்தல் வேண்டும் எத்துறைகள் என்ன காரணத்தினால் தனியார் துறையிடம் ஒப்படைத்தல் வேண்டும் என்பதாகும். (அ) எனக் குறிப்பிடப்பட்ட கூற்று பந்தியுடன் பொருந்துகின்றது. ஆனால் பந்தியின் சிறிய பகுதியாகிய அரசதுறை பற்றியே குறிப்பிடுகின்றது. தனியார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறை பற்றி குறிப்பிடவில்லை. எனவே அது மிகப் பொருத்தமானதல்ல. (இ) எனக் குறிப்பிடப்பட்ட கூற்று பந்திக்கு எதிர்மாறானதாகும் பந்தியில் தனியார் தொழில் முயற்சிகளை மூடுவதும் தேசிய மயமாக்கலும் வேண்டு மென குறிப்பிடப்படவில்லை. தனியார் துறையை நசுக்குதல் ஆகாது என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இக்கூற்று பந்திக்கு எதிர்மாறானதாகும். (ஆ) எனக் குறிப்பிடப்பட்ட கூற்றே பந்தியின் பிரதான கருத்தாகிய தேசிய மயமாக்கல் பற்றியும் தனியார் மயமாக்கல் பற்றியும் கூறுவதுடன் பந்தியின் கூற்றுக்களுடன் ஒத்துப்போகின்றது. எனவே இதற்கான சரியான விடை

(b) - (ஆ)

சில வேளைகளில் கூற்றுக்களின் முன் ஆங்கில எழுத்துக்களும் குறிப்பிடப்பட்டிருக்கலாம் அப்படியாயின் அதையே எழுதுதல் வேண்டும்.

## III. சுருக்கம் எழுதுதலும் பந்திக்குப் பொருத்தமான தலையங்கம் இடுதலும்

விரிவாக எழுதப்பட்டுள்ள ஒரு விடயத்தை அதன் பொருள் கெடாத வாறும், தொடர்பு குறையாதவாறும் குறைந்த சொற்களில் திரட்டித் தமது சொந்த நடையில் எழுதுவது "சுருக்கம்" எனப்படும். சுருக்கம் எழுதும் மாணவர்கள் தெளிவான சிந்தனையுடன் சிறந்த வாசிப்புத் திறனையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**சுருக்கத்தின் பண்புகள்**

- மூலப் பகுதியின் கருத்து சிதைவின்றி அமைதல்.
- சொந்த மொழிநடையில் அமைதல்.
- தெளிவுறக் கூறுதல்.

### சுருக்கம் எழுதும் படிமுறைகள்

**(1) வாசித்தலும் கிரகித்தலும்**

எந்தவோர் உரைப்பகுதியையும் முதல் வாசிப்பிலேயே கிரகித்துக் கொள்வது கடினம். எனவே அவதானத்தை ஒரு நிலைப்படுத்திக் கருத்தூன்றி வாசித்தல் அவசியம். எனவே பல முறையாவது வாசித்தல் வேண்டும். தலைமைக் கருத்தைத் தலையங்கமாக இட்டு சார்புக் கருத்துக்களை உப தலையங்கமாக்கி குறிப்பெழுதிக் கொள்ள வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ( 2 ) கருத்துக்களை நிரல்படக் கோர்த்தல்

இவ்வாறு குறிப்புருவில் அமைந்த கருத்துக்களை அவற்றின் தொடர்பு பற்றியும் காரணகாரிய முறை பற்றியும் நிரல்படக் கோர்த்தல் வேண்டும்.

## ( 3 ) சுருக்கம் எழுதுதல்

நிரல்பட அமைத்த குறிப்புக்களை ஆதாரமாகக் கொண்டு கொடுக்கப் பட்ட பந்தியைப் பாராது கருத்தைத் திரட்டி சொந்த மொழி நடையில் எழுதுதல் வேண்டும்.

## ( 4 ) ஒப்பிடல்

இவ்வாறு சுருக்கம் எழுதப்பட்ட பின்னர் அதனை மூல உரைப் பகுதியுடன் ஒப்பிட்டுப் பார்த்தல் நன்று. இவ்விதப் பார்வையில் மூல உரைப் பகுதியில் விடுபட்ட கருத்துக்களைச் சுருக்கத்தில் சோத்துக் கொள்வது சாத்தியமாகிறது. அதனால் சுருக்கம் பூரணமாகிறது.

## ( 5 ) சொல் எண்ணிக்கைகளைக் கணித்தல்

பொதுவாகச் சுருக்கம் மூல உரைப்பகுதியின் மூன்றிலொரு பங்காக அமைய வேண்டும் என்பது விதி. சில சந்தர்ப்பங்களில் சொற்றொகை குறிப்பிடப்பட்டு அத்தொகையின் மேற்படாதவாறு சுருக்கம் எழுது மாறு கேட்கப்படும்.

## ( 6 ) சுருக்கத்திற்கான அடிப்படை நெறிகள்

(a) சுருக்கத்திற்காகத் தரப்படும் உரைப்பகுதிகளிலே வரும் உதாரண ங்கள் அல்லது எடுத்துக்காட்டுக்கள் கருத்துக்களின் விளக்கமாக அமைவனவேயன்றி கருத்துக்களாவதில்லை அதனால் சுருக்கம் எழுதும் போது அவை தவிர்க்கப்படலாம்.

(உ-ம்) : நாம் நல்ல நிலையில் வாழ்வதற்கு கல்வி கற்றிருக்க வேண்டும். சமூகத்தில் நல்ல நிலையில் வாழ்பவர்கள் பலர் கல்வியறிவுடைய வர்களாக இருப்பதைக் காண்கிறோம். "கற்றவனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" கல்வியறிவு உடையவனை எல்லோரும் போற்றி மரியாதை செலுத்துவார்கள். எல்லோரும் கல்வி கற்றவர் களாக இருப்பது அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமூகத்தில் நல்ல நிலையில் வாழக் கல்வி அறிவு அவசியம்.**

என்பதே இவ் உரைப்பகுதியின் கருத்து. இக்கருத்தினை விளக்கு வதற்காகவே ஏனைய கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. எனவே சுருக்கத்தில் அவை நீக்கப்பட வேண்டும்.

(b) சில வேளைகளில் மூலப்பகுதியிலே கருத்துக்கள் பலபட விரிவாக விளக்கப்படுதலுமுண்டு. அத்தகைய பகுதிகளைச் சுருக்கும் போது விரிவான விளக்கங்களை விடுத்து அவற்றிலே பொதிந்த கருத்தினை மாத்திரம் கூறல் வேண்டும்.

(உ-ம்) : மேகங்கள் கருக்கொண்டன. பறவைகள் தம் கூடு நோக்கிப் பறந்தன. குளிர்காற்று வீசியது. பாதைகளில் சென்ற மக்கள் விரை வாக நடந்தனர். சிலர் ஓடினர். மழை "சோ" எனப் பொழிந்தது.

**இங்கு மழை பெய்தது.**

என்பதே முக்கிய கருத்தாகும். இயற்கை நிகழ்ச்சிகளைப் பற்றிய விளக்கம் சுருக்கத்திலே தேவையற்றது.

(c) சில வேளைகளில் மூலப்பகுதியின் கருத்து கவர்ச்சிகரமான வருணனைகளாற் புனையப்பட்டுச் சுவைபடக் கூறப்படுவதும் உண்டு. சுருக்கத்திற் கருத்துக்கே முக்கியத்துவம் அளிக்கப்படும். ஆதலால் வருணனைகளை நீக்கி விடுதல் வேண்டும்.

(உ-ம்) : சந்திரனைப் போன்ற பிரகாசமான முகத்தினையுடைய சீதை மென்மையான மலர் இருக்கைகளை ஒத்த தன் ஆசனத்தி லிருந்து எழுந்து கருநாகம் போன்ற தன் கூந்தல் ஆடும் வண்ணம் அன்னம் போல் நடந்து சென்று கயல் விழியால், இராமனை நோக்கி மெல்லச் சிரித்தாள்.

**சீதை இராமனைப் பார்த்துச் சிரித்தாள்.**

என்னும் கருத்து வர்ணித்துக் கூறப்படுகின்றது. சீதையின் முகம், அவளது கூந்தல், நடை, கண்கள் என்பன வர்ணித்துக் கூறப்படு கின்றன. சுருக்கத்தில் இவ் வர்ணனைகள் நீக்கப்பட வேண்டும்.

(d) உவமானங்கள் எடுத்துக்கொண்ட பொருளை விளக்கிக் கூறுவத ற்குத் துணைவரும் அலங்கார வகைகளில் ஒன்று. உவமானங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களால் பொருள் விளக்கப்படும் உரைப் பகுதிகளிலே பொருளு க்கே முக்கியத்துவம் உண்டு. அதனால் சுருக்கத்தில் உவமானங் கள் தவிர்க்கப்பட வேண்டும்.

(உ-ம்) : கடல் போன்ற இவ் உலகிலே நீர்க்குமிழி போல நிலை யற்றது எமது வாழ்க்கை. கடலிலே அகப்பட்ட சிறுதுரும்பு அலைகளி னால் மீண்டும் மீண்டும் கரைக்கு அடித்து வருவதைப் போன்ற நாமும் இன்பதுன்பங்களினால் பதப்படுத்தப்படு கின்றோம்.

இதில் உவமானங்களை விடுத்து **இப்பெரிய உலகிலே நிலையற்ற எமது வாழ்க்கையை இன்பமும், துன்பமும் பதப்படுத்துகின்றன.** என்ற கருத்தை மாத்திரம் கூறல் நன்று.

(e) சில வேளைகளிலே உரைப்பகுதிகளிலே பிறிது மொழிதல் எனும் அலங்காரச் சேர்க்கையோடு கருத்துக்கள் கூறப்படுதல் உண்டு. இவ் அலங்காரத்திற்கு நேர்ப்பொருள், நேர்ப்பொருள் சார்ந்து நிற்கும் குறிப்புப் பொருள் என இருவகைப் பொருள் உண்டு. அவற்றுள் குறிப்புப் பொருளே பொருளெனக் கொள்ளப்படு வதால் சுருக்கத்திற்குக் குறிப்புப் பொருளைக் கண்டறிந்து கூறுதல் வேண்டும்.

(உ-ம்) : மயிற்றோகை நொய்மையானது, பாரம் குறைந்தது, என்னும் காரணத்தினால் அளவுக்கு மீறி வண்டியில் ஏற்று கிறோம். மயிற் றோகை தானும் அளவுக்கு மீறி ஏற்றப்பட்டதால் வண்டியின் அச்சு முறிந்துவிடும்.

**அளவுக்கு மிஞ்சினால் ஆபத்து**

என்ற கருத்தை வெளிக்கொணரவே மேல் வந்த பிறிது மொழிதல் வந்தது.

(f) சில இடங்களில் ஒருமுறை கூறப்பட்ட கருத்து மீளவும் கூறப்படு வதுண்டு. சுருக்கும் போது கூறியது, கூறும் பகுதிகளை நீக்கி விடலாம்.

(உ-ம்) : நயினாதீவில் நடந்த படகு விபத்தில் படகில் இருந்த எல்லோரும் மடிந்தனர். எவரும் மிஞ்சவில்லை. ஐயோ! என்ன அவலம் அனைவருமா பரமன் பதம் அடைந்தனர்! கடற்படையும் சுழி யோடிகளும் எவ்வளவோ முயன்றும் ஒருவர் கூட உயிருடன் அகப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நயினாதீவுக் கடல் விபத்தில் அனைவரும் மடிந்தனர்.**

என எழுதுவதே போதுமானது.

(g) ஒப்புமை காட்டுவது போல வேற்றுமை காட்டியும் கூறப்படும் பகுதியில் ஒப்புமை போன்றே வேற்றுமை காட்டுவதையும் தவிர்க்கலாம்.

(உ-ம்) இளைஞர்களின் விருப்புகள் பலதரப்பட்டவை சிலருக்கு நல்ல நடிகர்களாக வருவதற்கு விருப்பம். சிலருக்கு அரசியல்வாதிகளாக வருவதற்கு விருப்பம், சிலருக்கு வைத்தியராக, பொறியியலாளராக, சட்ட வல்லுனராக, கணக்காளராக, விரிவுரையாளராக வருவதற்கு விருப்பமாக இருக்கும். ஆனந்தம் ஆசிரியராக இருந்து அறப்பணி புரியவே விரும்பினார்.

இங்கு **ஆனந்தன் ஆசிரியராக வர விரும்பினான்** என்பதே பிரதான கருத்தாகும்.

(h) சில சுருக்கப் பகுதிகளில் பிரதான கருத்தோடு ஒத்துவராத புறம்பான விடயங்கள் பல கூறப்படும். இவ்வாறு அமையும் மற்றொன்று விரித்தல் பகுதிகளையும் சுருக்கத்தில் நீக்கிவிடலாம்.

(உ-ம்) : நாய் ஒரு சிறந்த மிருகம். அது மனிதனது சிறந்த நண்பனாக நம்பப்படுகிறது. நாயைப் பற்றிப் பலரும் சிறப்பித்துக் கூறியுள்ள னர். நாய் நன்றியுள்ள மிருகம் என்று எல்லோரும் கூறுவர்.

இதில் முதலிரண்டு வாக்கியங்கள் தவிர்ந்த ஏனைய வாக்கியங்கள் மற்றொன்று விரித்தலாக அமைகின்றது. எனவே **மனிதனின் நண்பனாகக் கருதும்** நாய் **சிறந்த மிருகமாகும்** என்பதே போதுமானது.

(i) நேர்கூற்று வாக்கியங்கள் அவசியமாயின் அயற்கூற்றாக்கப்பட வேண்டும்.

(உ-ம்) : "நான் உன்னை அழைக்கின்றேன்" என தலைவன் தலைவியிடம் கூறினான்.

**தலைவன் தலைவியை அழைப்பதாகக் கூறினான்** எனச் சுருக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுருக்கம் எழுதும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள்

★ சுருக்கம் எழுதுவதற்காகக் கொடுக்கப்பட்ட உரைப் பகுதியினைப் பலமுறை வாசித்து அதன் பிரதான கருத்தினைக் குறித்துக்கொள்ளல்.

★ சுருக்கம் எழுதுவதற்காகக் கொடுக்கப்பட்ட உரைப்பகுதி பல பந்தி களைக் கொண்டு அமைந்திருப்பின் ஒவ்வொரு பந்தியிலும் உள்ள பிரதான கருத்துக்களை அல்லது ஒவ்வொரு பந்திக்கும் ஒவ்வொரு தலையங்கங்களைக் குறித்துக் கொள்ளல் அவசியம்.

★ சுருக்கம் எப்போதும் மாணவர்களின் சொந்த உரைநடையில் அமை தல் வேண்டும். சில சந்தர்ப்பங்களில் மூல உரைநடையில் உள்ள சொற்கள் சொற்றொடர்களைப் பொருத்தம் கருதிச் சுருக்கத்தில் சேர்த்துக் கொள்ளலாம்.

★ சுருக்கத்தினை ஒரே பந்தியில் எழுதுதல் வேண்டும்.

★ சுருக்கம் எழுதும் போது சுருக்கத்திற் கையாளப்படும் உரைநடை தெளிவாகவும், இலக்கண அமைதியுடையதாகவும் அமைய வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

★ சுருக்கத்தை வாசிக்கும் போது மூல உரைநடையின் பிரதான விடயங் கள் அனைத்தையும் அறிந்துகொள்ளக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

★ உரையாசிரியர் தமது கருத்தினை வலியுறுத்துவதற்காக அல்லது தமது கருத்தினைச் சுவைபடக் கூறுவதற்காகப் பல வழிமுறைகளைக் கையாண்டிருக்கலாம். அவற்றைச் சுருக்கி ஒரு சொல்லில் எழுதுதல் அவசியம். உதாரணமாக நகைச்சுவை கருதி சில கருத்துக்களை எழுதியிருக்கலாம். அவற்றைச் சுருக்கி இவ் விடயத்தை நகைச்சுவை படக் குறிப்பிடுகிறார் என்று எழுதலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுருக்கம் எழுதும் போது தவிர்க்கப்பட வேண்டிய விடயங்கள்

★ சுருக்கத்திற்காகக் கொடுக்கப்பட்டிருக்கும் உரைப்பகுதியைப் பல முறை வாசித்து அதில் அவசியமற்ற விடயங்களைத் தவிர்க்க வேண்டும்.

★ சில விடயங்களை விளக்கமாகக் கூறுவதற்காக பல வர்ணனைகளை உரைநடையாசிரியர் கையாண்டிருக்கலாம். சில விடயங்கள் கூறியது கூறலாய் அமையலாம். அவற்றைத் தவிர்த்தல் வேண்டும்.

★ உவமை, உருவகம் போன்ற அணிகள் பலவற்றை பயன்படுத்தியிருக்கலாம். இவ்வாறான விடயங்களை வாசித்தறிந்து அவற்றினைச் சுருக்கத்திலிருந்து விலக்க வேண்டும்.

★ சுருக்கி எழுதும் போது தமது சொந்தக் கருத்துக்களை எழுதுவதைத் தவிர்க்க வேண்டும்.

★ விதிக்கப்பட்ட சொற்களை விட அதிகமாக அல்லது குறைவாக எழுதுவது கூடாது. ஆயினும் விதிக்கப்பட்ட சொற்களை விட பத்துச் சொற்கள் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ அமையலாம்.

★ சுருக்கத்தைத் தமது சொந்த உரைநடையில் எழுதும் போது அது மூல உரைநடையின் தரத்திற்கு ஏற்றவகையில் அமைய வேண்டும். எந்த விதத்திலும் அச் சுருக்கத்தின் தரம் குறைந்துவிடக் கூடாது.

★ மூல உரைநடையில் தன் கூற்றாய் அமைந்த பகுதியை மாற்றிப் பிறர் கூற்றாய் எழுதுதல் வேண்டும்.

★ சுருக்கத்திற்காகக் கொடுக்கப்பட்ட மூலப் பகுதியில் செய்யுள்கள் இடம் பெற்றிருந்தால் அவற்றை அப்படியே எழுதுவதைத் தவிர்த்து செய்யுளின் பொழிப்பைச் சுருக்கி வசன நடையில் எழுதுதல் வேண்டும்.

★ சுருக்கம் எழுதும் போது மூலப் பகுதியில் உள்ள தன்மை முன்னிலைச் சொற்களைத் தவிர்த்து அவற்றைப் படர்க்கையில் எழுதுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுருக்கத்தை மதிப்பிடும்போது கவனிக்கப்படும் விடயங்கள்

(i) **உள்ளடக்கம்**

தரப்பட்ட பந்திகளின் பிரதான கருத்துக்கள் முன்வைக்கப் பட்டிருத்தல் அவசியமாகும்.
சுருக்கத்துக்குப் புள்ளி வழங்கும் போது உரிய பந்தியின் விடயங் களை நன்றாக விளங்கிக் கொண்டிருத்தல் அடிப்படைக் கருத்துக்கள் நீக்கப்படாமை. அவசியமற்ற விடயங்களை சேர்த்துக் கொள்ளாமை, பொழிப்பாக அமைதல். கூறியதுகூறல் இல்லாமை என்பன அவதானிக்கப்படல் வேண்டும்.

(ii) **அமைப்பும் கருத்து வெளிப்பாடும்**

ஒரே பந்தியாக சுருக்கம் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.
சுருக்கமாக்கும் போது பந்தி பிரித்தல் பொருத்தமற்றது. சுருக்கத்தில் எதிர்பார்க்கப்படும் சொற்களின் எண்ணிக்கை குறைந்தோ, கூடியோ இருப்பின் சிறிது குறைந்த புள்ளிகளை பெற முடியும்.

(iii) **எழுத்து நுட்பம்**

எழுத்துப் பிழை, இலக்கணப் பிழை, நிறுத்தக் குறிகள், தெளிவான கையெழுத்து ஆகியவற்றைக் கவனித்து எழுதுக.

### உதாரண விளக்கங்கள்

**(01) கீழே தரப்பட்டுள்ள (அ), (ஆ), (இ), (ஈ) என்னும் உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் சுருக்கத்தை 15-20 சொற்களில் அமையக் கூடிய வாறு வேறுவேறாக எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)**

(அ) அபிராமி நதிக்கரையை அடுத்த அந்தச் சேரியிற் கூரையில்லாத வீட்டு வாசற்படியிலே தெருவோரத்தில் அந்தச் சிறுமி இருந்தாள். அவளுக்கு ஆறேழு வயதிருக்கும் என்று நினைக் கின்றேன். அவள் உடுத்தியிருந்த சிற்றாடை பல சிற்றாடைகளின் சேர்க்கையாய் பன்னாடை போல அந்தச் சிறிய உடலைக்கூட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றாக மூடுவதற்குப் பொருத்தமற்றதாயிருந்தது. மாவினாற் கோலம் போட்டு அலங்கரிக்கப்பட்ட அந்த திண்ணையில் இருந்து கொண்டு அவள் கையிலிருந்த சிறிய தடியினால் நிலத்திலே தாளம் போட்டுக் கொண்டிருந்தாள். மூன்று நாட்களுக்கு முன்பு பிடுங்கி அலங்கரிக்கப்பட்ட பூக்கள் அந்தத் தடியிலே வாடிக் கிடந்தன. "சேலை கட்டி வந்த நிலவோ" என்ற பாட்டைப் பாடி அந்தத் தடியினாலே தாளம் போட்டுக் கொண்டிருந்தாள்.

(ஆ) நேரத்தை நாம் வசப்படுத்த முடியுமா என்ற ஆசை அனைவருக்கும் உண்டு. அது நிச்சயம் முடியும். அதற்காக உருவாக்கப்பட்டதே நேர முகாமைத்துவம். அதாவது நேரத்தை வீணடிக்காது சரியாகக் கையாளுதல் ஆகும். நேர முகாமைத்துவம் என்பது பலர் கருதுவது போல் மேலை நாகரிகங்களுள் ஒன்று அல்ல பல நூறு வருடங்களுக்கு முன்பே "காலம் பொன் போன்றது" என்ற உண்மையை நம்பியது நம் சமுதாயம். நம் முன்னோர் காலங்காலமாக நேரத்தை மதித்து முக்கியத்துவம் அளித்து வந்துள்ளனர். நேரத்தை வீணாக்காது அதனை முழுமையாகக் கையாள்வதற்கான திறன்களை மாணவப் பருவத்திலேயே வளர்த்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு இத்திறன்களை வளர்த்துக்கொண்டவர்கள் தம் வாழ்வில் வெற்றிப் பாதையில் பயணிக்கலாம்.

(இ) தென் அமெரிக்காவில் ஒரு நூற்றாண்டுக்கு முன் அழிந்துவிட்ட இனமாகக் கருதப்பட்ட அலாஸ்கா கழுகு என்ற பறவை திரும்பவும் மக்களின் கண்களுக்குத் தென்பட்டுள்ளது. 1862 ஆம் ஆண்டின் பின் தென்படாத இப் பறவையை இப்பொழுது அலாஸ்காவைச் சேர்ந்த மக்கள் மீண்டும் கண்டுள்ளனர். அத்துடன் வன்கூவர் பல்கலைக்கழக ஆராச்சியாளர்கள் பெருங்கரடி பற்றிய ஆராய்ச்சிக்காகச் சென்ற வேளை இப்பறவையைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளனர். உயரப் பறக்கக் கூடிய இப் பறவைகளின் உயரம் எட்டு அடியாகும். இப்பறவையானது பெரிய மீன்களையும், கரடி, மான், மரை, ஓநாய் போன்ற மிருகங்களின் உடலைக் கிழித்துக் கொன்று உண்ணும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) பல அடுக்குமாடிக் கட்டடங்களில் பயன்படுத்தப்படும் மின்தூக்கி பற்றி அறிந்திருப்பீர்கள். எத்தனை மாடி உயரம் இருந் தாலும் அந்தத் தூரத்தை சில நிமிடங்களில் கடந்து செல்லும் வகையில் மின்தூக்கிகள் தயாரிக்கப்படுகின்றன. பல மாடிக் கட்டிடம் மட்டுமன்றி விண்வெளிக்கே மின்தூக்கி மூலம் செல் லும் வசதியை உருவாக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து வருகின்றனர். இதற்குக் காரணம் ரொக்கெட்டு கள் மற்றும் விண்வெளிப் பயணங்கள் ஆபத்து நிறைந்தனவாக இருப்பதுதான். சில ஆண்டுகளுக்கு முன்பு கொலம்பியா விண் வெளி ஓடம் விபத்திற்குள்ளானது நினைவிருக்கலாம். இது போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காணவந்துள்ள திட்டம் தான் விண்வெளிக்கு மின்தூக்கிகளை உருவாக்க முடியுமென விஞ்ஞானிகள் உறுதிபடத் தெரிவித்துள்ளனர்.

**விடைகள்**

**(02)** (அ) அபிராமி நதிக்கரையை அடுத்துள்ள சேரியில் தெருவோரமாக கூரையற்ற வீட்டின் வாசலிலே கிழிந்த ஆடையுடன் சிறுமி ஒருத்தி தடியால் அடித்துப் பாடியபடி இருந்தாள்.

(16 சொற்கள்)

(ஆ) மாணவப் பருவத்திலேயே நேரத்தை வீணாக்காது அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து முழுமையாகப் பயன்படுத்தும் பழக்கத்தைக் கைக்கொண்டால் வாழ்வில் வெற்றி பெறலாம்.

(14 சொற்கள்)

(இ) ஒரு நூற்றாண்டுக்கு முன் அழிந்ததாகக் கருதப்பட்ட, பெரிய மிருகங்களை உண்ணும் அலாஸ்கா கழுகை தென் அமெரிக் கரும், பெருங்கரடி பற்றி ஆராய்ந்தவர்களும் கண்டுள்ளனர்.

(15 சொற்கள்)

(ஈ) விண்வெளிப் பயணங்களில் ஆபத்துக்களைத் தவிர்க்க மின் தூக்கிகளை பயன்படுத்தலாம் எனவும் அவற்றை உருவாக்கவும் முடியும் என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

(14 சொற்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(02) கீழே தரப்படும் பந்தியை வாசித்து மூன்றிலொன்றாகச் சுருக்கி எழுதி உமது சுருக்கத்தில் இடம்பெறும் சொற்களின் எண்ணிக்கையை இறுதியில் குறிப்பிடுவதுடன் பொருத்தமான தலையங்கமும் இடுக.**

வயது முதிந்தவர்களில் பெரும்பாலானவர்கள் தம்மைத்தாமே பராமரித்துக் கொள்ளும் ஆற்றல் அற்றவர்களாக இருந்து வருகின்றனர். / குடும்பங்களுக்கும் கூட அவர்களைப் பராமரிப்பதற்கான சக்தி இருப்பதில்லை. / இதன் விளைவாகத் தோன்றக் கூடிய பிரச்சினைகள் முக்கியமாக அரசாங்கங்கள் கவனத்திற்கு எடுக்க வேண்டியுள்ளது. / சேமலாப நிதியங்கள், ஓய்வூதியங்கள் அல்லது காப்புறுதிக் கொடுப்பனவுகள் முதலிய ஓய்வூதியத் திட்டங்கள் வயது முதிந்தவர்களின் ஒரு சிறு தொகையினருக்கு மட்டுமே போதிய அளவிலான நிதிசார் பாதுகாப்பினை அளித்து வருகின்றன. /

கிராமப் புறங்களிலிருந்து நகர்புறங்களை நோக்கி இடம்பெயர்ந்து வரும் பாரிய அளவிலான குடியகல்வு மற்றும் குடும்பக் கட்டமைப்பில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் என்பவற்றின் விளைவாகப் பெருந்தொகையான குடும்பங்கள் வயது முதிர்ந்தவர்களைப் பராமரிப்பதில் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றன. / பொதுவாக நோக்கும் பொழுது வயது முதிர்ந்த பெண்கள் குறைந்த அளவிலான கல்வி மற்றும் ஊழியர் படை பங்கேற்பு விகிதங்கள் என்பவற்றின் காரணமாக வயது முதிர்ந்த ஆண்களிலும் பார்க்க மிக மோசமான நிதி நிலையை அனுபவித்து வருகின்றனர். / அவர்கள் குறைந்த அளவிலான சேமிப்புகளை கொண்டிருப்பதுடன், ஓய்வூதிய அனுகூலங்களையும் குறைந்த மட்டத்திலேயே கொண்டுள்ளனர். / மேலும், ஆண்களுடன் ஒப்பிடும் பொழுது சொத்துக்களை வைத்திருக்கும் பெண்களின் அளவும் குறைவாகவே இருந்து வருகின்றது. /

தனது சொந்தப் பொருளாதார நடவடிக்கை, ஓய்வூதியம் மற்றும் சேமலாப நிதியம் என்பவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம் என்பன பெண்களைப் பார்க்கிலும் ஆண்களைப் பொறுத்த வரையில் மிக முக்கியமானவையாகும். / இலங்கையில் வாழும் வயது முதிர்ந்தவர்களில் பெரும்பாலானவர்களைப் பொறுத்த வரையில் ஓய்வு பெற்ற பின்னர் அவர்கள் நிலையான வருமான வழி எதனையும் பெற்றிருக்கவில்லை.

மேற்காட்டிய பந்தியை எவ்வாறு சுருக்கி எழுதுவது எனப் பார்ப்போம். ஒவ்வொரு வசன முடிவிலும் கோடு போட்டுவிட்டு அதை சுருக்கி எழுதுங்கள். இதன் மூலம் எவ் வசனமும் தவற விடப்படாமலும், எவ் வசனம் எழுதப்பட்டுவிட்டது என்பதையும் அவதானிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடை**

வயது முதிர்ந்தவர்களில் பலர் தம்மைப் பராமரிக்கும் ஆற்றல் அற்றவர்கள். குடும்பங்களுக்கும் பராமரிக்கும் சக்தி இல்லை. இப்பிரச்சினைகளை அரசாங்கம் கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது. பலவிதமான ஓய்வூதிய திட்டங்கள் சிலருக்கே நிதிசார் பாதுகாப்பினை அளிக்கின்றது.

கிராமத்திலிருந்து நகர்ப்புறங்களுக்கான குடியகல்வு, குடும்பக்கட்டமைப்பு மாற்றம் ஆகியவற்றால் குடும்பங்கள் முதியவர்களை பராமரிப்பது சிரமமாகின்றது. குறைந்த கல்வி, ஊழியர் படை விகிதம் காரணமாக ஆண்களிலும் வயது முதிர்ந்த பெண்களே மோசமான நிதி நிலையை அனுபவிக்கின்றனர். சேமிப்பு, ஓய்வூதிய அனுகூலம் ஆகியவற்றிலும் குறைந்த மட்டத்தையே கொண்டுள்ளனர். சொத்துக்களையும் குறைவாகவே கொண்டுள்ளனர்.

தமது பொருளாதார நடவடிக்கை, ஓய்வூதியம், சேமலாப நிதியம் என்பவற்றின் வருமானம் ஆண்களுக்கே முக்கியமானதாகும். இலங்கையில் முதியவர்களில் பெரும்பாலானோர் ஓய்வு பெற்ற பின்னர் நிலையான வருமானம் எதுவும் இல்லாது இருக்கின்றனர்.

(77 சொற்கள்)

சிலர் சொற்களை எண்ணுவதற்கு வசதியாக கோடு போட்டு எழுதுகின்றனர். இது தவறானதாகும். இடவசதி எழுத்தின் அளவைப் பொறுத்து நான்கு அல்லது ஐந்து சொற்கள் வீதம் எழுதி வந்தால் எண்ணுவது சுலபமாகும். கேள்வியில் தரப்பட்டவாறே பந்திகளும் பிரித்து எழுதப்படல் வேண்டும்.

அடுத்ததாக பொருத்தமான தலையங்கமும் இடுதல் வேண்டும். தலையங்கம் பந்தியின் மேல் எழுதப்படல் வேண்டும். சுருக்கி எழுதிய பந்தியை நீங்கள் மறுமுறை வாசிப்பீர்களானால் தலையங்கம் உங்களுக்கு கிடைத்துவிடும். இப்பந்தியில் வயது முதிர்ந்தவர்களின் பிரச்சினை கூறப்பட்டுள்ளது. ஆனால் வயது முதிர்ந்த பெண்கள் பிரச்சினையும் வருவது உங்களைக் குழப்பலாம். ஆனால் தலையங்கமானது பிரதான விடயத்தையே மையமாக கொண்டிருப்பதுடன் பந்தியின் கருத்தை பிரதிபலிப்பதாக இருத்தல் வேண்டும். வயது முதிர்ந்த பெண்களின் பிரச்சினை ஒரு பகுதியாகவே உள்ளது. அப் பிரச்சினையையும் சேர்த்து தலையங்கம் இடுவதாயின் அது நீண்டதாக அமைந்துவிடலாம். "வயது முதிர்ந்த ஆண்களை விட பெண்களே அதிகம் பிரச்சினையை எதிர்நோக்குகின்றனர்". இது நீண்ட தலையங்கமாவதுடன், பெண்கள் பிரச்சினைக்கே முக்கியத்துவமளித்துவிடுகின்றது. எனவே "**முதியவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்**" இது பொருத்தமான தலையங்கம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## IV. தரப்பட்ட பந்தியை அடிப்படையாகக் கொண்டு கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளித்தல்.

தரப்பட்ட பந்தியை முதல் தடவை ஓரளவு மேலோட்டமாக வாசித்த பின்னர் தரப்பட்ட வினாக்களை கிரகித்துக் கொண்டு மீள பந்தியை அழுத்த மாக கிரகித்து வாசிப்பதன் மூலம் விடைகளை இலகுவாக வழங்க முடியும்.

1. கீழ் தரப்பட்டுள்ள பந்தியைக் கவனமாக வாசித்து, அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

நவீன உலகிலே வாழ்க்கைதேர்ச்சி கல்வி சமுதாயத்திற்குத் தேவையான வாழ்க்கைத்துறைப் பணிகளைத் திறம்படச் செய்வதற்கு வேண்டிய வாழ்க்கைத்தேர்ச்சித்திறன் பயிற்சிகளைக் குறித்து வழங்குகின்றது. ஒரு பரம்பரையிலிருந்து மறு பரம்பரைக்கு இவ் வாழ்க்கை தேர்ச்சித் திறன்கள் கைமாறும் முறை தொழில்நுட்ப கல்வித் திட்டமிடல் தளமாகின்றது. அக் காலச் சமூக, பொருளாதார நிலை, வினைநுட்பம், நாட்டின் செய்முறைக் கலைகள் ஆகியவற்றின் வளர்ச்சி போன்ற இத்தகைய காரணிகள் பல ஒரு குறிப்பிட்ட காலத்தில் வாழ்க்கைத் தேர்ச்சி கல்வியின் அமைப்புக்களை உருவாக்குகின்றன. இவ்வண்ணம் உற்பத்தி குறைவாயும், உள்நாட்டுத் தேவைகள் நிறைவுபடுத்த வேண்டியதாயும் வினைத்திறன் ஒப்பீட்டளவில் சாதாரணமாயும் அமைந்த காலத்தில் கைத்தொழில் பல பேரின் இல்லங்களில் வேலைத் தளத்துடன் இணைந்திருந்தன. இப்படியான சந்தர்ப்பங்களிலே வாழ்க்கைத்தேர்ச்சி கல்வி முறையானது - நூற்கல்வி (இலக்கியம்) அறிவு புகட்டப்பட்டு வந்த முறையைப் பெரிதும் ஒத்திருந்தன. அதனால், தொழில் பயிலும் மாணவன் கைத்திறன் வல்லோனாக வாழ்ந்து, வீட்டு வேலைகளைச் செய்ததோடு தொழில் தளத்திலும் தொழில் புரிந்தான். பல ஆண்டுகள் வாழ்க்கைத் தேர்ச்சி நுணுக்கங் களையும், அதன் இரகசியங்களையும் கற்றான். அக்கால வாழ்விலே தன் நிலைக்கேற்ப ஒரு வாழ்க்கை முறையையும், மெய்யியலையும் தனதாக்கினான்.

1. சமூகத்தின் தேவைகளுக்கு வாழ்க்கைத்தேர்ச்சி கல்வி எவ்வகையில் இன்றியமையாதது?
2. சமூகத்தின் சமூக பொருளாதார நிலைக்கேற்ப வாழ்க்கைத் தேர்ச்சி கல்வி அமைகிறதெனக் கூற முடியுமா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. வாழ்க்கைத் தேர்ச்சிக் கல்விக்கும், நூற்கல்வி அறிவிற்கும் இடையே எத்தகைய ஒற்றுமைகள் அக்காலத்தில் இருந்தன?

4. இத்தகைய சூழ்நிலையில் உற்பத்தி செய்யப்பட்டதைக் குடிசைக் கைத்தொழிலாக்கத்திற்கு ஏன் ஒப்பிட முடிகிறது?

5. வாழ்க்கைதேர்ச்சி கல்வி பயிலும் மாணவன் தன் வருங்கால வாழ்க்கைக்கு வேண்டப்படும் தொழில் தகைமைகளை தொழில் பயிலுகின்றமையால் பெற்றுக் கொள்கின்றானா?

**விடைகள்**

1. சமூகத்திற்குத் தேவையான தொழில் துறைப் பணிகளைத் திறம்படச் செய்வதற்கு வேண்டிய வேலைத்திறன் பயிற்சிகளைத் வாழ்க்கை தேர்ச்சி கல்வி கொடுப்பதால் அது இன்றியமையாதது.

2. ஆம்

3. வாழ்க்கை தேர்ச்சி கல்வி பயிலும் மாணவன் கைத்திறன் வல்லோனாக வாழ்ந்து, வீட்டு வேலைகளைச் செய்ததோடு, தொழில் தளத்திலும் தொழில் புரிந்தான். பல ஆண்டுகள் தொழில் நுணுக்கங்களையும், அதன் இரகசியங்களையும் கற்றான்.

4. இல்லங்களுடனேயே வேலைத்தளமும் இணைந்திருந்ததால் அதனைக் குடிசைக் கைத்தொழிலாக்கத்திற்கு ஒப்பிட முடிகின்றது.

5. ஆம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாகாண அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில்**
**வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான**
**திறந்த போட்டிப் பரீட்சை – 2014 (2015)**

**மொழித்திறன்** | **01** | **2 1/2 மணித்தியாலம்**

**எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக

1. பின்வரும் உரைப்பகுதிகளை வாசித்து, அவற்றின் சாராம்சத்தை சுருக்கமாக ஒரு தனி வாக்கியத்தில் எழுதுக. **தடித்த** எழுத்தில் தரப்பட்டுள்ள தொடர்களை விவரிக்குக.

(i) ஆங்கிலேயர் வருகையுடன் குடியேற்ற அரசாங்கங்கள் மக்களுக்கு அளித்த கல்விமுறையில் குறிப்பிட்டதொரு மாற்றம் உண்டாயிற்று. குடியேற்ற நாட்டுத் தேசாதிபதிகள், தமது நாட்டில் புனிதமாகப் போற்றும் **தலையிடாக் கொள்கையைக்** கடைப்பிடித்து, மிசனரிமாருக்கு இன்னும் கூடுதலாக ஊக்கமளித்தனராயினும், கல்வியில் தாம் நேரடியாகவே அக்கறை காட்டத் தொடங்கினர். மேலும் அதிக அரசாங்கப் பாடசாலைகளை அமைக்கும் நோக்கத்தோடு 1841 இல் மத்திய பாடசாலை ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

(ii) இன்று **உதவி நன்கொடை பெறாப் பாடசாலைகளாகத்** தொடர்ந்திருக்கும் பல பாடசாலைகள் ஒரு சமயப் பிரிவுடனோ பிறிதொரு சமயப் பிரிவுடனோ தொடர்புடையனவாய் இருந்ததோடு இங்கிலாந்திலுள்ள பொதுமக்கள் பாடசாலைகளோடு அவை ஒத்திருந்தன. அவை அறத்தையும் ஒழுக்கத்தையும் பேணும் "முழு மனிதனை" உருவாக்குவதை இலக்காகக் கொண்டவை. இலங்கையில் தாபிக்கப்பட்ட பாடசாலைகள் உள்நாட்டுக்கு அத்தியாவசதியமான மாற்றங்களோடு விருத்தி செய்யப்பட்டன. நாளடைவில் அவை போதிய அளவு வரலாற்று, பாரம்பரியம் என்பவற்றை ஈட்டிக்கொண்டன.

(iii) 'குறிப்பிட்ட' முதன்மொழி தாய்மொழியாகவுள்ளோருக்கு 'குறிப்பிட்ட இரண்டாம்மொழியைப் போதிப்பதில் கற்பித்தல் நுட்பங்களிலும் அணுகுமுறைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமென்பதையும் கற்பித்தல் பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரணமாகக் **கல்வி பயில்வோரின் முதன் மொழிக்கும் இரண்டாவது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிக்கும் இடையிலான மொழியியல் வேறுபாடு அதிகம் இருந்தமையையும் படிப்படியாகவே உணரலாயினர். ஆங்கில மொழி மூலம் பயிற்சி பெற்ற ஆங்கில ஆசிரியர்களில் பெரும் பாலோர், தேசிய மொழிகளில் திறமை குன்றியவர்களாயிருந்தமையும் இப்பிரச்சினையைப் பெரிதாக்கிற்று.

2. கீழ்க் காணப்படும் பந்தியை ஏறத்தாழ 85 சொற்களில் சுருக்கி எழுதி அதற்குப் பொருத்தமான தலைப்பொன்றையும் இடுக. சுருக்கத்தின் இறுதியில் நீங்கள் எழுதிய சொற்களின் எண்ணிக்கையையும் குறிப்பிடுக.

நிலைத்துநிற்கக் கூடிய வகையில் இலங்கையர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கு தரமான பொருளாதார வளர்ச்சியின் தேவை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோன்று தேவையான உயர் வளர்ச்சியினை எய்துவதற்குப் பொருத்தமான பேரண்டப் பொருளாதார வரைச்சட்டமாக சந்தை சார்ந்த பொருளாதாரக் கொள்கை உபாயத்தினை இலங்கையின் பெரும்பாலும் அனைத்து அரசியல் கட்சிகளும் ஏற்றுக்கொண்டுள்ளன. அரசாங்க மாற்றங்களைத் தொடர்ந்து பொதுவான பொருளாதாரக் கொள்கை வரைச்சட்டத்தினை நேர்மாற்றம் செய்வதற்கான அரசியல் இடர்நேர்வுகளை இந்த ஏற்றுக்கொள்ளல் கணிசமான அளவில் குறைவடையச் செய்கின்றது. இதற்கும் மேலதிகமாக அனைத்து அரசியல் கட்சிகளும். தனியார் துறையினரும் இலங்கைக்கு ஆதரவு வழங்கும் சர்வதேச சமூகமும் அதி உயர் பொருளாதார வளர்ச்சியினை உறுதிசெய்து கொள்வதற்காக உறுதியான கொள்கைச் சீராக்கங்களும் பொருளாதார சீர்திருத்தங்களும் அவசியம் என்பதை திரும்பத்திரும்ப ஏற்றுக்கொண்டுள்ளன. எனினும் அத்தகைய கொள்கை மாற்றங்களினதும் சீர்திருத்தங்களினதும் அளவு மற்றும் விரைவு அதேபோன்று காலவரையின் தொடர்ச்சி என்பவற்றுக்கிடையே சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. எனினும் அத்தகைய விடயங்களின் மீது பரவலான பங்கேற்பின் மூலமும் திறந்த கலந்துரையாடல்களின் மூலமும் இணக்கப்பாட்டினை அபிவிருத்தி செய்யலாம். இதற்கும் மேலதிகமாக பொருளாதாரத்தில் பாதிக்கப்பட்ட அனைத்து பிரிவுகளினதும் போதுமான ஆதரவு இன்றி அத்தகைய கொள்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீராக்கங்களினதும் சீர்திருத்தங்களினதும் உச்ச நன்மையினை எய்துவது செயல்முறைகளில் சாத்தியமாகாது. எனவே அத்தகைய முக்கிய விடயங்கள் சம்பந்தமாக தேசிய கருத்தொற்றுமையைக் கட்டியெழுப்புவதற்காக தேவையான முக்கிய கொள்கைச் சீராக்கங்களை அவற்றின் தொடர்ச்சி, விரைவு மற்றும் நடைமுறைப்படுத்தலுக்காக கருத்திற் கொள்ளப்படும் கால அட்டவணை என்பவற்றை வெளிப்படையாகக் குறிப்பிடல் வேண்டும். பொதுமக்களுக்கும் குறிப்பாக அத்தகைய கொள்கை மாற்றங்களினால் முன்னர் பாதிக்கப்பட்ட அக்கறை கொண்ட குழுக்களும் தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் கொள்கை நடைமுறைப்படுத்தல் என்பவற்றின் மீது ஒளிவுமறைவு இன்மை மற்றும் வகைகூறல் சம்பந்தமாக தமது கருத்துக்களை திரும்பத் திரும்ப வெளிப்படுத்தியுள்ளனர். எனவே பொருளாதாரச் சீர்திருத்தங்களுக்கான பொதுமக்கள் ஆதரவை கட்டியெழுப்பு வதற்கான செயல்முறையில் முக்கிய பொருளாதாரக் கொள்கை களைத் தீர்மானிப்பதில் திறந்த கலந்துரையாடல் ஒன்றினதும் உறுதியான திறனாய்வுகளை ஏற்றுக்கொள்ளுவதையும் குறைவாக மதிப்பிடமுடியாது.

**3.** கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பந்தியின் இறுதியிலும் (அ) (ஆ), (இ) என்பதாக மூன்று கூற்றுக்கள் காணப்படுகின்றன. உங்களது அபிப்பிராயத்துக்கமைய இக்கூற்றுக்களுள் எது தரப்பட்டுள்ள உரைப் பகுதிக்கு மிகப்பொருத்தமானது என எடுத்துக் காட்டுக.

உதாரணமாக : உரைப்பகுதி (i) இன் இறுதியில் தரப்பட்டுள்ள கூற்றுக் களுள் உரைப்பகுதிக்கு மிகப் பொருத்தமான கூற்று (இ) என நீங்கள் கருதுவதாயின் உங்களது விடை கீழ்வருமாறு அமைதல் வேண்டும். :

(i) - (இ)

(i) பெரும்போகம் வரட்சியினால் பாதிக்கப்பட்டதன் காரணமாக 2001 இல் நெல் உற்பத்தி 5.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இரு போகங்களிலும் விதைக்கப்பட்ட பரப்பும் அறுவடை செய்யப்பட்ட பரப்பும் வீழ்ச்சியடைந்தமைக்கு குறைவான மழை வீழ்ச்சியே காரணமாக இருந்தது. எனினும் நீர்ப்பாசன நிலங்களின் பயிர்ச் செய்கையில் மிகக்கூடியளவு கவனம் செலுத்தப்பட்டமையும் இலாபம் குறைந்த நிலங்கள் பயிர் செய்யப்பட்டமையும் சராசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைச்சலை அதிகரிக்கச் செய்து எக்டேயருக்கான சராசரி விளைச்சல் எக்டேயரொன்றிற்கு பெரும்பாலும் 4 மெற்றிக் தொன் கொண்ட உச்சமட்டத்திற்கு அதிகரிக்கச் செய்தது. உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி உரிமத் தேவைப்பாடுகள் மூலமான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் என்பன உள்நாட்டுச் சந்தையில் அரிசியின் விலைகளைக் கடுமையாக உயர்த்தின. இவ்வதிகரித்துச் செல்லும் விலைகளின் பின்னணியில் ஆண்டின் இறுதியில் கூ.மொ. விற்பனை நிலையமும் தனியார் துறையும் தீர்வையற்ற அடிப்படை யில் அரிசியை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டன. நெற்துறையை அபிவிருத்தி செய்வதற்கு பயிர்ச் செய்கை யாளருக்கும் அதே போன்று ஆலையாளர்களுக்கும் தூண்டுதலை அளிக்கக்கூடிய சூழலை உருவாக்கும் விதத்தில் உரிமத் தேவைப்பாடுகள் ஒழிக்கப்பட்டு, கடந்த காலங்களைப் போன்று அவ்வப்போதைய தேவைகளுக்கு சீராக்கம் செய்வதனை விடுத்து, உயர்ந்தமட்ட தீர்வைகளினூடாக மட்டும் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

(அ) தீர்வையுடன் கூடிய அரிசி இறக்குமதிக்கு அனுமதிக்கப்பட்ட இரண்டு நிறுவனங்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன.

(ஆ) இறக்குமதிக் கட்டுப்பாடும் உள்நாட்டு உற்பத்தி வீழ்ச்சி மற்றும் உரிமத்தேவைப்பாடுகள் என்பவற்றிடையே காரண காரியத் தொடர்பு காணப்படுகிறது.

(இ) நெல் உற்பத்தியிலான வீழ்ச்சி மற்றும் உள்நாட்டு சந்தையில் அரிசி விலையிலான துல்லியமான அதிகரிப்பு என்பவை தொடர்பான விடயங்களை எடுத்துக் காட்டுவதே இந்தப் பந்தியின் ஒரே நோக்கமாகும்.

(ii) அமயப் பணியாளர்களும் மாற்று நிலைப் பணியாளர்களும் முறையான அதிகார வழி, நாட்சம்பள அடிப்படையில் சேர்க்கப் படலாம். அத்தகைய பணியாளர்கள் அரசாங்கத்தின் கீழ் தொடர்ச்சி யான பணிவேண்டி உரிமை கோர முடியாது. சேவைச் சேர்ப்புக் காலத்திலேயே, இவ்வுண்மை அவருக்குத் தெளிவுறுத்தப் படுதல் வேண்டும். வலுவளிக்கப் பெற்ற நிரந்தரப் பதவியணி யிலுள்ள வெற்றிடங்களுக்கு நிரந்தரமாகப் பதவிகளை நிரப்பும் வரை அமய அடிப்படையில் பணியாளர்களைச் சேர்ப்பது தவிர்க்கப்படுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். அவசியம் நோக்கி, இடைநிரப்பு அமைய நியமனம் செய்யப்படுமிடத்து, அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்திற் கமைய, நிரந்தர நியமனத்திற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அத்தகைய வெற்றிடங்கள் இயன்றவரை ஒரு மாதத்திற்குள் நிரப்பப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் மூன்று மாதத்திற்குள் இடம்பெறல் வேண்டும். அமைச்சிலோ திணைக்களத்திலோ உள்ள தாபனப் பொறுப்பு உத்தியோகத்தர், இதன் தொடர்பில் ஏற்படும் தாமதத்திற்குப் பொறுப்பாளியாகக் கருதப்படுவார்.

(அ) அமையப் பணியாளர்கள் அல்லது மாமற்று நிலைப் பணியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்யும்போது பின்பற்றப் படவேண்டிய முக்கியமான விடயங்கள் இப்பந்தியில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(ஆ) அமைய நியமனங்கள் தேவையானபோது நிரந்தரப் பதவிகளுக்கு மாற்றப்படமுடியும்.

(இ) எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் வெற்றிடங்களின் பொருட்டு அமையப் பணியாளர் ஒருவர் ஆட்சேர்ப்புச் செய்யப் படுவதனை இதனை எழுதியவர் அங்கீகரிக்கவில்லை.

(iii) தற்போதைய உலகளாவிய நிலைமைகளின் கீழ், சிறிய நடுத்தர தொழில் முயற்சிகள் கடுமையான இடர்பாடுகளை எதிர்நோக்கு வதனால் இந்நெருக்கடியான நிலைமைகளின் கீழ் அவை நிலைத்திருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு இறை மற்றும் நாணய உதவிகள் தேவைப்படுகின்றன. ஒன்றில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்றுமதிகளுடன் தொடர்புபட்டுள்ள பொருளாதாரத்தில் சில துறைகள் உலகளாவிய பொருளாதார மந்தங்களினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இது தொடர்பாக, சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளின் உற்பத்திக்கான கேள்வி போதுமான தாக இல்லாமையாலும் உயர்ந்த நிதியிடல் செலவுகள் தொழிற் பாட்டு ஆற்றலை அச்சுறுத்துவதனாலும் அக் கைத்தொழில்கள் உயிர் வாழ்வதற்கு இடைக்காலத் தீர்வுகளை தொடர்வதற்கான தேவை காணப்படுகின்றது. அவர்களினால் தற்போது எதிர்நோக்கப் படும் இடர்பாடுகளுக்கு உலகளாவிய காரணிகளே காரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்பதனாலும் கணிசமானளவு மக்கள் தமது வாழ்வாதாரங் களுக்கு இத்துறையிலேயே தங்கியிருப்பதனாலும் அரசாங்கம் அவர்களுக்கு உதவும் விதத்தில் சில இறை ஊக்குவிப்பு வசதிகளை வழங்குதல் வேண்டும்.

(அ) சிறிய மற்றும் நடுத்தர அளவு நிறுவனங்களினது இயக்க செயற்பாட்டினை கொண்டு நடாத்துவதன் பொருட்டு உதவி யளிக்கக்கூடிய இரண்டு முறைகளை இந்தப் பந்தி உள்ளடக்கியுள்ளது.

(ஆ) பொருட்களுக்கு இருக்கக்கூடிய கேள்வி வீழ்ச்சி, சிறிய மற்றும் நடுத்தர அளவு நிறுவனங்களினது இயக்க செயற் பாட்டினைக் கொண்டு நடாத்துவதனைப் பாதிக்கும் பிரதான காரணியாகும்.

(இ) உலகப் பொருளதார மந்தமானது நேரடியாகவோ மறைமுக மாகவோ ஏற்றுமதிப் பொருளாதாரத்தினை மோசமாகப் பாதித்துள்ளது.

**4.** பின்வரும் உரைப்பகுதிகளை வாசித்து அவ் உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் இறுதியில் தரப்பட்டுள்ள வினாக்கள் ஒவ்வொன்று க்கும் விடை எழுதுக.

(i) கடந்த சில தசாப்தங்களாக வர்த்தக கொள்கையில் மேற்கொள்ளப் பட்ட முரணானவையும் ஒழுங்கற்றவையுமான மாற்றங்கள், வேளாண்மைத்துறையிலான முதலீட்டு விரிவாக்கம் மற்றும் அபிவிருத்திக்கான முக்கிய தடையாகத் தொடர்ந்து காணப்படு கின்றன. ஒரே நேரத்தில் எய்துவதற்குக் கஷ்டமான வாழ்க்கைச் செலவைக் குறைத்தல் மற்றும் வேளாண்மையாளர்களுக்கு பாதுகாப்பை வழங்கல் ஆகிய இரண்டு நோக்கங்களைக் கருத்திற் கொண்டு 2004 இலும் கூட குறிப்பிடப்பட்ட சில வேளாண்மைப் பொருட்கள் மீதான வர்த்தகக் கொள்கை பல தடவைகள் திருத்தியமைக்கப்பட்டது. முக்கிய உணவுப் பண்டங்கள் மீதான குறித்துரைக்கப்பட்ட தீர்வைகள் குறைக்கப்பட்டு பின் உயர்த்தப் பட்டன அல்லது கூட்டடப்பட்டு பின் குறைக்கப்பட்டன. இத் தீர்மானங்கள் உற்பத்தியாளர்களையும் இறக்குமதியாளர்களையும் கொண்ட சந்தைக்கு முரணான சமிக்ஞைகளை வழங்கியிருக்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில், அவை பொருத்தமற்ற நேரத்தில் மேற்கொள்ளப்பட்டமை யினால் விலை அழுத்தத்தையும் வழங்கல் பற்றாக் குறைகளையும் ஏற்படுத்தின. வேளாண்மைத்துறையின் மேம்பாட்டுக்கு உற்பத்தி யாளர்கள் மற்றும் நுகர்வோர் ஆகியோருக்கு பாதிப்பினை ஏற்படுத்தாத, ஒழுங்கற்ற தீர்வை மாற்றங்களினால் குறுகிய கால வழங்கல் நிலைமையைத் திரிபுபடுத்தாத, சந்தையை அடிப்படை யாகக் கொண்டதும், முரணற்றதும் மற்றும் நன்கு வரையறுக்கப் பட்டதுமான ஒரு நீண்டகால வர்த்தகக் கொள்கை முக்கிய தேவையாக உள்ளது. உண்மையில் ஒழுங்கற்ற வர்த்தகக் கொள்கைகள், நீண்ட காலத்தில் உதவுவதற்கு இலக்கிடப்பட்ட தொகுதியினருக்கு பெரும்பாலும் தீங்கினையே விளைவிக்கின்றன.

(அ) விவசாயத்துறையினது அபிவிருத்தியின் பொருட்டு நிறைவேற்றப்படவேண்டிய தேவைகள் யாவை? அவை இல்லாதவிடத்து எத்தகைய நிலை உருவாகும்?

(ஆ) வர்த்தகக் கொள்கையிலான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களது பிரதிபலிப்புக்கள் யாவை?

(இ) தீர்மானம் எடுக்கும்போது ஒன்றுக்கொன்று முரணான சைகைகளை சந்தைக்குக் கொடுத்த எத்தனை சம்பவங்களை இப்பந்தி குறிப்பிடுகிறது? அவை யாவை?

(ஈ) வர்த்தகக் கொள்கைகளிலான மாற்றத்தை எழுத்தாளர் எந்தக் கோணத்தில் பார்க்கிறார்?

(ii) விரைவான வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் தொடர்ச்சியாக முன்னேற்றமடையும் கல்வி முறைமை ஒரு முற்தேவைப்பாடாகும். கல்வி முறைமையானது பொதுக்கல்வி, தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் இறுதியாக உயர் கல்வி என எல்லா முக்கிய பிரிவுகளையும் உள்ளடக்கும். கடந்த தசாப்தத்தில், பொதுக் கல்வியில் தனியார் துறையின் ஈடுபாடு மிகப் பொரியளவில் விரிவடைந்து இலங்கையில் பொதுத்துறையினால் வழிப்படுத்தப் படும் கல்வி முறைமையிலிருந்த இடைவெளிகளை நிரப்பியது.

1998 இல் பொதுக்கல்வியின் தரத்தை மேம்படுத்துதல், பணி வழங்கலை வலுப்படுத்துதல், சகல மட்டங்களிலுமுள்ள கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்களது பொருளாதார மற்றும் சமூக தேவைப்பாட்டை மேம்படுத்தல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு கல்வி மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. இதேவேளை, பல்கலைக்கழக மற்றும் தொழிற்கல்வி சீர்த்திருத்தங்கள், அரச உடைமையின் கீழ் மூன்றாம் நிலைக்கல்வியை விரிவுபடுத்தி வாய்ப்புக்களை உருவாக்குவதனை நோக்கமாகக் கொண்டிருந்தன.

தற்போதைய பொதுக்கல்விக் கொள்கைகள் பிராந்திய வேறுபாடு குறைக்கப்படுவதனை நோக்கமாகக் கொண்டுள்ளன. இது தொடர்பில், நவோதய பாடசாலைத் திட்டம் போன்றவற்றை உள்ளடக்கிய கிராமிய மற்றும் நகரம் சார்ந்த பிரதேசங்களில் ஆசிரியர்களது எண்ணிக்கையை அதிகரிக்கவும் பல நடவடிக்கை கள் எடுக்கப்பட்டுள்ளன.

(அ) 1998 இல் அறிமுகப்படுத்தப்பட்ட மறுசீரமைப்பின் கீழ் இலக்கு வைக்கப்பட்ட கல்வியியலான பிரதான அம்சங்கள் யாவை?

(ஆ) நவோதயப் பாடசாலை செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது என்ன நோக்கங்களை அடைவதற்காக?

(இ) கல்வித்துறையில் தனியார் துறையின் தலையீடு ஏன் ஏற்பட்டது?

(ஈ) கல்விமுறைமை விரிவடைந்துள்ள பரப்புக்கள் எத்தனை இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன? அவை யாவை?

(iii) நகரப்புறங்களைப் பொறுத்தவரை சுற்றுச் சூழலுக்கு இசைவான வகையில் திண்ம கழிவுநீரை அகற்றுதல் ஒரு முக்கியமான விடய மாகும். கழிவு என்பது இயற்கையின் நோக்கில் ஒரு கழிவு அல்ல. மாறாக ஒரு வளமென்பதால் உள்ளூராட்சி மன்றங்கள் கழிவை வலுவாக மாற்றுவதற்கும் மீளப் பயன்படுத்தும் வகையிலும் மாற்றிக் கொள்வதற்கு தேவையான ஊக்குவிப்புக்களை வழங்க வேண்டியது அவசியமாகும். சனத்தொகை அடர்த்தி நகர் மையங் களில் அதிகரித்து வருவது மற்றும் விரிவடைந்த பொருளாதார நடவடிக்கைகள் என்பவற்றின் காரணமாக திண்மக் கழிவுகள் அதிகளவில் அதிகரிப்பது தவிர்க்க முடியாததாகவுள்ளது. பொருத்தமான கழிவகற்றும் முறைகளின்றி பாதையோரங்களில்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திண்மக் கழிவுகளை குவிப்பதனை முற்றாக தடுக்கமுடியாது. மத்திய சுற்றாடல் அதிகாரசபை திண்ம கழிவு முகாமைத்துவத்தில் நேரடியான பொறுப்பெதனையும் கொண்டிருக்கவில்லை என்ற போதிலும் உள்ளூராட்சி மன்றங்கள் பொதுமக்களுக்கான அவற்றின் கடப்பாடுகளுக்கு இணங்கி நடக்கத் தூண்டும் விதத்தில் பணிப்புரை வழங்கப்படுவதனூடாக தலைமைப் பங்கினை வகித்து வருகின்றன. வருடாந்த மானியத்துடனான இதனை இணைப் பதனூடாக அவற்றை ஊக்கப்படுத்த முடியும். எடுத்துக்காட்டாக வகுக்கப்பட்ட நியமங்களின் பிரகாரம் மீள்செய்முறைப்படுத்தும் உள்ளூராட்சி மன்றங்கள் மத்திய அரசிடமிருந்து அதிகரித்த வெகுமதியைப் பெறும்.

(அ) திண்மக்கழிவு முகாமைத்துவத்தில் ஈடுபட்டுள்ள எத்தனை நிறுவனங்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன?

(ஆ) திண்மக்கழிவினைப் பயன்பாட்டுக்கு உட்படுத்தக்கூடிய தந்திரோபாயங்கள் யாவை?

(இ) ஒரு மூலவளமாக திண்மக் கழிவுகளை எந்த அடிப்படையில் எழுத்தாளர் விளக்குகின்றார்?

(ஈ) திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பிலான பொறுப்பினைக் கொண்டுள்ளவர் யார்?

※ ※ ※


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைகள்

1. **தனிவாக்கியத்தில் எழுதுதலும் தடித்த எழுத்திலுள்ள சொல்லை விளக்கலும்**

(i) ஆங்கிலேயர்காலத்து குடியேற்ற நாட்டு ஆட்சியாளர் தலையிடாக் கொள்கையைக் கடைப்பிடித்து மிஷனரிமாருக்கு கூடுதலான ஊக்கமளித்தனராயினும் கல்வியில் நேரடி அக்கறை கொண்டு அதிக அரசாங்கப் பாடசாலைகளை அமைக்கும் நோக்கத்தோடு 1841 இல் மத்திய பாடசாலை ஆணைக்குழுவை நியமித்தனர்.

- தனியார் ஈடுபட்ட தொழில் முறைகளில் அரசு தலையிடாக் கொள்கை.

(ii) அறத்தையும் ஒழுக்கத்தையும் பேணும் நோக்குடன் சமயப் பிரிவுகளின் தொடர்பால் இந்நாட்டில் தாபிக்கப்பட்ட உதவி நன்கொடை பெறாப் பாடசாலைகள் இங்கிலாந்துப் பாடசாலை களை ஒத்திருந்ததுடன் உள்நாட்டுக்கு ஏற்ற விதத்தில் விருத்தி யாகி அவற்றுக்கான வரலாறு பாரம்பரியம் என்பவற்றை ஈட்டிக் கொண்டன.

- அரச துறையிடமிருந்து எவ்வித உதவியையும் பெறாத பாடசாலைகள்

(iii) தாய்மொழி அல்லாத இரண்டாம் மொழி ஒன்றைக் கற்பிக்கும் நுட்பங்களிலும் அணுகுமுறைகளிலும் மாற்றங்கள் இடம்பெற வேண்டுமென்பதும் இந்த மொழிகளுக்கிடையிலான மொழியியல் வேறுபாடே கற்பித்தல் பிரச்சினைக்கு காரண மென்பதும் தாமதமாக விளங்கிக்கொள்ளப்பட்டதுடன் ஆங்கில ஆசிரியர்கள் தேசிய மொழிகளில் திறமை குன்றியவர் களாயிருந்தமை இப்பிரச்சினையை மேலும் மோசமாக்கியது.

- தாய்மொழிக்கும் கல்வி பெறும் மொழிக்கும் இடையில் காணப்பட்ட மொழி சார்ந்த வேறுபாடுகள்

2. **சுருக்கம்**

**பொருத்தமான தலைப்பு**

- பொருளாதாரக் கொள்கை முறை
- உயர் பொருளாதார விருத்திக்கான உபாயங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உயர்பொருளாதார அபிவிருத்தியின் தேவை
- பொருளாதாரக்கொள்கை மாற்றமும், பொதுமக்களின் பங்களிப்பும்

**உள்ளடக்கம்**

- இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தபொருளாதாரக் கொள்கை மாற்றத்தின் அவசியம்
- இக்கொள்கை மறுசீரமைப்பானது சிறந்த சந்தை முறைமை தழுவியதாக இருத்தல்.
- அரசியல் கட்சிகள், தனியார்கள் மற்றும் இலங்கைக்கு உதவும் வெளிநாட்டவர்கள் மறுசீரமைப்பை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருத்தல்.
- திட்டமிடலிலும், வெளிப்படையாக வகைகூறலிலும் கவனம் செலுத்தல்.
- செயன்முறையைத் திறந்த கலந்துரையாடலுக்கும் பயனுள்ள விமர்சனத்துக்கும் உட்படுத்தல்.

3. **பொருத்தமானதைத் தெரிவு செய்தல்.**

(i) ஆ
(ii) இ
(iii) அ

4. **குறுவிடை**

(i) (அ)

- திரிபுபடுத்தாத சந்தையை அடிப்படையாகக் கொண்டதும், முரணற்றதும் மற்றும் நன்கு வரையறுக்கப்பட்டதுமான வர்த்தக கொள்கை.
- உற்பத்தியாளர்களும், இறக்குமதியாளர்களும் தீர்மானங் களை மேற்கொள்ள முடியாமை.

(ஆ) பொருத்தமானவகையில் தீர்மானங்களை மேற்கொள்ள முடியாமை.

(இ) பல தடவைகள்

(ஈ) நீண்டகால நோக்கில், இலக்கிடப்பட்ட தொகுதியினருக்கு தீங்குவிளைவிக்காமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) (அ)

- அரசாங்கத்துறையின் கல்வி முறைமையின் பண்புத் தரத்தை மேம்படுத்தல்.
- கல்வி நிறுவனங்களது பொருளாதார மற்றும் சமூகத் தேவைப்பாட்டை மேம்படுத்தல்.

(ஆ) பிராந்திய வேறுபாடுகளைக் குறைப்பதற்காக

(இ) கல்வித் துறையில் காணப்பட்ட இடைவெளிகளைக் குறைப்பது.

(ஈ) மூன்று (3)

- பொதுக்கல்வி
- தொழினுட்ப மற்றும் தொழிற்கல்வி
- உயர்கல்வி

(iii) (அ) மூன்று

- உள்ளூராட்சி மன்றங்கள்
- மத்திய சுற்றாடல் அதிகாரசபை
- மத்திய அரசு

(ஆ) வலுவாக மாற்றவதும். மீளப் பயன்படுத்துதலும்

(இ) இயற்கையின் நோக்கில்

(ஈ) உள்ளூராட்சி மன்றங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாகாண அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில்**
**வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான**
**திறந்த போட்டிப் பரீட்சை – 2014 (2015)**

| | | |
|---|---|---|
| மொழித்திறன் | 02 | 2 1/2 மணித்தியாலம் |

**எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. கீழ்வரும் உரைப்பகுதிகளை வாசித்து
ஒவ்வொரு உரைப்பகுதியதும் பிரதான கருத்தினை முடியுமானவரை சுருக்கி **ஒரு வாக்கியத்தில்** எழுதுக. **தடித்த எழுத்திலுள்ள** சொற்றொடரின் **கருத்தினை** விவரிக்க.

(அ) கல்வியின் தரம், பயிற்றும் ஆசிரியரின் திறமையிற் பெரிதும் தங்கியுள்ளதென்பது தெளிவு. ஆசிரியரே கல்வி முறையிற் பெரும் பங்கெடுக்கின்றார். ஒரு குழந்தை உடல்வலு, அறிவுத் திறன், உணர்ச்சிவளம் என முத்திறப்பட்ட அதன் ஆளுமையை முழுமையாக விருத்தி செய்து கொள்வதற்கு தந்தை, தாய், ஆசான் என்னும் மூவருமே பொறுப்பானவர் என்பதைப் பண்டைக்கால முதலாகவே இலங்கைச் சமூகம் ஒப்புக் கொண்டுவந்துள்ளது. இன்றைய கைத்தொழிற் பாங்கான சமூகத்திலே, ஒரு பிள்ளை எளிதில் இயைந்து கொள்வதற்குத் திறமை வாய்ந்த ஆசிரியரால் நடாத்தப்படும் ஒரு பாடசாலை அவனைப் பக்கவப்படுத்திவிட வேண்டும். நமது நாட்டிலுள்ள ஆசிரியர், இளைஞரிடம் தன்மதிப்பு, தன்னறிவு, தற்கட்டுப்பாடு ஆகிய **தலைசிறந்த இலட்சியங்களைப்** புகுத்துவாராயின், நம்நாட்டு இளைஞர் மட்டுமன்றி ஆசிரியர்களுமே புத்துயிர் பெறுவர்.

(ஆ) இந்தியா வங்களாதேசம் போன்ற அண்டை நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கை முகங்கொடுக்க நேரிடுகின்ற மற்றொரு பிரச்சினையாக உலர் வலயத்தின் **வன்மையான உருமாறிய பாறைகள்** அமைந்துள்ள இடங்களின் மேற்பரப்பிலுள்ள மண் படை குறிப்பிடத்தக்க அளவு ஆழத்திற்கு பரவி இல்லாதிருப்பதைக் குறிப்பிடலாம். இதனால் மண்ணில் ஈரத்தைத் தேக்கி வைத்துக்கொள்ளும் சந்தர்ப்பங்களும் மண்ணின் கட்டமைப்பினுள் நீர் காப்பும் மட்டுப்படுத்தப்படுகின்றன. ஆகவே மேற்பரப்பு நீரை சேமித்து வைக்கக்கூடிய பெரும் எண்ணிக்கையான குளங்கள் அவசியமாகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) நீரக வளங்களின் பிரித்தெடுப்பு தொடர்பில் வரையறுக்கப்பட்ட ஒரு காலப்பகுதியினூடாக பிரயோகிக்கப்படத்தக்க வழிகாட்டற் குறிப்புக்களை முகாமையாளர்கள், காப்போர், அபிவிருத்தி யாளர்கள் ஆகிய அனைவரும் அறிந்து ஏற்றுக்கொள்ளக் கூடிய தாக கால தாமதமின்றி, ஒருங்கிணைந்த முகாமைக்கொள்கை யொன்று தெளிவாக எடுத்துரைக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டு கைக்கொள்ளப்பட வேண்டியது இன்றியமையாதது. அத்தகைய ஒரு கொள்கை ஐந்து ஆண்டுகாலம் போன்றதொரு கால எல்லையினூடாக மீளப் பரிசீலிக்கப்பட்டு திருத்தம் செய்யப் படலாம். இதன் மூலம் **வளங்களைப் பிரித்தெடுத்தலின் நெடுங்கால சூழலியல் விளைவுகளும்** சேர்க்கப்பட்டு அறியவைக்கப்படலாம்.

2. தரப்பட்டுள்ள உரைப்பகுதியை **ஏறத்தாழ 90 சொற்களில் சாராம்சமாக எழுதி** அதற்குப் பொருத்தமான தலைப்பையும் இடுக. நீங்கள் எழுதியுள்ள சொற்களின் எண்ணிக்கையை சாராம்சத்தின் இறுதியில் குறிப்பிடுக.

மூன்று தசாப்தங்களாக நீடித்த மோதல்கள் முடிவடைந்த பின்னரான முதலாவது முழு ஆண்டிலும் இலங்கையின் பொருளாதாரம் வரவேற்கத்தக்க பேரண்டப் பொருளாதார சாதனை களுடன் உண்மையான உயர்ந்த வளத்தினை எடுத்துகாட்டியிருக்கிறது. கொள்கை வகுப்போருக்கு இன்றுள்ள சவால் யாதெனில் மிக அடிக்கடி ஏற்படும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அதிர்வுகளின் பின்னணியில் இச்சாதனைகளையும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டையும் தாக்குப்பிடிக்கச் செய்வதேயாகும். தாழ்ந்ததும் உறுதியானதுமான பணவீக்கத்தினைப் பேணுவதற்குப் பொருத்தமான கேள்வி முகாமைத்துவக் கொள்கைகள் தேவைப்படுகின்ற வேளையில் வழங்கல் பக்கத்துத் தடைகளைக் காத்திரமான முறையில் கட்டுப் படுத்துவதும் அவசியமானதாகும். உற்பத்தியாக்கத்திறனில் தொடர்ந்து காணப்படும் முன்னேற்றம், புதிய தொழில்நுட்பங்களைப் பின்பற்றி யமை மற்றும் மனித மூலதன அபிவிருத்தி என்பன தொழிற்சந்தை மீதான அழுத்தத்தினை குறைத்த அதேவேளையில் எதிர்பார்க்கப்பட்ட உயர்ந்த வளர்ச்சியைப் பேணுவதற்கு பெருமளவு தொழிலாளர் நகர்விற்கும் அதேபோன்ற பெருமளவு தொழிலாளர் கிடைப்பன விற்கும் வசதிகளைத் தொடர்வதற்கான பௌதீக உட்கட்டமைப்பிற்கு, முன்னேற்றங்களும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பிற்குப் பொருத்தமான மாற்றங்களும் அவசியமாகும். உற்பத்திகள் மற்றும் சந்தைப்படுத்தல் நியதிகளில் வெளிநாட்டுக் குழப்பங்களுக்கு பொருளாதாரம் தாக்குப்பிடிக்கக் கூடிய தன்மையினை அதிகரிப்பதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுமதிகளை பன்முகப்படுத்துவது அவசியமாக இருப்பதுடன் இம்முன்னேற்றத்தினை அடைவதற்கு தற்போதுள்ள இருபுடை மற்றும் பல்புடை உடன்படிக்கைகளை காத்திரமான முறையில் பயன்படுத்திக் கொள்வதும் தோற்றம் பெற்று வருகின்ற பிராந்தியச் சந்தைகளுடன் வாத்தக உறவுகளை மேலும் நிறுவுவதற்கு தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் அதேபோன்று தனியார்துறை முதலீடுகளை மேம்படுத்தல் மற்றும் வியாபாரத்தினை மேற்கொள் வதற்கான சூழலை வலுப்படுத்துவதும் அவசியமானவைகளாகும். மசகெண்ணெய் போன்ற பண்டங்களின் விலை உயர்வுகள் உட்பட மோசமான வெளிநாட்டு அபிவிருத்திகளிலிருந்து தோன்றுகின்ற குழப்ப நிலைமைகளின் தாக்கத்தை முக்கியமான அரச தொழில் முயற்சி களின் கட்டமைப்பினை, சந்தை நிலைமைகளை பிரதிபலிக்கின்ற முறையில் மிக வினைத்திறனுடனும் வர்த்தக ரீதியில் ஆற்றல் வாய்ந்த தாகவும் தொழிற்படுத்துவதற்கு அம்முயற்சிகளுக்குத் தேவையான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதனூடாக குறைக்க முடியும். இம்மாற்றங்கள் தற்பொழுது இடம்பெற்று வரும் இறைத்திரட்சித் திரட்டல் செய்முறைகளுக்கு உதவியளிக்கும். இதன் விளைவாக கேள்வி முகாமைத்துவக் கொள்கைகள் உயர்வடையும்.

3. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு உரைப்பகுதியின் இறுதியிலும் (அ), (ஆ), (இ) என்ற மூன்று கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. உங்கள் கருத்துப்படி மேற்படிப் பந்தியுடன் நன்கு பொருந்தும் கூற்றைக் குறிக்க. உதாரணம் : (i) ஆம் பந்தியின் முடிவில் தரப்பட்டுள்ள கூற்றுக்களுள் மிகவும் பொருத்தமானது கூற்று "அ) எனக் கருதுவீர்களாயின், உங்கள் விடை (i) - (அ) வாகும்.

(i) 'அபிவிருத்தி' என்ற பதம் மனித நலனின் எல்லாக் கோணங்களையும் உள்ளடக்கும். பொருளாதார நலன் என்பது இதன் ஒரு கூறு மட்டுமேயாகும். 'அபிவிருத்தி' என்பது சமூக, கலாசார மற்றும் அரசியல் பரிமாணங்களை உள்ளடக்கிய ஒரு பன்முகமான வழிமுறையாகும். இந்த அபிவிருத்திக் கோட்பாடு மக்களையும் சமூகத்தையும் முழுமையாக நோக்குகிறது. அது முழுச் சமூகத்தினையும் அதன் எல்லா தனிநபர்களினதும் நலன்கள் ஆற்றல்கள் என்பவற்றையும் இடையறாது வளர்ச்சி பெறச் செய்யும் ஒரு வழிமுறையாக அபிவிருத்தியைக் கருது கிறது. இக்கோட்பாட்டினை முழுமையாகப் புரிந்து கொள்வதற்கு அத்தோடு இணைத்துக் கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தியின் ஏனைய மூன்று முக்கிய பெறுமானங்கள் வாழ்க்கைத் தேவைகள், சுயமரியாதை, சுதந்திரம் என்பனவாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) அபிவிருத்திச் செயற்பாட்டின்போது பொருளாதார அபிவிருத்தி முக்கியமாகின்றது.

(ஆ) அபிவிருத்தி என்பது முழுச் சமூகத்தினையும் உயர் மட்டத்திற்கு எடுத்துச் செல்லும் தொடர்ச்சியான செயற்பாடாகும்.

(இ) பொருளாதார, கலாசார மற்றும் அரசியல் எனும் பிரிவுகள் அபிவிருத்தியில் உள்ளடங்கும்.

(ii) வீதி வலையமைப்புக்களின் அபிவிருத்தி மாகாணங்கள் மற்றும் மாவட்டங்களிடையேயும் அவற்றுக்குள்ளேயும் சமமற்ற தன்மையினைக் குறைக்க உதவும். வீதி வலையமைப்பின் அபிவிருத்தி கிராம மற்றும் நகர பிரதேசங்களுக்கிடையிலான இணைப்புக்களை மேம்படுத்தும் பணிகளை. அதேபோன்று பௌதீக மற்றும் மனித வளங்களை அடைவதற்கான வழிமுறை களைத் திறந்துவிடவும் உதவும். மேலும், சந்தைகளையும் கல்வி, சுகாதாரம் போன்ற சேவைகளை மக்கள் பெற்றுக் கொள்வதனை யும் மேம்படுத்தும். இதன் மூலம் தூர இடங்களை அடைவதற் கான மேம்பட்ட வழிகள், புதிய சந்தைகளை உருவாக்குவதற்கும் பிராந்திய இடங்களிலிருந்து தொழிலாளர்கள் நகர்வதனை மேம்படுத்துவதற்கும் அதன் மூலம் கிராமிய குடித்தொகை யினருக்கு கூடியளவு தொழில் வாய்ப்புக்களை உருவாக்கு வதற்கும், வறுமையினை ஒழிப்பதற்கும் பிராந்திய ரீதியில் ஏற்றத் தாழ்வற்ற பொருளாதார வளர்ச்சியினை எய்துவதற்கும் முக்கியமானதாகும்.

(அ) வீதி வலையமைப்பின் அபிவிருத்தியானது மாகாணங் களுக்கும் மாவட்டங்களுக்குமிடையிலான ஏற்றத்தாழ்வு களை இழிவளவாக்கக் காரணமாகும்.

(ஆ) வறுமை குறைவடைதல் வீதி வலையமைப்பின் அபிவிருத்தியினால் நடைபெறுமொன்றாகும்.

(இ) கிராமப் பிரதேசங்களுக்கு பிரவேசிப்பதற்கான திறனை விருத்தியடையச் செய்ய வீதி வலையமைப்பின் அபிவிருத்தி முக்கியத்துவம் பெறுகின்றது.

(iii) மாசுபட்ட நிலை எப்பொழுதும் கட்புலனுக்குத் தெரிவதில்லை. ஓர் ஆறு அல்லது ஏரி மாசுபட்டிருக்கும் வேளையிலேயே தூய்மை யுடையதாகக் காட்சியளிக்கலாம். குறிப்பாக நிலத்தடி நீரில் அது மாசுபட்டுள்ளமையைக் கண்டு கொள்தலும் தூய்மைப்படுத்து தலும் சிரமமாகும். மாசாக்கலின் விளைவுகள் கூட உடனடியாகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவதில்லை. அவை வெளித்தோற்ற ஆண்டுகள் பல செல்லக்கூடும். மாசுபடல் நிலை மீன்பிடித்தொழில், விவசாயம், பருகுதல், கைத்தொழில், பொழுதுபோக்கு என்பவற்றுக்கு நீரைப் பொருத்தமற்றதாக்கி ஏரிகள், ஆறுகளின் அழகியற் பண்புத் தரத்தைக் குறைக்கின்றது. மேலும் கடூரமாக மாசடைந்த நீர் நீரக ஜீவிகளை அழித்து அவற்றின் இனப்பெருக்க ஆற்றலைக் குறைக்கும் பொழுது அது முடிவில் நீர்த் தொகுதியின் உற்பத்தித் திறனைக் குறைத்து, நீர் மாசாக்கலின் விளைவுகளிலிருந்து எவரும் தப்பமுடியாத அளவுக்குத் தேசத்தின் பொருளாதாரத் தைப் பாதிக்கும்.

(அ) நீர் மாசடைதலின் தீய விளைவுகளை உடனடியாக அறிய முடியும்.

(ஆ) நீர் மாசடைதலின் விளைவாக ஆறுகளினதும் குளங்களி னதும் அழகியற் பண்பு இல்லாது போகும்.

(இ) நிலத்தடி நீர் மாசடைதலின் விளைவு எல்லோர் மீதும் ஒரே விதமாகச் செயற்படும்.

4. பின்வரும் ஒவ்வொரு உரைப்பகுதியையும் வாசித்து, அவை ஒவ்வொன்றின் இறுதியிலும் தரப்பட்டுள்ள வினாக்களுக்கும் சுருக்க விடைகளை எழுதுக.

(i) இலங்கையில் கல்வி முறையினை மேம்படுத்துவதற்கு பல்வேறு செயற்றிட்டங்கள் நடைமுறைக்கிடப்பட்டுள்ளன. அடிப்படைக் கல்வி (தரம் 1-9) மற்றும் இரண்டாந்தரக் கல்வி (தரம் 10-13) என்பன சமமாக கிடைப்பதனை மேம்படுத்துதல், கல்வியின் தரத்தினை மேம்படுத்துதல், கல்விமுறைக்குள் பொருளியல் வினைத்திறன், மூலவளங்களின் ஒதுக்கு மற்றும் சமமான பகிர்ந்தளிப்பு தன்மையினை உயர்த்துதல், கல்வி ஆளுகையினை வலுப்படுத்துதல், மற்றும் பணி வழங்கல் என்பவற்றின் பொருட்டு கல்வித்துறை அபிவிருத்திக் கட்டமைப்பு மற்றும் நிகழ்ச்சித் திட்டம் 2008 இலும் தொடரப்பட்டது. பள்ளிக்கூட முறையில் தரம் 10 மாணவர்களுக்காக தொழில்நுட்ப பிரிவின் கீழ் தகவல் தொழில்நுட்பம் ஒரு பாடமாக அறிமுகப்படுத்தப்பட்டதுடன், மாணவர்களின் தகவல் தொழில்நுட்பக் கல்வியினை அபிவிருத்தி செய்வதற்காக கணினி மூலவள நிலையம் நிறுவப்பட்டது. பாடவிதானங்களை ஒழுங்குமுறைப்படுத்தி நவீனப்படுத்தவும் ஆங்கில மொழி மூலமான கல்வியை மேம்படுத்துவதற்கும் மேலதிக வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆசிரியர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவினை உயர்த்துவதற்காக பள்ளிக்கூடத்தினை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைக்கிடப்பட்டதுடன் பள்ளிக்கூட முறைமையில் பணியாற்றும் ஆசிரியர்களின் தொழில் நிபுணத்துவத்தின் அபிவிருத்தியை உறுதி செய்வதன் பொருட்டு தீவு முழுவதும் ஆசிரியர் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

(அ) கல்வி முறைமை தொடர்பாகப் பல செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதின் தாற்பரியங்கள் யாவை?

(ஆ) பாடசாலைகளில் பத்தாம் தரத்தில் எக்காரணங்களுக்காக தகவல் தொழினுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டது.

(இ) சேவையில் உள்ள ஆசிரிய சமூகத்தின் அறிவின் அளவு போதுமானதல்ல என இப்பந்தியின் மூலம் கூறப்படுகின்றதா?

(ஈ) கணினி வள நிலையங்கள் எக்காரணிகளினால் நிறுவப்பட்டன?

(உ) ஆசிரியர் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் அடிப்படை நோக்கம் யாது?

(ii) அத்தகைய தற்கால உயிரியல் மருத்துவ ஆய்வுகள் எவ்வளவுக்குக் கடுமையான நோய்களுக்கான பரிகாரத்தை நோக்கமாகக் கொண்டவை என்பதையும் எவ்வளவுக்கு விரும்பியவற்றை ஆனால் தேவையில்லாதவற்றை நோக்கமாகக் கொண்டவை என்பதையும் பற்றிய தெரிவு அனேகமானவர்களுக்கு இல்லாத போதிலும், விலங்குகளைக் கொண்டு கடுமையான நோய்களிலிருந்து பாதுகாப்பு மற்றும் மருத்துவ பரீட்சார்த்தங்கள் மேற்கொள்வதனைப் பொதுமக்கள் ஆதரித்து வருகின்றனர். இந்த ஆராய்ச்சி முறை முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என வாதிட்டுவருபவர்கள் பண்டைய ரோமாபுரியில் அடிமை முறைக்கு எதிராக இருந்த பிரஜைகளைப் போன்றவர்களாகவே உள்ளனர். ரோமாபுரியில் உடனடியாக அடிமை முறையை ஒழிக்க முடியவில்லை. ஏனெனில் அவ்விதம் செய்வதாக இருந்தால் அடிமை முறையின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த முழு ரோமானியப் பேரரசிலும் பேரளவிலான ஒரு சீர் குலைவு உருவாகியிருக்கும். மேலும் நாகரிகத்தைக் கட்டியெழுப்புவதற்காகக் "காட்டுமிராண்டிகளை" அடிமைப்படுத்துவது நியாயமானது என்ற வகையில் அரிஸ்டோட்டில் ஒரு தார்மீகக் கோட்பாட்டினை முன்வைத் திருந்தார். பெரும்பாலான சமகால சமுதாயங்கள் அந்தத் தர்க்கவியலை நிராகரித்த போதிலும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோமப் பேரரசின் காலத்தின் அறநெறி சார்ந்த பிரச்சினைகள் இன்று நிலவி வரும் அளவுக்கு தெளிவானதாக இருக்கவில்லை என்பதனை நாம் உணர்ந்து கொள்ளவேண்டியிருக்கிறது. எனினும் அன்றைய ரோமப் பேரரசில் இந்த விஷயத்தில் பெரும்பான்மை யினருடன் முரண்பட்டிருந்த சிறுபான்மைக் குழுவொன்றும் இருந்து வந்தது. இறுதியில் சிறுபான்மையினரின் அந்த நிலைப்பாடு பெரும்பான்மையினரின் நிலைப்பாடாக மாற்ற மடைந்தது. ஆனால், இன்று சுமார் 2000 வருடங்களின் பின்னரும் கூட உலகில் ஆங்காங்கே அடிமை முறை நிலவி வருகின்றது. இதேபோல ஆராய்ச்சிக்கு விலங்குகளைப் பயன்படுத்தும் முறை உடனடியாக ஒழிக்கப்படமாட்டாது. ஏனெனில் இம்முறையை உடனடியாக நிறுத்தி விடுவதற்கு பொதுமக்கள் விரும்பவில்லை.

(அ) பரிகார மற்றும் நோய் தீர்க்கும் ஆராய்ச்சிகள் பற்றிய விளக்கம் பொதுமக்களுக்கு உண்டா?

(ஆ) ரோமாபுரியினால் எக்காரணங்களினால் உடனடியாக அடிமைகளை விடுவிக்க முடியாமற் போனது?

(இ) அரிஸ்ரோட்டிலின் ஒழுக்க நெறிகள் பற்றிய வாதங்கள் தற்கால சமூகத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளனவா?

(ஈ) 'ஆய்வுகளுக்காக விலங்குகளைப் பயன்படுத்துவதைத் தடை செய்ய வேண்டும்' என்பது சிறுபான்மை குழுவி னரின் கருத்தாக மாறியுள்ளதா?

(உ) விலங்குகளைப் பயன்படுத்தி ஆய்வுகளை மேற் கொள்வது எக்காரணத்தினால் தேவையாகவுள்ளது?

(iii) மிஷனரிமாரின் ஆக்க வேலைகட்குப் போதிய ஆதரவு நல்குவதற்குப் பிரித்தானிய அரசாங்கம் தயங்கியதெனினும் காலகதியில் அதன் கொள்கையில் மாற்றமேற்படலாயிற்று. மிஷனரிமாரின் முயற்சி பிரித்தானியாவிலும் பிறநாடுகளிலும் மேம்பட்டு விளங்கிய பொற்காலம் பத்தொன்பதாம் நூற்றாண்டு எனலாம். அக்காலத்தேதான் அவர்கள் பிரித்தானிய அரசியலில் தாம் கொண்டிருந்த செல்வாக்கைப் பயன்படுத்திக் குடியேற்ற நாடுகளில் தம் சமயப் பிரசாரத்தை நன்கு நடாத்தி வந்தனர். பிரித்தானிய ஆட்சிப் பீடத்திலுள்ளவர்கள் மிஷனரிமார் கேட்ட உதவியை உடனுக்குடன் நல்கி வந்தனர். விக்டோரிய இராணியின் முதல் இருபதாண்டுக்கால ஆட்சியின் போது பிரித்தானியப் பேரரசிலே சுவிசேட இயக்கம் தீவிரமாக முன்னேறிக் கொண்டி ருந்தது. சுவிசேட இயக்கம் வளர்ச்சியடைந்துவர அவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவ சமயமே பிற சமயங்களைக் காட்டிலும் மேம்பட்டதென இறுமாப்படைந்தனர்; அன்றியும் கீழைத்தேசச் சமயங்களையும் பண்பாடுகளையும் பொதுவாக இகழவும் தலைப்பட்டனர்.

1832 இல் கோல்புரூக்கின் அறிக்கை வெளிவந்தது; அக் காலத்திலிருந்து கல்வியைப் பற்றி அரசாங்கம் கடைப்பிடித்து வந்த பூட்கையிற் பெரிதும் மாற்றம் ஏற்படலாயிற்று. கல்வி பற்றிய கோல்புரூக்கின் விதப்புரைகளை நிறைவேற்றியதோடு கல்வியிலே அரசுத் தலையீடு சீரான வடிவம் பெறுவதாயிற்று. கல்வியானது அரசுக்குரிய சட்டமுறையான ஒரு முயற்சி யென்னும் கருத்து விசேட சுவிசேட இயக்கத்தாருக்கு இருந்தது போலவே கோல்புரூக் போன்ற தாராள மனப்பான்மை கொண்ட மனிதருக்கும் இருந்தது.

கோல்புரூக் அவர்கள் ஒரு பயனெறிவாதியாக இருந்தும்கூட அவர் வெளியிட்ட கல்வி பற்றிய கருத்துக்கள் சாதாரணமானவை யாயும் தொடர்பற்றவையாயும் இருந்தன. ஆயினும் கல்வியின் பயன்களை மட்டுமே அவர் மிகத் தெளிவாகச் சொல்லியிருந்தார். அவை இரண்டும் வருமாறு : அரசாங்க ஊழியத்திற்கு ஆளணியினை ஆயத்தஞ்செய்தலும், ஐரோப்பியரின் கல்விப் பேறுகளைச் சுதேசிகள் அடைவதற்கு உதவி செய்தலும் ஆகும். ஆயினும், இலங்கையிற் காணப்பட்ட மிஷனரி நிறுவனங்கள் சுதேச சமயங்கள் குன்றும் வகையிற் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்கு மட்டுமே கல்வியைப் பயன்படுத்தின. அவைகளின் இப்போக்கிற்கு கோல்புரூக் அவர்களுங்கூடப் பரிவு காட்டினார்.

(அ) 1832 ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையின் கல்வி தொடர்பாக அரசு தளர்வடைந்த ஒரு கொள்கையைப் பின்பற்றியது என்பது இப்பந்தி மூலம் அறியப்படுகிறதா?

(ஆ) மிஷனரிகளினால் குடியேற்ற நாடுகளில் செயற்படுத்தப் பட்ட கொள்கைகள் எக்காரணத்தினால் வெற்றி யடைந்தன?

(இ) கல்வியானது அரசுக்கு உரிமையான பணி என யாரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது?

(ஈ) மேற்படி பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கல்வியின் நோக்கம் யாது?

(உ) மிஷனரிகளினால் எந்த நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள கல்வி பயன்படுத்தப்பட்டது?

❋ ❋ ❋


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைகள்

**1. தனிவாக்கியத்தில் எழுதுதல்**

(அ) மாணவர்களின் ஆளுமை வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு, கைத்தொழில் பாங்கான சமூகத்துடன் இயைந்து வாழ்வதற்கான திறன்களை அவர்களிடம் வளர்ப்பது ஆசிரியர்களின் கடமையாகும்.

(ஆ) உலர் வலயத்தில் மண்படையானது ஈரத்தன்மையை காத்து வைத்திருக்கக்கூடிய இயலுமையைக் கொண்டிருக்காமையால், நீரைத்தேக்கி வைக்க பெரும் எண்ணிக்கையான குளங்கள் தேவைப்படுகின்றன.

(இ) நீர் வளங்களின் பிரித்தெடுத்தல் தொடர்பான முகாமைத்துவக் கொள்கை தொடர்பாக உரித்தாளர்களுடன் கலந்துரையாடு வதோடு நீண்டகால அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டுத் திருத்தம் செய்யப்பட வேண்டும்.

**2. சுருக்கம்**

**பொருத்தமான தலைப்பு**

- இலங்கையின் பொருளாதார உறுதிப்பாட்டை நிலையாகப் பேணுதல்.
- இலங்கையின் நிதிமுறைமையைப் பாதுகாத்தல்.
- பொருளாதார முகாமைத்துவக் கொள்கையை வகுத்தல்.
- பொருளாதாரக் கொள்கை வகுப்பில் எதிர்கொள்ளும் சவால்கள்
- நிதிக் கொள்கையை பேணுவதற்கான நடைமுறை

**உள்ளடக்கம்**

- பொருளாதாரத்தின் உறுதித்தன்மை
- உள்நாட்டு வெளிநாட்டுச் சவால்களுக்கு முகங்கொடுத்தல்.
- தாழ்ந்ததும் உறுதியானதுமான பணவீக்கத்தைப் பேணுதல்.
- உற்பத்தி முன்னேற்றம். மனித வள விருத்தி புதிய தொழில்நுட்பப் பயன்பாடு உட்கட்டமைப்பு வசதி ஏற்பாடுகள்
- ஏற்றுமதியைப் பன்முகப்படுத்தல். ஒருபக்க இருபக்க வர்த்தக உடன்படிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தனியார் முதலீடுகளை மேம்படுத்துவதற்கான முயற்சிகள்
- பொருத்தமான புதிய சீர்திருத்தங்களை மேற்கொள்ளல்.

**3. பொருந்தும் கூற்றைத் தெரிவுசெய்தல்.**

(i) ஆ
(ii) ஆ
(iii) இ

**4. குறுவிடை**

(i) (அ) கல்வி முறைமையில் போதுமான அளவில் அபிவிருத்தி ஏற்படாமை.

(ஆ) தொழில் நுட்பக் கல்விப் பாடத்தை அறிமுகப்படுத்தல்.

(இ) சொல்லப்பட்டுள்ளது.

(ஈ) தகவல் தொழில்நுட்பக்கல்வியை அபிவிருத்தி செய்வதற்காக.

(உ) ஆசிரியர்களின் வாண்மை விருத்தியை உறுதிப்படுத்துவதற்காக

(ii) (அ) இல்லை

(ஆ) சமூகத்தில் இடைவெளிகள் இருப்பதால்

(இ) இல்லை

(ஈ) அவ்வாறு பந்தியில் குறிப்பிடவில்லை.

(உ) வேறுவழியில்லாமல் / மாற்றுவழி இல்லாமை.

(iii) (அ) ஆம்

(ஆ) பிரித்தானிய அரசியல் வாதிகளின் செல்வாக்கினால்

(இ) கோல்புறூக் மற்றும் மிசனரிமாரின்

(ஈ) அரசாங்க சேவைக்கு ஆளணியினரை ஆயத்தப்படுத்தலும், ஐரோப்பாவின் கல்விப்பேறுகளை சுதேசிகள் பெறுவதற்கும்

(உ) சுதேச சமயங்கள் குன்றும் வகையில் கிறிஸ்தவத்தைப் பரப்புதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில்**
**வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான**
**திறந்த போட்டிப் பரீட்சை – 2014 (2015)**

மொழித்திறன் | 03 | 2 1/2 மணித்தியாலம்

**எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து பின்னர், ஒவ்வொரு உரைப்பகுதியிலுமுள்ள முக்கிய கருத்தை எவ்வளவு சுருக்கமாக்க முடியுமோ அவ்வளவு சுருக்கமாக ஒரு வசனத்தில் வெளிப்படுத்துக. உரைப்பகுதியிலுள்ள கருத்துடன் தொடர்புபடுத்தி தடித்த எழுத்திலுள்ள கருத்தை விளக்குக.

(அ) சட்ட திட்டங்களை அமைத்துக் கொள்வதற்கு சூழல் என்ற விடயம் மிகக் கடினமான விடயங்களில் ஒன்றாகும். நதிகள் அல்லது வளிமண்டலம் போன்ற, பொதுவான உடமை பாராட்டக்கூடிய ஒரு பொருள் இருக்கும் போதெல்லாம் மக்கள் அவ் வளத்தைப் பொதுமக்களின் ஆகக் கூடிய நலனை மனதில் கொண்டு பயன்படுத்தும் வகையில் அரசாங்கம் சட்ட திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும். எனினும் வெறுமனே **பொதுச் சொத்தைப் பயன்படுத்துவதைத் தடுக்கும்** வகையிலோ அல்லது சூழல் அழுக்காதலைத் தடுக்கும் வகையிலோ அதிக அளவிலமைந்த சட்டதிட்டங்களே சூழல் பிரச்சினைகளுக்கு பெரும்பாலான சந்தர்ப்பங்களில் விடையாக அமைகின்றன. பதிலாக பொதுமக்களுக்கு மிகச் சிறந்த விதத்தில் சேவையாற்ற முயல்வதற்கு உதவும் வகையில் ஆகக் கூடிய சுதந்திரத்தை வழங்கும் சட்டதிட்டங்களே தேவைப்படுகின்றன.

(ஆ) சுய ஒழுக்காற்றை பயனுறுதியுள்ள விதத்தில் செயல்நாட்டுவதற்கு உயர்தரத்தினதான **தன் ஒழுங்கமைப்பு** அவசியமாகும். ஒருவர் தன்னுடைய நேரத்தின் மீதும் தன்னுடைய வேலையின் மீதும், தன்மீதும் செலுத்தும் சொந்தக் கட்டுப்பாட்டை இவ்வாற்றல் உள்ளடக்குகின்றது. மேலும், இது தலைமைத்துவத்திற்கு ஒரு முன் தேவையாகும். இது அற்றிருந்தால் அதிமதிநுட்பம் பொருந்திய ஒரு மனிதனது பெறுமதியைக் குறைத்து விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றேல் சாதாரண அல்லது இலாபமற்ற வேலைக்குள் அவனைக் கட்டுப்படுத்தி விடும். பெரும்பாலான மனிதர்கள் நம்பகமாக இருப்பதில் உண்மையான ஆர்வம் கொண்டவர்கள். ஒழுங்கமைக்கப்பட்ட மனிதன் நம்பகமானவன். இவனே கையளிப்பை ஏற்பவன் பின்னர் கையளிப்புச் செய்யும் உரிமையை ஈட்டிக்கொள்பவன். இவன் ஒழுங்கு முறையானவன். ஏனெனில் முறையினூடாக இவன் அதிக வளைவுகளையும் மேலும் சிறந்த விளைவுகளையும் பெறுகிறான்.

(இ) கடந்த சில ஆண்டுகளாக முகாமையாளர் அபிவிருத்தி மீது அதிகதிகமான அழுத்தம் செலுத்தப்பட்டு வந்தது. வணிகப் பத்திரிகை உலகு, முகாமைத்தத்துவங்கள் பற்றிய பொதுக் கலந்துரையாடல்களின் பொருட்டு **குறிப்பான பிரச்சினைகளை கையாளுவதற்கான சூத்திரங்களிலிருந்து** எடுக்கப்பட்ட, இவ் விடயம் தொடர்பான கட்டுரைகளை அதிக அளவில் பிரசுரிக் கின்றன. பெரும்பாலும் அழுத்தம், இரண்டு பரப்புகளுள் ஒன்றின் மீதோ அல்லது இரண்டினதும் மீதோ இருந்து வந்துள்ளது. மேலதிக அறிவையும் அனுபவத்தையும் வாசித்தல் கருத்தரங்குகள் வேலைக்களங்கள் ஈட்டுவதன்மூலம் மக்களை கையாள்வதற்கான சிற்சில நுட்ப முறைகளைக் கைவரப் பெறுவதன்மூலம் ஒரு முகாமையாளரை அபிவிருத்தி செய்தல்.

(ஈ) மேலதிகாரிகளுக்கு நீண்டகால தாமதங்களை ஏற்படுத்தும் வகையில் ஒரு கட்டத்தில் தாங்க முடியாத முறையில் வேலைப்பழு தட்டெழுத்தாளர் மீது மிக அதிகமாகச் சுமத்தப் படும் விதத்திலும் ஏனைய வேளைகளில் செய்வதற்கும் அதிக வேலையின்றி இருக்கும் விதத்திலும் அமையாது நன்கு நடாத்தப் படும் தட்டெழுத்துக் குழுமம், முடிந்த அளவில் வேலை ஒரே சீராகப் பாய்கின்றதென்பதை உறுதிப்படுத்த முயல வேண்டும். மிக அவசரமான வேலை முதலில் தட்டெழுத்திற் பொறிக்கப்படும் விதத்தில் **அவசர நெருக்கடி நிலவும் நேரங்களில் முன்னுரிமை களை மதிப்பீடு** செய்வதற்கு முயலவேண்டிய அவசியமுண்டு. தட்டெழுத்துக் குழுமங்களை பயன்படுத்துவோர் இப்பணிகளைக் கடினமாக்குவது சாத்தியம். இவர்களுட் பெரும்பாலானோர் தத்தமது வேலைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டு மென்று எண்ணுவர். பெருமளவு வேலை வரவிருக்கின்றது என்பதை தட்டெழுத்துக் குழுமத்திற்குக் கூறி எச்சரிக்கும் தீர்க்க தரிசனத்தை ஒரு சிலரே பெற்றிருப்பர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

2. 80 சொற்களுக்கு அதிகரிக்காமல் பின்வரும் உரைப் பகுதியின் சுருக்கத்தை உமது மொழி நடையில் தருக. பொருத்தமானதொரு தலையங்கம் இடுக. (பயன்படுத்திய சொற்களின் தொகையைக் குறிப்பிடுக.)

தமது செயற்பாடுகள் ஏனையோரை எவ்வகையிற் பாதிக்கின்றன என்பதை ஒருங்கிணைக்கும் பிரச்சினைகள் பல எழுகின்றன. இவர்கள் (ஏனையோர்) அறி நிலையில் வைத்திருக்கப்பட வேண்டியவர்கள் அல்லது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படு முன்னர் கலந்தாலோசிக் கப்பட வேண்டியவர்களாவர். ஒருங்கிணைப்புத் தேவைப்படும் பரப்புக் களை முன்னரே கண்டறிந்து கொள்வதற்குத் திட்டமிடுவோர் முயன்று. அதைச் சரியான முறையில் செய்திருந்தாலன்றி மாற்றங்கள் ஏற்படும் காலங்களில் இது பெருமளவில் உண்மையாகும் சாத்தியம் உண்டு. பல்வேறு திணைக்களங்களும், பகுதிகளும் தத்தமது செயற்பாடுகளைச் சரியான நிலையில் மேற்கொள்ள வேண்டுமே யெனின் அவற்றிற்கு வேண்டப்படும் தகவல்களின் உள்ளடக்கம், காலோசித வேளைகள் ஆகிய இரண்டையும் திட்டமிடுவோர் கவனத்திற் கொள்ள வேண்டும். அதாவது, தகவல் எப்பொழுது தேவைப்படும் என்பது. உதாரணமாக சந்தைப்படுத்தும் திணைக்களம், சந்தைப்படுத்தலைப் பயனுறுதியுள்ள விதத்தில் திட்டமிடவேண்டு மெனின், அது புதிய உற்பத்திப் பொருள் பற்றி அறிந்திருக்க வேண்டியது என்ன? எப்பொழுது அதை அறிய வேண்டும் என்பது? செய்தி நிருபர்கள் சரியான தகவல்களைப் பெறுகின்றார்கள் என்பதையும் சரியான நேரத்தில் அதைப் பெறுகின்றார்கள் என்பதையும் உறுதிப்படுத்துவதில் பொதுத் தொடர்பு அலுவலர்கள் அதிக அக்கறை கொண்டிருப்பர். நிறுவனத்தில் நோக்கில் செய்தி வெளியீட்டை ஒருங்கிணைக்கும் முயற்சியில் அச்சுலகிற்காகச் செய்யப்படும் வெளியீடு ஒரு எளிமையான ஏற்பாடாகும். ஒழுங்கிணைப்பிற்கான தேவையையும் ஒருங்கிணைப்புத் தொடர்பாக எழும் பிரச்சினைகளையும் குறைப்பதற்குச் சிறந்த ஒழுங்கமைப்பு உதவியாக அமையுமெனினும். ஒரு அமைப்பகத் திற்குப் பொருத்தமாக அமையக்கூடிய முறைகள், நிலைமைகள் வித்தியாசமாக அமைந்துள்ள மற்றொரு அமைப்பகத்திற்குப் பொருத்தமாக அமையாமற் போகலாம். மொத்த விற்பனை உற்பத்தி யில் ஈடுபட்டுள்ள கம்பனிகளை விடச் சிற்றளவில் உற்பத்தி செய்யும் கம்பனிகள் தமது சந்தைப்படுத்தல், அபிவிருத்தி, உற்பத்தி போன்ற துறைகளுடன் மிக நெருக்கமான நாளாந்த தொடர்பு களை வைத்திருக்க வேண்டியது அவசியமாகும். மிகச் சிறிய அளவில் மாற்றத்திற்குள்ளாகி வரும் அமைப்பகங்களை விட மிக வேகமாக மாற்றத்திற்குள்ளாகி வரும் அமைப்பகங்கள் அதிக அளவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருங்கிணைப்புப் பிரச்சினைகளைக் கொண்டிருக்கும். சார்பளவில் உறுதிப்பாடு கொண்ட அமைப்பகங்கள். ஒருங்கிணைப்பு எங்கு அவசியப்படுகின்றது என்பதையும் அதை எய்துவதற்குச் செய்யப்பட வேண்டியது என்ன என்பதையும் அறிந்திருக்கும்.

3. **பின்வரும் உரைப் பகுதிகள் ஒவ்வொன்றினதும் இறுதியிலும் (அ), (ஆ), (இ) என்பவற்றின் கீழ் குறிப்பிட்ட மூன்று கூற்றுகள் தரப்பட்டுள்ளன.**
**இவற்றுள் எந்தக் கூற்று உரைப் பகுதியிக்கு மிகப் பொருத்தமானது என்பதை எடுத்துக் காட்டுக. உதாரணமாக (i) உரைப்பகுதியின் இறுதியில் தரப்பட்டுள்ள கூற்றுகளில் உரைப்பகுதிக்குப் பொருத்தமான கூற்று (அ) என நீங்கள் கருதினால் உங்கள் விடை (i) – (அ) என்றிருத்தல் வேண்டும்.**

(i) சாதி அடிப்படையில் தொழிலாளரை வகுத்ததனால், அவர்கள் இயற்கையாயமைந்த தமது திறமை ஆற்றல் விருப்புக்கேற்பத் தொழில்களில் ஈடுபட முடியாதவராயிருந்தனர். சமூக வகுப்புகள், சாதி என்பவை தொடர்ந்திருக்கக் காரணமான இம்முறையினால், சமூக முன்னேற்றத்தின் ஓர் அமிசமான சமூக இயக்கத்துக்குப் பொருந்தாத தடைகள் நிலைபெற்றன. மறுபக்கம் இம் முறையானது வழக்கு, மரபு, சம்பிரதாயம் என்பவற்றை ஆதார மாகக் கொண்டு எழுந்தமையால் எல்லோருக்கும் சீவனோ பாயத்துக்கான வழிகிடைத்தது. இதனாற் குடும்ப நோக்கம், கல்வி நோக்கம், பொருளாதார நோக்கம் ஆகிய சமூகத் தேவைகள் நன்கு நிறைவேறின. இது கல்விப் பிரச்சினையை, விசேடமாகத் தொழினுட்பப் பயிற்சி பற்றிய கல்விப் பிரச்சினையை, செயன்முறையாகத் தீர்த்து வைத்தது.

(அ) சமூக வகுப்பு தொடர்ந்திருக்கக் காரணமாக சாதி முறைமை யால் தமது திறமை ஆற்றலுக்கேற்பத் தமக்கு விருப்பமான தொழிலில் தனிநபர் ஈடுபட அனுமதி வழங்கப்படவில்லை.

(ஆ) வழக்கு, மரபு, சம்பிரதாயம் என்பவற்றால் உருவாக்கப்பட்ட சாதி முறைமையினால் தாம் விரும்பிய தொழிலில் ஈடுபடத் தனிநபருக்கு இடமளிக்கப்படாத போதிலும் அனை வருக்கும் சீவனோபாயத்துக்கான வழி உருவாக்கப்பட்டது.

(இ) வழக்கு, மரபு, சம்பிரதாயம் என்பவற்றால் உருவாக்கப்பட்ட சாதி முறைமை அனைவரதும் குடும்ப நோக்கம், கல்வி நோக்கம், பொருளாதார நோக்கம் ஆகிய சமூகத் தேவை களை நன்கு நிறைவேற்றின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) இந்தச் சீகிரி சுவரெழுத்துக்கள், அக்காலத்திற் சிங்கள வரிவடிவம், மொழி என்பன விருத்தியடைந்தவற்றை ஆராய்வதற்குத் துணைசெய்வதோடு, சீகிரிச் சுவரோவியங்களின் எழிலையும், சிங்கமுக வாயிலின மாட்சியையும் வெளிப்படுத்துவதுடன், அங்குள்ள பளிங்குச் சுவரிலே பிறர் பொறித்து வைத்த கவிதை களைக் கண்டு சுவைத்து மகிழ்ந்தோர் தம் மனப்பாங்கை வெளிப்படுத்துவனவாகவுமுள்ளன. அழகினை நயக்கும் ஆற்றலும், உள்ளத்துணர்வைச் சொற்களில் வெளிப்படுத்தும் மொழியாட்சியும், சிறப்பாகத் தேவை ஏற்படும்போது செய்யுள் வடிவிற் கருத்தை வெளிப்படுத்தும் வல்லமையும் ஆகிய இவையெல்லாம் அக்காலத்திற் சிங்கள மக்கள் கல்வியில் அடைந்திருந்த அறிவுக்கு ஓர் அளவுகோலாயிருப்பதோடு, வளமான இலக்கிய மரபொன்று இருந்ததென்பதையும் சுட்டிக் காட்டுகின்றன.

(அ) புராதன சிங்களவர்களின் கல்வியறிவுடைமை பற்றியும் வளமான இலக்கிய மரபொன்று இருந்தமை பற்றியும் சீகிரிச் சுவரெழுத்துக்கள் வெளிப்படுத்துகின்றன.

(ஆ) சீகிரிச் சுவரெழுத்துக்கள் சுவரோவியங்களின் எழிலையும் சிங்கமுக வாயிலின் மாட்சியையும் கண்டு ரசித்த மக்களின் மனவுணர்வுகளைக் காட்டுவதுடன் அந்த எழுத்தாக்கங் களுக்கான நயப்பையும் காட்டுகின்றன.

(இ) புராதன சிங்களவர்களின் செய்யுள் வடிவிற் கருத்தை வெளிப்படுத்தும் ஆற்றலைக் காட்டும் சீகிரிச் சுவ ரெழுத்துக்கள் அவர்களின் கல்வி அறிவுடைமைக்கும் உதாரணமாக உள்ளன.

(iii) இலங்கை அறிவு மையமாகத் தோற்றம் பெறுவதற்கு அவசியமான நாட்டின் மனித மூலதன அடித்தளத்தினை உருவாக்குவதற்கு பொதுக் கல்வி முறைக்கு தற்பொழுது கணிசமான நவீன மயப்படுத்தல்கள் தேவைப்படுவது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. கல்விக் கொள்கையை மீள வடிவமைக்கும் நோக்குடன் புதிய கல்விச் சட்டமொன்றை வரைவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இப் புதிய சட்டவாக்கத்தினால் விரைவுபடுத்தப்பட்டதும் விரும்பத் தக்கதுமான உயர் பண்புத்தர கல்வி அபிவிருத்தி எதிர்பார்க்கப் படுகிறது. பொதுக்கல்வி முறையில் சீர்திருத்தங்களை அறிமுகப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துவதற்கு அதாவது பரீட்சை சார்ந்த அதனை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்திலிருந்து தேர்ச்சி மட்ட கலைத் திட்டத்தை நோக்கி நகர்வதற்கும் கல்வியில் ஆங்கிலத்தையும் தகவல் தொழில்நுட்பத்தினையும் மேம்படுத்தி பிள்ளைகள் வாழ்க்கைத் தேர்ச்சியை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக் களை வழங்குவதற்கும் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(அ) கல்வியில் உயர் பண்புத்தர விருத்தியின் மூலம் பரீட்சையை மையமாகக் கொண்ட பாடங்களை அடிப்படையாகக் கொண்ட கல்வி செயன்முறைகளுக்குப் பதிலாகத் தேர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட கல்விச் செயன் முறையை நோக்கி நகர முடியும்.

(ஆ) ஆங்கிலம். தகவல் தொழிநுட்பம் என்பவற்றை மேம்படுத்துதல் மற்றும் வாழ்க்கைத் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களை வழங்குதல் என்பன புதிய கல்விச் சட்டவாக்கத்தில் உள்ளடக்கப்பட வேண்டும்.

(இ) அறிவு மையமாக இலங்கை தோற்றம் பெறுவதற்குத் தேவையான மூலதன அடித்தளத்தினை இடுவதற்கு பொதுக் கல்வியின் நவீனமயமாக்கல் தேவைகள் இனம் காணப்பட்டுள்ளன.

* * *


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடைகள்

1\. (அ) பொதுமக்களின் நலனையும் சுதந்திரத்தையும் பேணும் வகையில் சட்டங்கள் உருவாக்கப்படல் வேண்டும்.

**பொதுச் சொத்தைப் பயன்படுத்துவதைத் தடுக்கும்**

நதிகள், வளிமண்டலம் போன்ற பொதுவான உடமை பாராட்டக் கூடிய சொத்துக்களையே இங்கு பொதுச் சொத்துகள் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. இத்தகைய பொதுச் சொத்துக்களைப் பயன்படுத்துவதைத் தடுக்கும் வகையிலான சட்டதிட்டங்களே பெரும்பாலான சூழல் பிரச்சினைகளைத் தீர்க்க உதவுகின்றன. அதாவது நதி போன்ற நீர் நிலைகளில் இருந்து நீரைப் பெறுவதற்கு நீர் வரி விதித்தல், சில நீர் நிலைகளைப் பாவிக்கக் கூடாது எனச் சட்டம் இயற்றுவதால் குறித்த ஒரு பகுதியினர் மட்டுமே பாவிக்க முடியுமென கட்டுப்பாடு விதித்தல், போன்றவற்றையே இங்கு "பொதுச் சொத்தைப் பயன்படுத்துவதைத் தடுக்கும்" என்ற பகுதி எடுத்து விளக்குகின்றது. இத்தகைய தடுக்கும் கட்டுப்பாடுகள், சட்டங்கள் என்பன அவ்வப்போது சமூகங்களில் ஏற்படுகின்ற சூழற் பிரச்சினைகளைத் தீர்ப்பவையாக இருந்தாலும், பொதுவாக மக்கள் நலனையும் சுதந்திரத்தையும் பேணக்கூடிய சட்டங்களே விரும்பப்படுகின்றன. ஏனெனில் இச்சொத்துக்கள் இயற்கையின் கொடை அல்லது இயற்கையின் பரிசு ஆதலால் அவற்றைப் பயன்படுத்துவதற்குரிய சுதந்திரமும் உரிமையும் பொது மக்களுக்கு உண்டு. இதனால் அவற்றைப் பயன்படுத்துவதைத் தடுக்கும் சட்டங்கள் விரும்பப்படுவதில்லை.

(ஆ) உயர்தரத்தினதான சுயகட்டுப்பாட்டுடன் கூடிய தன் ஒழுங்கமைப்புக் கொண்ட மனிதனே சிறந்த நம்பகமான மனிதனாக போற்றப்படுகின்றான்.

**தன் ஒழுங்கமைப்பு**

ஒருவர் தன்மீதும், தனது நேரம், வேலை என்பவற்றின் மீதும் செலுத்தும் சுய ஒழுக்கம் கொண்ட சொந்தக் கட்டுப்பாட்டையே "தன் ஒழுங்கமைப்பு" என்ற பதம் என்று எடுத்து விளங்குகின்றது. இவ்வாறு சுயகட்டுப்பாட்டுடன் கூடிய தன் ஒழுங்கமைப்புக் கொண்ட மனிதனே ஒழுங்கு முறையானவன் எனவும் நம்பகமானவன் எனவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிக்கப்படுகின்றான். இப்பண்பு சிறந்த தலைமைத்துவத்திற்கு மிக அவசியமாகும்.

(இ) மேலதிக அறிவு அனுபவத்துடன் சில நுட்ப முறைகளைப் பின்பற்றுவதன் மூலமும் முகாமையாளரை அபிவிருத்தி செய்ய முடியும்.

**குறிப்பான பிரச்சினைகளைக் கையாள்வதற்கான சூத்திரங்களிலிருந்து**

முகாமைத்துவம் சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான தத்துவார்த்தக் கோட்பாடுகள் அல்லது பொறிமுறை சார்ந்த நுட்பமுறைகளையே "குறிப்பான பிரச்சினைகளைக் கையாள்வதற்கான சூத்திரங்கள்" என்ற பதம் எடுத்து விளங்குகின்றது. அண்மைக் காலமாக முகாமையாளர் அபிவிருத்தி தொடர்பாக எழுந்துள்ள அழுத்தம் அல்லது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இத்தகைய சூத்திரங்கள் பெரிதும் உதவுகின்றன. இச் சூத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு குறிப்பான இப்பிரச்சினைகளை அணுகுவதன் ஊடாக ஒரு முகாமையாளரை அபிவிருத்தி செய்ய முடியும்.

(ஈ) தட்டெழுத்துக் குழுமமானது அவசர நிலைமைகளுக்கு முன்னுரிமை வழங்குவதுடன் ஒரே சீரான முறையிலும் இயங்க வேண்டும்.

**அவசர நெருக்கடி நிலவும் நேரங்களில் முன்னுரிமைகள் மதிப்பீடு**

அவசரமான. அல்லது மிக நெருக்கடியான நேரங்களில் கடிதங்களைத் தட்டச்சுப் பொறிப்பதற்கு முதலில் முன்னுரிமை வழங்கும்படி தட்டெழுத்துக் குழுமம் சீர்செய்யப்பட்டு மதிப்பீடு செய்யப்படல் வேண்டும் என்பதையே "அவசர நெருக்கடி நிலவும் நேரங்களில் முன்னுரிமைகள் மதிப்பீடு" என்ற வாக்கியத் தொடர் எடுத்து விளக்குகின்றது. அதாவது தட்டச்சுக் குழுமம் ஒன்று சரியான முறையில் சீரான வகையில் ஒழுங்கமைக்கப்பட வேண்டும் என்பதோடு அந்த மதிப்பீட்டில் அல்லது சீராக்கத்தில் அவசர நிலைமைகளில் அவற்றிற்கு முன்னுரிமை வழங்கி அக் கடிதங்களைத் தட்டச்சுப் பொறித்து நிர்வாக இயந்திரத்தைக் காலதாமதமின்றி இயங்க வைப்பதற்கு ஏற்ற வகையிலும் அச்சீராக்கம் அமைய வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. ஒருங்கிணைப்புப் பிரச்சினைகளும் அவற்றிற்கான தீர்வுகளும்**

அடிப்படைப் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளாமையினாலேயே ஒருங்கிணைப்புப் பிரச்சினைகள் பல எழுகின்றன. திட்டமிடுவோர் ஒருங்கணைப்புக்குத் தேவைப்படும் பரப்புக்களை முன்னரே கண்டறிந்து கொள்வதன் மூலம் பல பிரச்சினைகளை சரியான முறையில் தீர்க்க முடியும். அதேபோல் சரியான திட்டமிடல்கள் ஊடாக அலுவலங்களின் ஒருங்கிணைப்புப் பிரச்சினைகள் அணுகப்படல் வேண்டும். திணைக்களங்கள் தமது சரியான செயற்பாடுளை மேற்கொள்கின்றனவா என்பதைப் பார்ப்பதற்காக திட்டமிடலாளர்கள் தகவல்களின் உள்ளடக்கம் காலோசித வேளைகள் என்பவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இத்தகைய ஒருங்கிணைந்த திட்டமிடல் முயற்சிக்கு அச்சக வெளியீடுகளும் ஒரு சிறந்த ஏற்பாடாக அமையலாம். ஒருங்கிணைப்பதற்கான தேவையும், அது தொடர்பாக எழும் பிரச்சினைகளும் நிறுவனத்திற்கு நிறுவனம் வேறுபடலாம் எவ்வாறாயினும் உறுதியான அமைப்புகள் ஒருங்கிணைப்பு எங்கு, எப்போது, அவசியம் என்பதையும் அவற்றை எய்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய வழிகளையும் கொண்டிருக்கும்.

**3.** (i) - (அ)

(ii) - (ஆ)

(iii) - (இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. தமிழ் அரிச்சுவடியும் தமிழ் எழுத்துகளின் வகைகளும்

## A. தமிழ் அரிச்சுவடி

| ஃ | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## B. தமிழ் எழுத்துகளின் வகைகள்

உயிர் எழுத்துகள் பன்னிரண்டும், மெய் எழுத்துகள் பதினெட்டும், உயிர்மெய் எழுத்துகள் இருநூற்றுப்பதினாறும், ஆய்தம் ஒன்றும் ஆகிய இருநூற்றுநாற்பத்தேழும் சேர்ந்தது. தமிழ் நெடுங்கணக்கு எனப்படும். ஜ, ஸ, ஷ, ஸ்ரீ முதலிய வடவெழுத்துகளும் பயன்படுத்தப்படுகின்றன.

### I. உயிரெழுத்துகள்

அகர முதலிய பன்னிரண்டும் உயிர் போலத் தனித்தியங்க வல்லன. அதனால் அவை உயிர் எழுத்துகள் எனப்பட்டன. அவை ஆவி எனவும் பெயர் பெறும்.

### II. மெய்யெழுத்துகள்

ககர முதலிய பதினெட்டும், உயிரோடு கூடியல்லது இயங்கும் வல்லமை இல்லாத காரணத்தால், அவை மெய்யெழுத்துகள் எனப்பட்டன. அவை உடல், உடம்பு, ஒற்று, புள்ளி எனவும் பெயர் பெறும்.

**குறில்**

உயிரெழுத்துகளுள் அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தும் குறுகி ஒலிப்பவை. அதனால் அவை குற்றெழுத்துகள் எனப்படுகின்றன. குற்றெழுத்து குறில் எனவும் சொல்லப்படும்.

**நெடில்**

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழு எழுத்துகளும் நீண்டு ஒலிப்பவை. அதனால் அவை நெட்டெழுத்துகள் எனப்படுகின்றன. நெட்டெழுத்து நெடில் எனவும் சொல்லப்படும்.

எழுத்துகளை ஒலிப்பதற்கு எடுக்கும் கால அளவு மாத்திரை எனப் படும். ஒரு மாத்திரை என்பது கண்ணிமைப்பொழுது அல்லது கைந்நொடிப் பொழுது ஆகும். குற்றெழுத்துக்கு மாத்திரை ஒன்று. நெட்டெழுத்துக்கு மாத்திரை இரண்டு.

**வல்லின மெய்**

மெய்யெழுத்துகளுள் க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறும் வலிமையான ஓசை உடையவை. ஆதலால் அவை வல்லெழுத்துக்கள் எனப்படும். அவற்றுக்கு வல்லினம், வன்கனம், வலி என்ற பெயர்களும் உண்டு.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**மெல்லின மெய்**

ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் ஆறும் மென்மையான ஓசை உடையவை. ஆதலால் அவை மெல்லெழுத்துகள் எனப்படும். அவற்றுக்கு மெல்லினம், மென்கணம், மெலி என்ற பெயர்களும் உண்டு.

**இடையின மெய்**

ய், ர், ல், வ், ழ், ள் என்னும் ஆறும் வன்மையாகவோ மென்மையாகவோ அல்லாமல் இடைப்பட்ட ஓசை உடையவை. ஆதலால் அவை இடை யெழுத்துகள் எனப்படும். அவற்றுக்கு இடையினம், இடைக்கணம், இடை என்ற பெயர்களும் உண்டு. மெய்யெழுத்துக்கு மாத்திரை அரை.

## C. உயிர்மெய் எழுத்துகள்

உயிர்மெய் எழுத்துகளை மெய்யெழுத்தின் அடிப்படையில் வல்லின உயிர்மெய், மெல்லின உயிர்மெய், இடையின உயிர்மெய் என மூன்று வகைகளுள் அடக்கலாம்.

| | |
|---|---|
| வல்லின உயிர்மெய் | - 72 |
| மெல்லின உயிர்மெய் | - 72 |
| இடையின உயிர்மெய் | - 72 |
| மொத்தம் | - 216 |

உயிர்மெய் எழுத்துகளை உயிரெழுத்தின் அடிப்படையில் உயிர்மெய்க் குறில், உயிர்மெய் நெடில் என இரண்டு வகைகளுள் அடக்கலாம்.

| | |
|---|---|
| உயிர்மெய்க் குறில் | - 90 |
| உயிர்மெய் நெடில் | - 126 |
| மொத்தம் | - 216 |

உயிர்மெய்க் குறில் எழுத்துக்கு மாத்திரை ஒன்று, உயிர்மெய் நெடில் எழுத்துக்கு மாத்திரை இரண்டு.

## III. ஆய்த எழுத்து

குற்றெழுத்துக்கும் உயிர்மெய் வல்லெழுத்துக்கும் நடுவே மூன்று புள்ளி வடிவினதாய் வரும் ஓரெழுத்தாகும். இது தமிழில் உள்ள ஒரு சிறப் பெழுத்தாகும்.

உ-ம் : அஃறிணை, அஃது, எஃது முதலியன.

ஆய்தவெழுத்துக்கு மாத்திரை அரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுட்டு எழுத்துக்கள்

அ, இ, உ ஆகிய மூன்றும் சுட்டெழுத்துக்களாகும்.

| | | |
|---|---|---|
| அ | - | அவன், அம்மாடு |
| இ | - | இவன், இம்மாடு |
| உ | - | உவன், உம்மாடு |

## வினா எழுத்துக்கள்

எ, ஏ, ஓ, யா, ஆ ஆகியவை வினா எழுத்துக்களாகும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எ | - | எது | ஆ | - | அவனா |
| ஏ | - | ஏது | ஓ | - | அவனோ |
| யா | - | யாது | ஏ | - | அவனே |

## மொழிக்கு முதலில் வராத எழுத்துக்கள்

ட, ண, ன, ர, ல, ழ

| | | | |
|---|---|---|---|
| உ-ம் : | டாம்பு | - | இடாம்பு |
| | ராமன் | - | இராமன் |
| | லக்குமி | - | இலக்குமி |
| | ரங்கன் | | அரங்கன் |

## மொழிக்கு இறுதியில் வராத எழுத்துக்கள்

க், ச், ட், த், ற், ப், ங்

| | | | |
|---|---|---|---|
| உ-ம் : | சோப் | - | சோப்பு |
| | கேற் | - | கேற்று |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. சொற்கள்

## A. ஒரு பொருட் பல சொற்கள்

- கடல் - ஆழி, வேலை, சாகரம்.
- சிங்கம் - அரி, மிருகேந்திரன், கேசரி.
- பாம்பு - அரவம், பணி, கட்செவி
- போர் - அமர், யுத்தம், செரு
- மலை - பருவதம், கிரி, குன்று
- மாலை - ஆரம், கண்ணி, தொடை
- மேகம் - கொண்டல், கார், முகில்
- வாசனை - கந்தம், நாற்றம், விரை
- வில் - சிலை, தநு, சாபம்.
- வேதம் - மறை, சுருதி, ஆரணம்.

## B. பல பொருட் ஒருசொல்

- அரி - சிங்கம், வண்டு, திருமால்.
- ஆலம் - விடம், ஒரு மரம், மழைநீர், அம்புக்கூடு
- கடி - வாசனை, காவல், கடி(த்தல்), சிறப்பு, களிப்பு, அச்சம்
- கண்டம் - கழுத்து, ஆபத்து, நிலப்பெரும் பிரிவு
- கலம் - பாத்திரம், கப்பல், ஆபரணம்.
- சரம் - அம்பு, அசையும்பொருள், பூமாலை
- தாலம் - பனை, நா, பூமி
- பதி - அரசன், இடம், கணவன்
- பார் - பூமி, கற்பாறை, பார்(த்தல்)
- வளை - சங்கு, புற்று, வளைதல்.
- அணி - அலங்காரம், ஆபரணம், ஒழுங்கு, படைப்பிரிவு, அணிதல்.
- அம்பு - கணை, மூங்கில், நீர், மேகம்
- அரங்கம் - நாடகசாலை, சபை, போர்க்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஈரம் - குளிர்ச்சி, அன்பு, கிருபை, பண்பு, அறிவு.
- உரு - உடல், வடிவம், கோபம், நிறம்.
- சுருதி - வேதம், சுதி, இசை, காது.
- சேய் - பிள்ளை, முருகன், சிவப்பு, இளமை

## C. ஒலி வேறுபாடுகள்

### I. லகர, ழகர, ளகர பேத விளக்கம்.

- அலகு - அளவு, கதிர், கூர்மை
- அழகு - கவின், சிறப்பு
- அளகு - அன்னப்பெடை, பெண்மயில், பெண்கோழி
- அலி - நெருப்பு, ஆண் பெண் அல்லாதது
- அழி - கெடு, குலை
- அளி - கொடு, அருள், வண்டு
- அலை - திரி, வருத்து, கடலலை
- அழை - கூப்பிடு, வரவழை
- அளை - தயிர், புற்று
- ஆலி - மழைத்துளி, களி, ஒலி
- ஆழி - கடல், மோதிரம், சக்கரம்
- ஆளி - ஆளுபவன், சிங்கம்
- இலை - தழை
- இழை - செய், ஆபரணம், நூல்
- இளை - மெலி, தளர்
- உலை - அலை, நீரலை, கொல்லன் உலை
- உழை - பிரயாசப்படு, இடம், மான்
- உளை - வருத்து, குதிரையின் பிடரி மயிர், அழுகை
- ஒலி - சத்தம்
- ஒழி - முடித்துவிடு, தவிர்
- ஒளி - மறை, பிரகாசி, வெளிச்சம், விளக்கு
- கலகம் - குழப்பம், சண்டை
- கழகம் - சபை, கல்விபயில் இடம்
- களகம் - நெற்கதிர், பெருச்சாளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## II. ரகர, றகர பேதச் சொற்கள்.

- ♦ அரி - அரிதல், சிங்கம், வண்டு
- ♦ அறி - அறிந்துகொள், உணர்
- ♦ அலரி - பூமரங்களில் ஒன்று
- ♦ அலறி - கதறி
- ♦ அரும்பு - மொட்டு, முளை
- ♦ அறும்பு - கொடுமை, பஞ்சகாலம்
- ♦ ஆர - நிறைய, நுகர.
- ♦ ஆற - ஆறுதலடைய
- ♦ இரத்தல் - பிச்சை எடுத்தல்
- ♦ இறத்தல் - சாதல்
- ♦ இரங்கு - கருணைகாட்டு, உருகல்
- ♦ இறங்கு - கீழே இறங்கு
- ♦ இரும்பு - கரும்பொன்.
- ♦ இறும்பு - அதிசயம்
- ♦ உரவு - அறிவு, வலிமை
- ♦ உறவு - சுற்றம், சேர்க்கை
- ♦ ஊரு - அச்சம்.
- ♦ ஊறு - இடையூறு
- ♦ கரி - அடுப்புக்கரி, யானை
- ♦ கறி - கடி, மிளகு
- ♦ கரை - ஓரம், தேய், எல்லை
- ♦ கறை - மாசு, குற்றம், விஷம், கறுப்பு
- ♦ கூரை - வீட்டுக்கூரை
- ♦ கூறை - திருமணப்புடவை.
- ♦ நிரை - வரிசை
- ♦ நிறை - நிறைவு
- ♦ பிரை - உறைமோர்
- ♦ பிறை - இளஞ்சந்திரன்
- ♦ மாரன் - மன்மதன்
- ♦ மாறன் - பாண்டியன்
- ♦ செரு - சண்டை, போர்
- ♦ செறு - கொல்லு, வயல்
- ♦ தேரல் - ஆராய்தல்.
- ♦ தேறல் - தேன்

## III. னகர, ணகர பேத விளக்கம்.

- ♦ அனையார் - அல்லாமை.
- ♦ அணையார் - பகைவர்
- ♦ அன்மை - அல்லாத
- ♦ அண்மை - சமீபம்
- ♦ ஆனம் - தெப்பம், மரக்கலம்
- ♦ ஆணம் - குழம்பு, அன்பு.
- ♦ இனி - இப்பால், பின்னால்.
- ♦ இணி - தளை, அணி, எல்லை.
- ♦ உன்னல் - நினைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உண்ணல் - சாப்பிடுதல்.
- ஊன் - மாமிசம்
- ஊண் - உணவு
- கனப்பு - பருமை.
- கணப்பு - சூடு.
- கனம் - பெரியாரைக் கனம் பண்ணு.
- கணம் - இறைவனே! நான் உன்னை ஒருகணமும் பிரியாதிருக்க வரந்தருவாய்.
- கனி - காய்கனியுண்டு நோய்பிணியகற்று. பழு. இளகு. பழம்
- கணி - நம் முன்னோர் நிழலைக்கொண்டு நேரங் கணித்தனர். மதி. எண்ணு.
- கன்னி - கன்னிப்பெண்ணாயிருக்கும்போதே குந்தி கர்ணனைப் பெற்றாள்.
- கண்ணி - குறவர் கண்ணிவைத்துப் பறவை பிடிப்பர்.
- பனி - வெயில் முன் பனித்துளி நில்லாது.
- பணி - துரியோதனனைப் பணிக்கொடியோன் என்பர்.
- வன்மை - திறமையான பேச்சாளர் தங்கள் பேச்சு வன்மையால் மக்கள் மனத்தைக் கவருகின்றனர்.
- வண்மை - வள்ளல் பாரி வண்மையிற் சிறந்தவன்.

## D. எதிர்க்கருத்துச் சொற்கள்

- அருமை - எளிமை
- அருள் - மருள்
- அடி - முடி
- அச்சம் - துணிவு
- அநுகூலம் - பிரதிகூலம்
- அமிலம் - காரம்
- அகலம் - ஒடுக்கம்
- அகங்கை - புறங்கை
- அணுகல் - விலகல்
- உம்பர் - இம்பர்
- உத்தமன் - அதமன்
- உலோபம் - வள்ளன்மை.
- உற்சாகம் - சோர்வு
- உடன்பாடு - மறுப்பு
- உருவம் - அருவம்
- உசிதம் - அநுசிதம்
- ஊடல் - கூடல்
- இன்சொல் - வன்சொல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அட்சரம் - நிரட்சரம்
- அஞ்சனம் - நிரஞ்சனம்
- அட்சம் - நிரட்சம்
- அந்தம் - அநந்தம்
- ஆதி - அநாதி, அந்தம்
- ஆதரவு - அநாதரவு
- ஆசை - நிராசை
- ஆயுதன் - நிராயுதன்
- ஆரோகணம் - அவரோகணம்
- ஆதாரம் - நிராதாரம்
- ஆலம் - அமுதம்
- ஆயாசம் - அநாயாசம்
- ஆயுதன் - நிராயுதன்
- ஆண்டான் - அடிமை
- ஆட்சேபித்தல் - ஆமோதித்தல்
- ஆணவம் - அடக்கம்
- இரகசியம் - பரகசியம்
- இணக்கம் - பிணக்கம்
- இணை - தனி
- இகழ் - புகழ்
- இலட்சணம் - அவலட்சணம்
- இன்னார் - இனியார்
- இச்சை - அநிச்சை
- களவியல் - கற்பியல்
- கதி - நிர்க்கதி
- கிரமம் - அக்கிரமம்
- குணன் - நிர்க்குணன்
- குறைவு - நிறைவு
- சரம் - அசரம்
- சகுனம் - அபசகுனம்
- ஈரம் - வரட்சி
- ஈரமான - உலர்ந்த
- உபகாரம் - அபகாரம்
- உத்தமன் - அநுத்தமன்
- ஊர்தல் - விரைதல்
- ஊன்றுதல் - பிடுங்குதல்
- ஏறு - இறங்கு
- ஏகம் - அநேகம்
- ஏராளம் - குறைவு
- ஏளனம் - புகழ்ச்சி
- ஐது - செறிவு
- ஐயம் - தெளிவு, தேற்றம்
- ஒறுப்பு - மலிவு
- ஒளி - இருள்
- ஒற்றுமை - வேற்றுமை
- ஒட்டுதல் - வெட்டுதல்
- ஒத்துழை - ஒதுங்கு
- ஓங்குக - ஆழ்க, வீழ்க
- கங்குல் - பகல்
- கண்டம் - அகண்டம்
- களங்கம் - நிட்களங்கம்
- கலக்கம் - தெளிவு
- கனவு - நனவு
- கர்வம் - பணிவு
- காய்தல் - உவத்தல்
- கீர்த்தி - அபகீர்த்தி
- குறுக்கம் - விரிவு
- கேடு - ஆக்கம்
- சத்தியம் - அசத்தியம்
- சாதாரணம் - அசாதாரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சிந்தை - நிர்ச்சிந்தை
- சீரணம் - அசீரணம்
- சீதளம் - வெப்பம்
- சீலன் - குசீலன்
- சுலபம் - துர்பலம்
- சுத்தம் - அசுத்தம்
- சுரர் - அசுரர்
- பக்குவம் - அபக்குவம்
- பக்கம் - விபக்கம்
- பாலர் - விருத்தர்
- புணர்ச்சி - பிரிவு
- புராதனம் - நவீனம்
- பூரணம் - அபூரணம்
- யுக்தி - குயுக்தி
- நுண்மை - பருமை
- மடமை - புலமை
- மருட்சி - தெருட்சி
- மலம் - நிர்மலம்
- மரியாதை - அவமரியாதை
- மருள் - தெருள்
- மானம் - அவமானம்
- மெய்ம்மை - பொய்ம்மை
- தர்க்கம் - குதர்க்கம்
- தந்திரம் - அவதந்திரம்
- திண்மை - நொய்ம்மை
- தேகம் - விதேகம்
- தேசம் - விதேசம்
- தொகை - விரி
- யோகம் - வியோகம்
- ஞானம் - அஞ்ஞானம்
- விசாரம் - நிர்விசாரம்
- விகற்பம் - நிர்விகற்பம்
- நம்பிக்கை - அவநம்பிக்கை
- நியாயம் - அநியாயம்
- நீதி - அநீதி
- வாழ்வு - தாழ்வு

## E. பெயராகவும், வினையாகவும் வழங்கும் சொற்கள்

| சொல் | பெயர் | வினை |
|---|---|---|
| ♦ அகல் | விளக்குத்தகழி | அகல், நீங்கு |
| ♦ அடி | பாதம் | அடி |
| ♦ அடை | வெற்றிலை | சேருதல் |
| ♦ அணி | ஆபரணம் | அலங்கரி |
| ♦ அணை | மெத்தை | தழுவு |
| ♦ அமர் | போர் | உட்காரு |
| ♦ அமை | மூங்கில் | அடங்கு |
| ♦ அரி | சிங்கம் | அரி - (வெட்டு) |
| ♦ அரை | கிடைப்பாகம் (பாதி) | அரை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ♦ அலை | கடலலை | அலை - (திரிதல்) |
| ♦ அவி | தேவருணவு | அவி -(பிட்டவித்தல்) |
| ♦ ஆடு | ஒரு பிராணி | ஆடு -(நடனமாடுதல்) |
| ♦ ஆள் | மனிதன், நபர் | அரசாட்சி செய் |
| ♦ ஆறு | நதி, வழி | இளைப்பாறு |
| ♦ இடி | இடி | இடித்தலைச்செய் |
| ♦ இரை | உணவு | ஒலிசெய் |
| ♦ உடு | நட்சத்திரம் | உடுத்து (தரி) |
| ♦ உடை | ஆடை | சிதை, அழி |
| ♦ உரை | சொற்பொருள் | கூறு |
| ♦ ஊர் | கிராமம் | ஊர்ந்துசெல் |
| ♦ எண் | இலக்கம் | நினை |
| ♦ எரி | நெருப்பு | எரித்தலைச்செய் |
| ♦ ஏறு | இடபம், ஆண்சிங்கம் | ஏறு -(ஏணியிலேறு) |
| ♦ ஒளி | பிரகாசம் | மறைந்திரு |
| ♦ ஓடு | கூரை ஓடு | ஓடு (வேகமாகஓடு) |
| ♦ கரை | ஓரம் | கரைத்தல் |
| ♦ கலை | ஆண்மான் | பிடி |
| ♦ குடி | குடும்பம் | பருகு |
| ♦ சூடு | வெப்பம் | சூடு (மாலைசூடு) |
| ♦ செல் | கறையான் | போ |
| ♦ சோதி | பிரகாசம் | தேர்வுசெய் |
| ♦ திரி | விளக்குத் திரி | சுற்றித்திரி |
| ♦ தை | மாதம் | தைத்தல் |
| ♦ நிரை | பசுக்கூட்டம் | வரிசை |
| ♦ நொடி | நேரத்தைக்குறித்தல் | நொடித்தல் |
| ♦ பதி | தலைவன் | பதியம்பண்ணு |
| ♦ பிணை | பெண்மான் | சுட்டு |
| ♦ பொறி | கருவி | பொறித்தலைச்செய் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ♦ மதி | சந்திரன் | மரித்தலைச்செய் |
| ♦ மாறு | விளக்குமாறு | வேறுபாடு, நீங்கு |
| ♦ முடி | கிரீடம் | முடிவுசெய் |
| ♦ மெழுகு | மெழுகு | மெழுகிடு |

## F. எதிர்ப்பாற் சொற்கள்

| ஆண்பால் | பெண்பால் | ஆண்பால் | பெண்பால் |
|---|---|---|---|
| ♦ ஆயன் | - ஆய்ச்சி | ♦ ஆடுஉ | - மகடுஉ |
| ♦ ஐயன் | - ஐயை | ♦ குரு | - குருபத்தினி |
| ♦ சீமான் | - சீமாட்டி | ♦ செட்டி | - செட்டிச்சி |
| ♦ தந்தை | - தாய் | ♦ தாசன் | - தாசி |
| ♦ தோழன் | - தோழி | ♦ நம்பி | - நங்கை |
| ♦ பாலன் | - பாலிகை | ♦ பிரான் | - பிராட்டி |
| ♦ மாமன் | - மாமி | ♦ யுவன் | - யுவதி |
| ♦ வேடன் | - வேடுவிச்சி | ♦ மகன் | - மகள் |
| ♦ ஈசன் | - ஈசுவரி | ♦ கூனன் | - கூனி |
| ♦ தம்பி | - தங்கை | ♦ பாணன் | - பாடினி |
| ♦ தேவன் | - தேவி | ♦ பேரன் | - பேத்தி |
| ♦ வீரன் | - வீராங்கனை | ♦ பிதா | - மாதா |
| ♦ அழகன் | - அழகி | ♦ அரசன் | - அரசி |
| ♦ ஆடவன் | - பெண்டு | ♦ உழவன் | - உழத்தி |
| ♦ ஒருவன் | - ஒருத்தி | ♦ கள்வன் | - கள்ளி |
| ♦ கணவன் | - மனைவி | ♦ கிழவன் | - கிழவி |
| ♦ குமாரன் | - குமாரி | ♦ குணவன் | - குணவதி |
| ♦ சிறுவன் | - சிறுமி | ♦ சீமான் | - சீமாட்டி |
| ♦ செவிடன் | - செவிடி | ♦ சேவகன் | - சேவகி |
| ♦ தமிழன் | - தமிழிச்சி | ♦ நடிகன் | - நடிகை |
| ♦ நண்பன் | - நண்பி | ♦ பாட்டன் | - பாட்டி |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| ♦ பாதகன் | - பாதகி | ♦ மருகன் | - மருகி |
| ♦ பெருமான் | - பெருமாட்டி | ♦ மருமகன் | - மருமகள் |
| ♦ முடவன் | - முடத்தி | ♦ மூதாதை | - மூதாட்டி |
| ♦ இடையவன் | - இடைச்சி | ♦ எசமான் | - எசமாட்டி |
| ♦ கனவான் | - கனவதி | ♦ குமரன் | - குமரி |
| ♦ குருடன் | - குருடி | ♦ செல்வன் | - செல்வி |
| ♦ தலைவன் | - தலைவி | ♦ நாயகன் | - நாயகி |
| ♦ புருஷன் | - மனைவி | ♦ மாணவன் | - மாணவி |
| ♦ திருடன் | - திருடி | ♦ வாலிபன் | - வாலை |
| ♦ உபாத்தியன் | - உபாத்தியாயினி | ♦ காவற்காரன் | - காவற்காரி |
| ♦ சகோதரன் | - சகோதரி | ♦ திருவாளன் | - திருவாட்டி |
| ♦ பண்டிதன் | - பண்டிதை | ♦ பாக்கியவான் | - பாக்கியவதி |
| ♦ பார்ப்பனன் | - பார்ப்பணி | ♦ பிராமணன் | - பிராமணத்தி |
| ♦ புதல்வன் | - புதல்வி | ♦ புண்ணியவான் | -புண்ணியவதி |
| ♦ மணவாளன் | - மணவாட்டி | ♦ மருத்துவன் | - மருத்துவச்சி |
| ♦ மாணாக்கன் | - மாணாக்கி | ♦ மித்திரன் | - மித்திரை |
| ♦ மைத்துனன் | - மைத்துனி | ♦ வேலைக்காரன் | - வேலைக்காரி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. இணைமொழிகள், இரட்டை மொழிகள், அடுக்குத் தொடர்கள்

## A. இணைமொழிகள்

இரண்டு சொற்கள் இணைந்து ஒரு பொருளை உணர்த்துமிடத்து, அத்தொடர்கள் இணைமொழிகள் எனப்படுகின்றன.

**தொகுதி 1**

- அரைகுறை
- அருமை பெருமை
- அண்டை அயலார்
- அணை துணை
- அற்ப சொற்பம்
- அக்கம் பக்கம்
- ஆசாபாசம்
- ஆற அமர
- ஆறித்தேறி
- ஆட்ட ஓட்டம்
- இளைத்துக் களைத்து
- ஈ விரக்கம்
- ஈடும் எடுப்பும்
- உருவும் திருவும்
- உருண்டு திரண்டு
- ஊணுடை
- ஊணுறக்கம்
- ஒளிப்புமறைப்பு
- ஓட்டமும் நடையும்
- கண்ணீரும் கம்பலையும்
- கரடு முரடு
- கள்ளங்கபடம்

**தொகுதி 2**

- அறமும் மறமும்
- அல்லும் பகலும்
- ஆதி, அந்தம்
- இன்ப துன்பம்
- இராப்பகல்
- இன்னார் இனியார்
- உயர்வு தாழ்வு
- ஏற்ற இறக்கம்
- ஏற்றத்தாழ்வு
- சுக துக்கம்
- மலையும் மடுவும்
- கொடுக்கல் வாங்கல்
- தொகுத்து வகுத்து
- வானகமும் வையகமும்
- விண்ணும் மண்ணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சந்து பொந்து
- மூலை முடுக்கு
- வழிதுறை

(தொகுதி ஒன்றில் உள்ளவை ஒரே கருத்தைத் தரும் சொற்களை கொண்டவையாகும்.)

(தொகுதி இரண்டில் உள்ளவையோ முரணான கருத்தைத் தரும் சொற்களைக் கொண்டவையாகும்.

## B. இரட்டை மொழிகள்

ஓர் அடிச்சொல் இரட்டித்து நின்று பொருள் தருமிடத்து அது இரட்டை மொழி அல்லது இரட்டைக்கிளவி எனப்படும். இரட்டித்து நிற்கும் போது உணர்த்தும் பொருளைப் பிரிந்து நிற்கும் போது தருவதில்லை.

சில இரட்டை மொழிகள் இசை (ஓசை) பற்றிய பொருள் உணர்த்து வதாக அமையும்.

உ-ம் : கடகட, சலசல

சில இரட்டை மொழிகள் பண்பு பற்றிய பொருள் உணர்த்துவதாக அமையும்.

உ-ம் : மொறுமொறு, கடுகடு, முணுமுணு, கசகச, பரபர

இரட்டை மொழிகள் வாக்கியங்களில் வினைகளாயும் வினையடியாக எழுந்த பெயர்களாயும், வினையெச்சங்களாயும், பெயரெச்சங்களாயும் அமையும்.

## C. அடுக்குத் தொடர்கள்

ஒரு சொல் உணர்த்தும் பொருளை அழுத்தமாகக் கூறுவதற்கு அச் சொல் அடுக்கி வருவது அடுக்குத்தொடர் எனப்படும்.

| | | |
|---|---|---|
| ஓடஓட | ஊர்ஊர் | விடியவிடிய |
| சுடச்சுட | மேலேமேலே | குமுறிக்குமுறி |
| உயரஉயர | மணிமணி | அணுஅணு |
| வெட்டவெட்ட | குட்டக்குட்ட | விழுந்துவிழுந்து |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. வடசொற்களும் பிறமொழிச்சொற்களும்

## A. வடமொழிச்சொற்கள்

| வடமொழி | | தமிழ் |
|---|---|---|
| ♦ அகங்காரம் | - | செருக்கு. |
| ♦ அசலம் | - | உறுப்பு |
| ♦ அதிருஷ்டம் | - | ஆகூழ், நற்பேறு |
| ♦ அதிபர் | - | தலைவர் |
| ♦ அந்தரங்கம் | - | மறைவு |
| ♦ அநாவசியம் - | - | வேண்டாதது |
| ♦ அபாயம் | - | இடர் |
| ♦ அபிஷேகம் | - | திருமுழுக்கு |
| ♦ அமிசம் | - | கூறுபாடு |
| ♦ அர்த்தநாரி | - | உமைபாகன் |
| ♦ அர்த்தம் | - | பொருள் |
| ♦ அர்ப்பணம் | - | படையல் |
| ♦ அலட்சியம் | - | புறக்கணிப்பு |
| ♦ அவஸ்தை | - | நிலை, தொல்லை |
| ♦ அற்புதம் | - | புதுமை |
| ♦ அனுமதி | - | இசைவு |
| ♦ அக்கிரமம் | - | முறைக்கேடு |
| ♦ அசூயை | - | பொறாமை |
| ♦ அதிருப்தி | - | மனக்குறை |
| ♦ அத்தியாவசியம் | - | இன்றியமையாதது |
| ♦ அநேகம் | - | பல |
| ♦ அபகரி | - | பறி, கைப்பற்று |
| ♦ அபிப்பிராயம் | - | கருத்து |
| ♦ அபூர்வம் | - | புதுமை |
| ♦ அயோக்கியன் | - | நேர்மையற்றவன் |
| ♦ அர்த்த புஷ்டியுள்ள | - | பொருள் செறிந்த |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## B. பிறமொழிச்சொற்கள்

- **போர்த்துக்கேய மொழிச் சொற்கள்**
  கடுதாசி, கரத்தை, சப்பாத்து, வாங்கு, அன்னாசி, அலுமாரி.
- **ஒல்லாந்த மொழிச் சொற்கள்**
  இலாச்சி, கந்தோர், கேத்தில், நொத்தாரிசு, தோம்பு, சாக்கு.
- **பிரான்சிய மொழிச் சொற்கள்**
  குசினி, பீரோ, இலாந்தர், துருப்பு, பட்டாளம்
- **அரபு மொழிச் சொற்கள்**
  வசூல், இலாகா (திணைக்களம்), தகவல், சைத்தான்.
- **மராட்டி மொழிச் சொற்கள்**
  அட்டவணை, அபாண்டம், குண்டான், பட்டாணி, சாம்பார், வில்லங்கம்.
- **பாரசீக மொழிச் சொற்கள்**
  சமுக்காளம், முலாம், சிப்பந்தி, சுமார், சால்வை, துப்பாக்கி.
- **பாளி மொழிச் சொற்கள்**
  விகாரை, துக்கம், சீலம், பிக்கு, தூபி, போதி
- **ஆங்கில மொழிச் சொற்கள்**
  பென்சில், விசுக்கோத்து, மைனர், மைல், ஏக்கர், சினிமா, தார்
- **கன்னட மொழிச் சொற்கள்**
  அட்டிகை, சமாளித்தல், சொத்து.
- **உருது மொழிச் சொற்கள்**
  அசல், ஆசாமி, அமுல், அலாதி இராஜினாமா.
- **தெலுங்கு மொழிச் சொற்கள்**
  இடாப்பு, இராணுவம், இனாம், இலஞ்சம்.
- **மலையாள மொழிச் சொற்கள்**
  தளபாடம், கொச்சி, கச்சவடம்.
- **சிங்கள மொழிச் சொற்கள்**
  பன்சலை, முருங்கை.
- **இந்தி மொழிச் சொற்கள்**
  ஆசாமி, பேட்டி, சிபார்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. மரபுத் தொடர்களும் பழமொழிகளும்

## A. மரபுத் தொடர்கள்

மரபுத்தொடர்களும் அவைகளின் இலக்கணப் பொருள்களும்.

1. **அடி பற்றிய மரபுத்தொடர்கள்**

| | | |
|---|---|---|
| அடிநகர்தல் | - | இடம்பெயர்தல் |
| அடிப்படுத்தல் | - | வெற்றிகொள்ளல் |
| அடிபிடித்தல் | - | குறிப்பின்வழிச் செல்லல் |
| அடிபிறக்கிடல் | - | தோற்றோடல் |
| அடிவிளக்குதல் | - | தன்மரபைப் புகழ்பெறச் செய்தல் |
| அடியொற்றுதல் | - | பின்பற்றுதல் |
| அடிப்படை | - | மூலாதாரம் |
| அடியிடுதல் | - | ஆரம்பித்தல் |

2. **கண் பற்றிய மரபுத்தொடர்கள்**

| | | |
|---|---|---|
| கண்கலத்தல் | - | ஒருவரை ஒருவர் விரும்புதல் |
| கண்டு கழித்தல் | - | அனுபவித்தல், வெறுத்தல் |
| கண்ணறுதல் | - | அன்பு குறைதல் |
| கண்ணுதல் | - | அருமையாதல் |
| கண்விடல் | - | துவாரம் உண்டாதல் |
| கண்மூடித்தனம் | - | அவதானமின்மை |
| கண்திறத்தல் | - | அறிவு உண்டாதல் |
| கண்ணெறிதல் | - | கடைக்கண்ணாற் பார்த்தல் |
| கண் மூடுதல் | - | இறத்தல் |

3. **கழுத்துப் பற்றிய மரபுத்தொடர்கள்**

| | | |
|---|---|---|
| கழுத்திற் கட்டுதல் | - | வலிந்து கொடுத்தல் |
| கழுத்துக் கொடுத்தல் | - | பிறரின் துன்பத்தின்போது உதவி செய்தல். |
| கழுத்தை முறித்தல் | - | வருத்துதல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கழுத்தறுத்தல் | - | தீமை செய்தல் |
| கழுத்ததைக் கட்டுதல் | - | விடாது நெருக்குதல் |

4. **காது பற்றிய மரபுத்தொடர்கள்**

| | | |
|---|---|---|
| காதிலடிபடுதல் | - | செய்தி பரவுதல் |
| காது குத்தல் | - | ஏமாற்றுதல் |
| காதைக்கடித்தல் | - | மறைபொருள் சொல்லல் |
| காதிலோதுதல் | - | கோள் சொல்லுதல் |
| காது கொடுத்தல் | - | அவதானித்தல் |

5. **கால் பற்றிய மரபுத்தொடர்கள்**

| | | |
|---|---|---|
| கால் கிளர்தல் | - | ஓடுதல் |
| கால் சாய்தல் | - | கெடுதல் |
| கால் பின்னுதல் | - | தடைப்படல் |
| காலைச் சுற்றுதல் | - | தொடர்ந்து பற்றுதல் |
| காலாறுதல் | - | ஓய்ந்திருத்தல் |
| கால் கொள்ளுதல் | - | ஆரம்பித்தல் |
| கால்பிடித்தல் | - | காலைப்பற்றிக் கெஞ்சுதல் |
| காலூன்றுதல் | - | நிலைபெறுதல் |

6. **கை பற்றிய மரபுத்தொடர்கள்**

| | | |
|---|---|---|
| கை காட்டுதல் | - | திறமையை வெளிப்படுத்தல் |
| கை கொடுத்தல் | - | துன்பத்தில் உதவி செய்தல் |
| கை தலைவைத்தல் | - | பெருநட்டம் அடைதல் |
| கையறுதல் | - | வருந்துதல் |
| கையைக் கட்டுதல் | - | முயற்சி செய்யாதபடி தடுத்தல் |
| கை கழுவுதல் | - | முற்றாய் விலகுதல் |
| கை கூடல் | - | அநுகூலமாதல் |
| கையிடல் | - | ஆரம்பித்தல் |
| கை தளர்தல் | - | வறுமையுறல் |
| கை கொடுத்தல் | - | உதவி செய்தல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. செவி பற்றிய மரபுத்தொடர்கள்

| | | |
|---|---|---|
| செவிசாய்த்தல் | - | இணங்கிக்கேட்டல் |
| செவிப்படுதல் | - | கேட்கப்படுதல் |
| செவியறிவுறுத்தல் | - | நல்லறிவு கூறுதல் |
| செவி கொடுத்தல் | - | கவனித்துக் கேட்டல் |
| செவிக்கேறுதல் | - | கேட்பதற்கு இனிமையாக இருத்தல் |

8. தலை பற்றிய மரபுத்தொடர்கள்

| | | |
|---|---|---|
| தலைகீழாய் நடத்தல் | - | முறை தவறி நடத்தல் |
| தலைகீழாய் நிற்றல் | - | பிடிவாதம் கொள்ளல். |
| | - | செருக்குடன் நடத்தல். |
| தலையளி செய்தல் | - | முகம் மலர்ந்து இன்சொல் கூறுதல். |
| தலையால் நடத்தல் | - | முறைதவறி நடத்தல் |
| தலையைத் தடவுதல் | - | சிந்தனை செய்தல் |
| தலைதடுமாற்றம் | - | பெருங்குழப்பம் |
| தலைப்படுத்தல் | - | மேற்கொள்ளுதல் |
| தலைமறைதல் | - | ஒளிந்திருத்தல் |

9. நாக்கு பற்றிய மரபுத்தொடர்கள்

| | | |
|---|---|---|
| நாக்கு அசைதல் | - | வாய் திறந்து சொல்லுதல் |
| நாக்குப் புரளுதல் | - | தவறுதல் |
| நாக்கு வளைத்தல் | - | பழித்தல் |
| நாக்கு விழுதல் | - | பேச நாவெழாமற் போதல் |
| நாக்குத் தவறுதல், நாக்குத் தப்பல் | - | பேச்சுறுதி தவறுதல், பொய் சொல்லுதல் |

10. பல் பற்றிய மரபுத்தொடர்கள்

| | | |
|---|---|---|
| பல்லிளித்தல் | - | ஏளனஞ் செய்தல் |
| பல்லுக்கடித்தல் | - | துன்பந்தரும் ஒன்றைச் சகித்துக் கொண்டிருத்தல். |
| பல்லைக்காட்டுதல் | - | இரந்து வேண்டல். |
| பல்லைப் பிடுங்குதல் | - | சக்தியை அடக்குதல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. முகம் பற்றிய மரபுத்தொடர்கள்

| | | |
|---|---|---|
| முகம் கொள்ளுதல் | - | விரும்புதல் |
| முகம் புகுதல் | - | எதிர்சென்று நிற்றல் |
| முகமாதல் | - | உடன்படல் |
| முகத்திலடித்தல் | - | நேரே நிந்தித்தல் |
| முகந்தருதல் | - | அன்பு காட்டல் |
| முகங்கொடுத்தல் | - | இன்முகங் காட்டுதல் |
| முகமுறிதல் | - | மனம் நோகல் |
| முகம் பார்த்தல் | - | இரக்கங்காட்டுதல் அன்புகாட்டுதல் |

## 12. வயிறு பற்றிய மரபுத்தொடர்கள்

| | | |
|---|---|---|
| வயிறுகடித்தல் | - | பசியுண்டாதல் |
| வயிறு கழுவுதல் | - | அரும்பாடுபட்டு வாழுதல் |
| வயிறு வாய்த்தல் | - | மகப்பேறு |
| வயிற்றிலடித்தல் | - | சீவனத்தைக் கெடுத்தல் |
| வயிறு வளர்த்தல் | - | எவ்வாறோ பிழைத்துக்கொள்ளல் |
| வயிறு கிள்ளுதல் | - | பசி உண்டாதல் |
| வயிறு குளிர்தல் | - | திருப்தியடைதல் |
| வயிறெரிதல் | - | பொறாமை கொள்ளுதல் |

## 13. வாய் பற்றிய மரபுத்தொடர்கள்

| | | |
|---|---|---|
| வாய்திறத்தல் | - | பேசத் தொடங்குதல் |
| வாய்பூட்டுப்போடல் | - | பேசாது தடுத்தல் |
| வாய்மூத்தல் | - | அடக்கமின்றிப் பேசுதல் |
| வாய்விடுதல் | - | வெளிப்படையாகக் கேட்டல் |
| வாய்விடுதல் | - | வெளிப்படையாகக் கேட்டல் |
| வாய் புலம்பல் | - | பிதற்றுதல் |
| வாயில் மண் போடுதல் | - | கேடு விளைவித்தல் |

## 14. வால் பற்றிய மரபுத்தொடர்கள்

| | | |
|---|---|---|
| வாலாட்டுதல் | - | சேட்டை பண்ணுதல் |
| வால் முளைத்தல் | - | உலகம் பிடிபடல் |
| வால்கட்டுதல் | - | முகமன் கூறிக்கிளப்பி விடுதல் |
| வால்பிடித்தல் | - | சலுகைபெறும் எண்ணத்துடன் பின்னால் திரிதல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| வால் கட்டுதல் | - | வாயில் மண் போடுதல் |
| வாலைக் கீழே போடுதல் | - | பணிந்து போதல் |

## 15. தோள் பற்றிய மரபுத் தொடர்

| | | |
|---|---|---|
| தோளிலிருந்து செவி கடித்தல் | - | ஆதரிப்பவரை வஞ்சித்தல் |
| தோள் கொடுத்தல் | - | துணை செய்தல் |
| தோள் மாற்றுதல் | - | பிறர் சுமையைத் தான் சுமத்தல் |

## 16. ஏனைய மரபுத்தொடர்கள்

| | | |
|---|---|---|
| ஆட்கொள்ளுதல் | - | அடிமையாகக் கொள்ளுதல் |
| குடிமுழுகிப் போதல் | - | முற்றும் அழிதல். |
| துறைபோதல் | - | ஐயந்திரிபறக் கற்றல் |
| தொழுகள்வன் | - | ஏமாற்றுக்காரன் |
| முதலைக்கண்ணீர் | - | பொய் இரக்கம் |
| அவசரக்குடுக்கை | - | பதற்றக்காரன் |
| ஆழம்பார்த்தல் | - | ஒருவனறிவு முதலியவற்றை ஆராய்தல். |
| இலைமறைகாய் | - | மறைபொருள் |
| உப்பில்லாப் பேச்சு | - | பயனற்ற உரையாடல் |
| எடாதவெடுப்பு | - | தகாத செயல் |
| ஒற்றைகாலில் நிற்றல் | - | விடாப்பிடியாய் நிற்றல் |
| கங்கணம் கட்டுதல் | - | செயலை முடிக்க முனைந்து நிற்றல். |
| கசகரணம் போடுதல் | - | பெருமுயற்சி செய்தல் |
| கல்லில் நாருரித்தல் | - | இல்லாத பொருளைப் பெறமுயலுதல். |
| சீட்டுக் கொடுத்தல் | - | வேலையினின்றும் விலக்கல் |
| தூண்டில் போடுதல் | - | தன்வயப்படுத்தல் |
| நட்டாற்றில் விடுதல் | - | ஆபத்திற் கைவிடுதல் |
| அரை கூவல் | - | போருக்கு அழைத்தல் |
| அரை மனிதன் | - | மதிப்பில்லாதவன் |
| ஆறப்போடுதல் | - | காலம் தாழ்த்துதல் |
| இடித்துரைத்தல் | - | வற்புறுத்திக் கூறல் |
| இனிப்புக் காட்டுதல் | - | ஆசை உண்டாக்குதல். |
| இடங்கொடுத்தல் | - | கண்டிப்பின்றி நடத்தல். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| உருக்குலைதல் | - | உடல் மெலிதல் |
| உச்சி குளிர்தல் | - | மிக மகிழ்தல் |
| உலை வைத்தல் | - | அழிவு வருவித்தல் |
| எடுத்தெறிதல் | - | அலட்சியம் பண்ணுதல் |
| ஒத்துப்பாடுதல் | - | ஆதரவு கொடுத்தல் |
| ஓடெடுத்தல் | - | பிச்சையெடுத்தல் |
| ஓடியாடிப் பார்த்தல் | - | முடிவு காணல் |
| கட்டியடித்தல் | - | வலிந்து சுமத்தல் |
| கறுவுறுத்தல் | - | முற்றாய் அழித்தல் |
| கதைக்கட்டுதல் | - | பொய் செய்தியைப் பரப்புதல் |
| கரைத்துக் குடித்தல் | - | முற்றாய்க் கற்றல் |
| கசக்கிப் பிழிதல் | - | வருத்தி வேலை வாங்குதல் |
| கடன் கழித்தல் | - | மனமின்றிச் செய்தல் |
| காலூன்றுதல் | - | நிலைத்திருத்தல் |
| காற்றாய்ப்பறத்தல் | - | விரைந்து செல்லுதல் |
| குட்டிச் சுவராகுதல் | - | கெட்டழிந்து போதல் |
| கை கண்ட மருந்து | - | சிறந்த வழி |
| கொள்ளி செருகுதல் | - | கேடு செய்தல் |
| சந்தியில் நிற்றல் | - | ஆதரவின்றி நிற்றல் |
| சிறகு கட்டிப்பறத்தல் | - | கற்பனை செய்தல் |
| சிட்டாய்ப் பறத்தல் | - | விரைந்தோடிப் போகுதல் |
| துண்டு விழுதல் | - | பற்றாக்குறை ஏற்படுதல் |
| பம்பரமாட்டுதல் | - | அலைக்கழித்தல் |
| பிஞ்சிற் பழுத்தல் | - | வயதுக்கு மீறிய செயற்பாடு |
| புண்படுத்தல் | - | மனம் நோகப் பேசுதல் |
| பூசி மெழுகுதல் | - | குற்றத்தை மறைத்தல் |
| பொடி வைத்தல் | - | தந்திரமாகப் பேசுதல் |
| திக்குமுக்காடுதல் | - | செய்வதறியாது துன்பப்படுதல் |
| வழிப்பார்த்தல் | - | உபாயந்தேடுதல் |
| விழலுக்கிறைத்த நீர் | - | முயற்சி வீணாகுதல் |
| வெட்டிப்பேசுதல் | - | மறுத்துப் பேசுதல் |
| மட்டந்தட்டுதல் | - | அவமரியாதை செய்தல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| மண்ணாக்குதல் | - | வீணாக்குதல் |
| மொட்டையடித்தல் | - | முழுவதும் அபகரித்தல் |
| நெருப்பெடுத்தல் | - | கோபித்தல் |
| அரைப்படிப்பு | - | நிரம்பாத கல்வி |
| அள்ளியிறைத்தல் | - | மிகைச்செலவு |
| அறுதியிடுதல் | - | முடிவு கட்டுதல் |
| இரண்டறக்கலத்தல் | - | முத்தியடைதல் |
| இருதலைக்கொல்லி | - | இருபக்கமும் துன்பம் |
| இளநாக்கடித்தல் | - | உடன்படாதது போல நடித்தல் |
| உதவாக்கரை | - | பயன்றற |
| எடுத்துச் சொல்லுதல் | - | சிறப்பித்துச் சொல்லுதல் |
| ஏட்டுச்சுரக்காய் | - | பயன்படாத கல்வியறிவு |
| ஒருகை பார்த்தல் | - | வெல்ல முயலுதல் |
| ஓட்டைக்கையன் | - | செலாவளி |
| கச்சைக் கட்டுதல் | - | செயலை முடிக்க முனைந்து நிற்றல் |
| கட்சி கட்டுதல் | - | முரணி நிற்றல் |
| கட்டியடித்தல் | - | தலையிற் சுமத்தல் |
| கண்காட்டி விடுதல் | - | சாடை காட்டுதல் |
| கண்மூடித்தனம் | - | அறியாமை |
| கரையேறுதல் | - | உய்வடைதல் |
| கிள்ளுக்கீரை | - | மிகவும் எளியது |
| கரையேறுதல் | - | உய்வடைதல் |
| தட்டிக் கழித்தல் | - | சாக்குப் போக்குச் சொல்லுதல் |
| தவிடுபொடியாக்கல் | - | சிதறிப்போதல் |
| நிறுத்துப் பார்த்தல் | - | மதிப்பிடுதல் |
| நீறுபூத்த நெருப்பு | - | சினத்தை வெளிக்காட்டாமை |
| நுனிப்புல் மேய்தல் | - | மேலெழுந்தவாரியாகப் படித்தல் |
| பசையடித்தல் | - | வசப்படுமாறு பேசுதல் |
| பஞ்சாய்ப்பறத்தல் | - | நிலைக்குலைந்திருத்தல் |
| படியளத்தல் | - | சீவனத்திற்கு வழிசெய்தல் |
| பதம் பார்த்தல் | - | பரிசீலித்தல் |
| புரட்டியடித்தல் | - | உண்மையை மறைத்தல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| புளிப்புத் தட்டுதல் | - | அலுப்புத்தட்டுதல் |
| மட்டையடித்தல் | - | வேலையின்றி அலைதல் |
| மல்லுக்கட்டுதல் | - | மோதிக்கொள்ளுதல் |
| வயிற்றிலடித்தல் | - | சீவனத்தைக் கொடுத்தல் |
| கண்ணோடுதல் | - | இரங்குதல் |
| குரங்குப்பிடி | - | பிடிவாதம் |
| கைதவறுதல் | - | தொலைந்து போதல் |
| கையடித்தல் | - | உறுதித் தருதல் |
| கையாலாகாதவன் | - | வேலை செய்யும் திறமையற்றவன் |
| கையைக் கடித்தல் | - | பொருள் நட்டமடைதல் |
| கொட்டமடித்தல் | - | குறும்பு செய்தல் |
| கோமாளிக் கூத்து | - | நகைப்பு விளைவிக்கும் செயல் |
| தட்டிக்கழித்தல் | - | சாக்குப் போக்குச் சொல்லல் |
| தட்டிக்கொடுத்தல் | - | உற்சாகப்படுத்தல் |
| தலைக்கீழாய் நிற்றல் | - | மிகச்செருக்குக் கொள்ளுதல் |
| விழலுக்கிறைத்தல் | - | வீண் பாடுபடுதல் |
| வாயில் மண் போடுதல் | - | கேடு விளைவித்தல் |
| கொடுக்குக் கட்டுதல் | - | குறித்த விடயத்தை முனைந்து நிற்றல் |
| சந்திக்கு இழுத்தல் | - | ஒருவரது குற்றங்குறைகளை பகிரங்கப்படுத்தி பழிப்பிற்கிடமாக்கல் |
| மனப்பால் குடித்தல் | - | கைகூடாதவற்றைப் பற்றி எண்ணி மகிழ்தல். |
| கொள்ளைக்கொள்ளுதல் | - | உள்ளத்தைப் பெரிதும் கவருதல் |
| தோப்புக்கரணம் போடுதல் | - | சொன்னபடியெல்லாம் செய்தல் |
| தாரைவார்த்தல் | - | தனக்குரியதை பிறருக்கு தானமாக கொடுத்தல் |
| எடுப்பார் கைப்பிள்ளை | - | யாவருக்கும் வசப்பட்டக் கூடியவர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| எழுத்தெண்ணிப்படித்தல் | - | ஒன்றும் விடாது படித்தல் |
| கண்ணெடுத்துப்பார்த்தல் | - | அருள் செய்தல் |
| தலைமேற்கொள்ளுதல் | - | பொறுப்பை ஏற்றுக்கொள்ளுதல் |
| திறந்து பேசுதல் | - | மனம்விட்டுச் சொல்லுதல் |
| நடுத்தெருவில் விடுதல் | - | ஆதரவின்றிக் கைவிடுதல் |

## B. பழமொழிகள்

- அச்சாணியில்லாத் தேர் முச்சாணும் ஓடாது. (முக்கியத்துவம்)
- அடிநாக்கில் நஞ்சும், நுனி நாக்கில் அமிர்தமும். (வஞ்சகம்)
- அடிமேல் அடிவைத்தால் அம்மியும் நகரும். (விடாமுயற்சி)
- அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. (ஒற்றுமையே பலம்)
- அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு. (அளவை மீறல்)
- அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம். (உத்தம நட்பு)
- ஆடமாட்டாதவள் அரங்கு பிழையென்றாளாம். (விடயப்புலமையின்றி வேறொன்றைக் குறை கூறாதே.)
- ஆழமறியாது காலை விடாதே. (ஆராய்ந்து செய்)
- ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை. (அற்பனுக்கு மதிப்பு)
- ஆனைக்கும் அடி சறுக்கும். (பெரியோரும் தவறலாம்.)
- ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம். (காலம் மாறி வரும்)
- இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை. (திருப்தியற்ற மனம்)
- இட்டுக்கெட்டார் எங்குமில்லை. (தருமம் செய்து கெட்டவர்கள் இல்லை)
- இளங்கன்று பயமறியாது. (வாலிபத்துணிவு)
- இளமையிற் கல்வி சிலையில் எழுத்து. (இளமையிற் கற்றலின் பயன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. பிரதேசக் கிளைமொழிகளும், சமூகக் கிளைமொழிகளும்

## A. பிரதேசக் கிளைமொழி

### வடக்குப் பிரதேசக் கிளைமொழி

| பிரதேச வழக்கு | | | பொது வழக்கு |
|---|---|---|---|
| 01. | வித்துப்போட்டான் | - | விற்றுப்போட்டான் |
| 02. | அடிப்படுத்தல் | - | வெற்றிகொள்ளல் |
| 03. | மாத்து | - | மாற்று |
| 04. | காத்து | - | காற்று |
| 05. | முத்தம் | - | முற்றம் |
| 06. | குத்தம் | - | குற்றம் |
| 07. | சோத்துப்பானை | - | சோற்றுப்பானை |
| 08. | வெத்திலை | - | வெற்றிலை |
| 09. | பெத்தவள் | - | பெற்றவள் |
| 10. | கோவம் | - | கோபம் |
| 11. | பாபம் | - | பாவம் |
| 12. | உசிர் | - | உயிர் |
| 13. | மசிர் | - | மயிர் |
| 14. | வகிறு | - | வயிறு |

### கிழக்குக் கிளைமொழி

| | | | |
|---|---|---|---|
| 01. | வாறாங்க | - | வருகிறார் |
| 02. | செய்வாங்க | - | செய்வார்கள் |
| 03. | போவாங்க | - | போவார்கள் |
| 04. | மறுகா | - | பிறகு, பின்பு |
| 05. | கிறுகி | - | திரும்பி |
| 06. | முல்லைக்காரன் | - | வயலைக்குத்தகைக்கு எடுத்துச் செல்பவன். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. வண்ணக்கர் - கோயிற்பரிபாலகர்

08. சாமத்திய வீடு - சடங்குவீடு

09. பந்தற்கால் - திருமணத்தையிட்டு நடப்படும் முள்முருங்கை மரம்.

10. அடுக்களை - சமையலறை

**தெற்குக் கிளைமொழி**

01. உறுலோசு - கடிகாரம்

02. சல்லி - பணம்

03. ஆப்ப - அப்பம்

04. இடியாப்ப - இடியாப்பம்

05. புட்டுவம் - கதிரை

06. பள்ளி - பாடசாலை

07. கறி - இறைச்சி

08. கந்தூரி - சமய சார்பான விசேட தினங்களில் அன்னதானம் வழங்கும் வைபவம்

09. மீலாத் - பிறந்த நாள்விழா

10. மத்ராஸா - இஸ்லாமிய அறநெறி பாடசாலை

11. கிதாப் - புத்தகம்

12. ஷஹீப் - இஸ்லாத்திற்காகப் போரிட்டு வீரமரணமடைதல்

13. றிஸ்க் - உணவு

**மலையகக் கிளைமொழி**

01. பொழப்பு - பிழைப்பு

02. பொணம் - பிணம்

03. புள்ளே - பிள்ளை

04. ஒரல் - உரல்

05. எலை - இலை

06. அங்கிட்டு - அங்கே

07. இங்கிட்டு - இங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 08. | எங்கிட்டே | - | என்னிடம் |
| 09. | அம்புட்டு | - | அவ்வளவு |
| 10. | அப்புறம் | - | அதற்குபின்பு |

## B. சமூகக் கிளைமொழிகள்

**விவசாயச் சமூகம்**

| | | | |
|---|---|---|---|
| 01. | நடையன் | - | சூடுமிதிக்கும் எருதுகள் |
| 02. | உப்பட்டி | - | அறுவடை செய்யப்பட்ட அருவக் கூறுகள் |
| 03. | குல்லம் | - | சுளகு |
| 04. | களக்கட்டை | - | சூடுமிதித்தலின் போது எருதுகள் இணைக்கப்படும் நடுதடி |
| 05. | கேட்டி | - | எருதுகளை விரட்டும் சிறுதடி |
| 06. | பொலிக்கொடி | - | வைக்கோல் |
| 07. | கோல் | - | சாணம் |
| 08. | நாட்டான் | - | மேற்புறம் அகன்றும், கீழ்ப்புறம் ஒடுங்கியுமுள்ள மண்வெட்டி |
| 09. | பிக்கான் | - | சற்சதுரமாகவோ நீள்சதுரமாகவோ அமைந்துள்ள மண்வெட்டி |
| 10. | கொத்துகள் | - | ஆழமாக மண்ணைக் கிளறுதல். |
| 11. | கட்டை பிடுங்குதல் | - | மரம், செடி, கொடிகளிலுள்ள நிலத்தைக் கொத்தி பண்படுத்தல். |

**மீனவச் சமூகம்**

| | | | |
|---|---|---|---|
| 01. | கட்டு மரம் | - | சிறுதோணி |
| 02. | கரைவலை | - | கரையோரங்களிற் பயன்படுத்தப் படும் வலை |
| 03. | தென்மீன்கூடு | - | தென்னை ஈர்க்கினாற் செய்யப்படும் மீன் பிடிப்பதற்கான கூடு |
| 04. | எறிவலை | - | வலைவீசி மீன்பிடித்தல், இதனை வீச்சுவலை எனவும் கூறுவர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 05. மண்டா | - | மீன்குத்தும் தடி |
| 06. அட்டாளை | - | 3 அல்லது 4 அடி உயரமாக அமைக்கப்படும் மேசை வடிவில் அமைந்த பரண் |
| 07. அம்மாறு | - | கொந்தளிப்பு |
| 08. கொண்டல் | - | கிழக்குத்திசையிலிருந்து வீசும் காற்று |
| 09. செக்கல் | - | இருள் சூழும் மாலை நேரம் |
| 10. கச்சான் | - | மேற்குத் திசையிலிருந்து வீசும் காற்று. |
| 11. வெள்ளிடி | - | துக்க சம்பவம் |
| 12. ஆலாப்பறத்தல் | - | அவசரப்படுதல் |
| 13. செட்டுப்பிடிச்சவன் | - | ஆணவமுள்ளவன் |
| 14. ஆத்துப்பறக்க | - | மிகவும் விரைவாக |
| 15. அணியம் | - | மரக்கலத்தில் துடுப்பு வலிப்பவர் இருக்கும் இடம் |

## வழுக்களும் திருத்தங்களும்

| பிழை | | திருத்தம் | பிழை | | திருத்தம் |
|---|---|---|---|---|---|
| ♦ வேர்வை | - | வியர்வை | ♦ உசிர் | - | உயிர் |
| ♦ கோர்வை | - | கோவை | ♦ வகிறு | - | வயிறு |
| ♦ சேதி | - | செய்தி | ♦ வேணும் | - | வேண்டும் |
| ♦ உடமை | - | உடைமை | ♦ பிடவை | - | பிடைவை |
| ♦ அப்ப | - | அப்பொழுது | ♦ இப்ப | - | இப்பொழுது |
| ♦ சிவர் | - | சுவர் | ♦ வாறார் | - | வருகிறார் |
| ♦ கோடரி | - | கோடரி | ♦ விதரம் | - | விரதம் |
| ♦ சிலது | - | சில | ♦ சிகப்பு | - | சிவப்பு |
| ♦ புத்து | - | புற்று | ♦ கடசி | - | கடைசி |
| ♦ ஊந்து | - | ஊர்ந்து | ♦ நிலமை | - | நிலைமை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ♦ புட்டு - பிட்டு
- ♦ ஈக்கு - ஈர்க்கு
- ♦ முளகாய் - மிளகாய்
- ♦ வாளைப்பழம் - வாழைப்பழம்
- ♦ வெத்திலை - வெற்றிலை
- ♦ மாதாளை - மாதுளை
- ♦ பொம்பிளை - பெண்பிள்ளை
- ♦ புண்ணாக்கு - பிண்ணாக்கு
- ♦ தாவாரம் - தாழ்வாரம்
- ♦ கருவேப்பிலை - கறிவேப்பிலை
- ♦ வித்தபணம் - விற்றப்பணம்
- ♦ போயிலை - புகையிலை
- ♦ அதுகள் - அவைகள்
- ♦ அதர்க்கு - அதற்கு
- ♦ முயர்ச்சி - முயற்சி
- ♦ பயிர்ச்சி - பயிற்சி
- ♦ பன்ரண்டு - பன்னிரண்டு
- ♦ துப்பரவு - துப்புரவு
- ♦ சக்கரை - சர்க்கரை
- ♦ பாற்ச்சோறு - பாற்சோறு
- ♦ தீபாளி - தீபாவளி
- ♦ மீட்ச்சி - மீட்சி
- ♦ தாட்சி - தாழ்ச்சி
- ♦ செய்நன்றி - செய்ந்நன்றி
- ♦ அடமழை - அடைமழை
- ♦ அங்கை - அங்கு, அங்கே
- ♦ ஈய்ந்தான் - ஈந்தான்
- ♦ உத்திரவு - உத்தரவு
- ♦ எகனை - எதுகை
- ♦ எண்ணை - எண்ணெய்
- ♦ பெரிசு - பெரிது
- ♦ தீவட்டி - தீவர்த்தி
- ♦ சுறுட்டு - சுருட்டு
- ♦ பிலாப்பழம் - பலாப்பழம்
- ♦ அண்டைக்கு - அன்றைக்கு
- ♦ மம்பெட்டி - மண்வெட்டி
- ♦ தண்ணி - தண்ணீர்
- ♦ திருவுதல் - துருவுதல்
- ♦ கதியால் - கதிகால்
- ♦ பதிஞ்சது - பதிந்தது
- ♦ தவக்கை - தவளை
- ♦ அவன்கள் - அவர்கள்
- ♦ ஆத்தங்கரை - ஆற்றங்கரை
- ♦ உயற்சி - உயர்ச்சி
- ♦ தேற்சி - தேர்ச்சி
- ♦ சமயல் - சமையல்
- ♦ சமையம் - சமயம்
- ♦ பேத்தி - பேர்த்தி
- ♦ தேள்வை - தேவை
- ♦ வெய்யில் - வெயில்
- ♦ மாட்ச்சி - மாட்சி
- ♦ இகழ்சி - இகழ்ச்சி
- ♦ வீட்சி - வீழ்ச்சி
- ♦ வெண்காயம் - வெங்காயம்
- ♦ அடமானம் - அடைமானம்
- ♦ அருவாள் - அரிவாள்
- ♦ உடமை - உடைமை
- ♦ ஊறணி, ஊரணி - ஊருணி
- ♦ எங்கை - எங்கு, எங்கே
- ♦ எழவு - இழவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ♦ ஏப்பை | - | அகப்பை | ♦ ஒட்டறை | - | ஒட்டடை |
| ♦ ஒண்டியாய் | - | ஒன்றியாய் | ♦ ஒத்தனம் | - | ஒற்றடம் |
| ♦ ஒருக்கால் | - | ஒருகால் | ♦ ஒருவள் | - | ஒருத்தி |
| ♦ கண்ணாளம் | - | கலியாணம் | ♦ கத்திரி | - | கத்தரி |
| ♦ கதியால் | - | கதிகால் | ♦ கம்பிளி | - | கம்பளி |
| ♦ காச்சல் | - | காய்ச்சல் | ♦ காஷி | - | காட்சி |
| ♦ கார்க்கும் | - | காக்கும் | ♦ கிணத்தடி | - | கிணற்றடி |
| ♦ கிராணம் | - | கிரகணம் | ♦ கினவு | - | கனவு |
| ♦ குண்டுமணி | - | குன்றிமணி | ♦ கைமாத்து | - | கைம்மாற்று |
| ♦ சந்தணம் | - | சந்தனம் | ♦ சம்மந்தம் | - | சம்பந்தம் |
| ♦ சித்தரித்தல் | - | சித்திரித்தல் | ♦ சிலது | - | சில |
| ♦ சிலவு | - | செலவு | ♦ சீக்காய் | - | சிகைக்காய் |
| ♦ பயத்தங்காய் | - | பயிற்றங்காய் | ♦ பலது | - | பல |
| ♦ முன்னூறு | - | முந்நூறு | ♦ வெண்டி | - | வெண்டை |
| ♦ பாவக்காய் | - | பாகற்காய் | ♦ புஞ்சை | - | புன்செய் |
| ♦ புடலங்காய் | - | புடோலங்காய் | ♦ பூசனி | - | பூசணி |
| ♦ பொக்குள் | - | கொப்பூழ் | ♦ பொண்ணு | - | பெண் |
| ♦ சுடுதண்ணி | - | வெந்நீர், சுடுநீர் | ♦ சுதந்தரம் | - | சுதந்திரம் |
| ♦ சுற்றவாளி | - | சுத்தவாளி | ♦ சேதி | - | செய்தி |
| ♦ சொற்பணம் | - | சொப்பனம் | ♦ தலகணி | - | தலையணை |
| ♦ தேனீர் | - | தேநீர் | ♦ நஞ்சை | - | நன்செய் |
| ♦ நாகரீகம் | - | நாகரிகம் | ♦ நாத்தம் | - | நாற்றம் |
| ♦ நாப்பது | - | நாற்பது | ♦ நிட்சயம் | - | நிச்சயம் |
| ♦ நிலமை | - | நிலைமை | ♦ நேத்து | - | நேற்று |
| ♦ திரேகம் | - | தேகம் | ♦ தீவட்டி | - | தீவர்த்தி |
| ♦ நோம்பு | - | நோன்பு | ♦ பச்சைத்தண்ணி | - | தண்ணீர் |

| | | |
|---|---|---|
| ♦ அருகாமை | - | அருகு, அருண்மை |
| ♦ அண்டைக்கு | - | அன்றைக்கு, அன்று |
| ♦ அதுகள் | - | அவை, அவைகள் |
| ♦ அப்ப, அப்போ | - | அப்போது, அப்பொழுது |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அரணாக்கயிறு - அரைஞான்
- அறுணாக்கொடி - அரைஞான் கயிறு
- அடகு வைத்தல் - அடைவு வைத்தல்
- போற்தேங்காய் - போர்த்தேங்காய்
- போற்தேங்காய் - போர்த்தேங்காய்
- அடமானம் - அடைமானம்
- அருவாமனை - அரிவாள்மனை
- அவங்கள், அவங்க - அவர்கள்
- அறுதலி - அறுதாலி (தாலி அறுத்தவள், கைம்பெண்)
- ஆக்கள் - ஆட்கள், ஆள்கள்
- ஆப்பிட்டுக்கிட்டான் - அகப்பட்டுக்கொண்டான்
- ஆம்பிளைப்பிள்ளை - ஆண்பிள்ளை
- ஆராட்சி, ஆராச்சி - ஆராய்ச்சி
- இஞ்சை, இங்கை - இங்கு, இங்கே
- இடது பக்கம் - இடப்பக்கம்
- இப்ப, இப்போ - இப்போது, இப்பொழுது
- இளனி - இளநீர் (தெங்கின் இளங்குரும்பை)
- இன்னிக்கு, இண்டைக்கு - இன்று, இன்றைக்கு
- என்னமோ, என்னம்போ - என்னவோ
- ஈக்கு, ஈக்கில் - ஈர்க்கு, ஈர்க்கில்
- சுகயினம் - சுகவினம்
- தவக்கை, தவக்களை - தவளை
- திருவலை - துரவலகு, துருவுபலகை
- தேங்காய் திருவுதல் - தேங்காய் துருவுதல்
- பன்ரெண்டு, பனிரெண்டு - பன்னிரண்டு
- பொம்பினாட்டி - பெண்பிள்ளை
- மண்ணெண்ணை - மண்ணெண்ணெய்
- முழிக்கிறான் - விழிக்கிறான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. தொடர்மொழிக்கு ஒரு மொழி

நீண்ட பல தொடரால் உணர்த்தும் பொருளை ஒரு சொற் பிரயோகித்து உணர்த்துவது மொழி நடைக்கு ஆற்றலும் வனப்பும் அளிக்கும். அன்றியும், அத்தகைய சொற்களின் அறிவு பொருட்சுருக்கம் எழுதும்போது மிகுந்த பயனளிக்கும்.

- அகராதி - சொற்களை அகரவரிசைப்படி குறிப்பிட்டு அவற்றின் பொருளைக் கூறும் நூல்.
- அகாலமரணம் - வயோதிபம் அடைந்து இறக்காமல் எதிர்பாராத சந்தர்ப்பத்தில் இடையிலே மரணம் சம்பவித்தல்.
- அங்கதம் - வெளிப்படையான பொருளில் புகழ்ந்தும், மறைபொருளில் இகழ்ந்தும் கூறுதல்.
- அரங்கேற்றம் - அறிஞர் பலர் கூடியுள்ள சபையில் நடுவே புதிதாக ஆக்கப்பட்ட நூலையோ அல்லது ஒரு கலை நிகழ்வை படித்தோ அல்லது செய்து காட்டியோ அச்சபையினரை ஏற்றுக் கொள்ளச் செய்தல்.
- அஞ்ஞாதவாசம் - பிறர் தம்மை இன்னார் என்று அறியாதவாறு மாறுவேடம் பூண்டு மக்கள் மத்தியில் வசித்தல்.
- அட்டாவதானி - ஒரே சமயத்தில் எட்டு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தவன்.
- அணிந்துரை - ஒரு நூலுக்கு நூலாசிரியர் தவிர்ந்த பிறர் வழங்கும் புகழுரை.
- அந்தப்புரம் - அரண்மனையில் மகளிர் தங்குவதற்காக அமைக்கப்பட்ட தனி இடம்.
- அல்லங்காடி - மாலை அல்லது இரவில் கூடும் சந்தை.
- அழைப்பாணை - குறித்த ஒரு நாளில் நீதிமன்றுக்கு சமூகம் தரும்படி நீதிபதியால் விடுவிக்கப்படும் அதிகார பூர்வமான கட்டளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அசகாயசூரன் - யார் துணையுமின்றித் தானே தனி நின்று பகைவரை வெல்லும் திறன் படைத்தோன்.
- அநாதவர் - தாய் தந்தையரை இழந்தோர்.
- அவிசு (அவி) - வேள்வியிலே தேவர்களுக்குச் சமர்ப்பிக்கும் உணவு உப்பின்றிச் சமைத்த பச்சையரிசிச் சாதம்
- அறம்பாடுதல் - பிறருக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியனவான சொற்களையும் சொற்றொடர்களையும் சேர்த்துக் கவிபாடல்
- ஆவணம் (உறுதி) - உரிமை கொண்டாடுவதற்குச் சான்றாக எழுத்துருவில் அமைந்த பத்திரம்
- ஆச்சிரமம் - துறவிகள் வசிக்கும் இடம்.
- ஆத்திகன் - கடவுள் இருக்கின்றார் என நம்புபவன்.
- ஆதனம் - ஒருவருக்குரிய நிலம் முதலிய சொத்துக்கள்.
- ஆதுலர்சாலை - வறியவர்க்கும், அங்கவீனர்களுக்கும், முதியோர்களுக்கும் உண்டியும், உறையுளும் அளித்து ஆதரிக்கும் இடம்.
- ஆவணம் - நிலத்தின் உரிமை கொண்டாடுவதற்குச் சான்றாக எழுத்துருவில் அமைந்த உறுதி.
- இடக்கரடக்கல் - சபையில் சொல்லத்தகாத சொல்லை மறைத்து வேறு வகையில் சொல்லுதல்.
- இராக்கதம் - பெண்ணும் சுற்றமும் உடன்படாமல் வலிந்து கொள்ளும் மணம்.
- ஈமக்கிரியை - ஒருவர் இறந்ததன் பின்னர் செய்யப்படும் சமய சம்பந்தமான இறுதிக்கிரியைகள்
- உலோகாயுதம் - உலகமும் உலக இன்பங்களும் மாத்திரமே மெய்யென்றும் கடவுளோ மறுமையோ இல்லையென்றும் வாதிப்பவர்.
- உப்பரிகை - செல்வர் வீடுகளில் மகளிர் முதலியோர் ஓய்வு நேரங்களில் கூடியிருந்து பொழுது போக்குவதற்றகாக அமைக்கப்பட்ட மேல் மாடம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உயர்வு நவிற்சி - ஒரு பொருளைப்பற்றி கேட்போர் மகிழுமாறு உயர்த்திக் கூறுதல்.
- உரைகல் - பொன்னை உரைத்து அதன் உபயோகப்படும் ஒரு வகைக் கல்.
- உவமானம் - ஒரு பொருளுக்கு ஒப்பாக எடுத்துச் சொல்லப்படும் மற்றொரு பொருள்
- ஊதாரி - கண்மூடித்தனமாகப் பணத்தை வீணே செலவு செய்பவன்.
- எதுகை - அடிதோறும் செய்யுட் சீர்களின் அல்லது வாக்கியத்தில் சொற்களின் இரண்டாவது எழுத்து ஒன்றிவரத் தொகுப்பது.
- எய்ப்பில்வைப்பு - முதுமைக்காலத்தேவைகளுக்காகச் சேமித்து வைக்கப்படும் பொருள்.
- ஏகபோகம் - ஒருவர் முழுப்பொருளையும் தானே தனித்து அனுபவித்தல்.
- ஏற்றப்பாட்டு - நீர் இறைக்கும் போது பாடப்படும் பாட்டு
- ஐம்பூதம் - நிலம், நீர், தீ, வளி, வான் முதலியன.
- ஐம்பொறி - மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன.
- ஐம்புலன் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்து உணர்வுகள்
- ஒப்பாரி - ஒருவர் இறந்த பின்னர் அவரின் உறவுப் பெண்கள் அவரை நினைத்துப் புலம்புதல்.
- ஒப்புரவு - உலக நடையறிந்து ஒழுகுதல்
- ஒட்டுண்ணி - மற்றோர் உயிர்ப்பொருளிலிருந்து தன் உணவை உறிஞ்சி வாழும் பிராணி அல்லது தாவரம்
- ஒற்றி - சொத்தை அனுவிக்கும் உரிமையுடன் கூடிய அடைமானம்
- ஓலக்கம் - அரசன் சபா மண்டபத்திலே அமைச்சர், படைத்தலைவர் அறிஞர் முதலிய பரிவாரத்தினர் சூல வீற்றிருக்கும் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஓம்படை - பேணிப்பாதுகாத்துத்தருமாறு ஒருவரை இன்னொருவரிடம் ஒப்படைத்தல்.
- கலைக்களஞ்சியம் - அறிவுத்துறைகள் பற்றிய விடயங்களைத் தொகுத்தும் வகுத்தும் அகரவரிசைப்படி திரட்டித் தருவது
- கண்டம் - நீர் சூழ்ந்த பெரிய நிலப்பரப்பு
- கட்டியம் - கடவுள், அரசர் என்போர் உலாவரும் போது அவரது விருதுப் பெயர் வெற்றி முதலியவற்றை எடுத்துக் கூறுதல்.
- களஞ்சியம் - பொருள் பண்டங்களைச் சேகரித்து வைக்குமிடம்
- கன்னிக்கவிதை - ஒருவர் முதன் முதலில் இயற்றிய கவிதை
- கன்னிவேட்டை - அரசகுமாரன் காட்டிற்குச் சென்று முதன் முதல் நிகழ்த்தும் வேட்டை
- காவற்காடு - கோட்டையைச் சேர்ந்துள்ள அகழிக்கு வெளியே அரணாய் அமைந்த காடு.
- காசேடு - காசு சம்பந்தமான கொடுக்கல் வாங்கல்களை பதிவதற்குரிய குறிப்புப் புத்தகம்
- கால்கோள் விழா - யாதாயினும் ஒன்றைத் தொடங்குவதற்காக எடுக்கப்படும் விழா
- குரவர் - அரசன், உபாத்தியாயன், தாய், தந்தை, தமையன் என்போர்.
- குருகுலவாசம் - மாணாக்கர் ஆசிரியருடன் தங்கியிருந்து கல்வி பயிலுதல்
- குழூஉக்குறி - ஒரு கூட்டத்தார் பிறர் அறியாதபடி ஒரு பொருளுக்குரிய பெயரை மறைத்து வேறோர் பெயரால் குறிப்பிடுவது
- குறிஞ்சி - மலையும் மலை சார்ந்த இடமும்
- கூலிப்படை - ஒரு பகுதியனருக்காக கூலி பெற்றுக்கொண்டு போரிடும் படை
- கூழைப்படை - போர்க்களத்தில் பலவகைப்பட்ட படைவகுப்புக்களின் இறுதியில் நிற்கும் படை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ♦ கைம்மருந்து - ஒருவர் வைத்தியனின்றித் தாமே தமது நோய்க்குச்செய்யும் மருந்து
- ♦ கையுறை - குரு. பெரியார் குழந்தைகள் ஆகியோரை காணச்செல்வோர் கொண்டுச்செல்லும் உபகாரப் பொருள்
- ♦ கையூட்டு - ஒரு கருமத்தை எளதில் நிறைவேற்றும் பொருட்டு அதனோடு தொடர்புடை யவர்களுக்கு வழங்கப்படும் இலஞ்சப்பணம்
- ♦ சகாப்தம் - நூறு ஆண்டுகள் கொண்ட காலப்பகுதி
- ♦ சதாவதனி - ஒரே நேரத்தில் நூறு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் உடையவன்
- ♦ சரணாகதி - வேறு துணையில்லாத விடத்து ஒருவரிடம் தன்னை ஒப்படைத்தல்.
- ♦ சங்கதி - இலட்சங்கோடி அளவுடைய நிதி
- ♦ சால்பு - அன்பு. நாண். ஒப்புரவு. கண்ணோட்டம். வாய்மை என்னும் குணங்களைச் சேர்ந்த பண்பு.
- ♦ சாசனவியல் - கல்லிலோ, செப்பேடுகளிலோ எழுதப்பட்ட எழுத்துக்களை வாசிக்கவும் அவற்றின் பொருளினை விளங்கிக் கொள்ளவும் உருவாகிய கலை
- ♦ சிரஞ்சீவி - நெடுங்காலம் வாழ்பவன்
- ♦ சிறுபட்டி - கட்டுக்கடங்காத இளைஞன்
- ♦ சுயம்பு - ஒருவராலும் படைக்கப்படாது தனே தோன்றியது
- ♦ சுயம்வரம் - கன்னியொருத்தி ஆடவர் கூடிய சபையில் தான் விரும்பிய ஆடவனைத் தெரிந்து மாலையிடுதல்
- ♦ செய்குன்று - அரசர்களுக்குரிய சோலையில் செயற்கையாக அமைக்கப்பட்ட சிறு குன்று
- ♦ சூழுரைத்தல் - யான் இதனை இயற்றாவிடின் இதனைச் செய்வோன் என்று ஆணையிட்டுரைத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- செங்கோன்மை - அரசனுடை நீதி தவறாத ஆட்சி
- செவிலி - வளர்ப்புத்தாய்
- தசாப்தம் - பத்து ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதி
- தசாவதானி - பத்து விடயங்களை ஒரே நேரத்தில் அவதானிக்கும் உள்ளவன்
- தட்சணை - ஒரு கிரியை முடிவில் அதனை நடாத்தி வைத்த குருவுக்கு கொடுக்கும் சன்மானம்
- தபுதாரன் - மனைவியை இழந்தவன்
- தபோவனம் - துறவறம் பூண்ட தூயோர் ஒதுங்கி வாழும் இடம்
- தலைமுறை - ஒருவர் பிறந்ததிலிருந்து இறக்கும் வரையுள்ள காலப்பகுதி
- தற்பவம் - ஆரியத்திற்குரிய சிறப்பெழுத்துக்கள் தமிழ் எழுத்துக்களாக விகாரப்பட்டு தமிழில் வழங்கப்படும் வடசொல்
- தற்சமம் - ஆரியத்திற்கும் தமிழுக்கும் பொது எழுத்துக்களாகி விகாரமின்றித் தமிழில் வழங்கும் வடசொல்
- தாசமார்க்கம் - இறைவன் ஆண்டானகவும், தன்னை அடியானாகவும் கருதி வழிப்படும் முறை
- திறைசேரி - அரசின் சம்பந்தமான விடயங்களை செயற்படுத்தப்படும் இடம்.
- தீர்க்கதரிசி - எதிர்கால நிகழ்ச்சிகளை எதிர்வு கூறும் ஆற்றல் படைத்தவன்.
- தூசிப்படை - போர்க்களத்தில் அணிவகுப்பில் முதல் வரிசையிலே நிற்கும் படை
- தேசாபிமானி - தான் பிறந்த நாட்டை நேசிப்பவன்
- தேடற்கட்டளை - ஓர் இடத்தில் ஆட்களையோ சாதனங்களையோ பிரசுரங்களையோ தேடுவதற்கு நீதிமன்றம் விடுவிக்கும் ஆணை
- தேவராளன் - வேண்டிய போது தெய்வம் ஏறப்படும் ஆடுவோன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ♦ பட்டிமன்றம் - அறிஞர் கூடி வாதிடுங் களம்
- ♦ பதுமநிதி - தாமரை உருவிலான திரவியமளிக்கும் பொருள் சங்கநிதியின் ஆயிரம் மடங்கு நிதி
- ♦ பஞ்சாங்கம் - திதி, வாரம், கரணம், யோகம், நட்சத்திரம் என்னும் ஐந்து உறுப்புக்களையும் பற்றிய விரங்களைத்தரும் நூல்
- ♦ பஞ்சமாபாதகம் - கொலை, களவு, பொய், குரு, நிந்தை எனும் பாவங்கள்
- ♦ பதிப்புரை - ஒரு நூலை அச்சிட்டு வெளியிடுவோர் அந்நூலை பற்றி எழுதும் உரை
- ♦ பரிவேடம் - சூரிய சந்திரர்களைச் சுற்றித் தோன்றும் ஒளிவட்டம்
- ♦ பவளவிழா - எழுபத்தைந்து ஆண்டுகள் முடிவடையும் போது எடுக்கப்படும் விழா
- ♦ பன்னசாலை - முனிவர் வசிப்பதற்கு இலை, தழை, கொண்டு வேயப்படும் குடிசை.
- ♦ பாஞ்சன்யம் - சலஞ்சலம் என்னும் பெயருடைய ஆயிரம் சங்குகளின் நடுவேயிருக்கும் உயர்சாதிச் சங்கு
- ♦ பால்வீதி - வானத்தின் ஒரு புறத்தின் வெண்ணிற நீட்சியாகத் தோன்றும் நட்சத்திரளின் ஒளி
- ♦ பிதிர்க்கடன் - இறந்தவர்களைக் குறித்துச் செய்யப்படும் சிரார்த்தம் முதலிய கடன்கள்.
- ♦ புருடார்த்தம் - அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருள்கள்
- ♦ புறஞ்சேரி - நகருக்கு வெளியே மக்கள் வாழும் இடம்
- ♦ புனைந்துரை - இல்லது இனியது நல்லதைப் புனைந்து கூறுதல்
- ♦ பொதுவியல் - பொதுமக்களுக்காக அரங்கிலே ஆடப்படும் கூத்துவகை
- ♦ பொன்விழா - ஐம்பதாவது ஆண்டு முடிவிலே எடுக்கும் விழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- போலி - ஒன்று போல இருக்கும் வேறொன்று
- பௌராணிகர் - புராணக்கதைகளை சுவைப்படப் பிரசங்கம் செய்வோன்.
- நடுகல் - போரில் வீரமரணம் எய்திய போர் வீரரின் பெயரையும் புகழையும் எழுதி நாட்டப்படும் கல்
- நாளங்காடி - காலையிலாயினும், பகலிலாயினும் கூடும் சந்தை.
- நிறைமொழி - அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப்பயன்களை பயந்தே விடும் அருண்மொழி
- நிகண்டு - சொற்களில் பொருளைச் செய்யுள் வடிவில் திரட்டித்தரும் நூல்
- நிந்தகம் - அரசரும் செல்வரும் தமக்குக் கீழே சேவை புரிவோருக்கு வழங்கும் நிலம்
- நிலுவை - செலுத்திய தொகையை நீக்கி இன்னும் செலுத்தப்படவேண்டிய தொகை
- நுண்முகம் - நூலாசிரியர் தமது நூலை பற்றி நூல் முகப்பில் எழுதும் உரை
- நூலகம் - வாசிப்பதற்காக நூல்களைத் தொகுத்து வைத்திருக்கும் இடம்
- நூதனசாலை - புராதனப் பொருட்களைச் சேகரித்து வைக்குமிடம்
- நெடுங்கணக்கு - தமிழிலுள்ள இருநூற்று நாற்பத்தேழு எழுத்துக்களும் ஒழுங்கு முறைப்படி அமையப்பெற்றது.
- நெய்தல் - கடலும் கடல் சார்ந்த இடமும்
- நெட்டிகன் - ஆயுள் முழுவதும் பிரமச்சாரியாக விரதங்காத்து வாழ்பவன்
- நொதுமலர் - பகையுமின்றி நட்புமின்றி நடுநிலையில் நிற்போர்
- மந்திரம் - நிறைமொழி மாந்தர் ஆணையில் கிளந்த மறைமொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ♦ மஞ்சரி - ஒரு தண்டிலே பல மலர்கள் சேர்ந்துள்ள பூங்கொத்து
- ♦ மணிவிழா - அறுபதாம் ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா
- ♦ மரபு - தொன்றுதொட்டு வழங்கிவரும் சிறப்பு
- ♦ மாராயம் - மன்னர்களால் செய்யப்படும் சிறப்பு
- ♦ மானியம் - அரசர்கள் தமக்குக் கீழ் வாழ்வோருக்குச் சன்மானமாக விடும் நிலம். அரசு மக்களின் நலன் கருதி வழங்கும் உதவித் தொகை.
- ♦ முற்றுகை - ஒரு நாட்டுக்கு வெளியேயிருந்து உணவு முதலிய எவ்வித பொருளும் கிடைக்காத வாறு தடுத்து அந்நாட்டை படை கொண்டு நாட்புறமும் சூழ்ந்து நிற்றல்.
- ♦ மெய்க்கீர்த்தி - கல்லிலேனும் செப்பேட்டிலேனும் பொறிக்கப்படும் ஒருவருடைய புகழ்.
- ♦ மெய்ப்பாடு - மனதில் நிகழும் நகைப்பு முதலான எட்டு வகைச் சுவைகளையும் புறத்துள்ளாருக்கும் புலப்படுமாறு தோற்றுவித்தல்.
- ♦ மோனை - செய்யுட் சீர்களின் முதலெழுத்து ஒன்றிவர அமைப்பது.
- ♦ வடக்கிருத்தல் - உயிர் துறக்கும் துணிவுடன் வடதிசை நோக்கி உண்ணாதிருத்தல்
- ♦ வஞ்சிப்போர் - மண்ணாசை கொண்டு ஒரு மன்னன் மற்றொரு மன்னன் மீது தொடுக்கும் போர்
- ♦ விகடகவி - நகையும் பரிகாசமும் சேர்ந்துவர கவிபுனையும் ஆற்றல் படைத்தவன்.
- ♦ வெள்ளிவிழா - இருபத்தைந்தாவது ஆண்டு இறுதியில் எடுக்கப்படும் விழா
- ♦ வெள்ளோட்டம் - புதிதாகச் செய்யப்பட்ட கப்பல்
- ♦ ஜெயந்தி விழா - வருடம் தோறும் ஒருவர் பிறந்த நாளன்று எடுக்கப்படும் விழா போன்றவற்றை முதல் முதலில் செலுத்திப் பார்த்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. இளமைப்பெயர், சினைப்பெயர், பிற மரபுப் பெயர்

## A. இளமைப்பெயர்

| | | |
|---|---|---|
| ♦ நாய் | - | குட்டி, குருளை, பறழ் |
| ♦ பூனை | - | குட்டி |
| ♦ மான் | - | கன்று, குட்டி |
| ♦ முயல் | - | குட்டி, பிள்ளை |
| ♦ பன்றி | - | குட்டி, பறழ் |
| ♦ புலி | - | குட்டி, குருளை |
| ♦ மாடு | - | கன்று |
| ♦ யானை | - | கன்று, குட்டி, போதகம் |
| ♦ பாம்பு | - | குட்டி |
| ♦ மீன் | - | குஞ்சு |
| ♦ பனை | - | வடலி |
| ♦ வாழை | - | கன்று, குட்டி |
| ♦ நெல் | - | நாற்று |
| ♦ மக்கள் | - | குழவி, குழந்தை பிள்ளை, மகவு, பாப்பா |

### கூட்டத்தைக் குறிக்கும் சொற்கள்

- ♦ அறிஞர் அவை
- ♦ ஆட்டு மந்தை
- ♦ ஆநிரை, ஆனிரை (ஆ, ஆன்)
- ♦ உடுத்திரள்
- ♦ உயிர்த்தொகுதி
- ♦ ஊர்மக்கள் மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எண்பேர் ஆயம்
- ஐம்பெருங்குழு
- கள்வர் கூட்டம்
- குண்டர் கும்பல்
- சனக்கூட்டம், திரள்
- தோழியர் ஆயம்

## B. சினைப் பெயர்

- **இலைக்குரிய மரபுப் பெயர்**

இலை - மா, பலா, வாழை முதலியன

ஓலை - தென்னை, பனை, கமுகு, ஈஞ்சு, தாழை முதலியன

தாள் - நெல், புல்

- **பிஞ்சுக்குரிய மரபுப் பெயர்**

கச்சல் - வாழை இளம் பிஞ்சு

குரும்பை - தென்னை இளங்காய்

நுங்கு - பனையின் இளங்காய்

வடு - மாவின் இளம் பிஞ்சு

மூசு - பலாவின் பிஞ்சு

- **குலைக்குரிய மரபுப் பெயர்**

குலை - வாழை, முந்திரி, ஈஞ்சு முதலியவற்றின் காய்த்தொகுதி

கொத்து - மா, புளி முதலியவற்றின் காய்த்தொகுதி

கதிர் - நெல், சோளம் முதலிய பயிர்களின் மணித்தொகுதி.

தாறு - வாழைக்குலை

- **வித்துக்குரிய மரபுப் பெயர்**

கொட்டை - மா, பலா, புளி முதலியவற்றின் வித்து

மணி - நெல், சோளம் முதலியவற்றின் வித்து

முத்து - ஆமணக்கு முதலானவற்றின் வித்து

விதை - கத்தரி, மிளகாய் முதலியவற்றின் வித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **உள்ளீட்டுக்குரிய மரபுப் பெயர்**

| | | |
|---|---|---|
| அரிசி | - | நெல், கம்பு, வரகு, தினை முதலிய தானியங்களின் உள்ளீடு. |
| சதை | - | மா, வாழை முதலிய பழத்தின் உள்ளீடு |
| சுளை | - | பலா, தோடை முதலிய பழத்தின் உள்ளீடு |
| பருப்பு | - | அவரை, துவரை, பயறு முதலிய விதையின் உள்ளீடு. |

## C. பிற மரபுப் பெயர்கள்

- ஆட்டு மலம் - பிழுக்கை
- கழுதை மலம் - விட்டை
- பறவை மலம் - எச்சம்
- மாடு, எருமை ஆகியவற்றின் மலம் - சாணம்
- யானை, குதிரை, ஒட்டகம் முதலியவற்றின் மலம் - இலத்தி, இலண்டம்
- ஆடு மேய்ப்பவன் - இடையன்
- ஆ, (பசு) மேய்ப்பவன் - ஆயன், இடையன்
- குதிரை, யானை, தேர் செலுத்துபவன் - பாகன்
- கப்பல் செலுத்துபவன் - மீகாமன்

## பிராணிகளின் ஆண் : பெண் மரபுப் பெயர்

| பிராணி | ஆண் | பெண் |
|---|---|---|
| ♦ மாடு | எருது | பசு |
| ♦ ஆடு | கடா | மறி |
| ♦ நாய் | கடுவன் | பெட்டை |
| ♦ பூனை | கடுவன் | பெட்டை |
| ♦ கோழி | சேவல் | பேடு |
| ♦ குதிரை | மா | வடவை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ♦ யானை | களிறு | பிடி |
| ♦ குரங்கு | கடுவன் | மந்தி |
| ♦ அன்னம் | சேவல் | பெடை |

## பிராணிகளின் ஒலி மரபு

- ஆடு - கத்தும்
- பூனை - கத்தும்
- கிளி - பேசும்
- கோழி - கொக்கரிக்கும்
- நாய் - குரைக்கும்
- யானை - பிளிறும்
- புலி - உறுமும்
- கழுதை - கத்தும்
- குதிரை - கனைக்கும்
- காகம் - கரையும்
- குயில் - கூவும்
- மயில் - அகவும்
- அணில் - கீச்சிடும்
- பாம்பு - சீறும்
- வண்டு - இரையும்
- தவளை - கத்தும்
- பசு - கதறும்
- சேவல் - கூவும்
- நரி - ஊளையிடும்
- கரடி - கத்தும்
- சிங்கம் - கர்ச்சிக்கும்
- ஆந்தை - அலறும்
- பல்லி - சொல்லும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. கடிதம், அறிக்கை, சுருக்கம்

## A. கடிதம்

கடிதம் எழுதுதல் என்பது நமது வாழ்க்கையில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. எமது தேவை, நிலைமை, எண்ணம், விருப்பு வெறுப்பு முதலான பல்வேறு விடயங்களையும் தொலைவில் உள்ளோர்க்குத் தெரிவிக்க பயன்படுகிறது. கடிதங்களை பருமட்டாக மூன்று வகைப்படுத்தலாம்.

1. உறவுமுறைக் கடிதம்
2. தொழில் முறைக்கடிதம்
3. மின்னியல் கடிதம்

### 1. உறவுமுறைக் கடிதங்கள்

உறவு முறைக்கடிதங்கள் சுற்றத்தார் - நண்பர் முதலியோர் தமக்குள் எழுதிக்கொள்வதாகும். இது பலவகைப்படும். அவையாவன,

1. நட்புமுறை
2. நன்றி அறிவிப்பு
3. அனுதாபம்
4. அழைப்பிதழ்
5. வாழ்த்துக்கள்

#### நட்பாடற் கடிதம்

நட்பாடற் கடிதம் அல்லது நட்புமுறை கடிதம் நெருங்கிய நண்பர்கள், உறவினர்கள் தமக்குள் எழுதிக்கொள்ளும் கடிதங்கள் நட்பாடற் கடிதம் எனப்படும்.

#### பாராட்டுக் கடிதம் அல்லது நன்றியறிவிப்புக் கடிதம்

ஒருவர் செய்த உதவிக்கு நன்றி தெரிவிக்கும் முறையில் எழுதும் கடிதங்கள் நன்றியறிவிப்புக் கடிதம் எனப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அனுதாபக் கடிதம்**

அறிமுகமான ஒருவருக்கு நேர்ந்த யாதேனுமொரு துன்ப நிகழ்ச்சியிலே அவருக்கு ஆறுதல் கூறும் வகையில் எழுதுவது அனுதாபக்கடிதம் எனப்படும்.

**2. தொழில்முறைக் கடிதங்கள்**

வியாபார ரீதியான செயற்பாடுகளுக்கும், தொழில்ரீதியான கருமங்களை முறையாக நடத்துவதற்கும், இவ்வகையான கடிதங்கள் அவசியமாகின்றன. இன்று தொழில் முறையான கடிதங்கள் மட்டுமே பெருவழக்காக எழுதப்படுகின்றன.

**இக்கடிதங்களின் முக்கியத்துவம்**

1. இவ்வகைக் கடிதங்கள் ஆவணங்களாக இருக்கும்.
2. நிறுவன ரீதியான சட்ட ஒழுங்கைப் பேணுவதற்கு அவசியமானது.
3. ஒருவரின் தொழிற் பாதுகாப்பை இக்கடிதம் வழங்கும்.
4. கொடுக்கல், வாங்கல் செயற்பாடுகளுக்கு நம்பகத் தன்மையை இக்கடிதம் ஏற்படுத்தும்.
5. பொருட்களை வாங்கவும், விற்கவும், பெற்றுக்கொண்டதை உறுதி செய்யவும் அவசியமாகிறது.
6. நிறுவனத் தலைவர் ஏனையவர்களைத் தொடர்பு கொள்ளவும், பணியாளர்கள், வேலைகள் பற்றிய தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும் அவசியமானது.
7. கட்டளைகள், தகவல்களைப் பரிமாறவும், தகவல்களைப் பெறவும் அவசியமானது.
8. பல்வேறு தொழில் வாய்ப்புகளுக்கு விண்ணப்பிக்கவும் வங்கி, மின்சாரம், காப்புறுதி போன்ற அன்றாடக் கருமங்களை ஆற்றுவதற்கும் அவசியமானது.
9. பொருட்களை இரயிலின் ஊடாக கடல், விமானத் தபால் மார்க்கமாக அனுப்பவும், பெறவும் அவசியமானது.
10. முறையீடுகளைச் சரியாகவும், தெளிவாகவும் வழங்குவதற்கு அவசியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தொழில்முறைக் கடிதத்தின் அமைப்பு

..........................

.......................... 1

..........................

..................................................

.................................................. 2

..................................................

.................... 3

.................................................................................... 4

....................................................................................................................................................

.................................................................................................................................... 5

....................................................................................................................................................

....................................................................................................................................................

..................................................................

...................................................... 6

......................................................

...................................................... 7

..........................................

மேலுள்ள சட்டகத்தை அவதானியுங்கள். உறவுமுறைக் கடிதத்தினை விடத் தொழில்முறைக் கடிதத்தின் அமைப்பு வித்தியாசமானது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

1. முகவரி
2. உள்முகவரி
3. விளிப்பு
4. விடயத்தலைப்பு
5. செய்தி
6. முடிப்பு
7. ஒப்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| முகவரி (1) | - | எழுதுபவரின் பெயரும் முகவரியும் திகதியும் இதில் இடம்பெறும். |
| உள்முகவரி (2) | - | இது தொழில்முறைக் கடிதத்திற்கே சிறப்பாக உரியது. இவ்வுறுப்பிலே கடிதம் பெறுநரின் முழுப்பெயரும் முகவரியும் இடம்பெறும். |
| விளிப்பு (3) | - | இது பலவாறாக அமையலாம். கனம்/ மதிப்புக்குரிய/ ஐயா/ அம்மணி. |
| விடயத்தலைப்பு(4) | - | நீங்கள் எதற்காகக் கடிதம் எழுதுகிறீர்களோ அதன் தலைப்பு இடப்படல் வேண்டும். 'லீவு விண்ணப்பம்' 'மீள் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்வதற்காக' எனப் பலவாறு வரலாம். |
| செய்தி (5) | - | இது கடிதத்தின் உள்ளடக்கமாகும். சுருக்கமாகவும், எடுத்த விடயத்தைத் தெளிவாகவும், நேரடியாகவும் எடுத்துக் கூறல் வேண்டும். கற்பனை, வர்ணனை என்பவை தவிர்க்கப்பட வேண்டும். பந்தி அமைப்பு அவசியம். |
| முடிவு (6) | - | உண்மையுள்ள, இங்ஙனம் என அமைதல் வேண்டும். |
| ஒப்பம் (7) | - | சட்டப்படி அங்கீகரிக்கப்பட்ட பெயரையே ஒப்பமாக இடுதல் வேண்டும். ஒப்பத்துக்குக் கீழ் தங்களின் பெயரையும் சரியாக எழுதுதல் வேண்டும். பதவி முத்திரை இருப்பின் அதனை இடுதல் வேண்டும். |

## தொழில் முறைக்கடிதங்களின் வகைகள்

**செய்தித்தாள் கடிதங்கள்**

பொது மக்களின் சமூகப் பிரச்சினைகளையும், தனியார் துறை, அரசாங்கத் துறை நடவடிக்கைகளின் நிறைகுறைகளையும் பற்றிச் செய்தித் தாளில் பிரசுரிக்கவென எழுதும் கடிதங்கள்.

**கவனிக்க வேண்டியவைகள்**

1. கடிதம் சுருக்கமாக இருத்தல் வேண்டும்.
2. எடுத்துக்கொண்ட விடயத்தை ஆரம்பத்திலேயே கூறுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கருத்துத் தெரிவிக்கும் விடயத்தில் உமது நிலைப்பாட்டை விளக்குதல்.
4. கருத்துக்கான நியாயங்களை ஒழுங்காகக் கூறுதல் வேண்டும்.
5. வசைமொழி, கோபத்தொனியின்றி சமநிலையில் நின்று எழுதுதல் வேண்டும்.
6. கண்டனம் செய்வதோடு நில்லாது நல்லதைப் பாராட்டுவதிலும் அக்கறை காட்டுதல் வேண்டும்.

**விண்ணப்பக் கடிதம்**

ஒரு தேவையை நிறைவேற்றுவதற்கு, நிறுவனத்திற்குத் தனது சுயவிபரங்களை உள்ளடக்கி எழுதி அனுப்பப்படுவது விண்ணப்பக் கடிதம் எனப்படும்.

**முறையீட்டுக் கடிதம்**

அரச/ தனியார் நிறுவனங்களினால் இழைக்கப்படும் அநீதிகள், தவறுகள் போன்றவற்றிலிருந்து நிவாரணம் பெறுதற் பொருட்டுத் திணைக் களத் தலைவருக்கு அல்லது மேலதிகாரிகளுக்கு முறையீடு செய்வது முறையீட்டுக்கடிதம் எனப்படும்.

**தகவலறியும் கடிதம்**

வர்த்தக நிறுவனங்கள், பாடசாலைகள், திணைக்களங்கள் முதலிய வற்றிலிருந்து சில விபரங்களை நாம் அறிய விரும்பினால் அவற்றைக்கோரி சம்பந்தப்பட்ட நிறுவனத்தலைவருக்கு எழுதும் கடிதம், தகவலறியும் கடிதம் எனப்படும்.

**அனுப்பாணைக் கடிதம்**

மொத்த வர்த்தக நிறுவனங்களுக்கு, வியாபார நிறுவனங்களால் பொருட்கள் அனுப்பும்படி கோரி எழுதப்படும் கடிதம் அனுப்பாணைக் கடிதம் எனப்படும். இது உள்நாட்டு வெளிநாட்டு வியாபாரத்திலும் கையாளப் படுகின்றது.

**லீவுக் கடிதம்**

தான் கடமைபார்க்கும் நிறுவனம் அல்லது திணைக்களத்திற்கு சமூகமளிக்க முடியாமைக்கான காரணங்காட்டி லீவுகோரி அனுப்பும் கடிதம் லீவுக்கடிதம் எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## B. அறிக்கை

### அறிக்கை எழுதுதல்

ஒரு விடயம்/ நிகழ்வு பற்றிய பல அம்சங்களையும் ஒழுங்காக நிரைப் படுத்தி மேலதிகாரிக்கோ, சபையினருக்கோ சமர்ப்பிக்கும் பொருட்டுத் தெளிவாகவும், சுருக்கமாகவும் எழுதப்படுவது அறிக்கை எனப்படும்.

### அறிக்கை எழுதும் சந்தர்ப்பங்கள்

01. கூட்ட அறிக்கை - மன்றங்களில் வாசிக்கப்படும் கடந்த கூட்ட அறிக்கை.
02. பாடசாலை/ சனசமூக நிறுவனங்கள் - ஆண்டறிக்கை
03. செயற்றிட்டம், நிகழ்வு, நிகழ்ச்சி பற்றிச் சமர்ப்பிக்கப்படும் விசேஷ அறிக்கை.
04. பிரச்சினைகள்/ சூழ்நிலைகள் எதிர்பாராத சம்பவங்கள் பற்றி ஆராய்ந்து சமர்ப்பிக்கப்படும் அறிக்கை.
05. அரச திணைக்களங்கள்/ கூட்டுத்தாபனங்கள் போன்றவற்றின் கருமக்கூறுகள் பற்றித் திணைக்களத்தலைவருக்கு சமர்ப்பிக்கப் படும் முன்னேற்ற அறிக்கை.

### அறிக்கை எழுதுவதனால் ஏற்படும் நன்மைகள்

01. கடந்த நிகழ்ச்சிகளைத் தொடர்புபடுத்தலுக்காக அறியத் தருவதற்கு.
02. குறிப்பிட்ட ஆண்டொன்றில் குறித்த நிறுவனமொன்று பெற்ற வளர்ச்சியை மதிப்பிடுவதற்கு.
03. குறிப்பிட்ட ஆண்டொன்றில் குறித்த நிறுவனமொன்று நிலை நாட்டிய சாதனையைத் தெரியப்படுத்துவதற்கு.
04. செயற்றிட்டம் ஒன்று எவ்வாறு, எந்தளவுக்கு நிறைவேற்றப்பட்டது என்பதை அறிவதற்கு.
05. பிரச்சினைகள்/ சம்பவங்கள் பற்றிய காரணங்களை அறிவதற்கு.
06. தரவுகள் இனங்காண்பதற்கு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிக்கை எழுதும் படிமுறைகள்

01. தகவல் திரட்டுதல் - வாசித்தல் - உசாவுதல், செவிமடுத்தல், செவ்வி காணல், அவதானித்தல் போன்ற முறைகளில் தகவல் திரட்டலாம்.

(இச்சந்தர்ப்பங்களில் குறிப்பெடுத்தலை கட்டாயம் செய்தல் வேண்டும்.)

02. தகவல்களை நிரல்படுத்தல் - முக்கிய அம்சங்களைத் தேர்ந்தெடுத்தல்.

03. அவற்றை ஒழுங்குபடுத்தி மறுபரிசீலனை செய்தல்.

04. அறிக்கை எழுதும் நோக்கத்திற்கேற்ப அவற்றைப் பந்திபிரித்து வேண்டியவிடத்து உபதலைப்பிடல்.

05. சுருக்கமாக, ஆனால் தெளிவாக தர்க்கரீதியாக எழுதுதல்.

06. இறுதியில் வேண்டியவிடத்து தீர்வினைக்காட்டல்.

### மாதிரி அறிக்கை

உமது பாடசாலையில் நடைபெற்ற இலக்கியமன்ற நிகழ்வுகள் பற்றிய சென்ற கூட்ட அறிக்கை.

சட்டகம்

1. அறிமுகம்
2. இடம், காலம், நேரம்
3. தமிழ்த்தாய் வாழ்த்து
4. தலைவர் உரை
5. செயலாளர் அறிக்கை
6. பொருளாளர் அறிக்கை
7. பத்திரதிபர் அறிக்கை
8. நிகழ்ச்சிகள்
9. அதிதி உரை
10. சபையோர் கருத்துரை
11. நன்றியுரை
12. முடிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## C. சுருக்கம் எழுதுதல்

ஒரு விரிவான உரைப்பகுதியைப் பொருள் கெடாதவாறு வேண்டிய அளவுக்கு, சுருக்கி சொந்த மொழிநடையில் எழுதுவதே 'சுருக்கம் என்று சொல்லலாம்.

சுருங்கச்சொல்லி விளங்கவைத்தல் என்பது மொழிப்பிரயோகத்தின் சிறப்பான பண்புகளில் ஒன்று சுருக்கி எழுதுதல் ஒரு மொழி ஆற்றலாகும். மொழி கற்கும் மாணவர்கள் உரைநடைப்பகுதியொன்றை அதன் பொருள் குன்றாது சுருக்கி எழுதும் ஆற்றல் பெறுதல் அவசியமாகும்.

ஒரு பகுதியை எவ்வளவு வேண்டுமானாலும் சுருக்கலாம். ஆனால் அளவுக்கு அதிகமாகச் சுருக்கினால் மூலப்பகுதியின் பொருள்கெட்டு விடவும் கூடும். ஆதலால் பொதுவாக மூன்றிலொரு பங்கைச்சுருக்கி எழுது மாறே வேண்டப்படுவீர்கள்.

### சுருக்கம் எழுதும் படிமுறைகள்

சுருக்கி எழுதுவதற்கு வாசிக்கும் திறன், கிரகிக்கும் ஆற்றல், தெளிவான சிந்தனை, கருத்துக்களை தொகுக்கும் ஆற்றல் என்பன அவசியமான திறன்களாகும். சுருக்கி எழுதுவதற்குரிய சில படிமுறைகளை நாம் பின்பற்ற வேண்டும். அவையாவன,

01. குறிப்பிட்ட உரைநடைப்பகுதியை முதலில் தெளிவுபெற வாசித்தல், அதன் மையக்கருத்தை அறிதல், குறித்தல். (அதுவே தலைப்பாக வரும்.)

02. அப்பகுதியை மீண்டும் கருத்தூன்றி வாசித்தல், மையக்கருத்தின் துணைக்கருத்துக்களை அம்சங்களை அறிதல், குறிப்பெடுத்தல்.

03. முக்கியமான கருத்துக்களைத்தெரிவு செய்தல் அக்கருத்துக்களை தொடர்புபடுத்தி ஒழுங்குபடுத்தல்.

04. முக்கியமில்லாத கருத்துக்களையும், தேவையில்லாத சொற்றொடர் களையும் நீக்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தன் கூற்று வாக்கியங்களைப் பிறர்கூற்று வாக்கியங்களாக மாற்ற வேண்டும்.

உ-ம் : கண்ணன் 'எனது உடல்நிலை நன்றாக இல்லை அதனால் நான் கூட்டத்திற்கு வரமாட்டேன்' என்று கூறினான்.

சுருக்கம் - கண்ணன் தனது சுகவீனம் காரணமாக கூட்டத்திற்கு வரமறுத்தான்.

- சொற்றொடர்கள் வாக்கியங்களை பொருத்தமுறச் சுருக்கி, ஒரு சொல்லில், சொற்றொடரில் கையாளுதல்.

உ-ம் : நாம் என்ன பயன்களை அடைவதற்குக் கல்வி கற்கின்றோம்? கல்வி கற்பதன் விளைவு தான் என்ன?

சுருக்கம் - எமது கல்விப்பேறு யாது?

- தொடர்ச்சியான கருத்துள்ள பல வாக்கியங்களைத் தொகுத்து ஒரு வாக்கியமாக எழுதுதல்.

உ-ம் : திருவிழாக் காட்சியைக்காண பல பெண்கள் வந்திருந்தார்கள். அவர்கள் எல்லோரும் இளம் பெண்கள் அவர்கள் மிகவும் அழகாக இருந்தார்கள்.

சுருக்கம் - அழகிய இளம்பெண்கள் பலர் திருவிழாவிற்கு வந்தார்கள்.

- வர்ணனைகள், அணிகள் முதலானவற்றை நீக்கி எழுதுதல்.

உ-ம் : செங்கதிர்ச்செல்வன், வெண்கதிர் பரப்பி குண திசைக்கடலில் குளித்து எழுந்தான்.

சுருக்கம் - சூரியன் கிழக்கில் உதித்தான்.

- வினாவும், விடையுமாக வரும் சந்தர்ப்பங்களை ஒரே கூற்றாக எழுதுதல்.

உ-ம் : 'அச்செய்தியைக்கேட்ட இராவணன் என்ன செய்தான் தெரியுமா? கோபக்கனல் தெறிக்க அடர்ந்த அக்காட்டை நோக்கி உடனே செல்லலானான்.

சுருக்கம் - அச்செய்தியைக்கேட்ட இராவணன் கோபத்துடன் காட்டுக்குச் சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வேண்டிய விடத்துப்பல சொற்களால் குறிப்பதை ஒரு சொல்லால் குறித்தல்.

  **உ-ம்** : அரசன் முதலானோர் உலாவரும் போது அதனைப்பொதுமக்கள் அறியும் படி கூறுபவன்.

  **சுருக்கம்** - கட்டியக்காரன்

  **உ-ம்** : தாய், தந்தையர் முதலான உறவினர்கள் எவரும் இல்லாதவன்.

  **சுருக்கம்** : அநாதை

05. ஒழுங்குபடுத்திய கருத்துக்களை, சொந்த நடையில் சுருக்கமாகக் கூறுதல்.

06. சுருக்கம் முழுவதையும் தொடர்ச்சியாக ஒரே பந்தியாக எழுதுதல்.

07. எழுதிய சுருக்கத்தை வாசித்து, மூலக்கருத்துக்கள் உரியவாறு இடம்பெற்றுள்ளனவா என்பதை உறுதிப்படுத்தல், வேண்டிய விடத்து திருத்தியமைத்தல்.

08. தலைப்பிடல்.

09. குறியீடுகள் பயன்படுத்தல்/ மாதிரி சுருக்கம்/ சொற்களின் எண்ணிக்கை என்பன அடங்கியிருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. வாக்கிய வகைகள்

ஒரு கருத்தைப் பூரணமான முறையில் வெளியிடுவது வாக்கியமாகும். இதனை முற்றுத் தொடர்மொழி எனவும் கூறலாம்.

ஒருவருடைய எண்ணம், உணர்ச்சி, விருப்பு என்பவற்றை முழுமையாக புலப்படுத்துவதற்கு வாக்கியம் பயன்படுகிறது.

வாக்கியங்களை அதன் அமைப்பு அடிப்படையில்

- தனிவாக்கியம்
- தொடர்வாக்கியம்
- கலப்பு வாக்கியம்
- கூட்டு வாக்கியம்

என நான்கு வகையாக வகைப்படுத்தலாம்.

ஓர் எழுவாயின் முற்றுப்பெற்ற ஒரேயொரு கருத்தை உணர்த்துவது ***தனி வாக்கியம்*** எனப்படும்.

ஓர் எழுவாயின் பல செயல்களில் ஒரு செயல் மாத்திரம் முற்றுப் பயனிலையாக அமைய, ஏனையவை எச்சங்களாகத் தொடர்ந்து வருவதாக அமைகின்ற வாக்கியம் ***தொடர் வாக்கியம்*** எனப்படும்.

தலைமை வாக்கியத்தோடு ஒரு சார்பு வாக்கியமோ அல்லது பல சார்பு வாக்கியங்களோ இணைந்துவருவது ***கலப்பு வாக்கியம்*** எனப்படும்.

ஓர் எழுவாயும் பல பயனிலைகளும் அல்லது பல எழுவாய்களையும் பல பயனிலைகளையும் கொண்டு அமைகின்ற வாக்கியம் ***கூட்டு வாக்கியம்*** எனப்படும்.

வாக்கியம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கருத்தை வெளியிடுவதற்காகவே அமைக்கப்படுகின்றது. உணர்த்தப்படும் கருத்தின் அடிப்படையில் அல்லது எந்த நோக்கத்துக்காக வாக்கியம் அமைக்கப்பட்டது என்பதன் அடிப்படையில் வாக்கியங்களை வகைப்படுத்தலாம். பின்வரும் வாக்கியங்களை அவதானியுங்கள்.

1. விண்கலம் பூமியை வந்தடைந்தது.
2. இந்தப் பாதையில் என் நண்பனை எப்படிக் கண்டுபிடிக்கப் போகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அந்த அழகான மாளிகையைப் பார்.
4. எல்லோரும் ஒற்றுமையாக வாழ்க.
5. ஆகா, இந்த இயற்கைக் காட்சியின் அழகுதான் என்னே!

இவ் வாக்கியம் ஒரு தகவலைத் தெரிவிக்கிறது. செய்தியை அல்லது தகவலை அல்லது உண்மையைத் தெரிவிக்கும் வாக்கியம் ***கூற்று வாக்கியம்*** எனப்படுகிறது. இது ***செப்பு வாக்கியம்*** எனவும் அழைக்கப் படும்.

வதனி வரைந்த படம் அழகாக இருக்கின்றது. வாக்கியம் ஒன்றை அறியும் நோக்குடன் வினவுவதாக உள்ளது. இது ***வினா வாக்கியம்*** எனப்படுகிறது.

அந்த அழகான மாளிகையைப் பார். முன்னிலையில் உள்ள ஒருவரை ஏவுவதாக உள்ளது. அதனால், ***ஏவல் வாக்கியம்*** எனப்படுகிறது.

எல்லோரும் ஒற்றுமையாக வாழ்க. வாழ்த்துப் பொருளைத் தெரிவிப் பதாக உள்ளது. வாழ்த்துதல், விதித்தல், வேண்டிக் கொள்ளல், வைதல் ஆகிய பொருளை உணர்த்தும் வாக்கியம் ***வியங்கோள் வாக்கியம்*** எனப் படுகிறது.

இது உள்ளத்திலே தோன்றும் ஓர் உணர்ச்சியை வெளிப்படுத்துவதாய் உள்ளது. இதனால் இது ***மெய்ப்பாட்டு வாக்கியம்*** அல்லது ***வியப்பு வாக்கியம்*** எனப்படுகிறது.

## பெயர்வினைகள் மூவிடங்களிலும் அமையும் முறை

வாக்கியங்களில் பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும் இடம்பெறும் போது, ***தன்மை, முன்னிலை, படர்க்கை*** என்னும் மூவிடங்களிலும் ஓர் இயைபு நிலையிலேயே அமைகின்றன.

உ-ம் :

| | | |
|---|---|---|
| நான் வந்தேன் | - | தன்மை ஒருமை |
| நாங்கள் வந்தோம் | - | தன்மை பன்மை |
| நீ வந்தாய் | - | முன்னிலை ஒருமை |
| நீங்கள் வந்தீர்கள் | - | முன்னிலை பன்மை |
| அவன் வந்தான் | - | படர்க்கை உயர்திணை ஆண்பால் |
| அவள் வந்தாள் | - | படர்க்கை உயர்திணை பெண்பால் |
| அவர்கள் வந்தார்கள் | - | படர்க்கைப் பலர்பால் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| அது வந்தது | - படர்க்கை அஃறிணை ஒன்றன்பால் |
| அவை வந்தன | - படர்க்கை அஃறிணை பலவின்பால் |

ஒரு வாக்கியத்தின் எழுவாயாக அமையும் சொல்லின் திணை, பால், எண், இடம் என்பவற்றிற்கு இயைபாகவே அவ்வாக்கியத்தின் பயனிலை அமையும். சொல்லின் ***திணை, பால், எண், இடம்*** என்பனவும் இடம் பெறுவது அவசியம். ஒரு வாக்கியம் வழுவற்றதாக அமைவதற்கு வாக்கிய இயைபு இன்றியமையாதது.

பின்வரும் வாக்கியங்களை அவதானியுங்கள்

- யானைகள் கூட்டம் கூட்டமாய் அக்காட்டில் நிற்கிறது.
- செய்தவன் அவரா?
- ஒவ்வொரு பழங்களும் சுவையானது.

முதலாம் வாக்கியத்தின் எழுவாய் 'யானைகள்' என்பது. அது அஃறிணைப் பலவின்பாற் சொல் ஆயின் அதன் பயனிலையாகிய 'நிற்கிறது' என்பது அஃறிணை ஒன்றன்பாற்சொல். இவ்வாறு வாக்கியம் அமைவது பொருந்தாது. 'யானைகள் கூட்டம் கூட்டமாய் காட்டில் நிற்கின்றன' என அமைக்கப்படுவதே சரியானதாகும்.

இரண்டாம் வாக்கியத்தில் எழுவாய் 'செய்தவன்' என்பதாகும். அது உயர்திணை ஆண்பால் ஒருமைச் சொல். அது அவரா என்னும் வினாப் பயனிலை கொண்டு முடிந்துள்ளது. அவர் என்பது உயர்திணைப் பலர்பாற் சொல். 'அவரா என்பது எழுவாய்க்குரிய பாலுக்கு இயைபு பட்டதாக அமையவில்லை. 'அவனா' என்பதே பொருத்தமான முடிக்குஞ் சொல். இச்செயலை செய்தவன் அவனா? என அவ்வாக்கியம் அமைக்கப் படுவதே சரியானதாகும்.

மூன்றாம் வாக்கியத்திலே, ஒவ்வொரு என்னும் அடைமொழியைத் தொடர்ந்து பழங்கள் என்னும் பன்மைச் சொல் இடம்பெற்றுள்ளமை தவறானதாகும். ஒவ்வொரு பழமும் என்றே அமைதல் வேண்டும்.

இவ்வாறு வாக்கியங்களில் வரும் பெயர்ச்சொற்களும், வினைச்சொற்களும் திணை, பால், எண், இடம் என்பவற்றில் இயைபுபட்டனவாக அமைவதை அவதானித்து வாக்கியங்களை ஆக்குவது வாக்கியங்கள் வழுவற்றனவாக அமைவதற்குப் பெரிதும் உதவுவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. வேற்றுமைப் பொருள்கள்

| வேற்றுமை | உருபு | சொல்லுருபு | பொருள் |
|---|---|---|---|
| முதலாம் | உருபில்லை | ஆனவன்<br>ஆகின்றவன்<br>என்பவன்<br>ஆவான் | எழுவாய் |
| இரண்டாம் | ஐ | சொல்லுருபில்லை | செயப்படுபொருள்<br>ஆக்கல், அழித்தல்,<br>அடைதல், துறத்தல்<br>ஒப்பு உடைமை |
| மூன்றாம் | ஆல்<br>ஆன்<br>ஒடு<br>ஓடு | கொண்டு<br><br>உடன் | கருவி, கருத்தா<br><br>உடனிகழ்ச்சி |
| நான்காம் | கு | பொருட்டு<br>நிமித்தம்<br>ஆக | (கொடை), பகை,<br>நட்பு, தகுதி, முதற்<br>காரணகாரியம்<br>முறைமை |
| ஐந்தாம் | இல்<br>இன் | நின்று<br>இருந்து | நீங்கல், ஒப்பு<br>எல்லை, ஏது |
| ஆறாம் | அது<br>ஆது<br>அ | உடைய | கிழமை (உடைமை)<br>1. தற்கிழமை<br>2. பிறிதின்கிழமை |
| ஏழாம் | கண்<br>இல்<br>உள்<br>இடம் | சொல்லுருபில்லை | இடப்பொருள் |
| எட்டாம் | உருபில்லை | சொல்லுருபில்லை | விளிப்பொருள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்

## A. பெயர்ச்சொல்

**பெயர்ச்சொற்களின் வகைகள்**

| | | |
|---|---|---|
| கிளிகள் | - | பொருட்பெயர் |
| அன்பு | - | குணப்பெயர் |
| கொழும்பு | - | இடப்பெயர் |
| இரவு | - | காலப்பெயர் |
| தலை | - | சினைப்பெயர் |
| பிடித்தல் | - | தொழிற்பெயர் |

இவ்வாறு பெயர்ச்சொற்கள் அறுவகைப்படும். இவை தவிர பெயர்ச் சொற்களை மேலும் இடுகுறிப்பெயர், காரணப்பெயர், பொதுப்பெயர், சிறப்புப்பெயர் என்றவாறு வகுக்கமுடியும்.

உ-ம்:

| | | |
|---|---|---|
| இடுகுறிப்பெயர் | - | மரம், பொன், கல் |
| காரணப்பெயர் | - | நாற்காலி, பறவை |
| பொதுப்பெயர் | - | மரம், விலங்கு, நகரம் |
| சிறப்புப் பெயர் | - | வாழை, சிங்கம், கண்டி |

தற்காலத்தில் பெயர்ச்சொற்களின் அமைப்பு, இலக்கணத்தொழிற்பாடு ஆகியவூற்றின் அடிப்படையில் மாற்றுப் பெயர், ஆக்கப்பெயர், கூட்டுப் பெயர், தொழிற்பெயர், வினையாலணையும் பெயர் எனப்பலவகையாகவும் பிரித்து நோக்கலாம்.

## B. வினைச்சொல்

**பண்புகள்**

1. வினைச்சொற்கள் வேற்றுமை உருபு ஏற்பதில்லை.
   நட, நடந்த, நடந்தது.
2. வினைச்சொற்கள் செயலை உணர்த்தும்
   நட, வா, ஓடுதல், வந்தான்.
3. வினைச்சொற்கள் ஏவல்பொருளில் வரும்
   நட, இரு, நில்லுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. வினைச்சொற்கள் காலம் காட்டுவன
படித்தான், படிக்கின்றான், படிப்பான்

5. வினைச்சொற்கள் விகுதிகளைப் பெற்றுவரும்.
திணை, பால், எண், இடவிகுதிகள் - வந்தான், வந்தனர்.
பெயரெச்ச, வினையெச்ச விகுதிகள் - வந்த, ஆடி
ஏவல், வியங்கோள் வினைவகுதிகள் - அ, க

6. வினைச்சொற்கள் வினை அடைகளைப் பெற்றுவரும்.
வேகமாக ஓடினான், மெதுவாக வந்தான்.

## C. இடைச்சொல்

ஒருவாக்கியத்தை அமைக்க, பெயர்ச்சொல், வினைச்சொல் என்பன மட்டும் இருந்தால் போதாது. அவ்வாக்கியம் பொருள் உள்ளதாக அமைய வேண்டும் என்றால் - வேற்றுமை உருபுகள், இடைநிலைகள், சாரியைகள், விகுதிகள், உவமை உருபுகள், சுட்டுக்கள், வினாக்கள் என்பனவும் இணைய வேண்டும்.

**இதன் வகைகள்**

1. வேற்றுமை உருபுகள்
ஐ, ஆல், கு, இன், அது, உடைய, உடன், ஓடு, இலிருந்து
2. பன்மை விகுதிகள்
கள், மார்
3. திணை, பால் விகுதிகள்
ஏன், ஓம், ஆய், ஈர்கள், ஆன், ஆள், ஆர், ஆர்கள், அது, அ,
4. காலம் காட்டும் இடைநிலைகள்
கின்று, கிறு, த், த்த், ந்த், ட், ற், இன், இ, ப், ப்ப், வ்
5. பெயரெச்ச, வினையெச்ச விகுதிகள்
இ, உ, மல், ஆல்
6. எதிர்ப்பாற் இடைநிலைகள்
ஆ, ஆர், மாட்டு
7. ஆக்கப்பெயர் விகுதிகள்
மை, சி, வு, அல், காரன், கார், இயம், இயல், சாலி
8. தொழிற்பெயர் விகுதிகள்
தல், அது, மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. ஏவல், வியங்கோள் வினை விகுதிகள்

ங்கள், உங்கள், க, இய, இயர், அட்டும்.

10. சாரியைகள்

அத்து, அற்று, அம்

11. உவமை உருபுகள்

போல, விட, பார்க்கிலும், காட்டிலும்.

12. இணைப்பிடைச் சொற்கள்

உம், அல்லது, இல்லையென்றால், ஆனால், ஓ, ஆகவே, ஆயினும், எனினும்.

13. தத்தம் பொருள் உணர்த்தும் இடைச்சொற்கள்

உம், ஓ, ஏ, தான், மட்டும், ஆவது கூட, ஆ, ஆம்

14. சொல்லுருபுகள்

மூலம், கொண்டு, இருந்து, பற்றி, வரை.

உம், ஓ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம் என்பன தற்காலத் தமிழில் பெரிதும் வழக்கிலுள்ள இடைச்சொற்களாகும்.

## D. உரிச்சொல்

பின்வரும் சொற்களைப் பொருள் விளங்க வாசிப்போம்.

| | | |
|---|---|---|
| கடிநகர் | - | காவல் |
| கடிவேல் | - | கூர்மை |
| கடிமாலை | - | வாசனை |
| கடிப்பேய் | - | அச்சம் |
| கடுகதி | - | வேகம் |
| கடிகாற்று | - | மிகுதியான காற்று |
| கடிமணம் | - | புதுமை |
| கடிமுரசு | - | ஒலி/ ஆர்த்தல் |
| கடிவினை | - | மன்றல் |
| கடிமிளகு | - | கரிப்பு |

'கடி' என்ற ஒரு சொல் பல பொருளை உணர்த்தி வந்துள்ளமையை அவதானித்திருப்பீர்கள்.

இவ்வாறு ஒரு பொருளை உணர்த்தும் பல சொற்களும், பல பொருளை உணர்த்தும் ஒரு சொல்லும் ஆகிய பெயர்ச்சொற்களையே நாம் உரிச்சொல் என்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உரிச்சொல்லின் பண்புகள்**

பொருளுக்கு உரிமை பூண்டு நிற்கும் பண்பை உணர்த்தும்.

உலகத்துப் பொருள் - உயிர்ப்பொருள், உயிரல்லாத பொருள் என இரு வகைப்படும்.

இப்பொருளுக்குரிய பண்பு - குணப்பண்பு தொழிற்பண்பு என இரு வகைப்படும்.

உயிர்ப்பொருளின் குணப்பண்புகள்

அறிவு, அச்சம், மானம், பொறுமை, மயக்கம், விருப்பு, வெறுப்பு, இரக்கம், நன்மை, தீமை, கோபம் முதலியன.

உயிர்ப்பொருளின் தொழிற் பண்புகள்

உண்ணல், உடுத்தல், உறங்குதல், அணிதல், தொழுதல், நடத்தல், ஆக்கல், அழித்தல் முதலியன.

**உயிரல்லாத பொருள்களின் குணப்பண்புகள்**

| | | |
|---|---|---|
| பலவகை வடிவங்கள் | - | வட்டம், சதுரம், முக்கோணம் |
| இருவகை நாற்றங்கள் | - | நறுநாற்றம், துர்நாற்றம் |
| ஐவகை நிறங்கள் | - | வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை |
| அறுவகைச் சுவைகள் | - | கைப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கார்ப்பு, இனிப்பு |
| எண்வகை பரிசங்கள் | - | வெம்மை, தண்மை, மென்மை, வன்மை நொய்ம்மை, சீர்மை, இழுமெனல், சருச்சரை |

**உயிர்ப்பொருள் உயிரல்லாத பொருள்களுக்குரிய தொழிற்பண்புகள்**

தோன்றல், மறைதல், வளர்தல், சுருங்குதல், நீங்கல், அடைதல், நடுங்கல், ஒலித்தல் முதலியன.

ஒரு குணத்தையும் பல குணத்தையும் உணர்த்தி வரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. முற்றுவினை, எச்சவினை, செய்வினை, செயப்பாட்டுவினை, தன்வினை, பிறவினை

## A. முற்றுவினை / வினைமுற்று

பிறிதொரு சொல்லை நாடி நிற்காமல் தன்னளவில் பொருள் முடிவை உணர்த்தி நிற்கும் சொல் வினைமுற்று அல்லது முற்றுவினை எனப்படும்.

உ + ம்     வருவான், வரமாட்டான்

தா, தருக, தாருங்கள்.

இதனடிப்படையில் முற்றுவினையானது

1. தெரிநிலை வினைமுற்று
2. ஏவல் வினைமுற்று
3. வியங்கோள் வினைமுற்று என மூன்று வகைப்படும்.

### 1. தெரிநிலை வினைமுற்று

வந்தான், கவனிக்கிறான், படிப்பான், நின்றான், மதிக்கிறான், உயர்ந்தான், செல்கிறார், நடந்தன, பறக்கின்றது போன்ற வினைகள் தெரிநிலை வினை முற்றுக்கள் எனப்படும். இவை

(அ) ஒரு வாக்கியத்தின் பயனிலையாக வருகின்றன.

(ஆ) எழுவாய்ப் பெயரின் திணை, பால், எண், இடம் என்பவற்றை உணர்த்தும் விகுதிகளைப் பெற்றுள்ளன.

(இ) கால இடைநிலைகளைப் பெற்று காலம் உணர்த்துகின்றன.

**தெரிநிலை வினைமுற்று காலம் காட்டுதல்**

தெரிநிலை வினைமுற்றுக்கள் காலம் காட்டும் பண்பைக் கொண்டு மூன்று வகைப்படுத்துவர்.

1. நிகழ்காலத் தெரிநிலை வினைமுற்று
2. எதிர்காலத் தெரிநிலை வினைமுற்று
3. இறந்தகாலத் தெரிநிலை வினைமுற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1. நிகழ்காலத் தெரிநிலை வினைமுற்று**

தற்காலத்தில் நிகழ்காலத் தெரிநிலைவினைமுற்று -கிறு-, -கின்று- ஆகிய இரண்டு இடைநிலைகளால் நிகழ்காலத்தை காட்டும்.

அஃறிணைப் பலவின்பால் வினைகளில் கின்று மட்டுமே வரும்.

**2. எதிர்காலத் தெரிநிலை வினைமுற்று**

-ப்ப்-, -ப்-, -வ்- ஆகிய மூன்று இடைநிலைகளால் எதிர்காலம் காட்டும்.

அ. -ப்ப்- இடைநிலையை ஏற்கும் வினைகளை மொழியியல் அறிஞர் வல்வினை என்பர்.

ஆ. -ப்- இடைநிலையை ஏற்கும் வினைகளை இடைவினை என்பர்.

இ. -வ்- இடைநிலையை ஏற்கும் வினைகளை மெல்வினை என்பர்.

ஒன்றன்பால், பலவின்பால் வினைமுற்றுக்கள் இடைநிலை ஏற்காமல் உம் விகுதி பெற்று எதிர்காலம் காட்டும்.

**3. இறந்தகாலத் தெரிநிலை வினைமுற்று**

தற்காலத் தமிழில் த், த்த், ந்த், ட், ற், இன், ன் ஆகிய எழும் இறந்தகால இடைநிலைகளாகக் கொள்ளப்படுகின்றன.

**குறிப்பு வினைமுற்று**

குறிப்பு என்ற பாகுபாடு பழந்தமிழ் மொழி அமைப்பை அடிப்படையாகக் கொண்டது. திணை, பால், எண், இடம் என்பவற்றை வெளிப்படையாகக் காட்டி காலத்தை மட்டும் குறிப்பாகப் புலப்படுத்துவன குறிப்பு வினைமுற்று எனப்படும்.

## 2. ஏவல் வினைமுற்று

முன்னிலையில் இருப்போரை ஒரு வினையை நிகழ்த்துமாறு ஏவுவதற்கு பயன்படும் வினைவடிவம் ஏவல்வினை எனப்படும்.

இதனை

1. ஏவல் ஒருமை, ஏவல் பன்மை என்றும்
2. உடன்பாட்டு ஏவல், எதிர்மறை ஏவல் என்றும் பாகுபடுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஏவல் ஒருமை

வா, போ, நில், இரு, நட, எழுது, உருட்டு, படி, புரட்டு, கைதுசெய், செய்துகாட்டு, எதிர்மறை ஏவல் ஒருமை வினையாக வரும்.

எதிர்மறை ஏவல் ஒருமை வினைமுற்று

பின்வரும் சொற்களையும் அதன் உறுப்புகளையும் அவதானியுங்கள்.

செய்யாதே - செய் + ஆத் + ஏ

நில்லாதே - நில் + ஆத் + ஏ

இதில்,

செய், நில் என்பன வினையடிகள் ஆத் என்பது எதிர்மறை ஏவல் இடைநிலை ஏ என்பது எதிர்மறை ஏவல் விகுதியாகும்.

எதிர்மறை ஏவல் ஒருமை வினைமுற்று

வினையடி + ஆத் + ஏ எனும் அமைப்புடையதாக விளங்கும்.

2. ஏவல் பன்மை வினைமுற்று

பின்வரும் சொற்களை வாசியுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| போங்கள் | போ + ங்கள் | எடுங்கள் | எடு + ங்கள் |
| செய்யுங்கள் | செய் + உங்கள் | நில்லுங்கள் | நில் + உங்கள் |

போன்ற சொற்களில் போ, செய், எடு, நில் என்பவை வினையடிகள், ங்கள், உங்கள் என்பனை உடன்பாட்டு ஏவல் பன்மை விகுதிகள்.

## 3. வியங்கோள் வினைமுற்று

வாழ்க, ஒழிக, தருக என்பனை வினைச் சொற்களாகும். இவை வினையடிகளுடன் -க- விகுதி பெற்று வரும். இவ்வாறு வினையடி + க விகுதி பெற்றுவரும் வினைகளையே வியங்கோள் வினைமுற்று என்பர்.

உங்கள் வாழ்வில் இன்பம் மலர்க!
நீங்கள் எல்லாச் செல்வமும் பெறுக!

கொடுங்கோல் அரசு வீழ்க!
உன் புத்தி பேதலித்துப் போக!

உங்கள் குறைகளை அதிகாரியிடம் கூறுக.
முதல் இருவினாவிற்கு மட்டும் விடை தருக.

பழந்தமிழில் வியங்கோள் வினைமுற்று விகுதிகளாக க, இய, இயர், அ, அல் என்னும் விகுதிகளைக் கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க (க)
வாழிய (இய)
வாழியர் (இயர்)
வர உண்ண (அ)
ஓம்பல், எனல் (அல்)

இவற்றில் தற்காலத் தமிழில் -க- பெரும்பான்மையாகவும் -இய- விகுதி சிறுபான்மையாக கவிதைகளிலும் வருகின்றது.

## B. எச்சவினை

நடித்த, படித்த, செய்து, செய்தால் என்பவை எச்சவினை எனப்படும். இவை,

நடந்த மனிதன்
படித்த மாணவி
செய்து முடித்தேன்
செய்தால் தருவேன்

என பிறிதொரு சொல்லின் உதவியுடனே பொருள் முடிப்பைத் தருகிறது.

எனவே,

திணை, பால், எண், இட விகுதிகள் ஏற்காது எச்சவினை விகுதிகள் பெற்று, பொருள் முடிப்புக்கு பிறிதொரு சொல்லை அவாவி நிற்கும் சொற்களையே எச்சவினை என்பர்.

எச்சவினை இரண்டு வகைப்படும்.

1. பெயரெச்சம்
2. வினையெச்சம் என்பனவாகும்.

### 1. பெயரெச்சம்

எச்சவினைச் சொற்கள் பொருள்முடிப்புக்கு பெயர்ச்சொற்களை அவாவி நிற்குமாயின் அவ்வகைச் சொற்கள் பெயரெச்சம் எனப்படும்.

படித்த மனிதன்
படிக்கிற மனிதன்
படிக்கும் மாணவி என்பவை பெயரெச்சங்களாகும்.

இதில் -படி- வினையடி, -த்- இறந்தகால இடைநிலை, -கின்று- நிகழ்கால இடைநிலை, -உம்- எதிர்கால பெயரெச்ச விகுதி பெயரெச்ச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விகுதி எனவே பெயரெச்சங்கள் மூன்று காலத்தையும் உணர்த்தும்.

1. இறந்தகால, நிகழ்காலப் பெயரெச்சங்கள் இடைநிலையால் காலம் உணர்த்தும்.
2. எதிர்காலப் பெயரெச்சம் விகுதியால் காலம் உணர்த்தும்.

இறந்தகாலப் பெயரெச்சம்

செய்த - செய் + த் + அ    நின்ற - நில் + ற் + அ

படித்த - படி + த் + அ    கண்ட - காண் + ட் + அ

நிகழ்காலப் பெயரெச்சம்

செய்கிற - செய் + கிறு + அ    காண்கிற - காண் + கிறு + அ

படிக்கிற - படிக் + கிறு + அ    ஓடுகிற - ஓடு + கிறு + அ

இறந்தகால, நிகழ்காலப் பெயரெச்சங்கள்

வினையடி + கால இடைநிலை + அ

எனும் அமைப்புடையன இங்கு -அ- என்பது பெயரெச்ச விகுதி.

எதிர்காலப் பெயரெச்சம்

| | | | | |
|---|---|---|---|---|
| செய்யும் | - | செய் | + | உம் |
| படிக்கும் | - | படி | + | உம் |
| நிற்கும் | - | நில் | + | உம் |
| காணும் | - | காண் | + | உம் |
| ஓடும் | - | ஓடு | + | உம் |

எதிர்காலப் பெயரெச்சமும், அஃறிணை ஒன்றன்பால், பலவின்பால் வினைமுற்றும் ஒரே வடிவம் உடையன.

உ -ம்

நாளை கப்பல் வரும்.
நாளை வரும் கடிதம்.

நாளை கடிதம் வரும்.
நாளை வண்டி வரும்.

இனி பறவைகள் கூட்டுக்கு வரும்.
நாளைக்கு எனக்குக் கடிதங்கள் வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2. வினையெச்சம்

எச்சவினைச் சொற்கள் பொருள் முடிப்புக்கு வினைச்சொற்களை அவாவி நிற்குமாயின் அவை வினையெச்சம் எனப்படும் பின்வரும் வாக்கியங்களை வாசிப்போம்.

| | |
|---|---|
| செய்ய வேண்டும். | தரச் சொன்னார். |
| செய்து முடித்தேன். | வந்து தருகிறேன். |
| செய்தால் தருவேன். | போனால் வரமாட்டாய். |

இவை வினைச்சொற்களைக் கொண்டு முடிவதனால் வினையெச்சம் எனப்படுகின்றன. இவை செய்ய, செய்து, செய்தால் என்னும் அமைப்பைக் கொண்டன.

## C. செய்வினையும் செயற்பாட்டுவினையும்

### செய்வினை

பின்வரும் வாக்கியங்களை வாசிப்போம்.
நான் படம் பார்த்தேன்.
தம்பி வீடு கூட்டினான்.

மேலுள்ள வாக்கியங்களில் பார்த்தேன், கூட்டினேன் ஆகிய வினைகள் உள்ளன. இவை முறையே நான், தம்பி ஆகியவற்றை எழுவாயாகக் கொண்டுள்ளன.

இங்கு எழுவாயே வினையின் கருத்தாவாகவும் உள்ளது. அதாவது பார்த்தவன் நான், கூட்டியவன் தம்பி. இவ்வாறு, எழுவாயைக் கருத்தாவாகக் கொள்ளும் வினைகள் செய்வினை.

### செயற்பாட்டு வினை

பாரதி குயில்பாட்டு எழுதினான். (செய்வினை)

என்ற வாக்கியத்தில் பாரதி - எழுவாய், குயில்பாட்டு - செயப்படு பொருள். எழுதினான் - செய்வினை.

இனி,

இவ்வாக்கியத்தை பொருள் சிதையாமல் மாற்றி எழுதிப்பார்ப்போம்.

குயில் பாட்டு பாரதியால் எழுதப்பட்டது. (செயற்பாட்டு வினை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் வாக்கியத்தில் செயப்படுபொருளாக இருந்த குயில்பாட்டு இந்த வாக்கியத்தில் எழுவாய்.

முதல் வாக்கியத்தில் எழுவாயாக இருந்த பாரதி, இந்த வாக்கியத்தில் ஆல் உருபு (பாரதியால்) ஏற்று கருத்தாப்பொருளில் வந்துள்ளது.

முதல் வாக்கியத்தில் எழுதினான் என்னும் வடிவில் அமைந்த வினை, இந்த வாக்கியத்தில் எழுதப்பட்டது என்றும் அமைகிறது. இவ்வாறு

செயப்படுபொருளை எழுவாயாகக் கொள்ளும் வினைசெயப்பாட்டு வினை எனலாம். செயப்படுபொருள் குன்றாவினைகளே செயப்பாட்டு வினைகளாக அமையும்.

## D. தன்வினையும் பிறவினையும்

தம்பி படித்தான்.

தாய் குழந்தைக்கு உணவை ஊட்டினாள்.

முதல் வாக்கியத்தில் படித்தான் (படித்தல்) என்னும் வினையை நிகழ்த்தியவன் தம்பி. அவனே இவ்வினையின் கருத்தா. -படித்தல்- என்னும் செயலுக்கு உட்பட்டவனும் அவனே. அதாவது, வினையை நிகழ்த்துபவரும் வினையின் பயனை அடைபவரும் ஒருவரே. இரண்டாவது வாக்கியத்தில் வினையை நிகழ்த்துபவர் -தாய்- (எழுவாய்) வினையின் பயனை அடைந்தவர் - குழந்தை. அதாவது,

ஒரு வினையின் பயன் கருத்தாவையன்றி (எழுவாய்) பிறிதொரு அல்லது பிறிதொன்றை அடைகிறது.

1. சமுதாயச் சீர்கேடுகளைக் களையப் புதுமை நூல்கள் பல தோன்றின.
2. இந்த நூல்கள் சமுதாயத்தில் பல மாற்றங்களைத் தோற்றுவித்தன.

முதல்வாக்கியத்தில் எழுவாயாக நிற்கும் நூல்களே பயனிலையாக நிற்கும். தோன்றின எனும் வினைமுற்றின் செயலைச் செய்கின்றன. இரண்டாவது வாக்கியத்தில், தோன்றியவை மாற்றங்களே தவிர நூல்கள் அல்ல. இந்த மாற்றங்கள் தோன்றுவதற்கு நூல்கள் காரணமாக அமைந்திருக்கின்றன.

ஆகவே,

ஒரு செயலை எழுவாயே செய்வதைக் காட்டுவது தன்வினை. எழுவாய் தானே செய்யாமல் அதே சமயம் அந்தச் செயல் நடைபெறக் காரணமாக அமைவதைக் காட்டுவது பிறவினை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. பதங்களும், தொகை தொகா நிலை தொடர்களும்

## A. பதம்

பதம் என்பது சொல் எனப்படும்.

இச்சொற்களின் பண்புகளை இனம் காண்போம்.

| | | |
|---|---|---|
| ஓர் எழுத்து ஒரு சொல் | - | ஆ, மா, ஈ |
| ஈர் எழுத்துக்கள் ஒரு சொல் | - | ஆடு, மாடு |
| மூவெழுத்துக்கள் ஒரு சொல் | - | நிழல், மரம் |
| நான்கு எழுத்துக்கள் ஒரு சொல் | - | ஆலயம், பாடினான் |
| ஐந்து எழுத்துக்கள் ஒரு சொல் | - | குவலயம், நடந்தான் |
| ஆறு எழுத்துக்கள் ஒரு சொல் | - | அம்பலவன், நடந்தனன் |
| ஏழு எழுத்துக்கள் ஒரு சொல் | - | அரங்கத்தான், அருமையானவன் |
| எட்டு எழுத்துக்கள் ஒரு சொல் | - | சக்கரவர்த்தி, உலகளந்தவன் |
| ஒன்பது எழுத்துக்கள் ஒரு சொல் | - | உருவமில்லாதவன், அருவுருவாகியவன் |

இங்கு, ஓர் எழுத்து ஒரு சொல்லாகியுள்ளது. ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்கள் இணைந்து சொல்லாகி உள்ளது.

ஒன்றோ, ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்களோ இணைந்து பொருள் தருமானால் அதனைச் சொல் அல்லது பதம் எனலாம்.

### I. பகாப்பதம்

பிரிக்க முடியாத சொற்களைப் பகாப்பதம் என்பர்.

பகாப்பதம் என்பது பகுக்கமுடியாத பதம் ஆகும்.

கூன், அறி, புத்தி, கெட்டி, நட, பால், கல், கடு

என்பன போன்றவை பகாப்பதம் என்பதை அறிவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை சொல்லாக்கத்தின் பொழுது அடிச்சொற்களாக அல்லது வேர்ச்சொற்களாக அமையும்.

பகாப்பதங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

பெயர்ப் பகாப்பதம் - நீ, மண், வளி, மரம், பூ

வினைப் பகாப்பதம் - நில், ஓடு, செல், உண், பாடு

இடைப் பகாப்பதம் - ஐ, ஆல், மற்று, சொல்

உரிப்பகாப்பதம் - சால, தவ, உறு, நனி, கழி, கூர்

## II. பகுபதம்

வீடுகள், கனவுகள், உறவுகள், ஆடுதல், பாடுதல், தேடுதல், உண்டான், பாடுகிறது.

இச்சொற்களைப் பிரிக்கமுடியும். பிரித்தால் பொருள் தரும்.

வீடு + கள் - வீடுகள்
கனவு + கள் - கனவுகள்
உறவு + கள் - உறவுகள்

வீடு, கனவு, உறவு என்பன பெயர்ப்பகுதிகள். இவை பொருள் தருகின்றன. கள் என்பது பன்மைவிகுதி இதுவும் பொருள் உணர்த்துகின்றது.

ஆடு + தல் - ஆடுதல்
பாடு + தல் - பாடுதல்
தேடு + தல் - தேடுதல்

### பகுபத உறுப்புக்கள்

ஒரு பகுபதத்தில் இடம்பெறும் கூறுகளை அவற்றின் தொழிற்பாட்டின் அடிப்படையில் ஆறு உறுப்புக்களாக வகைப்படுத்துவர். அவை பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்பனவாகும். பகுபதத்தில் இவற்றுள் பகுதி, விகுதி என்பன கட்டாயம் இடம்பெறும்.

சில பகுபதங்களில் இரண்டுக்கு மேற்பட்ட உறுப்புக்களும், மேலும் சில பகுபதங்களில் ஆறு உறுப்புக்களும் இடம்பெறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பகுதி

ஒரு பகுபதத்தின் அடிப்படை வடிவம் அதன் அடிச்சொல் ஆகும். அதனுடன் இணைக்கப்படும் ஒவ்வொரு உறுப்பும் ஒட்டு எனப்படும். ஒரு பகுபதத்தின் அடிச்சொல்லையே தமிழ் இலக்கண நூல்கள் பகுதி எனக் கூறுகின்றன. ஒரு பதத்தின் பகுதியானது பெயர்ச்சொல்லாக இருந்தால் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் எனும் அறுவகைப் பெயர்ச்சொற்களுள் ஒன்றாக இருக்கும்.

பகுதியானது வினைச்சொல்லாக இருப்பின் விகுதி பெறாத ஏவல் வினையாகவும் அமையும்.

### விகுதி

பகுபதத்தின் இறுதியில் வந்து திணை, பால், எண், இடம், வேற்றுமை, வினை, ஏவல், வியங்கோள் போன்ற பல்வேறு பொருளை உணர்த்தப் பயன்படும் உறுப்பை விகுதி என்பர்.

### இடைநிலை

பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் தோன்றும் பகுபத உறுப்பு இடைநிலை எனப்படும். இது மூன்று வகைப்படும்.

1. பெயர் இடைநிலை
2. வினை இடைநிலை
3. எதிர்மறை இடைநிலை

1. பெயர் இடைநிலை

அறிஞன், கலைஞன், வலைஞன், கொலைஞன் ஆகிய இச் சொற்களில் வரும் ஞ் இடைநிலை பொருள் உணர்த்தாது.

2. வினை இடைநிலை

ஒரு வினைப் பகுபதத்தில் பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வந்து காலம் உணர்த்தும் உறுப்பு வினை இடைநிலை எனப்படும். இது

1. இறந்தகால இடைநிலை - த், ட், ற், இன்
2. நிகழ்கால இடைநிலை - கிறு, கின்று
3. எதிர்கால இடைநிலை - ப், வ.

என மூன்று வகைப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. எதிர்மறை இடைநிலை

எதிர்மறை வினைச்சொற்களில் பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வந்து எதிர்மறை உணர்த்தும் இடைநிலை எதிர்மறை இடைநிலை எனப்படும்.

ஆ, மா, ஆத் போன்றன எதிர்மறை இடைநிலைகளாகும்.

| பகுபதம் | | பகுதி | | இடைநிலை | | விகுதி |
|---|---|---|---|---|---|---|
| கலைஞன் | - | கலை | + | ஞ் | + | அன் |
| பாடுகிறான் | - | பாடு | + | கிறு | + | ஆன் |

**சாரியை**

பகுபத உறுப்புகளான பகுதியையும் விகுதியையும் அல்லது இடைநிலையையும் விகுதியையும் இணைப்பதற்கு அல்லது கூட்டுப் பெயராக்கத்தில் இரண்டு சொற்களை இணைப்பதற்குப் பயன்படும் பகுபத உறுப்பு சாரியை எனப்படும்.

பெயர் இடைநிலை போல சாரியையும் பொருள் உணர்த்தாது.

அத்து, அற்று, அம், அன், இன் என்பன தற்காலத்தமிழில் வழக்கிலுள்ள சில சாரியைகளாகும்.

| பகுபதம் | | பகுதி | | சாரியை | | விகுதி |
|---|---|---|---|---|---|---|
| மரத்தை | - | மரம் | + | அத்து | + | ஐ |
| சிலவற்றை | - | சில | + | அற்று | + | ஐ |

| பகுபதம் | | பகுதி | | இடைநிலை | | சாரியை | | விகுதி |
|---|---|---|---|---|---|---|---|---|
| நடந்தனன் | - | நட | + | ந்த் | + | அன் | + | அன் |
| சென்றனன் | - | செல் | + | ற் | + | அன் | + | அன் |

**சந்தி**

பகுதி விகுதி இடைநிலை ஆகிய பகுபத உறுப்புகள் புணரும்போது இடையில் தோன்றும் ஓர் எழுத்து சந்தி எனப்படும்.

| பகுபதம் | | பகுதி | | சந்தி | | விகுதி |
|---|---|---|---|---|---|---|
| கிளியை | - | கிளி | + | ய | + | ஐ |
| குருவை | - | குரு | + | வ் | + | ஐ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விகாரம்**

பகுதி விகுதி இடைநிலை ஆகியவை புணரும்போது இடையில் அவற்றின் வடிவத்தில் ஏற்படும் மாற்றம் விகாரம் எனப்படும்.

| பகுபதம் | | பகுதி | | இடைநிலை | | விகுதி |
|---|---|---|---|---|---|---|
| தருவேன் | - | தா | + | வ். | + | ஏன் |
| கற்றான் | - | கல் | + | ற் | + | ஆன் |

## B. தொகை தொகாநிலைத் தொடர்கள்

பின்வரும் இரு வாக்கியங்களை அவதானித்து அவற்றுக்கிடையே காணப்படும் வேறுபாட்டினை இனங்காண்போம்.

இன்று வித்யா பாடசாலை வரவில்லை.

இன்றைக்கு வித்யா பாடசாலைக்கு வரவில்லை.

முதல் வாக்கியத்தில்
இன்று பாடசாலை எனவும்

இரண்டாம் வாக்கியத்தில்
இன்றைக்கு பாடசலைக்கு எனவும்

வந்துள்ளமையை இனங்கண்டிருப்பீர்கள் 'க்கு' என்ற உருபு இரண்டாம் வாக்கியத்தில் இடம்பெற. முதல் வாக்கியத்தில் இவை இடம்பெறவில்லை. ஆனால் பொருள் மாறுபடவில்லை என்பதையும் கவனத்திற் கொள்வோம்.

முதல் வாக்கியத்தில் 'க்கு' எனும் உருபு இடம்பெறவில்லை - தொக்கு அல்லது மறைந்திருக்கிறது.

இரண்டாம் வாக்கியத்தில் 'க்கு' எனும் உருபு வெளிப்பட்டு அல்லது தொகாமல் வருகிறது.

எனவே,

சொற்றொடர்களுக்கியில் உருபுகள் தொக்கிநிற்பதைத் தொகை நிலைத் தொடர்கள் என அழைப்போம்.

சொற்களுக்கிடையில் உருபுகள் தொகாமல் நிற்பதைத் தொகாநிலைத் தொடர்கள் என அழைப்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கள் விரிவுபட்டதையும் அதன் உருபுகளையும் அவதானித்திருப்பீர்கள்.

இனி,

தொகை நிலைத் தொடர்களை வகைப்படுத்துவோம்.

1. வேற்றுமைத்தொகை
2. வினைத்தொகை
3. பண்புத்தொகை
4. உவமைத்தொகை
5. உம்மைத்தொகை
6. அன்மொழித்தொகை

எனவே

தொகைநிலைத் தொடர்கள் ஆறு வகைப்படும். இவைபற்றி சற்று விரிவாக நோக்குவோம்.

சில உதாரணங்களை நோக்குவோம்.

| வேற்றுமைத்தொகை | உருபு | விரிவு |
|---|---|---|
| நிலங்கடந்தான் | ஐ | நிலத்தைக் கடந்தான் |
| தலை வணங்கினான் | ஆல் | தலையால் வணங்கினான் |
| கண்ணன் மகன் | கு | கண்ணனுக்கு மகன் |
| பாடசாலை நீங்கினான் | இன் | பாடசாலையின் நீங்கினான் |
| ஆதவன் கை | அது | ஆதவனது கை |
| குன்றக்குமுறல் | கண் | குன்றம் கண் குமுறல் |

எனவே,

வேற்றுமை உருபுகள் மறைந்து அல்லது கெட்டு நிற்கும் சொற்றொடர்களை நாம் வேற்றுமைத் தொகை என்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15. சொற்புணர்ச்சி

சொற்கள் ஒன்றோடு ஒன்று சேருவது சொற்புணர்ச்சி எனப்படும்.

இவ்வாறு, இரண்டு சொற்கள் சேரும்போது, முதலில் நிற்குஞ் சொல் **நிலைமொழி** எனப்படும். அதைத்தொடர்ந்து வருஞ்சொல் **வருமொழி** எனப்படும்.

புணர்ச்சி எவ்வாறு இடம்பெறுகிறது என்பதைப் பொறுத்து, சொற் புணர்ச்சியை இரண்டு வகைகளுள் அடக்கலாம்.

அவையாவன:

1. இயல்புப் புணர்ச்சி
2. விகாரப் புணர்ச்சி

சொற்கள் சேரும்போது (புணரும் போது) நிலைமொழி, வருமொழி ஆகிய இரு சொற்களிலும் எவ்வித மாற்றமும் இன்றி இயல்பாகப் புணரு வது இயல்புப் புணர்ச்சி எனப்படும்.

மாற்றங்கள் (விகாரங்கள்) இடம்பெற்று, சொற்கள் ஒன்றோடொன்று புணருவது விகாரப் புணர்ச்சி எனப்படும்.

உ-ம் : பலா + பழம் → பலாப்பழம்

(இங்கு நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது 'ப்' என்னும் எழுத்து தோன்றியுள்ளது.)

இவ்வாறு, சொற்கள் ஒன்றோடொன்று புணரும் போது, எழுத்தோ, (இடைச்சொல்லோ) தோன்றுமாயின், அது தோன்றல் விகாரம் எனப்படும்.

உ-ம் : பல் + பொடி → பற்பொடி

(இங்கு நிலைமொழியின் இறுதியில் உள்ள 'ல்' என்னும் எழுத்து 'ற்' என்னும் எழுத்தாக வேறுபட்டது.(திரிந்தது)

இவ்வாறு சொற்கள் ஒன்றோடொன்று புணரும் போது, எழுத்துகள் திரியுமாயின் (வேறுபடுமாயின்), அது திரிதல் விகாரம் எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம் : மரம் + வேர் → மரவேர்

(இங்கு நிலைமொழியின் இறுதியில் உள்ள 'ம்' என்னும் எழுத்து கெட்டது. (இல்லாமற் போயிற்று)

இவ்வாறு சொற்கள் புணரும் போது, எழுத்துகள் கெடுமாயின், அது கெடுதல் விகாரம் எனப்படும்.

நிலைமொழியின் இறுதியில் உள்ள எழுத்துகள், வருமொழியின் முதலில் உள்ள எழுத்துகள் என்ற அடிப்படையில், புணர்ச்சியை நான்கு வகைகளுள் அடக்கலாம்.

அவையாவன:-

1. நிலைமொழியின் இறுதியில் உயிர், வருமொழியின் முதலில் உள்ள உயிர் என்பன புணர்தல் **உயிர்முன் உயிர் புணர்தல்** எனப்படும்.
   (உ-ம் : பனை + ஓலை)

2. நிலைமொழியின் இறுதியில் உள்ள உயிர், வருமொழியின் முதலில் உள்ள மெய் என்பன புணர்தல் **உயிர் முன் மெய் புணர்தல்** எனப்படும்.
   (உ-ம் : பலா + மரம்)

3. நிலைமொழியின் இறுதியில் உள்ளமெய், வருமொழியின் முதலில் உள்ள உயிர் என்பன புணர்தல் **மெய்முன் உயிர் புணர்தல்** எனப்படும்.
   (உ-ம் : பொன் + அணி)

4. நிலைமொழியின் இறுதியில் உள்ள மெய், வருமொழியின் முதலில் உள்ள மெய் என்பன புணர்தல் **மெய் முன் மெய் புணர்தல்** எனப்படும்.
   (உ-ம் : தேன் + கூடு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாகாண அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில்**
**வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான**
**திறந்த போட்டிப் பரீட்சை – 2014 (2015)**

## மொழித்திறன் – 01

- 1 தொடக்கம் 5 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள சொற்களுள் ஒரு சொல் பிழையாக எழுதப்பட்டுள்ளது. அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1. (1) இன்பம் (2) இரக்கம்
   (3) இருப்பு (4) இணிப்பு (..........)

2. (1) சமாதானம் (2) சமபோஷ
   (3) சமதறை (4) சமபந்தி (..........)

3. (1) தண்மை (2) தரலம்
   (3) தாராளம் (4) தராதரம் (..........)

4. (1) மழைமாணி (2) விஞ்ஞானமாணி
   (3) கலைமாணி (4) கலைமாமணி (..........)

5. (1) ஆராச்சி (2) அலுவலகம்
   (3) கண்காட்சி (4) புலக்காட்சி (..........)

- 6 தொடக்கம் 10 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள சொற்களின் அகராதி வரிசையைத் திருத்தமாகக் காட்டும் ஒழுங்கு வரிசையைக் குறித்து நிற்கும் விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

6. (1) அருள் (2) உரி (3) இலை (4) ஆடு
   (1) 1, 2, 3, 4 (2) 1, 4, 3, 2 (3) 1, 4, 2, 3 (4) 3,4,2, 1 (........)

7. (1) இகம் (2) இடம் (3) இச்சை (4) இன்று
   (1) 1, 4, 2, 3 (2) 1, 4, 3, 2 (3) 1, 2, 3, 4 (4) 4,3,2, 1 (........)

8. (1) காலை (2) கிடை (3) குடம் (4) கடம்
   (1) 1, 2, 3, 4 (2) 3, 2, 1, 4 (3) 4, 1, 2, 3 (4) 3,4,1, 2 (........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. (1) தச்சன் (2) தட்பம் (3) தக்கன் (4) தந்தம்
(1) 4, 3, 2, 1 (2) 3, 1, 2, 4 (3) 3, 1, 4, 2 (4) 2,3,1, 4 (........)

10. (1) பத்து (2) புடைவை (3) பீடம் (4) பௌர்ணமி
(1) 1, 4, 2, 3 (2) 2, 3, 1, 4 (3) 1, 2, 3, 4 (4) 1, 3, 2, 4 (........)

- 11 தொடக்கம் 15 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் இணைமொழித் தொடர் அல்லாத சொல்லைத் தெரிவு செய்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

11. (1) கழுத்துக்கொடுத்து (2) அங்கும்இங்கும்
(3) ஆய்ந்துஓய்ந்து (4) அகடவிகடம் (........)

12. (1) கண்டதுண்டம் (2) கடலும்படகும்
(2) குன்றும்குழியும் (4) கோணல்மாணல் (........)

13. (1) அடிமுடி (2) அமளிதுமளி
(3) ஆல்வேல் (4) அரைகுறை (........)

14. (1) பட்டம்பதவி (2) பேரும்புகழும்
(3) புல்பூண்டு (4) பனியும்பனையும் (........)

15. (1) நகைநட்டு (2) மிச்சசொச்சம்
(3) பயிர்பச்சை (4) விடுகதை (........)

- 16 தொடக்கம் 20 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள சொற்றொடரின் பொருளைத் தரும் சொல்லைத் தெரிவு செய்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

16. புதிதாகச் செய்த வள்ளம், தேர் முதலியவற்றை முதன் முதலில் செலுத்திப் பார்த்தல்
(1) வெள்ளோட்டம் (2) தேரோட்டம்
(3) வள்ளோட்டம் (4) முன்னோட்டம் (........)

17. நகையும் பரிகாசமும் சேர்ந்துவர கவிபுனையும் ஆற்றல் மிக்கவன்
(1) சமரகவி (2) விகடகவி (3) அரசகவி (4) ஆசுகவி (........)

18. கல்லிலேனும் செப்பேட்டிலேனும் எழுதப்படும் ஒருவருடைய புகழ்
(1) கல்வெட்டு (2) சத்தியகீர்த்தி
(3) மெய்க்கீர்த்தி (4) கையேடு (........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. அறையில் ஆடி அம்பலத்தில் ஆடுதல்
(1) பொதுவியல் (2) ஆடரங்கம்
(3) ஆடல்வேள்வி (4) அரங்கேற்றம் (.........)

20. குறித்த தினத்தில் நீதிமன்றில் சமூகமளிக்காதவருக்கு நீதிமன்றால் பிறப்பிக்கப்படுவது
(1) எச்சரிக்கை (2) அழைப்பாணை
(3) தண்டனை (4) பிடியாணை (.........)

- 21 தொடக்கம் 25 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் உரிய ஒத்த கருத்துச் சொல்லைத் தெரிவு செய்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

21. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" - கேளிர் என்பது
(1) மானிடர் (2) கேளுங்கள்
(3) உறவினர் (4) அந்நியர் (.........)

22. "மந்த மாருதம் வீசும் சோலை" - மந்த மாருதம் என்பது
(1) புயல் (2) சூறாவளி
(3) தென்றல் (4) வாடைக்காற்று (.........)

23. "கதிர்முகங்கண்டு அம்புஜம் மலர்ந்தது" - அம்புஜம் என்பது
(1) அல்லி (2) தாமரை
(3) மல்லிகை (4) சூரியகாந்தி (.........)

24. "ஈருருளிப் பயணம் இலகுவானது" - ஈருருளி என்பது
(1) தள்ளுவண்டி (2) துவிச்சக்கரவண்டி
(3) மோட்டார்வண்டி (4) மாட்டுவண்டி (.........)

25. "ஐம்பூதங்களுள் பிருதிவியும் ஒன்றாகும்" - பிருதிவி என்பது
(1) காற்று (2) நிலம்
(3) நீர் (4) நெருப்பு (.........)

- 26 ஆம் 27 ஆம் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

26. சொன்னயம் என்பதைப் பிரித்து எழுதினால்
(1) சொன் + நயம் (2) சொல்லு + நயம்
(3) சொல் + நயம் (4) சொன் + னயம் (.........)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. மயில் + தோகை என்பதைச் சேர்த்து எழுதினால்
(1) மயில்தோகை (2) மயில்த்தோகை
(3) மயிற்தோகை (4) மயிற்றோகை (.........)

- 28 தொடக்கம் 30 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள மரபுத்தொடரின் பொருளைத் தெரிவு செய்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

28. நிரம்பாத கல்வி என்ற பொருளைத் தருவது
(1) குறைகுடம் (2) அரைப்படிப்பு
(3) அரைவேக்காடு (4) ஏட்டுச்சுரைக்காய் (.........)

29. வசப்படுமாறு பேசுதல் என்ற பொருளைத் தருவது
(1) வசியப்படுத்துதல் (2) பசையடித்தல்
(3) இனிமைப்பேச்சு (4) புலப்பபடப்பேசுதல் (.........)

30. ஓட்டைக் கையன் என்ற தொடர் குறிப்பது
(1) வள்ளல் (2) செலவாளி
(3) உலோபி (4) ஓட்டையான கை (.........)

- 31 தொடக்கம் 35 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

31. ஆயன் என்பதன் பெண்பாற் சொல்
(1) ஆயி (2) ஆச்சி
(3) ஆய்ச்சி (4) ஆயர் (.........)

32. மா என்ற சொல் பல பொருளில் வரும். இதனை இலக்கணக்காரர் குறிப்பது
(1) இயற்சொல் (2) திரிசொல்
(3) வடசொல் (4) திசைச்சொல் (.........)

33. லாம்பு என்ற சொல்
(1) போர்த்துக்கேயர் சொல் (2) ஆங்கிலச்சொல்
(3) ஒல்லாந்தச் சொல் (4) உருதுச் சொல் (.........)

34. பொதுச்சொல்லாக வருவது
(1) விறலி (2) செவிலி
(3) கைதி (4) உழத்தி (.........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. காக்கை உவக்கும் பிணம்" - உவத்தல் என்பதன் எதிர்ப்பதம்

(1) வியத்தல் (2) விரும்புதல்
(3) காய்தல் (4) போற்றுதல் (.........)

- 36 தொடக்கம் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் உள்ள பொருத்தமான தொடரை தெரிவு செய்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

36. (1) மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை பெய்தது.
(2) மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை பெய்யும்.
(3) மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை உள்ளன.
(4) மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை பெய்கின்றன. (.........)

37. (1) மக்கள் கூட்டம் திரள் திரளாக வந்தன.
(2) மக்கள் கூட்டம் திரள் திரளாக வருகின்றன.
(3) மக்கள் கூட்டம் திரள் திரளாக வந்தது.
(4) மக்கள் கூட்டம் திரள் திரளாக வந்துள்ளன. (.........)

38. (1) முதலையும் மூர்க்கனும் கொண்டது விடாது.
(2) முதலையும் மூர்க்கனும் கொண்டது விடார்
(3) முதலையும் மூர்க்கனும் கொண்டது விடாதன
(4) முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா. (.........)

39. (1) மனிதனோ மிருகமோ அங்கே நிற்பவர்
(2) மனிதனோ மிருகமோ அங்கே நிற்பவன்
(3) மனிதனோ மிருகமோ அங்கே நிற்பது.
(4) மனிதனோ மிருகமோ அங்கே நிற்கும் உரு. (.........)

40. (1) அவர் எனக்கு தந்தை மட்டுமல்லர் தாயுமானவர்.
(2) அவர் எனக்கு தந்தை மட்டுமன்று. தாயுமானவர்.
(3) அவர் எனக்கு தந்தை மட்டுமல்ல தாயுமானவர்.
(4) அவர் எனக்கு தந்தை மட்டுமல்லன் தாயுமானவர். (.........)

- 41 தொடக்கம் 50 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் பிரதான கருத்தை காட்டும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து. அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. தமிழ் இலக்கணங்களுக்கும் இலக்கியங்களுக்கும் பொருள் கண்ட பேராசிரியர்கள் ஏழு எட்டு ஆண்டுகளுக்கு முன்னரே உரைநடையைக் கையாண்டார். எனினும் அவை புலமைச் செறிவுடைய நடையில். அமைந்தவை.

(1) தமிழ் இலக்கியங்களுக்கும் இலக்கணங்களுக்கும் பேராசிரியர்கள் பொருள் கண்டனர்.

(2) உரைநடை இலக்கியம் ஏழு எட்டு நூற்றாண்டுகளுக்கு முன்னரே வளர்ந்துள்ளது.

(3) ஆசிரியர்கள் புலமைச் செறிவு உடையவர்கள்.

(4) தமிழ் நூல்களுக்கு பேராசிரியர்களால் எழுதப்பட்ட உரைநடை புலமைச் செறிவுடையது. (........)

42. ஆய்ந்தறிதல் வேண்டும். அதற்கேற்ப அஞ்சாமை வேண்டும் அன்றேல் சிந்தனையைச் சிறையிலிட்ட கொடுமைக்கு ஆளாகிவிடுவோம்" என்கிறார் பேட்டன் ரஸல்.

(1) பேட்டன் ரஸல் ஒரு தத்துவ மேதையாவார்.

(2) அறிஞர்களுக்கு அஞ்சா நெஞ்சம் வேண்டும்.

(3) அஞ்சா நெஞ்சமில்லாத ஆய்வறிவு சிந்தனையைச் சிறைப் படுத்தும்.

(4) நெஞ்சமில்லாத அறிவு சிறைச்சாலை போன்றது. (........)

43. இன்று அறிவியல் இருபக்கக் கூர்முனை கத்தியாக வளர்ந்துள்ளது. ஒரு பக்கம் ஆக்கம். மறுபக்கம் அழிவு. அழிவிலிருந்து உலகைப் பாதுகாக்க வேண்டியது நமது கடமையாகும்.

(1) அறிவு நுட்பம் சிறப்பாக வளர்ந்துள்ளது.

(2) வளர்ந்துவரும் அறிவியலைத் தக்கவாறு பயன்படுத்த வேண்டும்.

(3) அழிவும் ஆக்கமும் அறிவியலால் வளர்ந்துள்ளன.

(4) அறிவியல் இருபக்க கூர்முனைக் கத்தி போன்றது. (........)

44. இலக்கியம் என்பது காலக் கண்ணாடி. புலவன் ஒருவன் ஒரு பொருளைத் தான் உணர்ந்தவாறே படிப்போருக்கு உணரத் தருவது. மனத்தை ஈர்க்கும் கற்பனையும் உணர்ச்சியும் அமையுமாறு ஒலி ஒழுங்கில் தருவது அது.

(1) இலக்கியம் என்பது புலவனின் உணர்ச்சி. கற்பனை கலந்து கற்போரை மகிழ்விப்பது.

(2) இலக்கியம் என்பது சமூக நடத்தைகளின் பிரதிபலிப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) இலக்கியப் புலவன் ஒருவனது உணர்ச்சிகளின் வெளிப்பாடாகும்.
(4) இலக்கியத்தை உணர்வும் கற்பனையும் கலந்து தருவதே புலவனின் கடமையாகும். (.......)

45. எமது சமூகக் கேடுகளுள் ஒன்றான வேலையில்லாத திண்டாட்டம் இளைஞரைத் திசைதிருப்பவல்ல சமூகத்திலிருந்து அன்னியப்பட வைப்பது. இது மிகவும் கொடியது.
(1) வேலையில்லாத் திண்டாட்டம் சமூகக் கேடுகளுள் ஒன்றாகும்.
(2) வேலையில்லாத் திண்டாட்டம் இளைஞரைத் திசை திருப்ப வல்லது.
(3) வேலையில்லாத் திண்டாட்டம் இளைஞரையும் சமூகத்தையும் அன்னியப்படுத்துவது.
(4) வேலையில்லாத் திண்டாட்டம் இளைஞரைத் திசைதிருப்பி சமூகத்திலிருந்து அன்னியப்படுத்துவது. (.......)

46. பெண்கள் ஈடுபட்டுள்ள பெரும்பாலான தொழில்கள் போராடிச் சம்பளத்தை அதிகரிக்க முடியாதனவாக ஆற்றல்மிக்க தொழிற்சங்க பலத்தைக் கொண்டிராதனவாகவும் காணப்படுகின்றன.
(1) பெண்கள் செய்யும் தொழில்கள் அதிகாரமளிக்கப்படாதவை.
(2) தொழில் செய்யும் பெண்களுக்கு தொழிற்சங்கங்கள் உண்டு.
(3) பெண்களது தொழிலும் தொழிற்சங்கங்களும் வலுவற்றவை.
(4) பெண்களது சம்பள உயர்வுக்காக தொழிற்சங்கங்கள் போராடுவதில்லை. (.......)

47. கோளமயமாக்கலில் அறிவு என்பது ஒரு பண்டமாக மாற்றப் பட்டுள்ளது. அறிவுச் செயற்பாட்டில் ஈடுபடும் நிலையங்கள் பண்ட உற்பத்தி செய்யும் வேலைத்தலங்களாக நிலைமாற்றம் பெற்றுள்ளன.
(1) கோளமயமாக்கலில் அறிவு வர்த்தகப் பண்டமாகிவிட்டது.
(2) கோளமயமாக்கல் கல்வி நிலையங்களை அறிவுப் பண்ட உற்பத்தி நிலையங்களாக்கிவிட்டன.
(3) கோளமயமாக்கல் கல்வி நிலையங்களை வேலைத்தலங்களாக மாற்றியமைத்துவிட்டன.
(4) கோளமயமாக்கலில் அறிவு நிலையங்கள் அறிவை உற்பத்தி செய்வதில்லை. (.......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48. இலாபம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட முதலாளிச் சமூகம், சமூகத்தின் தேவைகளைக் கணக்கில் கொள்ளாது. இதையே அராஜகப் பொருள் உற்பத்தி முறை என்பர்.

(1) அராஜகப் பொருள் உற்பத்தி முறை என்பது இலாபத்தை அடிப்படையாகக் கொண்டது.

(2) அராஜகப் பொருள் உற்பத்தி முறை என்பது முதலாளித்துவத்தின் மாற்று வடிவமாகும்.

(3) அராஜகப் பொருள் உற்பத்தி சமூகத் தேவைகளில் கவனஞ் செலுத்துகிறது.

(4) முதலாளித்துவ உற்பத்தி முறை சமூகத் தேவைகளின் மாற்று வடிவமாகும். (.........)

49. இசை மொழி கடந்தது: காலத்தை உறையச் செய்வது: பிரபஞ்ச உண்மையை உணர்த்துவது: அதை ரசிக்க வேண்டும். அதை ஆராயக் கூடாது. மொழிக்குள் இருந்து அதனைப் பேசக்கூடாது.

(1) இசை மொழி, காலம் என்பவற்றைக் கடந்தது.

(2) இசை பிரபஞ்ச உண்மையை உணர்த்தவல்லது.

(3) இசையை ஆராயும்போதே அது சிறக்கவல்லது.

(4) இசை விமர்சனங்களுக்கெல்லாம் அடங்காதது. (.........)

50. அதிகாரத்தின் ஒரு வடிவமே பாலியல்பு. சமூகரீதியாகக் கட்டமைக்கப் படும் பாலியல்பு சமூக நடத்தை கோலங்களால் நடைமுறைப்படுத்தப் படுகின்றனது.

(1) பாலியல்பு அதிகாரத்தின் செல்வாக்குக்கு உட்பட்டது.

(2) பாலியல்பு சமூகரீதியாக செயற்படுகின்றது.

(3) பாலியல்பு நடத்தைக் கோலங்களில் பிரதிபலிக்கின்றது.

(4) பாலியல்பு அதிகாரத்தின் ஒரு வடிவமாகும். (.........)

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி II

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

1. வெளிநாட்டிலுள்ள உங்களது பேனா நண்பன் / நண்பி ஒருவர் குறுகிய விடுமுறை ஒன்றில் இலங்கைக்கு வருவதற்கு எதிர்பார்த்து உங்களுக்குக் கடிதம் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளார். அதன்மூலம் இலங்கையில் சுற்றுலா மூலம் பார்வையிடுவதற்குப் பொருத்தமானதும், முக்கியமானதுமான வரலாற்று முக்கியத்துவ இடங்கள் தொடர்பாகத் தகவல்களை உங்களிடமிருந்து அறிய முயற்சிக்கிறார். இத்தகைய வரலாற்று முக்கியத்துவமான இடங்கள் இரண்டு பற்றிய தகவல்களை உள்ளடக்கி பேனா நண்பனுக்கு / நண்பிக்கு அனுப்புவதற்கான கடிதம் ஒன்றை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த வரலாற்று முக்கியத்துவ இடங்கள் இரண்டு, அவற்றின் முக்கியத்துவம், அவற்றின் அமைவிடம், தங்குதல் மற்றும் போக்குவரத்து வசதிகள், கொழும்பிலிருந்து அதற்கான தூரத்தின் அளவு மற்றும் பொருத்தமான வேறு தகவல்கள் என்பன கடிதத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். (100 சொற்களுக்குக் குறையாமலும் 150 சொற்களுக்கு அதிகமாகாமலும் எழுதப்படல் வேண்டும்.) (25 புள்ளிகள்)

2. பின்வரும் உரைப்பகுதிகள் ஒவ்வொன்றையும் வாசித்து அதன் சாராம்சத்தை 15 சொற்களில் ஒரு **தனி வாக்கியத்தில்** எழுதுக.

   (i) ஒரு சிறந்த தலைமைத்துவமானது ஒரு நிறுவனம் அதன் நோக்கத்தின் அடைவதற்கு உதவும். இதற்காக அது நிறுவனத்தி லுள்ள அங்கத்தவர்களைச் சரியாக வழிநடத்தி அவர்களது ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள முயற்சிசெய்யும்.

   (ii) வேலைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்குப் பொருத்தமான பயிற்சியை வழங்கி அவர்களை விருத்தி செய்யவேண்டிய பொறுப்பு நிறுவனத்திற்கு உண்டு. புதிதாக வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுக்கு மட்டுமல்ல ஏற்கனவே நிறுவனத்தில் வேலை செய்பவர்களுக்குக் காலத்துக்குக்காலம் பொருத்தமான பயிற்சியினை வழங்குதல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii) ஒவ்வொன்றுக்கும் ஒரு முழுமை இருக்கிறது. அந்த முழுமையே அதன் மூலவடிவம். காலத்துக்குக் காலம் வடிவங்கள், வகைகள் மாறுபடலாம். ஆயினும் ஒன்றன் மூலவடிவம் அல்லது மூலப்பண்பு என்றுமே மாறாது.

(iv) அறிவியல் துறைகளுக்கு அடிப்படையாய் இருக்கும் பகுதி கணிதமாகும். கணிதத்தின் துணையின்றி அறிவியல் துறைகள் செவ்வனே இயங்கமாட்டா. இதனை எல்லா நாட்டினரும் உணர்ந்து கணித அறிவைப் போற்றி வளர்த்து வந்துள்ளனர்.

(v) மனிதன் நாகரிக வளர்ச்சியில் முன்னரைக் காட்டிலும் பன்மடங்கு முன்னேறியுள்ளான். ஆனால் மனித விழுமியங்களைப் பேணு வதில் மிகவும் பின்னடைந்து விட்டான். இன்று ஒழுங்கான வாழ்வினை வாழமுடியாமலே மனிதன் திக்கித்திணறுவதற்கு இதுவே காரணமாகும்.

(05x 05 = 25 புள்ளிகள்)

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைகள்

## பகுதி I

| வினா இல. | விடை | வினா இல. | விடை | வினா இல. | விடை |
|---|---|---|---|---|---|
| 01. | 4 | 19. | 4 | 35. | 3 |
| 02. | 3 | 20. | 4 | 36. | 2 |
| 03. | 1 | 21. | 3 | 37. | 3 |
| 04. | 1 | 22. | 3 | 38. | 4 |
| 05. | 1 | 23. | 2 | 39. | 4 |
| 06. | 2 | 24. | 2 | 40. | 4 |
| 07. | 2 | 25. | 2 | 41. | 4 |
| 08. | 3 | 26. | 3 | 42. | 2 |
| 09. | 2 | 27. | 3 | 43. | 2 |
| 10. | 4 | 28. | 2 | 44. | 4 |
| 11. | 1 | 29. | 1 | 45. | 4 |
| 12. | 2 | 30. | 2 | 46. | 3 |
| 13. | 3 | 31. | 3 | 47. | 2 |
| 14. | 4 | 32. | 2 | 48. | 1 |
| 15. | 4 | 33. | 3 | 49. | 2 |
| 16. | 1 | 34. | 3 | 50. | 2 |
| 17. | 2 | | | | |
| 18. | 3 | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி II

1. ◆ தங்கள் விலாசம்
   ◆ நண்பன் / நண்பி விளிப்பு
   ◆ வரலாற்று முக்கியத்துவ இடங்கள்

**சிகிரியா**

முக்கியத்துவம் - புராதன ஓவியம்
அமைவிடம் - மாத்தளை மாவட்டம்
தங்குதல் - சிகிரியா ஹோட்டல்
போக்குவரத்து வசதி - தனியார் வாகன வசதி
கொழும்பிலிருந்து தூரம் 200km

**கதிர்காமம்**

முக்கியத்துவம் - ஆலய வழிபாடு
அமைவிடம் - அம்பாந்தோட்டை மாவட்டம்
தங்குதல் - கதிர்காம இந்து விடுதி
போக்குவரத்து வசதி - தனியார் வாகன வசதி
கொழும்பிலிருந்து தூரம் 150km

   ◆ முடிவு

(2) (i) ஒரு நிறுவனத்தின் தலைமைத்துவம் தனது அங்கத்தவர்களைப் பயன்படுத்தி அதன் நோக்கத்தை அடைய முயற்சி செய்யும்.

(ii) நிறுவனம் தனது புதிய. பழைய ஊழியர்களுக்கு காலத்துக்குக் காலம் பயிற்சிகளை வழங்கி விருத்தி செய்வது அதன் பொறுப்பாகும்.

(iii) பொருட்களின் வடிவங்கள் காலத்துக்குக் காலம் மாறுபட்டாமலும் அதன் மூலவடிவம் மாறுபடாது.

(iv) அறிவியல் துறைகள் செவ்வனே இயங்க அனைத்து நாட்டினரும் கணித துறையை போற்றி வளர்த்து வந்துள்ளனர்.

(v) மனிதன் நாகரிக வளர்ச்சியடைந்தாலும் விழுமிய வாழ்வை பேணுவதில் தவறிழைத்துவிட்டதால் ஒழுங்கான வாழ்வை இழந்துவிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாகாண அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில்**
**வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான**
**திறந்த போட்டிப் பரீட்சை – 2014 (2015)**

## மொழித்திறன் – 02

- 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் தரப்பட்டுள்ள (1), (2), (3), (4) ஆகிய விடைகளில் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, விடைத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமையக் குறிக்குக.

- 1 தொடக்கம் 5 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள சொற்களுள் ஒரு சொல் பிழையாக எழுதப்பட்டுள்ளது. அச் சொல்லைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

1. (1) அடக்கம் (2) அமரர்
   (3) ஆருயிர் (4) அர்ப்பர் (...........)

2. (1) கருமி (2) காருண்யம்
   (3) கறுமை (4) கைம்மை (...........)

3. (1) அபிவிருத்தி (2) நன்கொடை
   (3) பள்ளித்தலம் (4) அமைச்சு (...........)

4. (1) சகடம் (2) சன்மானம்
   (3) நினைவுகூறு (4) கோப்பு (...........)

5. (1) பிடியாணை (2) விதப்புரை
   (3) காப்பகம் (4) திணைக்களம் (...........)

- 6 தொடக்கம் 10 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள சொற்களின் அகராதி வரிசையைத் திருத்தமாகக் காட்டும் ஒழுங்கு வரிசையைக் குறித்து நிற்கும் விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

6. (1) அகம் (2) அன்பு (3) அந்நியன் (4) அசிங்கம்
   (1) 1, 2, 3, 4 (2) 4, 3, 2, 1 (3) 1, 4, 3, 2 (4) 1, 3, 2, 4 (........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. (1) கடவுள் (2) கண்ணன் (3) கருப்பட்டி (4) கற்பு
(1) 1, 2, 3, 4 (2) 3, 2, 1, 4 (3) 1, 2, 4, 3 (4) 2, 3, 4, (.......)

8. (1) தருமம் (2) சங்கம் (3) கானகம் (4) நற்றிணை
(1) 3, 2, 4, 1 (2) 2, 3, 1, 4 (3) 2, 4, 3, 1 (4) 3, 2, 1, 4 (.......)

9. (1) சுற்றறிக்கை (2) மேலதிகாரி (3) சிற்றூழியர் (4) விடுதி
(1) 4, 3, 2, 1 (2) 3, 1, 2, 4 (3) 1, 3, 2, 4 (4) 1, 3, 4, 2 (.......)

10. (1) உடும்பு (2) உப்பு (3) உவப்பு (4) உரிமை
(1) 1, 2, 3, 4 (2) 1, 2, 4, 3 (3) 2, 1, 4, 3 (4) 4, 2, 3, 1 (.......)

- 11 தொடக்கம் 15 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் இணைமொழித் தொடர் அல்லாத தொடரைத் தெரிவு செய்து குறித்து நிற்கும் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

11. (1) அக்கம்பக்கம் (2) அங்குஇங்கு
(3) ஆடிப்பாடி (4) அருங்காட்சி (..........)

12. (1) வடக்குமேற்கு (2) இடக்குமுடக்கு
(3) இல்லாததுபொல்லாதது (4) இகபரம் (..........)

13. (1) எலும்புந்தோலும் (2) எடுத்துக்காட்டு
(3) ஏமம்சாமம் (4) ஏற்றத்தாழ்வு (..........)

14. (1) கண்ணும்கருத்தும் (2) கல்விகேள்வி
(3) கருவில் திரு (4) கன்றுகாலி (..........)

15. (1) பாலும்பழமும் (2) பல்கிப்பெருகி
(3) பழக்க வழக்கம் (4) பச்சைப்பசேல் (..........)

- 16 தொடக்கம் 20 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள சொற்றொடரின் பொருளைத் தரும் சொல்லைத் தெரிவு செய்து, அதனைக் குறித்துநிற்கும் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

16. ஒரு நீண்டசொல் காலக்கிரமத்தில் குறுகி ஒலிப்பது
(1) இடக்கரடக்கல் (2) மரூஉ (3) குழூஉக்குறி (4) குறுக்கம் (.........)

17. ஒரு தண்டிலே பல மலர்கள் சேர்ந்துள்ள பூங்கொத்து
(1) கண்ணி (2) இரண்டை (3) மஞ்சரி (4) கதம்பம் (.........)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. அரசுகள் தங்குடிமக்களுக்கு வழங்கும் சலுகை
(1) சம்பளம் (2) ஓய்வூதியம் (3) வெகுமதி (4) மானியம் (.........)

19. அறுபதாவது ஆண்டு முடிவில் கொண்டாடப்படும் விழா
(1) வைரவிழா (2) பொன்விழா (3) அமுதவிழா (4) முத்துவிழா (.........)

20. துறைகளுக்கு ஒதுக்கப்பட்ட வரவு-செலவுத்திட்ட நிதி போதாத விடத்து, துறைசார்ந்த மந்திரியால் பாராளுமன்றத்தில் கொண்டுவரப் படுவது.
(1) துண்டுவிழும் தொகை அறிக்கை (2) குறை நிரப்புப் பிரேரணை
(3) எழுத்து மூல அனுமதி (4) திருத்தக் கட்டளைச் சட்டம் (.........)

- 21 தொடக்கம் 25 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் ஒத்தகருத்துச் சொல்லைத் தெரிவு செய்து, அதனைக் குறித்துநிற்கும் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

21. "மேழி பிடிக்குங்கை மேல்வேந்தர் நோக்குங்கை" - இங்கு மேழி என்பது
(1) வேளாண்மை (2) உழவாரம் (3) ஏர் (4) ஆயுதம் (.........)

22. "விசும்பின் துளி வீழாது போயின், உலகில் பசும்புல் காண்பது அரிது" - விசும்பு என்பது
(1) கடல் (2) ஆறு (3) ஆகாயம் (4) நீர் (.........)

23. கமலா கல்லூரிப்படிப்புடன் நிருத்தமும் கற்றாள் - நிருத்தம் என்பது
(1) இசை (2) சமையல் (3) சித்திரம் (4) நடனம் (.........)

24. இலக்கு இல்லாத செயல் பயனற்றாகி விடும் - இலக்கு என்பது
(1) சுறுசுறுப்பு (2) குறி (3) விருப்பு (4) ஈடுபாடு (.........)

25. சுனாமிப் பேரலையால் இலங்கையில் பெரும் அநர்த்தங்கள் ஏற்பட்டன. - அநர்த்தங்கள் என்பது
(1) அழிவு (2) இடர் (3) துன்பம் (4) மரணம் (.........)

- 26 ஆம் 27 ஆம் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்து, அதனைக் குறித்துநிற்கும் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. அவ்விடம் என்பதைப் பிரித்தெழுதினால்

(1) அவ் + விடம் (2) அவ் + இடம
(3) அ + இடம் (4) அ + விடம் (............)

27. கால் + சதங்கை என்பதன்

(1) கால்சதங்கை (2) காற்ச்சதங்கை
(3) காற்சதங்கை (4) காற்றதங்கை (............)

- 28 தொடக்கம் 30 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள மரபுத் தொடரின் பொருளைத் தெரிவு செய்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

28. கையாலாகாதவன் என்ற பொருளைத் தருவது

(1) கைவழங்காதவன் (2) திறனற்றவன்
(3) உலோபி (4) தீயவன் (............)

29. கதை கட்டுதல் எனும் தொடர் குறிப்பது

(1) கதை சொல்லுதல் (2) கதைகளைச் சேர்த்துக் கட்டுதல்
(3) பொய்ச் செய்திகளைக் கிளப்புதல்
(4) குறும்பு செய்தல் (............)

30. விழலுக்கு இறைத்தல் என்பது

(1) பயிருக்கு இறைத்தல் (2) வீண்பாடுபடுதல்
(3) பணத்தைச் செலவு செய்தல் (4) கூலிக்கு நீர் இறைத்தல் (............)

- 31 தொடக்கம் 35 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் உரிய விடையைத் தெரிவு செய்து குறித்துநிற்கும் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

31. பாணன் என்ற சொல்லின் பெண்பாற் சொல்

(1) பாணி (2) விறலி
(3) பாணத்தி (4) செவிலி (............)

32. கட்டடம் என்ற சொல்

(1) வடசொல் (2) கிரேக்கச் சொல்
(3) தெலுங்குச் சொல் (4) உருதுச் சொல் (............)

33. ஓரை என்ற சொல்

(1) தமிழ்ச் சொல் (2) கிரேக்கச் சொல்
(3) அரபுச் சொல் (4) சிங்களச் சொல் (............)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. பெயராகவும் வினையாகவும் வரமுடியாத சொற்கள் அடங்கிய தொகுதி

(1) அகல். அடை (2) காய். கனி

(3) செய். செல் (4) நடி. மிடி (............)

35. தமர் என உவத்தல் நடு நிலையாளருக்குச் சிறந்ததல்ல. உவத்தல் என்பதன் எதிர்ச் சொல்

(1) உபசரித்தல் (2) காய்தல்

(3) அழித்தல் (4) இரங்கல் (............)

- 36 தொடக்கம் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள சொற்றொடரின் பொருளைத் தரும் சொல்லைத் தெரிவு செய்து, அதனைக் குறித்துநிற்கும் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

36. (1) பழங்கள் எல்லாம் நல்லதாய் இருந்தது.
(2) பழங்கள் எல்லாம் நல்லதாய் இருந்தன.
(3) பழங்கள் எல்லாம் நல்லனவாய் இருந்தன.
(4) பழங்கள் எல்லாம் நல்லனவாய் இருந்தது. (............)

37. (1) ஆண்மகனோ பெண்மகளோ அங்கே நிற்பது.
(2) ஆண்மகனோ பெண்மகளோ அங்கே நிற்பவன்.
(3) ஆண்மகனோ பெண்மகளோ அங்கே நிற்பவள்.
(4) ஆண்மகனோ பெண்மகளோ அங்கே நிற்பவர் (............)

38. (1) பொய் சொல்வதும் களவெடுப்பதும் நல்ல பழக்கமல்ல.
(2) பொய் சொல்வதும். களவெடுப்பதும். நல்ல பழக்கமன்று.
(3) பொய் சொல்வதும். களவெடுப்பதும். நல்ல பழக்கங்களல்ல.
(4) பொய் சொல்வதும் களவெடுப்பதும் நல்ல பழக்கங்களன்று (............)

39. (1) கண்ணனும் அவனது வளர்ப்பு நாயும் வந்தது.
(2) கண்ணனும் அவனது வளர்ப்பு நாயும் வந்தன.
(3) கண்ணனும் அவனது வளர்ப்பு நாயும் வந்தனர்.
(4) கண்ணனும் அவனது வளர்ப்பு நாயும் வந்தனன். (............)

40. (1) அந்தச் சுற்றறிக்கை அறிவுறுத்தல் மட்டுமல்ல, எச்சரிக்கையாக விருந்தது.
(2) அந்தச் சுற்றறிக்கை அறிவுறுத்தல் மட்டுமல்ல. எச்சரிக்கை யாகவும் இருந்தது.
(3) அந்தச் சுற்றறிக்கை அறிவுறுத்தல் மட்டுமல்லாது. எச்சரிக்கை யாகவும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) அந்தச் சுற்றறிக்கை அறிவுறுத்தலாக மட்டுமல்லாது, எச்சரிக்கை யாகவிருந்தது. (..........)

- 41 தொடக்கம் 50 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் பிரதான கருத்தை எடுத்துக் காட்டும் மிகப் பொருத்த மான விடையைத் தெரிவு செய்து குறித்துநிற்கும் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

41. பல ஆண்டுகளின் முன் மக்களின் பொழுதுபோக்குச் சாதனமாக விளங்கிய நாடகத்துச் சமமாக இன்று பேசும் படங்கள் வந்துவிட்ட ன.
   (1) மக்களின் பொழுதுபோக்கச் சாதனமாக நாடகம் விளங்கியது.
   (2) பேசும் படங்கள் நாடகத்தைச் செல்வாக்கிழக்கச் செய்து விட்டன.
   (3) நாடகத்தின் இடத்தைப் பேசும்படம் பிடித்துக் கொண்டது.
   (4) பேசும் படங்கள் நாடகத்தின் வளர்ச்சியேயாகும். (..........)

42. "ஒரு நாட்டின் அபிவிருத்தியில் உள்நாட்டு உற்பத்திக்குச் சமமான பங்கை வகிப்பது ஏற்றுமதி வியாபாரமாகும்.
   (1) உள்நாட்டு உற்பத்தியே ஒரு நாட்டின் பொருளாதாரத்தைத் தீர்மானிக்கும்.
   (2) ஏற்றுமதி வியாபாரம் உள்நாட்டு உற்பத்திக்குப் போட்டியாக அமையும்.
   (3) ஏற்றுமதி வியாபாரம் இல்லையாயின் நாடு அபிவிருத்தி அடையாது.
   (4) ஒரு நாட்டின் அபிவிருத்தியில் ஏற்றுமதி வியாபாரத்துக்கும் பிரதானபங்குண்டு. (..........)

43. தமிழுக்கு தொண்டாற்றிய கால்டுவெல். போப்பையர் போன்ற மேல் நாட்ட வருள் நாம் இன்னும் அறிந்து கொள்ள வேண்டியவரான வீரமாமுனிவரின் தமிழ்ப்பணி மிகவும் மகத்தானது.
   (1) கால்டு வெல், போப்பையர் போன்றோர் தமிழுக்குத் தொண்டா ற்றினர்.
   (2) வீரமா முனிவரை நாம் இன்னமும் அறியவில்லை.
   (3) வீரமா முனிவரைப் போல ஏனையோர் தமிழ்த் தொண்டாற்ற வில்லை.
   (4) தமிழ்த் தொண்டாற்றிய மேலை நாட்டவருள் வீரமாமுனிவர் பணி முக்கியமானது. (..........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. ஆசிரியர்கள் மாணவர் மனதில் அறிவைப் புகுத்திட முடியாது. மாணவர்கள் இன்றியமையாத நூல்களை ஐயம் திரிபுகள் திருத்தமாக வும் அருத்தமாகவும் கற்றல் வேண்டும்.
   (1) ஆசிரியரால் மாணவருக்குக் கற்பிக்க இயலாது.
   (2) மாணவர்கள் ஐயம் திரிபுறக் கற்பிக்க வேண்டும்.
   (3) ஆசிரியரது கற்பித்தலுக்கு மேலாகச் சுயகற்றல் மாணவருக்கு அவசியமானது.
   (4) மாணவர்கள் சுயகற்றல் மூலம் மிகுந்த அறிவைப் பெறலாம்.

45. நமது நாட்டில் நாணயப் பெறுமதி இறக்கமானது, பணவீக்கத்தை ஏற்படுத்தி, மக்களின் வாங்கும் சக்தியைக் குறைத்து விட்டது.
   (1) நமது பணத்தின் பெறுமதி குறைந்து விட்டதால் மக்களால் பொருட்களை வாங்க முடியவில்லை.
   (2) பணவீக்கம் பொருட்களின் விலையைக் கூட்டிவிடும்.
   (3) பணவீக்கத்தால் மக்களின் வாழ்க்கைத் தரம் வீழ்ச்சியடைந்து விட்டது.
   (4) நமது நாட்டுப் பொருளாதாரத்தின் தளம்பல் நிலை மக்களின் பொருளாதார நிலையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. (............)

46. சமஷ்டி முறையென்பது உடன்படிக்கையொன்றாகும். இணக்கப் பாடொன்றில்லாமல் இதனை எட்ட முடியாது.
இதனாலேயே 17 வது யாப்புச் சீர்த்திருத்தம் தோல்வி கண்டது.
   (1) சமஷ்டி முறையென்பது அரசியல் தீர்வாகும்.
   (2) இணக்கப்பாடொன்றுடனான உடன்படிக்கையே சமஷ்டி முறைக்கு அவசியமானதாகும்.
   (3) இணக்கப்பாடே சமஷ்டி முறையாகும்.
   (4) 17 வது யாப்புச் சீர்த்திருத்தமே சமஷ்டி முறைபற்றிக் குறிப்பிடு க ி ன ் ற து .
(............)

47. குடும்ப பொருளாதாரம், எதிர்காலத்திட்டமிடுதல் குறித்து போதிய கவனஞ் செலுத்தாததால் பல குடும்பங்கள் இன்னல்களை எதிர் கொள்ள நேரிடுகின்றது.
   (1) குடும்பங்களின் இன்னல்களுக்கு மூலகாரணம் பொருளாதார மேயாகும்.
   (2) எதிர்காலத் திட்டமிடுதல் என்பது குடும்பங்களின் மகிழ்ச்சிக்கு முக்கியமானதாகும்.
   (3) குடும்பங்களின் மகிழ்வான வாழ்விற்கு பொருளாதாரத் திட்ட மிடுதல் அவசியமானதாகும்.
   (4) குடும்ப பொருளாதாரம் குறித்து அரசும் மக்களும் கவனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்தவேண்டும். (............)

48. சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புப் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் சேரிப் புறங்களில் மாத்திரமன்று வசதியானவர்கள் வசிக்குமிடங்களிற்கூட அவசிய மாகின்றது.
   (1) சேரிப்புறமக்கள் படிப்பறிவற்றவர்கள்.
   (2) சேரிப்புறங்களில் வாழ்பவர்களுக்கும் படித்தவர்களுக்கும் கருத்தரங்குகள் நடத்தப்பட வேண்டும்.
   (3) சகலருக்கும் சுற்றுப்புறச் சூழல் பற்றிய விழிப்புணர்வு அவசிய மானதாகும்.
   (4) வசதியானவர்கள் சூழலைத் துப்புரவாக வைத்திருக்க மாட்டார்கள். (............)

49. முன்னேற்றுவதற்கான மார்க்கங்களும் சந்தர்ப்பங்களும் கிடைக்கும் போதெல்லாம் மந்தபுத்தியினாலும், சோர்ந்துபோய் இருப்பதனாலும் பலர் நல்ல சந்தர்ப்பங்களைத் தவறவிடுகின்றனர்.
   (1) காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள வேண்டும்.
   (2) முன்னேறாதவர்கள் சோம்பேறிகள்.
   (3) சந்தர்ப்பங்கள் எப்போதும் கிடைத்துக் கொண்டே இருக்கும்.
   (4) முன்னேறுவதற்கான பல மார்க்கங்கள் உண்டு (............)

50. கோளமயமாக்கலால் வறுமைக் கோட்டின் கீழ்வாழும் பெண்களே அதிக தாக்கத்துக்கு உள்ளாகின்றனர். வறிய பெண்கள் கல்விச் செயல்முறைகளி லிருந்து இலகுவாக வெளிவீசப்பட்டு விடுகின்றனர்.
   (1) கோளமயமாக்கல் வறிய பெண்களுக்கு எதிரானது.
   (2) கோளமயமாக்கல் வறிய பெண்களைக் கல்விச் செயல் முறையிலிருந்து அந்நியப்படுத்துகின்றது.
   (3) கோளமயமாக்கல்ால் செல்வந்தர்களே நன்மை பெறுவர்.
   (4) வறிய பெண்களுக்கான கல்வியை கோளமயமாக்கல் நிராகரிக்கின்றது. (............)

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி II

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

1. இயற்கை அனர்த்தத்தால் பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கு ஆதரவு தந்து அவர்களைப் பராமரிக்க ஒரு நிறுவனம் விரும்புகிறது. அதற் கான ஒன்றைத் தயாரிக்கும் எழுதுநர் என நீங்கள் கருதி இது தொடர் பான தகவல்களை உள்ளடக்கிய வகையில் (150 சொற்கள்) ஒரு அறிக்கை தயாரிக்குக. (பெயர், இடங்கள் என்பவற்றைக்குறிக்குப் புனை பெயரைப் பயன்படுத்துக.)

2. பின்வரும் உரைப்பகுதிகள் ஒவ்வொன்றையும் வாசித்து அதன் சாராம்சத்தை 15 சொற்களில் ஒரு தனி வாக்கியத்தில் எழுதுக.

(i) ஆதியில் மரநிழல்களே வழிபாடு செய்யும் இடங்களாய் இருந்தன. இன்று உள்ள ஒவ்வொரு கோயிலுக்கும் ஒவ்வொரு மரம் சிறந்ததெனக் கூறுதற்குக் காரணம் இதுவே. மரநிழல்களில் கற்களை நாட்டி வழிபடும் வழக்கம் பின் ஏற்படலாயிற்று. வழிபாட்டிற்குரிய கற்களில் வெயில் மழைபடாவண்ணம் கொட்டகைகள் அமைக்கப்பட்டன. கொட்டகையின் உள்ளிடம் பலரும் கூடத்தக்க பரப்புடையதாய் இருந்தது. கொட்டகைகள் மாறி ஒவ்வொரு தெய்வத்துக்கும் தனித்தனி கோயில்கள் எழுந்தன. தனிக்கோயில் பலவற்றையடக்கி, இக்காலத்துள்ளன போன்ற பெரிய கோயில்கள் பின்தோன்றின.

(ii) தமிழ்நூற் பரப்பினை உளங்கொண்டு நோக்குமிடத்துக் கடைச் சங்கத்து இறுதிக்காலம் முதல் இது வரையும் தமிழ் மொழியிலே வெளிவந்த நூல்களுட் பெரும்பாலான பலவாகிய சமயங் களைத் தழுவிய நூல்களாமெனக் காண்கின்றோம். சமண பௌத்த முனிவர்களும் சைவ வைணவப் பெரியார்களும் செய்தது போலவே அண்மையில் இந் நாட்டினரோடு கலந்த இஸ்லாமிய கிறிஸ்தவ சகோதரர்களும் தத்தம் சமய உண்மைகள் பொதிந்த நூல்களைத் தமிழ் மொழியிலே இயற்றி வெளியிட்டனர். அங்ஙனமாதலின் தமிழ் வளர்க்கும் மாநாடு களும் கழகங்களும் உண்மை ஞானிகளைப் போலவே சாதி மதவேறுபாடின்றி மன்பதையார் அனைவரையும் ஒப்பு நோக்கும் இயல்பினவாதல் வேண்டும் என்பது வெளிப்படை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii) ஒரு நாட்டின் குறித்த ஒரு பிரதேச எல்லைக்குள் வெளி நாட்டவர்களும் உள்நாட்டவர்களும் இணைந்து தீர்வைகளற்ற இறக்குமதிப் பொருட்களையும், உற்பத்திச் சாதனங்களையும் உள்நாட்டில் கிடைக்கக்கூடிய மூலப் பொருட்களையும் பயன்படுத்தி, சர்வதேச சந்தையில் போட்டியிடக்கூடிய கைத் தொழிற் பொருட்களை உற்பத்தி செய்கின்ற அமைப்பையே சுதந்திர வர்த்தக வலயம் என்பர். கிறிஸ், அயர்லாந்து, வெனெசு வெலா, தைவான், பிலிப்பைன், சிங்கப்பூர், ஹொங்கொங் முதலிய நாடுகளில் சுதந்திர வர்த்தக வலயங்கள் இயங்கி வருகின்றன. இலங்கையிலும் ஒரு சுதந்திர வர்த்தக வலயம் செயற்பட்டு வருகின்றது.

(iv) இலங்கை அபிவிருத்தியடைந்துவரும் ஒரு நாடாகும். இலங்கையில் ஆதியில் நிலவிய தன்னிறைவுப் பொருளா தாரம், ஐரோப்பிய குடியேற்ற நாடாக இருக்க நேர்ந்ததன் விளைவாக இறக்குமதி - ஏற்றுமதிப் பொருளாதாரமாக மாற்ற மடைந்தது. மூன்று நூற்றாண்டுகளாக இலங்கை ஐரோப்பிய குடியேற்ற நாடாக விளங்கியது. அதனால் இலங்கையின் பொருளாதார அமைப்பு மாற்றமடைந்து, பெருந்தோட்டப் பயிர்கள் இலங்கை யின் முக்கிய பொருளாதார வாய்ப்புகளாக மாற்றமடைந்தன. உணவுப் பயிர்ச் செய்கை அபிவிருத்தி கவனிக்கப்படாமல் போனது. நமது நாட்டின் தேசிய வருவாய் நமது ஏற்றுமதிப் பொருட்களின் வர்த்தக நிலையில் தங்கியிருக்க நேர்ந்துள்ளது.

(v) பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் கலைத்திட்டங் களில் மேலைத்தேய கலாசாரத்தின் செல்வாக்கு படிப்படியாக ஊட்டப்பட்டு வருகின்றது. உதாரணமாக பல்கலைக் கழகங் களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தொடர்தொழில் ஆற்றுப் படுத்தற் சேவையில் (Career Guidance) பெரிய கம்பனிகளில் நுழைவு உன்னதங்கள் பற்றி விளக்கப்படுகின்றதேயன்றி, இலங்கையின் மூலவளங்களின் பயன்பாட்டை முன்னெடு க்கும் தொழில்கள் பற்றியும், சமூக நன்மைகளை முன்னெடு க்கும் தொழில்கள் பற்றியும் விளக்குதல் வறிதாகவுள்ளது. ஆங்கில அறிவுக்கும் தகவல் தொழில்நுட்ப அறிவுக்கும் கொடுக்கப்படும் முக்கியத்துவம், இலங்கையின் வளம்சார் தொழில்களுக்கும் சமூக நீதிக்குமுள்ள தொடரடிகளுக்கு வழங்கப்படுவதில்லை.

(5 x 5 = 25 புள்ளிகள்)

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைகள்

## பகுதி I

| வினா இல. | விடை | வினா இல. | விடை | வினா இல. | விடை |
|---|---|---|---|---|---|
| 01. | 1 | 19. | 1 | 35. | 1 |
| 02. | 3 | 20. | 2 | 36. | 3 |
| 03. | 4 | 21. | 3 | 37. | 4 |
| 04. | 3 | 22. | 3 | 38. | 4 |
| 05. | 4 | 23. | 4 | 39. | 1 |
| 06. | 3 | 24. | 2 | 40. | 3 |
| 07. | 3 | 25. | 1 | 41. | 3 |
| 08. | 2 | 26. | 3 | 42. | 4 |
| 09. | 2 | 27. | 3 | 43. | 4 |
| 10. | 3 | 28. | 2 | 44. | 3 |
| 11. | 4 | 29. | 3 | 45. | 2 |
| 12. | 4 | 30. | 2 | 46. | 2 |
| 13. | 2 | 31. | 3 | 47. | 3 |
| 14. | 3 | 32. | 1 | 48. | 3 |
| 15. | 4 | 33. | 2 | 49. | 1 |
| 16. | 4 | 34. | 3 | 50. | 2 |
| 17. | 3 | | | | |
| 18. | 4 | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி II

(1)
- இயற்கை அநர்த்தத்தின் சுருக்கமான விளக்கம்
- அநர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை
- பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு ஆதரவு வழங்கும் முறை
- சிறுவர்களை பராமரிக்கும் கால அளவு
- நிறுவனத்தின் எதிர்கால இலக்கும் சிறுவர்களின் எதிர்கால முன்னேற்ற நடவடிக்கைகளும்.

(2) (i) ஆரம்பகால மர நிழல் வழிபாட்டு இடங்களே பின்னர் கொட்டகைகளாகி இன்றைய கால கோயில்களாகத் தோற்றம் பெற்றுள்ளன.

(ii) பலவகைச் சமய பெரியோர்களின் சமய உண்மைகள் தமிழ் மொழியில் உள்ளதைப் போன்று தமிழ் வளர்க்கும் அமைப்புக் களும் வேறுபாடின்றி செயற்பட வேண்டும்.

(iii) உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்தி அனைவரும் ஈடுபடத் தக்க கட்டுப்பாடுகளற்ற சுதந்திர வர்த்தக வலயங்கள் இலங்கை உட்பட பல நாடுகளில் காணப்படுகின்றன.

(iv) இலங்கை பல வகைப் பொருளாதார அமைப்புக்களாக மாற்ற மடைந்தும் கூட உணவுப் பயிர்செய்கையில் கவனம் செலுத்தா மையினால் அபிவிருத்தி அடைந்து வரும் நாடாகவே உள்ளது.

(v) கலைத்திட்ட மாற்றத்தில் ஒன்றான ஆற்றப்படுத்தல் சேவையில் பெரிய கம்பனிகளின் நுழைவு உன்னதங்கள் விளக்கப்படு கின்றதே அன்றி உள்நாட்டின் வளம்சார் தொழில்களுக்கும் சமூக நீதிக்குமுள்ள தொடர்புகளுக்கு வழங்கப்படுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாகாண அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில்**
**வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான**
**திறந்த போட்டிப் பரீட்சை – 2014 (2015)**

## மொழித்திறன் -03

- 1 தொடக்கம் 5 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள சொற்களுள் ஒரு சொல் பிழையாக எழுதப்பட்டுள்ளது. அச் சொல்லைத் தெரிவு செய்க.

1. (1) செலவாணி (2) குற்றுயிர் (3) சிகைக்காய் (4) முயற்சி
2. (1) நன்னூல் (2) ஆராட்சி (3) வெற்றிலை (4) வல்லுநர்
3. (1) மேற்கோள் (2) வெந்நீர் (3) கடற்கரை (4) வெண்ணை
4. (1) பன்னிரெண்டு (2) புராதனம் (3) நன்செய் (4) மெய்ம்மை
5. (1) பழைய (2) நிகழ்ச்சி (3) தொழிலாளி (4) பாவக்காய்

- 6 தொடக்கம் 10 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள சொற்களின் அகராதி வரிசையைத் திருத்தமாகக் காட்டுவது.

6. (1) செயலாளர் (2) சிக்கனம் (3) சனநாயகம் (4) சால்பு
விடை : (1) 2, 4, 3, 1 (2) 1, 4, 3, 2 (3) 3, 2, 4, 1 (4) 3, 4, 2, 1
7. (1) கடவுள் (2) தகவல் (3) சந்திரன் (4) மங்கலம்
விடை : (1) 1, 3, 2, 4 (2) 3, 1, 2, 4 (3) 4, 3, 2, 1 (4) 1, 2, 3, 4
8. (1) நிருவாகம் (2) சமர்ப்பணம் (3) பணியகம் (4) வஞ்சினம்
விடை : (1) 1, 3, 2, 4 (2) 2, 1, 3, 4 (3) 4, 3, 1, 2 (4) 2, 3, 4, 1
9. (1) பூட்கை (2) பிராயச்சித்தம் (3) பௌதிகம் (4) போராட்டம்
விடை : (1) 2, 1, 3, 4 (2) 2, 1, 4, 3 (3) 3, 2, 4, 1 (4) 3, 4, 2, 1
10. (1) இங்கிதம் (2) இலட்சியம் (3) இயக்கம் (4) இடுக்கண்
விடை : (1) 2, 1, 3, 4 (2) 3, 2, 1, 4 (3) 1, 3, 2, 4 (4) 1, 2, 3, 4

- 11 தொடக்கம் 15 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் இணைமொழித் தொடர் அல்லது தொடரைத் தெரிவு செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. (1) அகடவிகடம் (2) ஏற இறங்க
(3) அல்லங்காடி (4) உருவும் திருவும்

12. (1) அன்பும் அருளும் (2) காடும் மேடும்
(3) கற்பும் பொற்பும் (4) மானும் மயிலும்

13. (1) ஆதியந்தம் (2) ஏற்றத்தாழ்வு
(3) கிள்ளுக்கீரை (4) ஓட்டையுடைசல்

14. (1) கிட்டதட்ட (2) கூடிக்குலவி
(3) கன்னங்கரிய (4) பட்டிதொட்டி

15. (1) கோணல் மாணலாய் (2) தப்பும் தவறுமாய்
(3) சுறுசுறுப்பாய் (4) சாடைமாடையாய்

- 16 தொடக்கம் 20 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள சொற்றொடரின் பொருளைத் தரும் சொல்லைத் தெரிவு செய்க.

16. வெளிப்படையாகப் புகழ்ந்தும் குறிப்பாக இகழ்ந்தும் கூறுவது
(1) இடக்கரடக்கல் (2) குழுக்குறி (3) சிலேடை (4) அங்கதம்

17. கல்லிலேனும், செப்பேட்டிலேனும் பொறிக்கப்பட்டிருக்கும் ஒருவரின் புகழ்
(1) மெய்கீர்த்தி (2) மெய்ப்பாடு (3) சாசனம் (4) கல்வெட்டு

18. பிற்காலத் தேவைக்காகச் சேமித்து வைக்கப்படும் பொருள்
(1) தேட்டம் (2) முதுசொம் (3) எய்ப்பில் வைப்பு (4) பூதல்

19. உலக நடையறிந்து ஒழுகுதல்
(1) பின்பற்றுதல். (2) ஒப்புரவு (3) விழுமியம் (4) கைக்கொள்ளல்

20. சொத்தை அனுபவிக்கும் உரிமையுடன் கூடிய அடைமானம்
(1) வாடகை (2) குத்தகை (3) உடைமை (4) ஒற்றி

- 21 தொடக்கம் 25 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்குரிய ஒத்தகருத்துச் சொல்லைத் தெரிவு செய்க.

21. யாதும் ஊரே யாவரும் கேளிர். கேளிர் என்பது
(1) நண்பர் (2) கேட்பீர் (3) சுற்றத்தார் (4) மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. தாளாண்மையுடையோர் தாழ்வினை அடையார். தாளாண்மை என்பது
(1) விடாமுயற்சி - ( 2 ) இறையருள்
(3) நல்வினை (4) செல்வம்

23. அகிம்சை என்னும் பூட்கையை அரசியலில் புகுத்தியவர் அண்ணல் காந்தி. பூட்கை எனப்படுவது.
(1) ஆபரணம் (2) யாப்பு (3) கொள்கை (4) சத்தியம்

24. அகந்தை கொண்டவா அழிவது உறுதி. அகந்தை என்பது
(1) பணிவு (2) செல்வம் (3) கீழ்மை (4) செருக்கு

25. சுதந்திர சதுக்கத்தில் விழா நடைபெற்றது. சதுக்கம் என்பது
(1) நாற்சந்தி (2) அம்பலம் (3) முச்சந்தி (4) மன்றம்

- 26 ஆம் 27 ஆம் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்க.

26. கை + நூல் என்பதன் சரியான புணர்ச்சி வடிவம்
(1) கைநூல் (2) கைனூல்
(3) கைந்நூல் (4) கைன்னூல்

27. தொழில் + துறை என்பதன் சரியான புணர்ச்சி வடிவம்
(1) தொழிற்துறை (2) தொழிற்றுறை
(3) தொழில்துறை (4) தொழில்த்துறை

- 28 தொடக்கம் 30 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள மரபுத் தொடரின் பொருளைத் தெரிவு செய்க.

28. கச்சை கட்டுதல் என்பதன் பொருளைத் தருவது
(1) கை காட்டுதல் (2) பம்பரமாட்டுதல்
(3) கங்கணங் கட்டுதல் (4) கட்டியடித்தல்

29. வயிற்றிலடித்தல் என்றால்
(1) குறைவாக உண்ணுதல். (2) பசிமிகுதல்
(3) வஞ்சனை செய்தல் (4) சீவனத்தைக் கெடுத்தல்

30. ஆசாடபூதி என்பவன்
(1) பெரும் பொய்யன் (2) ஏமாற்றுக்காரன்
(3) உதவாக்கரை (4) ஓட்டைவாயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● 31 தொடக்கம் 35 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் உரிய விடையைத் தெரிவு செய்க.

31. இரு திணைப் பொதுப் பெயராக வரும் சொற்களின் தொகுதி

(1) பிடி, பிணை (2) விறலி, பாடினி

(3) அகதி, நோயாளி (4) தந்தை, தாய்

32. சொகுசு என்பது

(1) தெலுங்குச் சொல் (2) வடசொல்

(3) கன்னடச் சொல் (4) அராபியச் சொல்

33. அல்வா என்பது

(1) தெலுங்குச் சொல் (2) பாரசீகச் சொல்

(3) கன்னடச் சொல் (4) அராபியச் சொல்

34. பெயராகவும் வினையாகவும் வரக் கூடிய சொற்கள் அடங்கிய தொகுதி

(1) அரை, அறை (2) தசை, தறை

(3) .கரை, கறை (4) திரை, திறை

35. இராவணன் உம்பருந் தொழ வாழ்ந்தான். உம்பர் என்பதன் எதிர்ச்சொல்

(1) வம்பர் (2) கம்பர் (3) செவ்வர் (4) இம்பர்

● 35. 36 தொடக்கம் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் இலக்கண வழுவற்ற வாக்கியத்தைத் தெரிவு செய்க.

36. (1) ஒவ்வொரு குறள்களும் ஒவ்வொரு ஆழமான கருத்தைத் தரும்

(2) ஒவ்வொரு குறளும் ஒவ்வொரு ஆழமான கருத்தைத் தரும்

(3) ஒவ்வொரு குறளும் ஒவ்வொரு ஆழமான கருத்துக்களைத் தரும்

(4) ஒவ்வொரு குறள்களும் ஒவ்வொரு ஆழமான கருத்துகளைத் தரும்

37. (1) மாணவர்கள் எல்லோரும் தம்தம் வீடுகளுக்குச் சென்றனர்.

(2) மாணவர்கள் எல்லோரும் தன்தன் வீடுகளுக்குச் சென்றனர்.

(3) மாணவர்கள் எல்லோரும் தமது வீடுகளுக்குச் சென்றனர்.

(4) மாணவர்கள் எல்லோரும் தத்தம் வீடுகளுக்குச் சென்றனர்.

38. (1) கிரேக்க மரபிலே இன்பநாடகம், துன்பநாடகம் என இருவகை நாடகங்கள் பிரசித்தமானதாக இருந்தன.

(2) கிரேக்க மரபிலே இன்பநாடகம், துன்பநாடகம் என இருவகை நாடகங்கள் பிரசித்தமானவையாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) கிரேக்க மரபிலே இன்பநாடகம், துன்பநாடகம் என இருவகை நாடகங்கள் பிரசித்தமானவையாக இருந்தன.

(4) கிரேக்க மரபிலே இன்பநாடகம், துன்பநாடகம் என இருவகை நாடகங்கள் பிரசித்தமானதாக இருந்தது.

39. (1) அறநூல்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்கள் நான்கினையும் பற்றியனவேயாகும்.

(2) அறநூல்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்கள் நான்கினையும் பற்றியதேயாகும்.

(3) அறநூல்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள்கள் நான்கு பற்றியதேயாகும்.

(4) அறநூல்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள்கள் நான்கினையுமே பற்றியனவேயாகும்.

40. (1) நாவலர் எழுத்தாளர் மட்டுமன்று; பதிப்பாசிரியராகவும் விளங்கினார்.

(2) நாவலர் எழுத்தாளர் மட்டுமல்லர்; பதிப்பாசிரியராகவும் விளங்கினார்.

(3) நாவலர் எழுத்தாளர் மட்டுமல்ல; பதிப்பாசிரியராகவும் விளங்கினார்.

(4) நாவலர் எழுத்தாளர் மட்டுமல்லர்; பதிப்பாசிரியராக விளங்கினார்.

- 41 தொடக்கம் 50 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் பிரதான கருத்தை எடுத்துக் காட்டும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

41. சிலப்பதிகாரம் எனும் காவியத்தில் கோவலன் கண்ணகி ஆகிய இருவருக்கும் அடுத்த நிலையில் மாதவியே சிறப்பிடம் பெற்றவளாகக் காணப்படுகிறாள்.

(1) சிலப்பதிகாரத்தில் கோவலனும் கண்ணகியும் மாதவியும் ஒருங்கே போற்றப்படுகின்றனர்.

(2) மாதவியைப் பெருமைப்படுத்த எழுந்த காவியமே சிலப்பதிகாரம்.

(3) சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகிக்கு அளிக்கப்பட்ட இடம் மாதவிக்கு அளிக்கப்படவில்லை.

(4) சிலப்பதிகாரத்தில் மாதவியே சிறப்பிடம் பெற்றவளாகக் காணப்படுகிறாள்.

42. நீரினை எப்பொழுதும் உள்ள ஒரு வளமாக எம்மில் பெரும்பாலானவர்கள் கருதுவதனாலே அதன் வளங்கள் மட்டுப்படுத்தப்படும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதெல்லாம் தற்காலிகமான அசௌகரியத்துக்கு உட்படுகிறோம்.

(1) நீர் இன்று ஒரு அருமையான வளமாக மாறிவருகிறது.

(2) நீர் பலராலும் ஒரு வளமாகக் கருதப்படுகிறது.

(3) வளமாகக் கருதப்படும் நீர் போதிய அளவு கிடைக்காதபோது அசௌகரியமடைகிறோம்.

(4) வளமான பொருளான நீரை எமது அசௌகரியத்துக்காக விரயம் செய்யக்கூடாது.

43. பொருளாதாரத்தைப் பன்முகப்படுத்துவதற்காக 1960 களில் உருவாக்கப் பட்ட புதிய அரச கூட்டுத்தாபனங்களுடன் மக்கள் வங்கி அடிப்படை யிலான உறவுப் பிணைப்பொன்றை உருவாக்கிக் கொண்டது.

(1) 1960 களில் அரச கூட்டுத்தாபனங்கள் மக்கள் வங்கியுடன் உறவை ஏற்படுத்திக் கொண்டன.

(2) 1960 களில் அரச கூட்டுத்தாபனங்களுக்கும் மக்கள் வங்கிக்கும் இடையே பெரும் பிணக்கு ஏற்பட்டது.

(3) பொருளதாரத்தைப் பன்முகப்படுத்துவதே அரச கூட்டுத்தாப னங்கள் நோக்காகும்.

(4) 1960 களில் உருவான புதிய அரச கூட்டுத்தாபனங்களுடன் மக்கள் வங்கி நீடித்த உறவை ஏற்படுத்திக் கொண்டது.

44. கிழக்கு தென்கிழக்கு ஆசியாவில் ஏற்பட்டுள்ள நாணய நெருக்கடி தற்போதைய உலக மயமாக்கல் சூழ்நிலையில் பொருளாதார வளர்ச்சி தானாகவே ஏற்படுமெனக் கருதிக் கொண்டிருக்க முடியாது என்ற மிக முக்கியமான உண்மையை எமது கவனத்துக்கு எடுத்துவருகின்றது.

(1) கிழக்கு தென்கிழக்கு ஆசியாவில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

(2) கிழக்கு தென்கிழக்கு ஆசியாவின் நாணய நெருக்கடி பொருளாதார வளர்ச்சியைத் தீவிரப்படுத்த வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

(3) கிழக்கு தென்கிழக்கு ஆசியாவில் நாணய நெருக்கடியை நீக்க உலகமயமாக்கல் இன்றியமையாததாகும்.

(4) கிழக்கு தென்கிழக்கு ஆசிய நாடுகள் தமது பொருளாதார வளர்ச்சியில் முனைப்பாக உள்ளன.

45. பல்கலைக்கழகங்கள் நாட்டுக் கலாசாரங்களையும் மாணவர்களிடையே அறிவையும் உத்தமப் பண்புகளையும் வளர்ப்பனவாக இருப்பதோடு சிறந்த தரம் படைத்த ஆராய்ச்சி நூல்களை வெளியிடும் நிலையங் களாகவும் விளங்குதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) பல்கலைக்கழகங்கள் அறிவை வழங்கும் நிலையங்களாகும்.
(2) அறிவு கலாசாரம் பண்பு ஆராய்ச்சி என்பவற்றை வளர்ப்பனவே பல்கலைக்கழகங்களாகும்.
(3) பல்கலைக்கழகங்கள் காலத்தோடு இணைந்து செயற்பட வேண்டும்.
(4) நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் நிலையங்களே பல்கலைக்கழகங்களாகும்.

46. எளிதானதும், செலவு குறைந்ததும், உள்நாட்டில் உற்பத்தி செய்யக் கூடியதும், தொழில்களைப் பறித்துக் கொள்வதற்குப் பதிலாகக் கூடிய வேலை வாய்ப்புக்களை வழங்க வல்லதுமான தொழினுட்பமே வறிய நாடுகளின் இன்றைய தேவையாகும்.
(1) வறிய நாடுகளின் இன்றைய தேவை எளிதானதும் செலவு குறைந்ததுமான உற்பத்திகளை மேற்கொள்ளல்.
(2) வறியநாடுகளின் இன்றைய தேவை செலவு குறைந்ததும் உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடியதுமான உற்பத்திகளை மேற்கொள்ளல்.
(3) வறியநாடுகளின் இன்றைய தேவை செலவு குறைந்ததும் வேலை வாய்ப்புக்களை வழங்கவல்லதுமான தொழில்களை மேற்கொள்ளல்.
(4) வறிய நாடுகளின் இன்றைய தேவை செலவு குறைந்ததும் வேலை வாய்ப்புக்களை வழங்கவல்லதுமான தொழி னுட்பங்களை மேற்கொள்ளல்.

47. பெரும்பாலான வளர்முக நாடுகள் விஞ்ஞானக் கொள்கையொன்றை உருவாக்குவதிலும், அவற்றின் கல்வி அமைப்புக்களைச் சீரமைத்துப் பரவலாக்குவதன் மூலம் விஞ்ஞான ஆட்சக்தியை உற்பத்தி செய்வதிலும் ஈடுபாடு கொண்டுள்ளன.
(1) வளர்முகநாடுகள் விஞ்ஞானக்கொள்கை உருவாக்கத்திலும், கல்வியமைப்பை மாற்றஞ் செய்வதிலும் ஈடுபட்டுள்ளன.
(2) வளர்முக நாடுகள் கல்வி அமைப்பைச் சீர்செய்வதிலும், விஞ்ஞான ஆட்சக்தியை உற்பத்தியிலும் ஈடுபாடு கொண்டுள்ளன.
(3) வளர்முக நாடுகள் விஞ்ஞானக் கொள்கை உருவாக்குவதிலும், விஞ்ஞான ஆட்சக்தியை உற்பத்தி செய்வதிலும் ஈடுபாடு கொண்டுள்ளன.
(4) வளர்முக நாடுகள் விஞ்ஞானக் கொள்கை உருவாக்கத்திலும் பார்க்க, கல்வி அமைப்புச் சீராக்கம் செய்வதில் ஈடுபாடு கொண்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48. இன்றைய நிலையில் பாடசாலைகளானவை, அறிவு ரீதியில் உணர்வற்றவையாக, சமூகப் பிரிவினைகளை ஏற்படுத்த வல்லனவாக, பொருளாதாரத்தைப் பொறுத்த வரையில் அபத்தமானவையாக வளர்ச்சி அடைந்து கொண்டு வருகின்றன.

(1) பாடசாலைகள் உணர்வற்றவையாக, சமூகப் பிரிவினைகளை உருவாக்கும் நிலையமாக மாறிவருகின்றன.

(2) பாடசாலைகள், அறிவு, சமூக ரீதியிலும், பொருளாதார நடவடிக்கைகளிலும், பாரிய வளர்ச்சியைக் கொண்டு வருகின்றன.

(3) பாடசாலைகள், அறிவு . சமூக ரீதியிலும், பொருளாதார வளர்ச்சியிலும் பாரிய பின்விளைவுகளை உருவாக்கியுள்ளன.

(4) பாடசாலைகள், அறிவு, சமூக ரீதியில், பின்னடைவையும், பொருளாதாரத்தில் அபத்தவளர்ச்சியையும் உருவாகியுள்ளன.

49. போலி நம்பிக்கைகளினால் தாக்கப்பட்டும், சடங்குகளினால் திரையிடப் பட்டுமிருக்கும், நிறுவனங்களான பாடசாலைகள் தம் உறுப்பினர்களின் சிந்தனைகளையும் செயல்களையும் கட்டுப்படுத்தி வருகின்றன.

(1) பாடசாலைகள் போலி நம்பிக்கைகளினாலும், சடங்குகளினாலும் திரையிடப்பட்டிருக்கின்றன.

(2) பாடசாலை உறுப்பினர்களின் சிந்தனைகள் போலி நம்பிக்கை களினாலும், சடங்குகளினாலும் திரையிடப்பட்டிருக்கின்றன.

(3) பாடசாலை அமைப்பு போலி நம்பிக்கைகளையும் சடங்கு களையும் வளர்த்து வருகின்றது.

(4) போலி நம்பிக்கைகளும், சடங்குகளும் பாடசாலை உறுப்பினர் களின் சிந்தனைகளையும், செயல்களையும் கட்டுப்படுத்தி வருகின்றன.

50. அறிவாளி ஒருவர் மதிப்பும் செல்வாக்கும் கொண்டிருந்தும் மனிதாபி மான முறையில் மனித இனத்தோடு தொடர்புறாதுவிடின் அவரது செல்வாக்கு அறிவு என்பன பூரணத்துவம் பெறாது.

(1) அறிவாளி ஒருவர் மதிப்புடனும் செல்வாக்குடனும் இருத்தல் வேண்டும்.

(2) அறிவாளி பிறருடன் மனிதாபிமானத்துடன் தொடர்பு கொள்வது இன்றியமையாதது.

(3) அறிவாளி ஒருவர் சகலருடனும் தொடர்பு கொள்ள வேண்டும்.

(4) அறிவாளி ஒருவர் தமது செல்வாக்கையும் அறிவையும் பூரணப்படுத்த வேண்டும்.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி II

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

1. பிரதேசத்திலுள்ள வளங்களைப் பயன்படுத்தி ஆரம்பிக்கப்படவுள்ள தேசிய கைத்தொழில்களுக்குக் கடன் உதவிகள் வழங்குதல் பற்றிப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்த, கடன் வழங்கும் நிறுவனமொன்று உத்தேசித்துள்ளது. அந்த விளம்பரப் பிரதியைத் தயார் செய்யும் எழுதுநர் நீங்கள் எனக் கருதி, இது தொடர்பான தகவல்களைக் கொடுப்பதற்கு வேண்டிய அறிவுறுத்தல்கள், கடன்பெறுவதற்கான தகைமைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய வகையில் (150 சொற்களில்) விளம்பரத்தைத் தயாரிக்க. (பெயர், கிராமத்தைக் குறிக்கப் புனைபெயரைப் பயன்படுத்துக.

(25 புள்ளிகள்)

2. பின்வரும் உரைப்பகுதிகள் ஒவ்வொன்றையும் வாசித்து அதன் சாராம்சத்தை 15 சொற்களில் ஒரு தனிவாக்கியத்தில் எழுதுக.

(i) கவிதைகள் புத்தக வடிவத்திலும் பத்திரிகைகளிலும் நாளுக்கு நாள் பெருகி வருகின்றன. கவிதை விமரிசனங்களும் நடக்கின்றன. மேலைத் தேசத்திலே ஒருவர் ஒன்று செய்தால் அதற்கு நூறு விமரிசனம் வந்துவிடுமென்றும், இங்கே அவ்வளவு தூரம் அந்தத் துறை விரியவில்லையென்றும் ஒரு விமரிசகர் அழுகின்றார். பாவம்! அவர் இனிக் கண்ணீர் வடிக்க வேண்டா; தினசரிப் பத்திரிகைகளிற்கூட ஒரு பகுதி, கவிதை விமரிசனத்துக் கென்றே ஒதுக்கப்படுகின்றது. விமரிசனம் இதோ பெருகிவிடும். பயம் வேண்டா. ஆனால் உண்மைக் கவிதை ஏனைய வரிசையிலிருந்து உயிர் தப்புமோ என்றுதான் அச்சம் வருகின்றது.

(ii) தமிழுலகில் இந்நாள் மூன்று உரைநடை இயக்கங்கள் இயங்கி வருகின்றன. இம்மூன்று இயக்கங்களும், தண்டமிழ் அன்னையின் திருக்கோயிலுக்குச் செல்லும் மூன்று பாதைகள். இம்மூன்று பாதைகளும் தமிழ்க் கோயிலை நாடிச் செல்வது உண்மைதான். ஆனால் நாம், இம்மூன்று பாதைகளும் செம்மையான பாதைகளா? என்றும், அவற்றுள் எப்பாதை செம்மையானது? என்றும் தெரிந்துகொள்ள வேண்டும். அந்த அந்தப் பாதையிலே சென்று பழகியவர்கள் அந்த அந்தப் பாதையே செம்மையானது என்று வாதிடுகிறார்கள். வழக்காடுகிறார்கள். நாம் மூன்று பாதைகளிலும் போய்ப் பார்த்து எந்தப் பாதை ஏற்ற பாதை என்று கண்டு தெளிய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii) தமிழிலக்கணம் மிகுந்த அறிவியல் முறையில் அமைந்தது தர்க்க முறையிலும் பொருந்தியது. தமிழ்ச் செய்யுளிலக்கணமானது, கருத்தை எதுகைமோனைக்கு இரையாக்காதவாறு விரிந்த மனப் பான்மையில் அமைந்திருக்கிறது. இலக்கணம் அறியாத, அறிந்து கொள்ள விரும்பாத, அறிய முயற்சிசெய்யாத, அறிந்து கொண்ட இலக்கண நூல்களையும் எட்டிப்பாராத எழுத்தாளர்கள் வாய்க்கு வந்தவாறு பேசியும் எழுதியும் வருகிறார்கள்; இலக்கணமே வேண்டுவதில்லை என்கிறார்கள். அவர்களைச் சிறிது நடை முறைக்கு வேண்டிய இலக்கணம் கற்குமாறு வேண்டுகிறேன்.

(iv) பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பொருளியல் பண்டங்கள் தொடர்பாக ஏதோ ஒரு விலையைச் செலுத்த வேண்டியுள்ளது. எனினும், ஓரிரு சந்தர்ப்பங்களில் இலவசமாகக் கிடைக்கும் பொருளியல் பண்டங்களும் உள்ளன. இலவசமாக வழங்கப்பட்ட பாடசாலைப் புத்தகங்களை உதாரணமாகக் கூறலாம். பாடசாலைப் பிள்ளைகளுக்கு இப்புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்ட போதிலும், அவற்றை வழங்கிய சமூகத்தின் மற்றொரு அங்கமான அரசாங்கம் அவை தொடர்பாக சந்தர்ப்பச் செலவை மேற் கொண்டுள்ளது. ஏனெனில், அரசாங்கம் இப்பணியில் ஈடுபடா திருந்தால் இப்புத்தகங்களை அச்சிடுவதற்குச் செலவிடப்பட்ட பணத்தினை பொருளாதாரத்தின் வேறொரு பணி தொடர்பாக செலவிடுவதற்கு பயன்படுத்திக் கொண்டிருக்க முடியும்.

(v) ஆசிரியருக்கு ரூசோ கண்ட வரையறையை நோக்குவோம். ஆசிரியர் ஞானம் உள்ளவராயும், சமூக ஊழல்களை அகற்றும் ஆற்றல் உள்ளவராயும் விளங்கவேண்டும். மனிதனின் கடமைகள் என்ன என்பது பற்றிய தெளிவான அறிவை அவர்கள் கொண்டிருக்கவேண்டும். குழந்தைகளைச் சிறந்தவர்களாக உருவாக்குகின்றவர்கள் அவர்களாகையால் குழந்தை இழைக்கும் தவறுகளால் ஏற்படும் விளைவுகளைத்தாமே பொறுப்பேற்கும் தன்மையுடையவர்களாக ஆசிரியர் விளங்கவேண்டும் என்பார் அவர். யேசுநாதர் போன்று மற்றவர்களின் துன்பங்களை ஏற்கும் பண்புடையவர்களாக அவர்கள் விளங்கவேண்டும் என அவர் கூறினார். இத்தகைய சிறப்புள்ள ஆசிரியரின் மாணவர், மக்கள் படும் துன்பம் தமது துன்பம் என உணரும் திறனைப் பெறுவர்.

(25 புள்ளிகள்)

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைகள்

## பகுதி I

| வினா இல. | விடை | வினா இல. | விடை | வினா இல. | விடை |
|---|---|---|---|---|---|
| 01. | 1 | 19. | 2 | 35. | 4 |
| 02. | 2 | 20. | 2 | 36. | 2 |
| 03. | 4 | 21. | 3 | 37. | 4 |
| 04. | 1 | 22. | 1 | 38. | 3 |
| 05. | 4 | 23. | 3 | 39. | 1 |
| 06. | 4 | 24. | 4 | 40. | 2 |
| 07. | 1 | 25. | 1 | 41. | 3 |
| 08. | 2 | 26. | 3 | 42. | 1 |
| 09. | 2 | 27. | 1 | 43. | 4 |
| 10. | 4 | 28. | 3 | 44. | 2 |
| 11. | 3 | 29. | 4 | 45. | 2 |
| 12. | 4 | 30. | 2 | 46. | 4 |
| 13. | 3 | 31. | 4 | 47. | 2 |
| 14. | 3 | 32. | 3 | 48. | 3 |
| 15. | 3 | 33. | 1 | 49. | 4 |
| 16. | 4 | 34. | 1 | 50. | 2 |
| 17. | 1 | | | | |
| 18. | 3 | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி II

1. **விளம்பரம்**

பிரதேச வளங்களின் மூலம் தேசிய கைத்தொழில்களை உருவாக்குவோம்.

ராம் ஃபினான்ஸ் கம்பனி லிமிடெட்
பிரதானவீதி - யாழ்ப்பாணம்

உங்கள் பிரதேச வளங்களின் மூலம் உருவாக்கப்படும் தேசிய கைத்தொழில்களுக்கான குறைந்த வட்டி
மற்றும்
நீண்ட கால கடன்களை வழங்க முன் வந்துள்ளோம்.

**நிபந்தனைகள்**

- பிரதேச வளங்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.
- தேசிய கைத்தொழிலாக கருதப்பட வேண்டும்.
- கடனை மீள செலுத்தும் தகுதியை. வெளிப்படுத்தும் ஆவணங்கள்.
- கடனை மீளச் செலுத்தும் கால அளவு.
- கடனுக்கு அறவிடப்படும் வட்டி வீதங்கள்.
- கடனுக்கு வழங்கப்படும் பொறுப்புக்கள் மற்றும் மற்றும் பிணையாளிகள் விபரம்.

தேசிய கைத்தொழில்களை ஆரம்பிக்க விரும்புவோர் தங்கள்
நிதிசார் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு
தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்

**நிதி முகாமையாளர்**
**ராம் ஃபினான்ஸ் கம்பனி லிமிட்டெட்**
**பிரதான வீதி, யாழ்ப்பாணம்**
**தொலைபேசி : 021 222 9001**
**இணைய முகவரி :** www.ram.com.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) (i) கவிதைகள் நாளாந்தம் பெருகி விடுவதுடன் விமர்சனமும் ஏற்படுகின்றது. ஆனால் உண்மைக் கவிதை ஏனையவற்றில் இருந்தும் உயிர் தப்புமோ எனும் அச்சம் ஏற்பட்டுள்ளது.

(ii) தமிழுலகில் உள்ள மூன்று உரைநடை இயக்கங்களிலும் செம்மையானது எது எனத் தெரிந்து அதனைத் தெரிவு செய்ய வேண்டும்.

(iii) தமிழ் இலக்கணம் அறிவியல் தர்க்க முறையிலும் இவற்றுள் நடைமுறைக்கு ஏற்றவாறு சிறிதளவு இலக்கணம் சேர்க்கப்பட வேண்டும்.

(iv) பொருளியல் பண்டங்களுக்கும், சில இலவச பண்டங்களுக்கும் விலை செலுத்தப்பட வேண்டும். இவ் இலவச பண்டங்களுக்கான விலை சந்தர்ப்ப செலவாகும்.

(v) ரூசோவின் கருத்தின்படி ஆசிரியர் மனிதனினதும் குழந்தை களினதும் கடமைகளை அறிந்து அதற்கேற்ப இயங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாண அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில்
வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான
திறந்த போட்டிப் பரீட்சை – 2014 (2015)

## மொழித்திறன் – 04

(1) பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிந்து உங்களது கருத்துக்களைப் பகுப்பாய்வுடன் முன்வைத்து 150-200 சொற்களில் கட்டுரை எழுதுக.

(I) நோய்க்குரிய சிகிச்சையைப் போலவே நோய்க்கான நிவாரணமும் சுகாதார சேவையின் முக்கிய அம்சமாகும்.

(ii) ஒவ்வாமை (அலர்ஜி) யால் ஏற்படும் நோய்கள்.

(iii) இலங்கையின் சுகாதார சேவையில் தனியார் துறையின் பங்களிப்பும் அதன் பெறுபேறுகளும்.

(iv) இலங்கையில் சர்வதேசப் பாடசாலைகளின் வளர்ச்சியும் இலவசக் கல்வியும்.

(v) போதை வஸ்துக்களைத் தவிர்த்துக் கொள்வது உடல் மற்றும் உள நலத்துக்கு உகந்ததாகும்.

(2) கீழே தரப்பட்ட ஒவ்வொரு சொற் தொகுதியிலும் ஒரு சொல் எழுத்துப் பிழையுடன் உள்ளது. எழுத்துப் பிழையுள்ள சொல்லை மட்டும் தெரிந்து அதனைப் பிழை திருத்தி மீள எழுதுக.

(i) திருமறை, கருந்திரை, இரும்பொரை, பெருங்குறை

(ii) கருவிழி, மறுமொலி, நரபலி, பெருவழி

(iii) அல்லல், சொல்லல், துல்லல், வெல்லல்

(iv) அகறாதி, முகராசி, சுகராகம், சதுர்வேதி

(v) கன்மழை, மணமகள், வின்மீன், தண்பொழில்

(vi) கற்பாறை, முற்புதர், பொற்பாதம், நற்கதி

(vii) கண்ணன், பொன்னன், அன்னன், மன்னன்

(viii) முன்னூறு, முந்நூறு, ஐந்நூறு, ஐன்னூறு

(ix) மெண்மை, அண்மை, திண்மை, உண்மை

(x) அருமை, பெறுமை, கருமை, சிறுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) பின்வரும் வாக்கியங்களில் பிழைகள் உள்ளவற்றைத் தெரிந்து பிழையெனக் குறிப்பிட்டு அப்பிழைகளைத் திருத்தி மீள எழுதவும். சரியான வாக்கியங்களாயின் சரியெனக் குறிபிபடுக.

(i) அஞ் ஞாதவாசம் புரியும் பாண் டவர் ஐவரும் அரக்குமாளிகையில் வாழ்ந்தனர்.

(ii) மண்டபத்தில் இராப் போசனத்துக்காக மேசைகள் வரிசை வரிசையாக அடுக்கப்பட்டது.

(iii) இன்றைய கல்வியெல்லாம் தொழில், பொருள், சுகபோகம் என்பவற்றைச் சார்ந்ததாகவே இருக்கின்றது.

(iv) குழப்பம் விளைவித்து கையும் மெய்யுமாக பிடிபட்ட மாணவர்கள் தான் அதனைச் செய்யவில்லையெனக் கூறினர்.

(v) மானுடப் பிறப்பினது அருமை சிறப்புகளை நாம் ஒவ்வொருவரும் அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

(vi) வாணி விழாவில் எட்டுக் கவிஞர்கள் கவிதை மழைபொழிந்து சபையோரை மகிழ்வித்தனர்.

(vii) நாவலர் மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை பாரதியார் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

(viii) சுனாமியால் வீடிழந்த மக்களுக்காக அரசாங்கத்தினால் கட்டப்பட்ட வீடுகள் அவர்களுக்கு அமைச்சர் வழங்கினர்.

(ix) தாய்ப் பால் குடிக்கும் குழந்தைகளை நோய்க் கிருமிகள் தாக்குவது இல்லை.

(x) அப்துல்காதருடன் அரவிந்தனும் நேற்று இசைப் போட்டியில் கலந்து கொண்டனர்.

03. (அ) தமிழ்மொழி இலக்கணத்தின் படி கீழே தரப்படும் கூற்றுகள் சரியாயின் ஆம் என்றும் பிழையாயின் இல்லை என்றும் எழுதிக் காட்டுக. கூற்றுக்களின் இலக்கத்தையும் விடையையும் மட்டும் எழுதினால் போதும்.

(i) உயிரெழுத்துக்கள் பன்னிரண்டில் அ, இ, உ, எ, ஒ என்பன நெட்டெழுத்துக்களாகும்.

(ii) எழுவாயாக தன்மைப் பெயரோடு முன்னிலைப் பெயரேனும் அடுக்கி வரின் பயனிலை முன்னிலைப் பன்மையாக இருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii) மெய்எழுத்துக்களில் க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறு எழுத்துக்கள் வல்லின மெய் எனப்படும்.

(iv) காலங்காட்டும் இடை நிலைகளில் த், ட், ற் என்பன ஆறு எழுத்துக்கள் வல்லினமெய் எனப்படும்.

(v) அம்பு, கணை, அத்திரம், சரம், பகழி, வாளி, பாணம் எனுஞ் சொற்கள் ஒரு பொருள் பன்மொழிச் சொற்கள் ஆகும்.

(vi) கோயில்மாடு, வயல்வெளி, மணிமாடம், அந்திவானம் என்னும் சொற்களில் நிலை மொழி இறுதி கெட்டு விகாரப் புணர்ச்சி நிகழ்ந்துள்ளது.

(vii) வாழைப்பழம், காலைக் கூட்டம், ஓலைச்சுவடி என்னும் சொற்கள் தோன்றல் விகாரப்புணர்ச்சிக்கு உதாரணங்களாகும்.

(viii) சொற்களின் இடையில் க், ச், த், ப் ஆகிய நான்கு மெய்எழுத்துக்களும் தம்மோடு தாம் மட்டும் சேர்ந்து மயங்குவது உடனிலை மெய்ம்மயக்கம் ஆகம்.

(ix) முன்றில், வாய்க்கால், நுனிநா, என்னுஞ் சொற்கள் இலக்கணப்போலி வகைக்கு உதாரணங்களாகும்.

( அங்கும்மிங்கும், மேலும்கீழும், குன்றும்குழியும், அல்லும் பகலும் என்னும் சொற்கள் ஒன்று மட்டுமே பொருளுடையதாக அமைந்து மற்றது ஓசை நயம் கருதிவரும் இணை மொழிகளாகும்.

(ஆ) (i) பொருள் எனும் பதம் பொருளியல் என சொல்லாக்கம் பெறுவது போல, தருக்கம், குடிமை, அறிவு, முருகு, உளம், கல்வி, உயிர், அரசு, பௌதீகம், எழுத்து ஆகிய பதங்களை ஆக்கி எழுதுக.

(ii) பலம் என்பதன் எதிர்ப்பதம் துர்பலம் என அமைவது போல, கனவு அதிர்ஷ்டம், நாற்றம், குணம், பாக்கியம், வாடை, நடத்தை, நோக்கம், குறி, மதி ஆகிய பதங்கள் அமையும் விதத்தைப் பட்டியலப்படுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) கீழ்க் காணப்படும் ஒவ்வொரு பந்தியிலும் கூறப்பட்டுள்ள பிரதான கருத்தை முடிந்தளவில் சுருக்கி தனிவாக்கியத்தில் எழுதுக.

(i) கடல் மற்றும் நீர் வாழ் உயிரின உற்பத்தி இவ்வாண்டு குறைந்துள்ளது. இதன் காரணமாக மொத்த மீன் உற்பத்தியானது ஆறு சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. எனவே உள்ளூர்ச் சந்தையில் மீன் விலை உயர்ச்சியடைந்துள்ளது.

(ii) நம்நாட்டில் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்படைந்ததோடு நகரங்களில் வாகன நெரிசல் கணிசமான அளவு அதிகரித்துள்ளது. இதன் விளைவாக போக்குவரத்துக்களில் தாமதமுண்டாகுதல் பயணிகள் உழைப்பு வீணாதல், மற்றும் சூழல் மாசடைதல் ஆகியன அதிகரித்துள்ளன. இது தொடர்பாக விரைவான தீர்வொன்றைப் பெற்றுக் கொள்வதன் அவசியம் கவனத்திற் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

(iii) தற்காலத்தில் வளர்ச்சியடைந்த நாடுகளில் தனியார் சுகாதாரத் துறையின் செலவுகளில் ஒரு பெரும் பங்கு சுகாதாரக் காப்புறுதி முறையின் வழியாக நிவாரணமளிக்கப்படுகின்றது. ஆனால் இலங்கை தனியார் சுகாதார செலவுகள் முழுமையாகவே குடும்ப அலகினால் மட்டுமே தாங்கிக் கொள்ள வேண்டியுள்ளது.

(iv) இலங்கையின் இனப் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை ரீதியான நடவடிக்கையே தேவைப்படுகின்றது. அதன் மூலம் ஏற்றுக் கொள்ளக்கூடியதொரு ஒருமைப்பாட்டுக்கு வர வேண்டியது அவசியம் அதன்படி இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக் கொடுப்பதுவும் அவசியமாகின்றது.

(v) கட்டுரை எழுதுவோரும் நூல் இயற்றுவோரும் தம் கருத்தைப் பிறர்க்கு உணர்த்துவதையே நோக்கமாக கொள்வர். அவர்கள் எடுத்துக் கொண்ட பொருளுக்கும், தமது நோக்கத்துக்கும் தாம் எழுதியதை வாசிக்கும் மொழியறிவுத் தரத்துக்கும் ஏற்றவாறு மொழி நடையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iv) இங்கு சுற்றுலாத் துறை எவ்விடயத்தை நிரூபிப்பதற்காக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது?

(vii) ஏற்றுமதி வருமானம் மாத்திரம் வீழ்ச்சியடைந்ததென இப்பந்தியில் கூறப்பட்டுள்ளதா?

(viii) இப்பந்தியின் மூலம் முன்வைக்கப்படும் அடிப்படை விடயம் யாது?

(6) பின்வரும் பந்திகள் ஒவ்வொன்றிலும் இடம்பெறும் முக்கிய கருத்தை இயன்றவரை சுருக்கமாக ஒரு வாக்கியமாக எழுதுக.

(i) தொழில், சம்பளம் என்பவை தொடர்பாக உள்ள வேறுபாடுகளை இரு முக்கிய தொகுதிகளின் கீழ் பகுப்பாய்வு செய்து காட்டலாம். அவை அரசாங்கத் துறை, தனியார் துறை என்னும் இரண்டு தொகுதிகளாகும்.

(ii) விரிவாகப் பரந்துள்ள சுகாதாரச் சேவை நிறுவன வலையமைப்பு இலங்கையில் உள்ளது. இந்த வலையமைப்பானது அரசாங்கத் துறையின் தலைமையில் தனியார் துறையின் பங்குபற்றுகையுடன் பராமரிக்கப்பட்டும் செயற்படுத்தப்பட்டும் வருகின்றது.

(iii) இலங்கையில் அதிகரித்து வரும் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கும் சகாயமான போக்குவரத்துக் கட்டணத்தைப் பேணுவதற்கும் புகையிரதச் சேவை பெரிதும் உதவுகின்றது.

(iv) உலகின் பூகோளப் பொருளாதாரத்தில் காணப்பட்ட பின்னடைவு முடிவடைந்துள்ளமைக்குப் பல்வேறு காரணிகள் உள்ளன. எனினும் அவற்றிற்கு எதிராகச் செல்வாக்குச் செலுத்தத்தக்க இடர்களும் உள்ளன.

(v) தீவு என்ற ரீதியில் இலங்கையிடம் உள்ள மிகப் பெரிய, பெறுமதிமிக்க வளம் கடலாகும். எனினும் எமது நாடு இப்பெரிய வளத்திலிருந்து உயர்ந்தபட்ச பயன்களைப் பெற இயலாதுள்ளது.

(7) (அ) பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் இருக்கும் சொற்களிடையே ஒருசொல் பிழையாக எழுத்துக் கூட்டப்பட்டுள்ளது. அச்சொல்லைத் தெரிந்தெடுத்து திருத்தி எழுதுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(i) செங்கோன்மை, சமூகம்தருதல், கண்காட்சி, பரிகாசம்

(ii) வேலைப்பழு, நாசகாரி, பயிரழிவு, இன்சொல்

(iii) தடாகம், தற்சமயம், செளுமை, சாதனை

(iv) சரமாரி, சஞ்சீவி, சித்திரம், கலங்கரைவிளக்கு

(v) பயிர்ச்சி, சாதகம், சுவர்ணபூமி, முயற்சி

(vi) சாரணர், செவ்வி, காய்ச்சல், நீர்க்குமிளி

(vii) செய்யுள் வளக்கு, பழமொழி, நிச்சயம், கார்த்திகை

(viii) குண்டுமணி, கைத்தாளம், செயலாளர், கல்வித் தகைமை

(ix) கோகிலம், பங்குடமை, ஆயுதபாணி, எரிச்சல்

(x) குளப்பம், பாரம்பரியம், கதிரவன், சுக்கிரன்

(ஆ) பின்வரும் வாக்கியங்களில் பிழைகள் இருப்பின், பிழையான சொற்களை மாத்திரம் திருத்தி எழுதுக. வாக்கியம் சரியெனின், சரி என எழுதுக.

(i) திருக்குறளில் இடம்பெறும் ஒவ்வொரு குறட்பாக்களும் கருத்துடையது.

(ii) தொல்பொருள் ஆராய்ச்சியாளர் அகழ்ந்தெடுத்த பொருள்கள் எக்காலத்துக்குரியது எனக் கூறுக.

(iii) நாம் முயற்சி செய்தாலன்றி எமது வாழ்க்கைக்குத் தேவையான நற்பழக்கங்கள் வளரமாட்டாது.

(iv) சாரணர் குழு தொண்டர்களோடு சேர்ந்து தூர்ந்த குளத்தைத் தோண்டினர்.

(v) கல்வித் துறையில் பல மாற்றங்கள் துரிதமாக மேற்கொள்ளப்படுகின்றன.

(vi) பெற்றோர் எவ்வாறு ஒழுகுகின்றனரோ அவ்வாறே பிள்ளைகளும் ஒழுகுவர்.

(vii) உண்ண உணவும் உடுக்க உடையும் இருக்கிறதா?

(viii) அன்று எம்மோடு நீங்களும் உங்கள் பிள்ளைகளும் விருந்துபசாரத்தில் கலந்து கொண்டனர்.

(ix) தமிழ் வளர்ச்சிக் கழகம் குழந்தைகளுக்கான கலைக் களஞ்சியத்தை வெளியிட்டுள்ளது.

(x) நாவலர் எழுதியதாகக் கூறப்படும் இலக்கண நூல்கள் யாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்துக் கொள்வர். பொதுவாக ஒருவரின் மொழிநடை அவரது ஆளுமையின் பிரதிபலிப்பாக இருக்கும்.

(4) பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிந்தெடுத்து, அதனைப் பற்றி உமது கருத்துக்களைப் பகுப்பாய்வு ரீதியாக எடுத்துரைத்து 250 தொடக்கம் 300 வரை சொற்கள் இடம்பெறத்தக்கதாக ஒரு கட்டுரை எழுதுக.

(அ) அரசாங்க சேவையாளரின் பொறுப்பு, வகிபாகம், உரிமைகள் ஆகியன.

(ஆ) இலங்கையில் தொழிலின்மையும், கீழுழைப்பும்

(இ) அந்நியச் செலாவணியை உழைக்கும் வழிவகையாக இலங்கையின் உல்லாசப் பயணத்துறை.

(5) (அ) பின்வரும் உரைப் பகுதியை வாசித்துக் கீழே கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குச் சுருக்கமாக விடை எழுதுக.

உலகப் பொருளாதாரப் பின்னடைவு, செத்தெம்பர் 11 தாக்குதலைத் தொடர்ந்து உலகளாவியரீதியில் ஏற்பட்ட பாதுகாப்புத் தொடர்பான கரிசனைகள், நாட்டில் நிலவிய நீண்டகால வரட்சி, யூலையில் கட்டுநாயக்கா வானூர்தி நிலையத்தில் இடம்பெற்ற பயங்கரவாதிகளின் தாக்குதல், ஆண்டின் பின்னரைப் பகுதியில் காணப்பட்ட உள்நாட்டு அரசியல் குழப்பநிலை என்பன 2001 ஆம் ஆண்டில் இலங்கையின் சென்மதி நிலுவையை மிக மோசமாகப் பாதித்தன. ஏற்றுமதிகள், இறக்குமதிகள் ஆகிய இரண்டும் கடுமையாக வீழ்ச்சியடைந்த வேளையில் சுற்றுலா மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. எனினும் இறக்குமதிகள் விரைவாக வீழ்ச்சி யடைந்தமையால் வெளிநாட்டுநடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை குறைந்தது. வெளிநாட்டு மூலதனக் கணக்கும் நிதிக் கணக்கும் மிகைகளைப் பதிவுசெய்தன. இம்மாற்றங்களைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் கடந்த இரு ஆண்டுகளாகப் பதிவு செய்யப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றாக்குறைகளைத் தொடர்ந்து 2001 ஆம் ஆண்டில் சென்மதி நிலுவையில் உள்ள ஒட்டுமொத்தமான நிலுவை மிகையைப் பதிவுசெய்ததெனினும் இது ஆரம்ப இலக்கினை விட மிகக் குறைவாகவே இருந்தது. இதன் விளைவாக , வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்கங்களும் அதே போன்று நாட்டின் மொத்த ஒதுக்கங்களும் அவற்றின் வீழ்ச்சியடைந்து சென்ற போக்கிற்குமாறாக அதிகரித்து செலாவணி வீதத்தின் மீதான அழுத்தத்தைக் குறைத்தன. 2001 ஜனவரியில் அறிமுகப்படுத்தப்பட்ட சுதந்திரமாக மிதக்கும் செலாவணி வீத அமைப்பின் கீழ் ஆரம்பத்தில் மிகையாக உயர்ந்து பின்னர் உறுதியடைந்த செலாவணி வீதங்கள் படிப்படியாக முன்னேற்றமடைந்ததுடன் முன்னெச்சரிக்கை வழிமுறைகள் நீக்கப்பட்டதன் காரணமாக முன்னோக்கிய சந்தை நடவடிக்கைகளும் அதிகரித்தன. இச் சாதகமான அபிவிருத்திகள் காணப்பட்டபோதும் ஏற்றுமதி வருமானமும் சுற்றுலா வருமானமும் வீழ்ச்சியடைந்தமையால் 2001 ஆம் ஆண்டிற்கான சென்மதி நிலுவை கவலைக்குரிய நிகழ்வுகளைக் காட்டி வெளிநாட்டு அதிர்ச்சிகளினால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டு விடுகின்ற தன்மையைப் பிரதிபலித்த வேளையில் தனியார் மூலதன உட்பாய்ச்சல் வீழ்ச்சியடைந்து வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நலிவுற்ற மனோநிலையை எடுத்துக் காட்டியது.

(i) சென்மதி நிலுவையில் ஏற்பட்ட கவலைக்குரிய எத்தனை நிகழ்வுகள் இங்கு காணப்படுகின்றன? அவை யாவை?

(ii) சுதந்திரமாக மிதக்கும் செலாவணி வீதத்தை அறிமுகஞ்செய்வதற்கும் செலாவண்ி வீதத்தின் ஏற்றவிறக்கத்தைத் தவிர்ப்பதற்கும் மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் நீக்கப்பட்டமையால் செலாவணிச் சந்தைகளில் ஏற்பட்ட சிறப்பியல்புகள் யாவை?

(iii) 2001 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மிகையை இவ்வெழுத்தாளர் எவ்விதமாக நோக்குகின்றார்?

(iv) இறக்குமதிக்கும் நடைமுறைக் கணக்கின் நிலுவைக்குமிடையேயுள்ள காரணகாரியத் தொடர்பு யாது?

(v) 2001 ஆம் ஆண்டில் இலங்கையின் சென்மதி நிலுவையில் தாக்கத்தை ஏற்படுத்திய எத்தனை விடயங்கள் இங்கு காணப்படுகின்றன? அவை எவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாகாண அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில்**
**வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான**
**திறந்த போட்டிப் பரீட்சை – 2014 (2015)**

## மொழித்திறன் – 05

(1) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 200-250 சொற்கள் கொண்ட கட்டுரை ஒன்று எழுதுக.

(அ) விருப்புவாக்குகள் மூலம் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் முறை பற்றிப் பல்வேறுவாதப்பிரதிவாதங்கள் நிகழ்ந்து வருகின்றன. விருப்பு வாக்கு முறையின் பொருத்தப்பாடு. அவற்றின் நிறை குறைகள் பற்றிய ஓர் விளக்கக் கட்டுரை.

(ஆ) நிருவாக முறைமையைப் பன்முகப்படுத்தல் என்ற கொள்கையின் அடிப்படையிலேயே மாகாணசபைகள் முறைமை மத்திய அரசால் அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. அவை பொதுமக்களுக்குத் திருப்தியான சேவை செய்தபோதும் பல சவால்களையும் எதிர்நோக்கவே செய்கின்றன எனும் கருத்துப் புலப்படும் வகையில் ஒரு கட்டுரை வரைக.

(இ) அந்நியச் செலாவணியைப் பெறுவதற்கும். உள்ளூர் வேலைவாய்ப்புகளைப் பெருக்கிக் கொள்வதற்கு சுற்றுலாத்துறை பொருத்தமான ஒன்றாக இருந்த போதும் அது இலங்கையின் சுதேச கலாசாரத்துக்கு எதிரானது என்ற கருத்தும் நிலவுகிறது. எனவே இலங்கையின் விருத்திக்கு உதவுகின்ற அதேவேளையில் சுதேச கலாசாரத்தைப் பாதிக்காத வகையில் சுற்றுலாத்துறையை எவ்வாறு வளர்க்கலாம் என்பது பற்றிய விளக்கக் கட்டுரை.

(ஈ) சினிமாத்துறை அண்மைக்காலங்களில் சிறுவர்களை நோக்கித் திரும்பியுள்ளது. இதுவரை இளைஞர்களதும் வயதானவர்களதும் வாழ்க்கையையே பெரும்பாலும் வெளிக்கொணர்ந்த சினிமாத்துறை தற்போது சிறுவர் பக்கம் திரும்பியுள்ளது. இத்தகைய போக்கை வளர்த்தெடுக்க அரசும் பொதுமக்களும் ஆதரவு நல்க வேண்டும் என்ற வகையில் அமைந்த கட்டுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) கீழே தரப்பட்ட பந்திகளை வாசித்து அவற்றின் கீழ்தரப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.

(அ) பெருமளவு எண்ணிக்கையிலான தனியார்துறைக் கல்வி நிறுவனங்கள் நாட்டில் தொழிற்படுகின்றன. அவற்றுட் சில வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைந்துள்ளதுடன் தொழிற்சந்தையிலான கேள்விக்குப் பொருந்தக் கூடியதாக மாணவர்களைப் பயிற்றுவிக்கின்றன. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகாரமளிக்கப்பட்ட ஒரு சில உள்நாட்டு பல்கலைக்கழகப் பட்டத்தை வழங்கும் தனியார் துறை நிறுவனங்களை அங்கீகரிப்பதில் நிலையானதும், ஒருமைப்பாடுடையதுமான கொள்கையொன்று பின்பற்றப்பட வேண்டியது முக்கியமானதாகும். அதே நேரத்தில் அத்தகைய நிறுவனங்களுக்கு அங்கீகாரமளிப்பது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு அல்லது ஏனைய எந்த அதிகாரசபைக்கும் ஒழுங்கமைப்பு மற்றும் நியமங்களை விதித்தல் ஆகியனவற்றை இயலச் செய்வதுடன் இதனால் கற்கை நெறிகளின் தரத்தையும் பேணக் கூடியதாயிக்கும். சாதாரண மற்றும் உயர்தரப் பரீட்சைகளின் பின்னர் அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் பாடசாலையை விட்டு விலகுவதையும் மற்றும் தற்போதைய பல்கலைக்கழக முறையில் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலே இடம் கிடைக்கக் கூடியதாயிருப்பதையும் கருத்திற் கொண்டு அரசதுறை மற்றும் தனியார் துறை ஆகிய இரண்டிலுமான உயர்கல்வி வாய்ப்புக்களை விரிவுபடுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது.

உலகளாவிய பல்கழைக்கழக கல்வி முறையில் காணப்பட்ட ஆரோக்கியமான முன்னேற்றமானது வழங்கல் முறையொன்றாக தொலைக்கல்வி அல்லது இணையக் கல்வி மூலமாகத் தோற்றம் பெறும் எல்லைகள் அற்ற பல்கலைக்கழக முறையேயாகும். உலகிலுள்ள அனைத்துச் சிறந்த பல்கலைக்கழகங்களும் இம்முறையிலமைந்த கல்வியமைப்பை ஏற்படுத்தியுள்ளமைக்கு செலவு குறைவான தன்மை, மாற்றமடையக் கூடிய தன்மை மற்றும் அதிகளவில் பரந்துள்ளமை ஆகியனவே காரணங்களாகும்.

(i) இப்பந்திக்குப் பொருத்தமான தலையங்கள் இடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) இதன் ஆசிரியர் நிலையானதும் ஒருமைப்பாடுடையதுமான கொள்கை என்று கூறுவதன் மூலம் கருதுவது யாது?

(iii) உலகிலுள்ள சிறந்த பல்கலைக்கழகங்கள் யாவும் தொலைக்கல்வி அல்லது இணையக்கல்வி முறையை ஏன் உருவாக்கின?

(iv) இப்பந்தியில் தனியார் துறை பல்கலைக்கழகங்கள் எத்தனை உள்ளடக்கப்பட்டுள்ளன. அவை யாவை?

(v) பொது மற்றும் தனியார் துறைகள் இரண்டிலும் உயர் கல்வி வாய்ப்பை ஏன் அதிகரிக்க வேண்டும்?

(vi) தொழில் சந்தையின் கேள்விக்கு இணங்க மாணவர்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனங்கள் யாவை?

(vii) கற்கை நெறிகளின் தரத்தைப் பேண யாது செய்ய வேண்டும்?

(viii) தனியார் துறைசார் பட்டம் வழங்கும் நிறுவனங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட நிலையான ஒருமைப்பாடுடைய கொள்கையின் அவசியத்தை ஆசிரியர் என குறிப்பிட்டுக் காட்டுகின்றார்?

(ix) உலகளாவிய பல்கலைக்கழகக் கல்வியின் ஆரோக்கியமான முன்னேற்றத்தை ஆசிரியர் எவ்வாறு குறித்துக் காட்டுகின்றார்?

(x) தொலைக்கல்வி பற்றிய ஆசிரியரது கருத்து யாது?

ஆ. கீழுள்ள பந்தியை வாசித்து அதன் கீழுள்ள கூற்றுக்களுக்கேற்ப "ஆம்" அல்லது "இல்லை" என மட்டும் விடை தருக. உரிய கூற்று சரியாயின் "ஆம்" என்றும் பிழையாயின் "இல்லை" என்றும் உரிய வினா இலக்கங்களுடன் விடை எழுதினால் போதுமானது.

குழந்தைகளுக்கான துணி வகைகள் மற்றும் சிறு பிள்ளைகளுக்கான துணி வகைகளுக்கு சந்தைப் பிரிவுகளில் உயர்வான வாய்ப்புக் காணப்படுவதற்கு, பெற்றோர் மற்றும் உறவினர்கள் கூடிய விலை வீச்சில் அவற்றை அடிக்கடி வாங்குவதே காரணமாகும். இவ்விடயங்களுக்கான நுகர்வோரைக் கவரும் விதத்தில் நவீன வடிவங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். நற்பெயரைக் கட்டியெழுப்பும் முயற்சிகள் மற்றும் கடுமையான ஆதரவு திரட்டுதல் ஆகியன அதிக ஏற்றுமதிக் கட்டளைகளைப் பெறுவதற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியமானவையாகும். துணிகளைத் தேர்ந்தெடுத்தல், விநியோகப் பரம்பல் மற்றும் போட்டித் தன்மையுடைய விலைகள் ஆகியனவும் வெளிநாட்டுக் கேள்வியை கவருவதில் முக்கியமான பங்கை வகிக்கின்றது.

இலங்கையின் ஆடைத் தொழிலின் போட்டித் தன்மையைப் பாதிக்கும் முக்கிய காரணிகளாக குறைந்த உழைப்பு, உற்பத்தியாக்கம் மற்றும் நவீன தொழிநுட்பம் போதியளவில் பயன்படுத்தப்படாமை ஆகியன விளங்குகின்றது. இலங்கையானது குறைந்த உழைப்புச் செலவினால் மட்டும் போட்டிபோட முடியாதென்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. கைத்தொழிலில் மொத்தக் காரணி உற்பத்தியாக்கத்தினை முன்னேற்றுவதற்கே அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும். ஆடைத்துறையின் உற்பத்தியாக்கத்திலான முன்னேற்றமானது, போக்குவரத்து வசதிகள் மற்றும் தங்குமிட வசதிகள் குறைவாகக் காணப்பட்டமையினால் தொழிற்சாலை அலுவல்கள் கடமைக்குச் சமூகமளிக்காமை, போதிய பயிற்சி வழங்கப்படாமை, அடிக்கடி மின்வலு துண்டிக்கப்படுதல் மற்றும் எந்திரங்கள் பழுதுபட்டுப் போதல் போன்ற பல்வேறு காரணிகளால் பாதிக்கப்பட்டிருந்தன.

1 இந்தப் பந்தியில் ஆடைக்கைதொழில் துறையின் உற்பத்தியை முன்னேற்றுவதற்கு தடையாகவுள்ள ஐந்து விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.
2. பெற்றோரும் உறவினர்களும் தமது குழந்தைகளுக்கு விலை குறைந்த ஆடைகளை வாங்கமாட்டார்கள்.
3 ஆடைக் கைதொழில் துறையின் வெளிநாட்டுக் கேள்வியில் செல்வாக்குச் செலுத்தும் இரு காரணிகள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன.
4. தொழிலாளர் வேலைக்குச் சமூகமளிக்காமை எனள்பதற்கு குறைந்த போக்குவரத்து வசதி மட்டுமே காரணமாகும்
5. இந்த பந்தியில் வெளிநாட்டுக் கேள்வியைக் கவருதல் தொடர்பான இரு காரணிகள் தரப்பட்டுள்ளன. ஆடைக் கைத்தொழில் உற்பத்தியுடன் தொடர்புடைய பிரதான தடங்கல், அடிக்கடி மின்வலு துண்டிக்கப்படுதலாகும்.
6. குழந்தைகளதும், பிள்ளைகளதும் ஆடைகளை வடிவமைப்பதில் முக்கியத்துவம் கொடுப்பதே நுகர்வோரைக் கவரும் வழியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. இலங்கையில் ஆடைக் கைத்தொழிலின் போட்டித் தன்மையைப் பாதிக்கும் பிரதான காரணி குறைந்த உற்பத்தியாகும்.
8. குறைந்த உழைப்புச் செலவு உற்பத்தியின் ஊடாக இலங்கை மிக உயர்ந்த போட்டியை எட்டமுடியும்.
9. "அதிக முக்கியத்துவம்" என்ற பதம் உயர்ந்தமட்டக் கேள்வியைக் குறிக்கிறது.

(3) பொருத்தமான விடையைத் தெரிவு செய்து உரிய வினா இலக்கத்துடன் எழுதுக.

அ. பின்வருவனவற்றுள் ஒத்த கருத்துள்ள சொற்கள் இல்லாத தொகுதி எது?

1. அகம், உள், மனம், வீடு
2. திங்கள், சந்திரன், மதி, நிலவு
3. பழம், கனி, காய், வித்து
4. தினகரன், ஞாயிறு, வெய்யோன், பகலவன்

ஆ. சுயாதீனம் என்பதன் எதிர்க்கருத்துள்ள சொல்

1. பராதீனம்
2. சுதந்திரம்
3. கவனயீனம்
4. உதாசீனம்

இ. பண்டைக்காலம் என்பதைப் பிரித்து எழுதினால்

1. பண்டை + காலம்
2. பண் + காலம்
3. பண்டு + காலம்
4. பண்டுக் + காலம்

ஈ. சிலம்பு அதிகாரம் என்பதைப் புணர்த்தினால்

1. சிலம்பு அதிகாரம்
2. சிலப்பு அதிகாரம்
3. சிலப்பதிகாரம்
4. சிலம்பதிகாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. சோலையில் மலர்கள் கமகம என மணம் வீசின. "கமகம" என்பது.

1. இரட்டைக் கிழவி
2. அடுக்குத் தொடர்
3. இணைமொழி.
4. அடுக்கிடுக்குத் தொடர்

(4) சரியான முடிக்குஞ் சொல்லைத் தெரிவு செய்க.

அ. இரை தேடிச் சென்ற மான் கூட்டம் வேடன் விரித்த வலையில்

1. ஆப்பிட்டது
2. சிக்கின
3. அகப்பட்டுக் கொண்டது
4. அகப்பட்டுக் கொண்டன.

ஆ. உன்னாலா அவளாலா இக்கட்டுரை

1. எழுதியது
2. எழுதப்பட்டன.
3. எழதப்பட்டது.
4. எழுதினர்

இ. நாம் எத்துணை அளவிற்கு முன்னேறுகின்றோமோ

1. அந்த அளவிற்கு வெற்றி பெறுவோம்.
2. அந்த அளவில்வெற்றி பெறுவோம்.
3. அந்த அளவிற்கு வெற்றி பெறலாம்.
4. அத்துணை அளவிற்கு வெற்றி பெறுவோம்.

ஈ. பாரதியார் பாடிய பாடல்கள்

1. இன்பமூட்டுவனவாய் இருந்தன.
2. இன்பமூட்டுவதாய் இருந்தது.
3. இன்பமூட்டுவதாய் இருந்தன
4. இன்பமூட்டுவனவாய் இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. தமிழ் நெடுங்கணக்கு ஒழுங்கில் அமைந்த கூட்டம் எது?

1. அன்பு, அறம், ஈட்டி, இன்பம்
2. அன்பு, இல்லம், ஊர், உலகம்
3. கற்பி, காவல், கிளி, கூரை
4. கடை, கீரை, குயில், காடை

ஊ. பின்வருவனவற்றுள் உச்சரிக்கும் போது "ச" ஒலிப்பில் வேறுபடும் சொல் எது?

1. இச்சை
2. அச்சம்
3. பசுமை
4. பச்சை.

(05) அ. பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(i) உற்றார் உறவினர் யாரும் அற்றவர்

1. அகதி
2. அநாதை
3. வறியவர்
4. ஏழை

(ii) ஐம்பதாவது ஆண்டில் கொண்டாடப்படுவது

1. வைரவிழா
2. மணிவிழா
3. பொன் விழா
4. வெள்ளி விழா

(iii) பழிப்பது போலப் புகழ்ந்துரைப்பது

1. வாழ்த்து
2. வசை
3. அங்கதம்
4. விகடம்

(iv) சிங்கத்தின் இளையது குருளை போல மானின் இளையது

1. குட்டி 3. போத்து
2. பறள் 4. குஞ்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(06) உங்களை உங்கள் கிராமத்தின் நலன்புரிச் சங்கத்தின் செயலாளர் எனக் கருதிக் கொண்டு உங்கள் கிராமத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையத்தின் அவசியம் பற்றி பத்திரிகை ஒன்றிற்கு 100 சொற்களில் கடிதம் ஒன்று எழுதுக.

(07) பின்வரும் பகுதியிலுள்ள வாக்கியங்களை இணைத்து தனி வாக்கியமாக எழுதுக.

(i) நாளை விடுமுறை தினம் ஆகும். நாளைக்கு பாடசாலை செல்ல வேண்டிய அவசியமில்லை. நாளைக்கு சினிமா ஒன்றுக்கு செல்லலாம்.

(ii) நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் ஒலிம்பிக் பந்தயங்கள் சர்வதேச புகழ் கொண்ட பல நாடுகளிலும இருந்து பல்வேறு மக்கள் இதனை கண்டு இரசிக்க கூடுவர். இப் பந்தயம் உலகை ஒருங்கிணைக்கும் நிகழ்ச்சி ஆகம்.

(iii) எழுத விரும்பும் கட்டுரைப் பொருளை தெரிந்தெடுக்க வேண்டும். கருத்துக்களை தொகுத்து ஒழுங்குபடுத்த வேண்டும். கட்டுரை சட்டகம் ஒன்றை அமைத்து கட்டுரை எழுத வேண்டும்.

(iv) புவியின் தோற்றுவாய் கடற்பரப்பு கடற்பரப்பின் மீது இருக்கும் காற்று வெப்பமடைவதால் மேலே கிளம்புகிறது அப்பொழுது அந்தக் காலியிடத்தை நோக்கி சுற்றிலுமுள்ள காற்றுவீசுகிறது. காற்று ஒரு சுழற்சியான பாதையை அமைத்து கொள்கிறது.

(v) திருகோணமலையில் ஒரு சமஸ்கிருத சாசனம் கண்டு பிடிக்கப்பட்டது. இச்சாசனம் சில ஆண்டுகளுக்கு முன்பு தான் கண்டுபிடிக்கப்பட்டது. அச் சாசனத்தைக் குளக்கோட்டன் என்ற பெயரில் கோயிலை திருத்தியமைத்த இளவரசனை அடையாளம் கண்டு கொள்ள முடிகிறது.

* * *


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாகாண அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில்**
**வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான**
**திறந்த போட்டிப் பரீட்சை – 2014 (2015)**

**மொழித்திறன்** | **06** | **2 1/2 மணித்தியாலம்**

01 தொடக்கம் 05 வரையான ஒவ்வொரு வினாவிலும் 5 சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றிலுள்ள 2 சொற்கள் ஒத்த கருத்துடையவை, மற்றைய 2 சொற்கள் எதிர்க்கருத்துடையவை. எஞ்சிய சொல்லின் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

1. (1) அவமானம் (2) தோல்வி (3) துணிவு
   (4) வெற்றி (5) தைரியம்

2. (1) வனம் (2) கானகம் (3) புறம்
   (4) மரம் (5) அகம்

3. (1) எதிர்ப்பு (2) உடன்பாடு (3) செயற்கை
   (4) இயற்கை (5) இணக்கப்பாடு

4. (1) மதி (2) நட்சத்திரம் (3) அகம்
   (4) சந்திரன் (5) புறம்

5. (1) மலை (2) ஈரம் (3) ஊர்
   (4) கிராமம் (5) வரட்சி

● 06 தொடக்கம் 10 வரையான ஒவ்வொரு வினாவிலும் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள சோடிச் சொற்களின் தொடர்புகளை அறிந்து அவற்றிற்கு மிகப் பொருத்தமான சோடியை தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

6. பிளிறுதல் - கரி
   (1) சங்கீதம் - குழல் (2) வண்டி - சில்லு
   (3) கனைத்தல் - பரி (4) கிளி - குயில்

7. வட மாகாணம் - கிளிநொச்சி
   (1) பிரான்ஸ் - இத்தாலி (2) பரிஸ் - மொஸ்கோ
   (3) சீனா - பீக்கிங் (4) நல்லூர் - யாழ்ப்பாணம்

8. வாழைப்பழம் - சீப்பு
   (1) மாவட்டம் - மாகாணம் (2) ஜனாதிபதி - நாடு
   (2) உலகம் - பூமி (4) மக்கள் - கண்டம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. தண்ணீர் - பனிக்கட்டி
(1) பால் - தயிர் (2) தயிர் - மோர்
(3) தேனீர் - பால் (4) நெய் - பால்

10. புறக்கணிப்பு - வரவேற்பு
(1) அவமதிப்பு - அவதூறு (2) கறுப்பு - சிவப்பு
(3) தூற்றுதல் - போற்றுதல் (4) தூண்டுதல் - வேண்டுதல்

- 11 தொடக்கம் 15 வரையான வினாக்குளக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.

கீழ்வரும் உருவத்தில் இடமிருந்து வலமாக நான்கு எழுத்துக்களைக் கொண்ட சொற்கள் உருவாக்கப்படலாம். இதற்கு இலகுவாக ஒவ்வொரு சொற்களுக்குமுரிய ஒரு எழுத்து தரப்படுகிறது. அத்துடன் அதற்குரிய மேலதிக விளக்கங்களும் அவ்வினாக்களுக்கு எதிரே தரப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11. | வ | த | ன | ம் | முகம் என்பதற்கு ஒத்த கருத்துள்ள சொல் |
| 12. | ம | | | | ஐவகை நிலங்களில் ஒன்று |
| 13. | | | ற் | | ஒருவரின் வேலைத்திறனை உயர்த்தும் முறைகளில் ஒன்று |
| 14. | | ர | | | இராமாயணப் பாத்திரங்களில் ஒன்று |
| 15. | | | ண | | கற்புக்கரசிக்கு உதாரணம் |

- 16 தொடக்கம் 20 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் 4 சொற்கள் தரப்பட்டுள்ளன. அச்சொற்களில் உள்ள சில எழுத்துக்களை இணைப்பதன் மூலம் புதிய சொல் ஒன்று உருவாக்கப்படலாம். அச் சொற்களில் உள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வினாவின் இறுதியிலும் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளது. அப்புதிய சொற்களை புள்ளிக் கோட்டில் எழுதுக.

16. பகை, பக்தி, தானம், திரி (5) ..........................................
17. நதி, சித்திரம், நட்பு, சதி (7) ..........................................
18. சாலை, களவு, இஞ்சி,கயல் (7) ..........................................
19. சுமை, சுண்ணம், காண்டம், அந்தரம் (8) ..........................................
20. குணம், பணம், கும்பல், கோ (6) ..........................................

- 21 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களில் முதற் சொல்லின் முடிக்கும் பகுதி இரண்டாம் சொல்லினை தொடக்கி வைக்கும் அதனை இனங்கண்டு புள்ளிக் கோட்டில் எழுதுக.

21. நீதி .............................. கம்
22. கவி .............................. காலம்
23. திரு .............................. தல்
24. பரம் .............................. சுவை
25. கும்பிடு .................... து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 26 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையின் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

26. "த்" என்ற எழுத்திற்குரிய மாத்திரை அளவு யாது?
(1) கால் (2) அரை (3) ஒன்று (4) இரண்டு

27. "எடுப்பதூ உம் எல்லாம் மழை" இங்கு "தூஉம்" என்பது
(1) குற்றியலுகரம் (2) உவமானம்
(3) அளபெடை (4) ஒலி

28. பின்வருவனவற்றில் நெடிற்றொடர்க் குற்றியலுகரத்திற்கு உதாரணம் எது?
(1) அடுப்பு (2) ஆறு (3) இரை (4) படை

29. பின்வருவனவற்றுள் கிரந்த எழுத்து எது?
(1) ஔ (2) பௌ (3) ஹ (4) வௌ

30. தமிழில் உள்ள முதல் எழுத்துக்களின் எண்ணிக்கை யாது?
(1) 30 (2) 12 (3) 18 (4) 216

31. அவன் தினந்தோறும் பூப் பறிக்க வருவான். இங்கு "அவன் தினந்தோறும்" என்பது
(1) பெயர்ச் சொல் (2) வினைச்சொல்
(3) இடைச்சொல் (4) தனிச்சொல்

32. "இலாகா" என்ற சொல் எந்த மொழியைச் சார்ந்தது?
(1) தமிழ் (2) கிரேக்கம் (3) அரபு (4) உருது

33. தலைவர் .......................... விளக்கேற்றினார். இங்கு புள்ளிக் கோட்டில் வர வேண்டிய சொல்
(1) மங்கல (2) மங்கள (3) மங்கழ (4) மன்கல

34. "கொஞ்சிக் குலாவி" என்பது
(1) அடைமொழி (2) இணைமொழி
(3) மரபுத் தொடர் (4) உவமானம்

35. "மான் விழி" என்பதில் தொக்கி நிற்கும் உருபு எது?
(1) உவமை உருபு (2) சொல்லுருபு
(3) வேற்றுமை உருபு (4) சாரியை உருபு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. கோபி கத்தியால் வெட்டினாள். இங்கு வந்த "ஆல்" எத்தனையாம் வேற்றுமை?
(1) 1ம் வேற்றுமை (2) 2ம் வேற்றுமை
(3) 3ம் வேற்றுமை (4) 4ம் வேற்றுமை

37. திரிதல் விகாரப் புணர்ச்சிக்கு உதாரணம்
(1) மரம் + வேர் = மரவேர் (2) ஓடி + போனான் = ஓடிப்போனான்
(3) கடல் + நீர் = கடல்நீர் (4) கடல் + கரை = கடற்கரை

38. அமைச்சர்களுக்கு அழைப்புக்கள், கடிதங்கள் அனுப்பும் போது பயன்படுத்தப்படும் மரியாதைப் பதம் பின்வருவனவற்றுள் எது?
(1) அதி உத்தம (2) மேதகு
(3) மாண்புமிகு (4) கௌரவ

39. நடா சாலப் பேசினான் இங்கு "சால" என்பது
(1) பெயர்ச்சொல் (2) வினைச்சொல்
(3) இடைச்சொல் (4) உரிச்சொல்

40. "அடிநாக்கில் நஞ்சும் நுனி நாக்கில் அமிர்தமும்' எனும் பழமொழி உணர்த்தும் சொல்
(1) பகை (2) வஞ்சகம்
(3) ஆபத்து (4) தீங்கு

- 41 தொடக்கம் 45 வரையான வினாக்களுக்கு இடைவெளிகளில் வரவேண்டிய பொருத்தமான விடையை இனம் கண்டு அதற்குரிய இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

41. பாராளுமன்றத்தில் ஆற்றப்படும் உரைகளின் தொகுப்பு .................................. என அழைக்கப்படும்.
(1) பாராளுமன்ற அறிக்கை (2) பாராளுமன்றக் கூட்டத்தொகுப்பு
(3) ஹன்சாட் (4) விவாதத் தொகுப்பு

42. ஒவ்வொரு அமைச்சுக்குள்ளும் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணும்ட நோக்கில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் பத்திரம் .................................. என அழைக்கப்டும்.
(1) சட்டப்பத்திரம் (2) பாராளுமன்றப் பத்திரம்
(3) தீர்வுப் பத்திரம் (4) அமைச்சரவைப் பத்திரம்

43. பல்கலைக்கழகங்களில் உள்ள ஒவ்வொரு பீடங்களுக்கும் .......................... பொறுப்பாக இருப்பார்கள்
(1) விரிவுரையாளர்கள் (2) துணைவேந்தர்கள்
(3) பீடாதிபதிகள் (4) வேந்தர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பாக பொது நிர்வாக மற்றும் நிதி அமைச்சுக்களினால் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு அனுப்பப்படுவது .................. எனப்படும்.

(1) கடிதம் (2) வர்த்தமானி
(3) சுற்று நிருபம் (4) கட்டளை

45. ......... காரணமாக இறக்குமதியாகும் பொருட்களுக்குரிய விலைகள் உயர்ந்துள்ளன.

(1) பணவீக்கம் (2) நாணயப் பெறுமதி ஏற்றம்
(3) நாண்யப் பெறுமதி இறக்கம் (4) பணச்சுருக்கம்

- 46 தொடக்கம் 50 வரையான வினாக்களில் இலக்கண முறைப்படிச் சரியாக எழுதப்பட்ட சொற்களை இனம் கண்டு அவற்றின் இலக்கத்தை புள்ளிக் கோட்டில் எழுதுக.

46. (1) ஆளுனர் (2) ஆலுனர்
(3) ஆழுநர் (4) ஆளுனர்

47. (1) முயற்சி (2) முயற்ச்சி
(3) முயர்ச்சி (4) முயல்ச்சி

48. (1) பயிற்சி (2) பயிற்ச்சி
(3) பயிர்ச்சி (4) பயிச்சி

49. (1) ஆராச்சி (2) ஆராட்சி
(3) ஆராய்ச்சி (4) ஆராட்ச்சி

50. (1) இறச்சி (2) இறைற்சி
(3) இறைச்சி (4) இரச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி - II

- வழங்கப்படும் விடை எழுதும் தாள்களில் எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. "டெங்கை ஒழிப்போம் உயிரைக் காப்போம்" எனும் தலைப்பில் 100 சொற்களுக்குக் குறையாமல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் துண்டுப் பிசுரம் ஒன்று தயாரிக்குக.

2. பின்வரும் பந்தி ஒவ்வொன்றிலும் கூறப்பட்ட மையக் கருத்தை 12 சொற்களுக்கு மேற்படாத வகையில் ஒரு வசனத்தில் சுருக்கி எழுதுவதுடன் தடித்த எழுத்தில் உள்ள சொற்களுக்குரிய பொருளை பந்தியுடன் தொடர்பு படுத்தி விளக்குக.

(அ) இலங்கையில் அடுத்தடுத்து ஒன்றன் பின் ஒன்றாக ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களால் கைக் கொள்ளப்பட்ட **சேமநல நடவடிக்கைகளை** மீள் பகிர்வு நியாயத்தை அடைவதற்கான ஓர் உபாயமாகக் கருத முடியும். இலங்கை சுதந்திரம் அடைந்து கிட்டத்தட்ட ஏழு தசாப்தங்களாகியும் இலங்கையின் வருமானப் பகிர்வு கணிசமான அளவு மாற்றமடையவில்லை. நாட்டினுடைய வருமானத்தில் ஏறத்தாள் 50% க்கு மேற்பட்ட பங்கை மேல் மட்டத்தில் உள்ள 20% மான செல்வந்தர்கள் அனுபவிக்கின்றனர். அதே நேரம் அடிமட்டத்தில் உள்ள 20% மான வறியவர்கள் 4.7% மான வருமானத்தை மாத்திரமே பெறுகின்றனர்.

ஆ. கொலை, களவு, விபச்சாரம் என்பன தலைவிரித்தாடுகிறது என்றெல்லாம் அவை அவ்வாறு நடந்த மாதிரியே பத்திரிகைகளில் சித்தரிக்கப்படுகிறது. ஆனால் அவை எல்லாம் தலைவிரித்தாடுவதற்குரிய மூல காரணத்தை எவரும் முன் வைப்பதாகத் தெரியவில்லை. மக்கள், அரசு, அரசாங்கம், சட்டம் உள்ள நம் தாய் நாடு என நாம் பெருமைப்படக் கூறிக் கொண்டாலும் இறைமையுள்ள அரசிற்குள் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் தொழில் வாய்ப்பு, சேமநலத்திட்டங்களில் நன்மை பெறும் வாய்ப்பு, கடன் வசதிகள் என்பவற்றில் சம சந்தர்ப்பங்கள் வழங்கும் **நல்லாட்சி** நிலவுகிறதா என்பது தான் இங்குள்ள முக்கிய பிரச்சினையாகும். அவ்வாறு சம சந்தர்ப்பம், சம வாய்ப்பு, நிலைமைகள் இல்லாவிடின் வறுமை தலை தூக்கி அதன் மூலம் விரக்தியின் விளிம்புக்கு அம் மக்கள் தள்ளப்பட்டு கொலை, களவு, விபச்சாரம் போன்ற செயல்களில் அவர்களை ஈடுபடச் செய்கிறது. ஆகவே வறுமையை ஒழிக்கும் வகையில் நல்லாட்சி ஒன்று ஏற்பட கொலை, களவு, விபச்சாரம் என்பன படிப்படியாகக் குறைவடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பின்வரும் உரைப் பந்தியை வாசித்து அதனை 35 சொற்களுக்கு மேற்படாதவாறு சுருக்கி எழுதுவதுடன் பொருத்தமான தலைப்பையும் இடுக.

"கலாச்சாரச் சீரழிவு" என்பது ஒரு சமூகத்தின் சமூக விழுமியங்களை அல்லது சமூகப் பெறுமானங்களைச் சீர்குலைக்கும் செயற்பாடு எனப் பொதுவாகக் கூறப்பட்டாலும் அதனைச் சீர் செய்வது எவ்வாறு என்பதில் தெளிவான, சிந்தனை ரீதியிலான . தர்க்க ரீதியான முடிவுகள் எவையும் சரியான முறையில் முன் வைக்கப்படவில்லை என்பது தான் தற்போதைய பிரச்சனையாகும்.

உண்மையில் இப் பிரச்சனையைத் தனி ஒரு மனிதனாலோ, சமூகத்தாலோ அல்லது சட்டத்தினாலோ தீர்க்க முடியாது. அவ்வாறு தீர்க்க முனைதல் என்பது நிலைமையை மேலும் மோசமாக்கும் என்பதுடன் அவ்வாறு தீர்க்க முனைபவர்களுக்கு ஆபத்தையும் ஏற்படுத்தலாம். ஏனெனில் எல்லாவற்றிலும் சமூக உணர்வு என்பதிலும் பார்க்க வியாபாரம் மற்றும் பணச் சுரண்டல் மேலோங்கியுள்ளது.

எனவே ஒவ்வொரு மனிதனும் எப்போது சிந்தனையுடனும் சுயகட்டுப்பாட்டுடனும், சுயமரியாதையுடனும் ஒரு கௌரவமான சமுதாய விழுமியங்களுடன் வாழப் பழகிக் கொள்கிறானோ அன்றிலிருந்து தான் ஒரு சமூகத்தின் கலாச்சாரத்தை தக்க வைக்க முடியும். இதை விடுத்து மேடைப் பேச்சுக்கள் மற்றும் சந்தர்ப்பவாதக் கருத்துக்கள் எவையும் சீரழியும் கலாச்சாரத்தை சீர்செய்யாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாகாண அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில்**
**வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான**
**திறந்த போட்டிப் பரீட்சை – 2014 (2015)**

மொழித்திறன் | 06 | 2 1/2 மணித்தியாலம்

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 1 | 21. | பதி | 41. | 2 |
| 2. | 4 | 22. | தை | 42. | 4 |
| 3. | 1 | 23. | மலர் | 43. | 2 |
| 4. | 2 | 24. | பல் | 44. | 3 |
| 5. | 1 | 25. | கை | 45. | 1 |
| 6. | 2 | 26. | 2 | 46. | 1 |
| 7. | 2 | 27. | 1 | 47. | 1 |
| 8. | 1 | 28. | 2 | 48. | 1 |
| 9. | 1 | 29. | 3 | 49. | 3 |
| 10. | 2 | 30. | 2 | 50. | 3 |
| 11. | வதனம் | 31. | 3 | | |
| 12. | மருதம் | 32. | 3 | | |
| 13. | முயற்சி | 33. | 2 | | |
| 14. | பரதன் | 34. | 2 | | |
| 15. | கண்ணகி | 35. | 3 | | |
| 16. | பத்திரிகை | 36. | 3 | | |
| 17. | நட்சத்திரம் | 37. | 4 | | |
| 18. | களஞ்சியம் | 38. | 4 | | |
| 19. | சுந்தர காண்டம் | 39. | 4 | | |
| 20. | கும்பகோணம் | 40. | 2 | | |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுரையாக்கம்

இப்போட்டிப் பரீட்சையில் மொழித்திறன் பகுதியில் இடம்பெறும் கட்டுரை எனும் தலைப்பில் பரீட்சாத்திகள் பின்வரும் தலைப்புகளைக் கொண்ட விடயங்களில் கட்டுரை வரைவதற்கு தம்மை தயார் படுத்திக் கொள்ளுதல் வேண்டும். மேலும் மாகாண ரீதியான போட்டிப் பரீட்சையாகையால் மாகாண ரீதியான அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாகவும் கூடியளவு கவனம் செலுத்துதல் வேண்டும்.

இதற்கென இந்நூலில் சில கட்டுரைகள் தரப்பட்டிருப்பினும் கூட தரப்படாத ஏனைய தலைப்புகள் தொடர்பாக மாணவர்கள் சுயமாக பயிற்சி செய்தல் வேண்டும்.

- அரச ஊழியரும் அரச நிர்வாகமும்
- நிர்வாக நடவடிக்கைகளில் முகாமைத்துவ உதவியாளரின் வகிபாகம்
- அரச நிர்வாகத்தை மேம்படுத்துவதில் தகவல் தொழிநுட்பத்தின் பங்கு
- நல்லாட்சியும் அதன் கோட்பாடுகளும்
- காலநிலை மாற்றங்களும், அதன் தாக்கங்களும்
- உலகளாவிய பொருளாதார நெருக்கடிகளும், அதன் தாக்கங்களும்
- அசாதாரண நிலைமைகளின் பின்னர் மாகாண அபிவிருத்தியின் முன்னேற்றம்
- ஊடகம், மனித உரிமைகள் என்பவற்றின் முக்கியத்துவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லாட்சி என்பது ஒரு அரசாங்கததின் செயற்பாடு தொடர்பாக மட்டுமே ஏற்புடையதல்ல. என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டிய பிரதானமான விடயமாகும். குறிப்பிட்டதொரு தனிநபரொருவரின் தன்மையினுள், மத குடும்ப அலகினுள் கிராமத்தில் தாபிக்கப்பட்டுள்ள பல்வேறு சமூக அமைப்புக்களினதும் அமைப்புகளினுள், தொழில் நிலையத்தினுள் பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் பல்வேறு அமைப்புகளிலுள்ள பாடசாலை, பல்கலைக்கழகம், பயிற்சி நிறுவனம் அல்லது பாடசாலையின் வகுப்பறையினுள் மற்றும் எந்தவொரு இடத்திலும் காணப்பட வேண்டியதாக எதிர்பார்க்கப்படுகின்ற ஆக்க ரீதியிலானதொரு செயற்பாடாகும். இதற்கமைய, தனிநபரொருவரிடம் காணப்படுகின்ற நேரிடையான நடத்தைக் கேற்ப அவர் சார்ந்துள்ள அமைப்பும், அந்த அமைப்பின் சாதகமான நிலைப்பாட்டினூடாக தனிநபரும் பரஸ்பரம் வளர்க்கப்படுவர்.

அரசாங்கம் என்பது ஆட்சியின் பொருட்டு பயன்படுத்தப்படுகின்ற கருவி என David Osborne மற்றும் Ted Gaebler என்பவர்களால் முன்னர் குறிப்பிட்டுள்ளது. தேசிய அல்லது உள்நாட்டு மட்டத்திலான கண்ணோட்டமே இந்த வரைவிலக்கணத் திற்கு அடிப்படையாக அமைந்துள்ளது. மனித இனத்திற்குஏற்படுகின்ற எந்தவொரு பிரச்சினையையும் தீர்ப்பதற்கு அல்லது ஆரம்பநிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலையிலான தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவதற் கென உருவாக்கப்பட்டுள்ள அமைப்பின் ஊடாக, மேற்படி குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்வதற்கு கடைப்பிடிக்கப்படுகின்ற அங்கீகரிக்கப்பட்ட செயன் முறையே நல்லாட்சியாகும். எளிமையானதொரு உதாரணத்தின் மூலம் தெளிவுபடுத்துவதாயின் "ஒரு கூட்டுறவுச் சங்கத்தின்" ஆரம்பகர்தாக்களும் உரிமையாளர்களும் அதன் அங்கத்தவர்களே. சனநாயக அங்கத்துவ ஆட்சி யொன்றும், தன்னார்வ மற்றும் திறந்த அங்கத்துவம், அங்கத்தவரின் பொருளாதார பங்கேற்பு, இறைமைத் தன்மை மற்றும் சுயாதீனம், கல்வி, பயிற்சி மற்றும் தகவல், கூட்டுறவுச் சங்கங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பு, சமுதாயம் தொடர்பில் கவனம் செலுத்துதல் ஆகிய ஏழு கூட்டுறவுக் கோட்பாடுகளுக்கு அமைவாக ஏதேனுமொரு கூட்டுறவு சங்கம் செயற்பாடுமெனின் நல்லாட்சி கோட்பாடுகளை மீண்டும் மீண்டும் நினைவூட்ட வேண்டிய தேவை இருக்காது. மேற்படி கோட்பாடுகளை இனங்கண்டு பொது இணக்கப்பாட்டுடன் செயற்படுவதன் மூலம் கூட்டுறவுக்கே உரிததான பொதுப்பெறுமானங்களைப் பாதுகாத்து செயற்படுவதே எதிர்பார்க்கப்படுகின்றது.

மேற்படி பெறுமானங்களை உறுதிசெய்கின்ற வகையில் கௌரவ சேவையின் கௌரவத்தை பாதுகாப்பதற்கு பணிப்பாளர் சபையினால் இயலுமாயிருப்பின் நல்லாட்சி காணப்படுவதாக சங்கத்தின் தரப்பினர்கள் திருப்திக்கும், மகிழ்ச்சிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளாவார்கள். அவர்களின் ஆயுட்காலத்தினுள் எதிர்பார்ப்புக்கள் குன்றுகின்ற நிலைமைக்கு உள்ளாக மாட்டார்கள். மனஸ்தாபம், பொறாமை, குரோதம், பழிவாங்கல் போன்ற பாதகமான பெறுபேறுகளை அனுபவிக்க நேரிடாமையின் காரணமாக நிம்மதியை உணர்வார்கள்.

நல்லாட்சிக் கோட்பாடுகளுக்கமைய செயலாற்றியதன் மூலம் குறுகியதொரு காலத்தினுள் முன்னுதாரணமான விதத்தில் அபிவிருத்தியடைந்த ஒரு நாடு சிங்கப்பூர் ஆகும். ஒரு நாடு மற்றும் தேசம் என்ற வகையில் அந்நாட்டின் அபிவிருத்தி முயற்சியினுள் "நல்லாட்சிக்கு" பின்வருமாறு பொருள்கோடப்படு கின்றது. "ஆட்சி என்பதன் மூலம் அரசாங்கம் நாட்டை முகாமைத்துவம் செய்கின்ற முறையே கருதப்படுகின்றது. நல்லாட்சி என்பது பொதுமக்களின் மேம்பாட்டிற்காக விளைவுத்தாக்கம் மிக்க விதத்தில் நாட்டை ஆட்சி செய்தலாகும்"

ஐக்கிய நாடுகள் அமைப்பின் முன்னாள் செயலாளர் நாயகமான கொபீ அன்னன், "சிலவேளை வறுமையை ஒழித்து அபிவிருத்தியை உயர் மட்டத்தில் கொண்டு வருவதற்கான ஒரேயொரு முக்கியமான காரணியாக நல்லாட்சி அமையலாம்". எனக் கருத்துத் தெரிவிக்கின்றார்.

அதேவேளை சர்வதேச அமைப்பொன்றான Child Helpline International நிறுவனம் நல்லாட்சி தொடர்பில் இவ்வாறானதொரு கருத்தை தெரிவிக்கின்றது.

குறிப்பிட்டதொரு அமைப்பின் அதிகாரம் மற்றும் மேலாண்மையை பகிர்ந்து பயன்படுத்தும் முறையுடன் தொடர்புடைய சம்பவமே ஆட்சியாகும். மேற்படி அதிகாரம் தனியொருவரிடம் அல்லது ஒரு குழுவினரிடம் திரட்சியடையா திருப்பதை உறுதி செய்தலே நல்லாட்சியாகும். இதன் பொருட்டு அமைப்பின் பல்வேறு பிரிவுகள் மற்றும் நபர்களுக்கிடையே அதிகார சமநிலை பரிசீலிப்புக்கு உள்ளாக்கப்படும். திருத்தங்களைச் செய்தலும் பொறுப்புக்களைத் தெளிவாக நிர்ணயித்தலும் இடம்பெறும். தனிநபர்களின் அல்லது குறிப்பிடப்பட்டதொரு குழுவின் எதிர்பார்ப்புக்களையன்றி நிறுவனத்தின் செயற்பணியில் குறிப்பிடப் பட்டுள்ள தேவைப்பாடுகளை நிறைவு செய்யும் பொருட்டு வளங்களை விளைவுத் தாக்கமிக்க விதத்தில் ஈடுபடுத்துகின்ற முக்கியமான கடமைப்பொறுப்பு நிறுவனத்தின் செயலாற்றுகைக் கட்டமைப்பினால் நிறைவேற்றப்படும்.

மேற்படி கருத்தின் பிரகாரம் "நல்லாட்சி" சிறந்த முகாமைத்துவமாகும் என்பது தெளிவாகின்றது. தனது வாழ்க்கையை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்வதன் மூலம் வெற்றிகரமான ஒரு நபராக ஆகலாம். அத்தகைய வெற்றிகரமான நபர்களின் ஒன்றுகூடலின் ஊடாக வெற்றிகரமான அமைப்பு களையும், அவற்றின் ஒன்றுகூடலின் மூலம் வெற்றிகரமானதொரு நாட்டையும், தேசத்தையும் அந்த ஒன்றுகூடலின் ஊடாக வெற்றிகரமானதொரு உலகையும் உருவாக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லாட்சி என்பது சமூக ரீதியிலான நடவடிக்கைகளையும் பிரச்சினைகளையும் முகாமைத்துவம் செய்யும் பொருட்டு நிறுவன வளங்களையும் அரசியல் அதிகாரத்தையும் பயன்படுத்துகின்ற செயற்பாடாகும் என உலக வங்கி கருத்துத் தெரிவித்துள்ளது. நல்லாடசியை ஒரு செயற்பாடென்ற வகையில் இனங்காண்பதில் பல்வகைத்தன்மை காணப்படுவதைப் போன்றே அதன் கோட்பாடுகளும் பல்வேறு விதத்தில் இனங்காணப்பட்டுள்ளதைக் காணலாம்.

## நல்லாட்சிக் கோட்பாடுகள்

ஐக்கிய அமைப்பு 1997 ஆம் ஆண்டில் 05 தொனிப்பொருள்களின் கீழ் 10 நல்லாட்சிக் கோட்பாடுகளை சுட்டிக்காட்டியுள்ளது. எவ்வாறாயினும் நல்லாட்சிக் கோட்பாடுகள் தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்பபட்ட ஒரு முறை கிடையாது என்பதைச் சுட்டிக்காட்டுதல் வேண்டும். உலகிலுள்ள எண்ணிலடங்கா அமைப்புகளின் குறிக்கோள்களும் எண்ணிலடங்காது, பல்வேறானது. குறிப்பிட்ட ஒரு அமைப்பு சிறப்பியல்பாயுள்ள நல்லாட்சிக் கோட்பாடுகள் சில அந்த அமைப்பினால் இனங்காணப்பட்டிருக்கலாம். நல்லாடசியின் ஒரேயொரு மற்றும் இறுதியான குறிக்கோள் நன்மையை உருவாக்குதலாகும். ஆதலால் பல்வகைத் தன்மையினுள் காணப்படுகின்ற ஒரு முகத்தன்மையை உறுதி செய்து நல்லாட்சிக் கோட்பாடுகள் ஒன்றுடனொன்று மோதுகின்ற சந்தர்ப்பங்களும் மிகைத்து நிற்கின்ற சந்தர்ப்பங்களும் காணப்படும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் மூலம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள நல்லாட்சிக் கோட்பாடுகள் பின்வருமாறு :

| | |
|---|---|
| A | சட்ட ரீதியான தன்மையும் பிரதிநிதித்துவமும்<br>1. பங்கேற்பு<br>2. பொது இணக்கப்பாட்டுக்கு தயாராகுதல். |
| B | திசைமுகப்படுத்தல்.<br>3. மூலோபாய ரீதியிலான தொலைநோக்கு |
| C | செயலாற்றுகை<br>4. இணங்கியொழுகல் மற்றும் பிரதிபலிப்புக்காட்டல்<br>5. வினைவுத்தாக்கம்<br>6. வினைத்திறன் |
| D | பொறுப்புக்கூறும் தன்மை<br>7. வகைப்பொறுப்புக்கூறல் (பொறுப்பு வகிக்கும் தன்மை)<br>8. பகிரங்கத்தன்மை |
| E | சாதாரணத்துவம்<br>9. சமத்துவம்<br>10. சட்டத்தின் ஆதிக்கம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நல்லாட்சிக் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தல் பல்வேறுபட்ட சமூகப் பின்னணிகளுக்கேற்ப பல்வேறு இயல்புகளைக் கொண்டதாக அமையலாம்.

மேற்படி விடயத்தை எளிமையானதொரு விளக்கத்தினூடாக புரிந்து கொள்வதற்கு முயற்சிப்போம்.

## 1. பங்கேற்பு

ஏதேனுமொரு அமைப்பில் அங்கத்துவம் வகிக்கின்ற அங்கத்தவர் ஒருவருக்கு தம்மில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றதான தீர்மானம் எடுக்கும் செயற்பாடுகளைப் போன்றே நடைமுறைச் செயற்பாடுகளின் போது பங்கேற்பும் அபிவிருத்தியின் பெறுபேறுகளைப் பெறுவதில் நியாயமான வாய்ப்பும் கிடைத்தல் தொடர்பில் அநேகமான உரையாடல்களைக் காணலாம். குறிப்பிட்டதொரு அரசாங்கத்தின், மகாண சபையின், உள்ளூராட்சி நிறுவனத்தின் கூட்டுறவுச் சங்கத்தின் அல்லது கிராம அபிவிருத்தி, சமுர்த்தி போன்ற கிராம மட்டத்திலான ஓர் அமைப்பின் செயற்பாடுகளின் போது பங்கேற்பு மிக முக்கியமாகின்றது. அங்கத்தவரின் வாக்குரிமையின் பலத்தை ஒரு சிறு குழுவுக்கு மட்டுப்படுத்தி அவர்களை வெறுமனே பார்வையாளர்களாக ஆக்குதல் பங்கேற்பாகாது.

## 2. பொது உடன்பாட்டுக்கு இயைபாக அமைதல்

குடும்ப அலகு முதல் எந்த வடிவத்திலான ஒரு அமைப்பிலாயினும் பொதுப் பங்கேற்பின்படி முகாமைத்துவ நடவடிக்கைகள் நடைபெறுதல் வேண்டுமென்பது தெளிவானதொரு விடயமாகும். அப்போதுதான் எல்லாத் தரப்பினர்கள் வெற்றியாளர்களாக ஆவார்கள். பிரதேச அபிவிருத்தித்திட்டமொன்றி லாயின் அதன் பிரதிபலன்களை பெரும்பாலானவர்கள் அனுபவிக்கக்கூடியவாறு அபிவிருத்தியின் கட்டங்களை முன்னுரிமையின் அடிப்படையில் அமைத்து நடைமுறைப்படுத்தல் அவசியமாகும்.

பொது இனக்கப்பாடானது முரண்பாடுகளை குறைக்கின்ற ஒற்றுமையையும், சமானத்தையும் உச்சமடைய செய்கின்ற சுபீட்சத்தை உருவாக்குகின்ற ஒரு பொறி முறையாகும்.

## 3. மூலோபாய ரீதியிலான தொலைநோக்கு

வெற்றியடைந்த மனிதர்கள் யாவரும் தமது எதிர்கால தொலைநோக்கை அடையப்பெறும் பொருட்டு சுயமுகாமைத்துவத்தின் ஊடாக பல்வேறு அனுபவங்களைப் பெற்றுள்ளனர். தொழில்முயற்சி நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள், சமூக சேவை நிறுவனங்கள் அதே போன்று அரசு துறை அமைச்சுக்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைக்களங்கள் மற்றும் இணைந்த நிறுவனங்கள் தாபிக்கப்படுவதில் ஏற்றுக் கொள்ளப்பட்ட குறிக்கோள் ஒன்று காணப்படும். அத்தொலைநோக்கை யதார்த்தமாக மாற்றுகின்ற நோக்கத்துடன் அனைத்து வளங்களையும் முகாமைத்துவம் செய்தல் தொடர்ச்சியானதொரு செயற்பாடாகும். அச்செயற்பாடானது மூலோபாய ரீதியிலானதொரு திட்டத்தின் பிரகாரம் வழிநடத்தப்படும். இனங்காணப்பட்ட இறுதி இலக்கை நோக்கிச் செல்வதற்கு தெரிவுசெய்யப்பட்டவழி, கட்டங்களின் எண்ணிக்கை, வேக எல்லைகள், முன்னோடிகள் மற்றும் சூழவுள்ளவர்கள் வளப்பயன்பாடு மற்றும் காலங்களை நிர்ணயித்தல் என்பவை இத்திட்டத்தில் உள்ளடங்கும்.

## 4. இணங்கியொழுகல் மற்றும் பிரதிபலிப்புக்காட்டல்

ஒரு அமைப்பின் இலக்குகள், சேவை நிபந்தனைகள், சட்ட விதிகள், யாப்பியல் நடைமுறைகள், முறைமைகள் மற்றும் செயற்பாடுகள் பொது இணக்கப்பாட்டின் கீழ் பேணி வரப்படும். அதற்கிணங்குகின்றவாறு அலுவல்கள் நடைபெறாதிருப்பின் முகாமைத்துவச் செயற்பாட்டில் தடைகள் ஏற்படும். மாற்றங்கள், திருத்தங்கள் தேவைப்படுகின்ற போது பிரேரணையொன்றின் மூலம் பொது உடன்பாட்டுடன் நடைமுறைப்படுத்தப்படுதல் அத்தியாவசியமாகும். அத்தகைய பிரேரணைகள் தொடர்பில் உடனடியாகக் கவனம் செலுத்தி, அவை ஆட்சியில் பிரதிபலிப்புக் காட்டும் தன்மையை உறுதி செய்வதற்கான நடவடிக்கை களை மேற்கொள்வதன் மூலம் பங்காளர்களின் நம்பிக்கையை வென்றெடுதது ஊக்குவிப்பை மேற்கொள்ளலாம்.

## 5, 6. விளைவுத்தாக்கமும் வினைத்திறனும்

ஒரு நிறுவனத்திற்குச் சொந்தமாயுள்ள அனைத்து வளங்களிலிருந்தும் உயர்ந்தபட்ச பயனைப் பெறுவதும், அந்தந்தச் சந்தர்ப்பங்களில் தீர்க்க வேண்டிய பிரச்சினைகள் அல்லது தேவைகள் தொடர்பில் முழுக் கவனத்தையும் செலுத்தி திட்டவட்டமான தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தலும் இதன் மூலம் எதிர்பார்க்கப் படுகின்றது.

## 7. வகைப்பொறுப்புக் கூறல்

சமூகத்தில் வசிக்கின்ற ஒவ்வொரு நபருக்கும் ஒரு பொறுப்பு உள்ளது. சேவை நிலையத்திலுள்ள ஒரு அலுவலர் அந்நிறுவனத்தின் பல்வேறான தரப்பினர்கள் தொடர்பில் பொறுப்புடன் செயற்பட வேண்டிய விதம் அவரது சேவை ஒப்படைப்பில் காட்டப்பட்டுள்ளது. மக்கள் பிரதிநிதியானவர் தனக்கு அந்த வரத்தைப் பெற்றுத் தந்த வாக்காளர்களுக்கே பொறுப்புக் கூற வேண்டி யுள்ளார். அது வாக்காளர்களின் எதிர்பார்ப்புகள் தொடர்பில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு தம் மீது வைத்துள்ள நம்பிக்கையை உறுதி செய்தலாகும். தனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஜமான் வாக்காளர் ஆகுமென்பதும், தாம் அவர்கள் சார்பில் கௌரவ சேவையை ஆற்றும் ஒருவராகும் என்பதுமான பொறுப்புக் கூறும் தன்மை உள்ளத்தில் பதிந்திருத்தல் வேண்டும். இதற்கமைய அர்ப்பணிப்புடன் சேவையாற்றுதல் வேண்டும். வெற்றியளிக்காமை தொடர்பில் பொறுப்பேற்றல் வேண்டும். வகைப்பொறுப்புக் கூறல் என்பது அதுவாகும். அரசாங்க அலுவர் ஒருவர் தொடர்பில் வகைப் பொறுப்புக் கூறல் கட்டாயமானதொரு கடப்பாடாகும் என்பதைக் கூறுதல் வேண்டும். பொதுமக்களால் ஏற்கப்பட்ட வரிச் சுமையின் மீது கல்வியையும் அதனூடாக அரச தொழிலுக்கான வாய்ப்பையும் பெற்ற அரசாங்க ஊழியர்கள் பொதுமக்களுக்கு வகைப்பொறுப்புக் கூறும் கடப்பாடுடையவர்களாவர். அரச சேவையில் ஈடுபட்டு திரண்ட நிதியத்திலிருந்து கிடைக்கின்ற சம்பளத்தின் மூலமே அவர்கள் தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்கின்றனர். அரசாங்க ஊழியர் ஒருவர் என்ற வகையில் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற பொது நிதி உள்ளிட்ட அனைத்து வளங்களினதும் உரிமை யாளர்கள் அந்நாட்டின் பிரசைகளே. அத்தகைய முகாமைத்துவம் பொதுமக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற வகைப்பொறுப்புக் கூறல் என்பதையும் தாம் அதன் தற்காலிக பாதுகாவலர் என்பதையும் புரிந்து கொண்டு சேவையில் ஈடுபடுதல் வேண்டும்.

## 8. பகிரங்கத்தன்மை

தாம் உரிமையாளரல்லாத, வளங்களைக் கையாள்வதற்குச் சந்தர்ப்பம் கிடைத்த ஒரு அலுவர், அரசியல்வாதி அல்லது பிரதிநிதி தனது செயல்கள் பற்றிய அறிக்கைகளைப் பேணிவருதல் வேண்டும். அவ்வளங்களின் உண்மையான உரிமையாளர்கள் அதனை முகாமைத்துவம் செய்த விதத்தை வெளிப்படையாகக் காண்பதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும். வங்கியுடன் பணக் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுகின்ற ஒரு வாடிக்கையாளருக்கு தாம் வங்கியில் வைப்பிலிட்டுள்ள பணத்தொகை, மாதாந்த திரண்ட வட்டித் தொகை, மிகையூதிய வட்டி, சேவைக் கட்டணமாக அறவிடப்பட்டுள்ள தொகை, மீளப்பெறப்பட்ட பணத்தொகை மற்றும் எஞ்சியுள்ள பணத்தொகை ஆகிய விபரங்களை அச்சந்தர்ப்பத்திலேயே அறிந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படுகின்றது. அதனுள் காணப்படுகின்ற பகிரங்கத்தன்மை பற்றி அவர் திருப்தியடைவாராயின் பிரச்சினைகள் எழாது. அரசாங்கம், அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகிய அனைத்தும் இந்த நியதியைப் பேணுதல் வேண்டும். வருடாந்த வரவு-செலவு மதிப்பீட்டைத் தயாரித்தல், திட்டமிடல்களுக்கேற்ப செலவு செய்தல், பௌதீக முன்னேற்றத்தை உறுதி செய்தல், வரவு செலவு தொடர்பான கால அடிப்படையிலான அறிக்கைகளைத் தயாரித்தல், தொடர்புடைய தரப்பினர்களுக்கு சரியான தகவல்களை வழங்குதல் ஆகிய செயற்பாடுகள் பகிரங்கத்தன்மையைப் பேணிவருவதற்கு உறுதுணையாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. சமத்துவம்

ஒரு நாட்டின் அரசியலமைப்பின் மூலம் அந்நாட்டு பிரசைகளின் உரிமைகளைப் பேணிப்பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இனம், மதம், சாதி, குலம், ஆண்-பெண், சிறுவர், முதியோர், வலது குறைந்தோர் மற்றும் நகரம்- கிராமம் என்றவாறு பாரபட்சம் காட்டலுக்கு மனித இனம் உள்ளாகா திருப்பதை உறுதி செய்தல் சமத்துவத்தைப் பேணலாகும். அவ்வாறின்றேல் மனித உரிமை மீறலுக்கு வழி பிறக்கும். தனிநபர் திறமைகள் மற்றும் பல்வகைத் தன்மைக்கு ஏற்ப தம் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு அனைவருக்கும் சமமான வாய்ப்பளித்தல் ஒரு அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

## 10. சட்டத்தின் ஆட்சி

சனநாயக ஆட்சி முறையின் அடிக்கற்கள் சட்டவாக்கத்துறை, வேற்றுத் துறை மற்றும் நீதித்துறை ஆகியனவாகும். நாட்டில் வசிப்போர்களது அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்து, அமைதியான வாழ்க்கைச் சூழலொன்றை ஏற்படுத்துவதற்கு நீதித்துறை சுயாதீனமாக இயங்குதல் மிக முக்கியமானதாகும். சட்டம் அனைவருக்கும் சமமானதாயிருத்தல் வேண்டும் என்பதும், அதில் பலசாலிகள், செல்வந்தர்கள், வன்முறையாளர்கள், பண்பாட்டுக்கு எதிரானவர்கள் ஆகியோருக்கு இடைவெளியிருக்கக் கூடாதென்பதும் அடிப்படைக் கோட்பாடாகும்.

சட்ட ரீதியான நிறுவனங்களின அங்கீகரிக்கப்பட்ட சட்ட விதி முறைமைகள் தொடர்பில் உரிய தரப்பினர்கள் விழிப்புணர்வைப் பெற்றிருத்தல், அதற்கமைய செயலாற்றுவதாக இணக்கப்பாட்டுக்கு வருதல், நீதியை நடைமுறைப்படுத்தும் போது முரண்பாடுகள் ஏற்படாமல் இருப்பதில் கவனம் செலுத்துதல் ஆகியன சட்டத்தின ஆட்சியைப் பேணுவதற்குத் தேவையான அடிப்படை விடயங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசாங்க ஊழியரின் வகிபாகம்

பொது நடத்தை

அரச அலுவலர் ஒருவரின் சேவை அரசாங்கத்துக்கு தேவைப்படுமிடத்து அவர் எச்சந்தர்ப்பத்திலும் எப்பொழுதிலும் அரசுக்கு சார்பாக செயற்படுதல் வேண்டும். அலுவலர் ஒருவரைக் கொண்டு நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமென அரசு கருதுமிடத்து எந்தவொரு கடமையையும் நிறைவேற்றுமாறு பணிக்கப்பட்டால் அவ் அலுவலரால் அக்கடமை வினைத்திறனோடும் சுறுசுறுப்புடனும் நிறைவேற்றப்படல் வேண்டும். அலுவலர் ஒருவர் நிதி ஒழுங்குவிதி கோவையினதும் தாபன விதிக் கோவையினதும் ஏற்பாடுகளையும் சுற்றறிக்கை மதியுரைகளையும் வேறு திணைக்களங்களின் கைந்நூல் மற்றும் மதியுரைக் கோவைகளின் ஏற்பாடுகளையும் அவதானமாக வாசித்து விளங்கி அவற்றைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

அலுவலர் ஒருவர் எச்சந்தர்ப்பத்திலும் தான் வகிக்கும் பதவிக்கு ஏற்ற வகையிலேயே செயற்படுதல் வேண்டும். அலுவலர் அரச சேவையை அல்லது தான் வகிக்கும் பதவியை அவமதிப்புக்குட்படுத்தத் தூண்டும் எந்தவொரு செயலையும் செய்தல் ஆகாது. அரசாங்க அலுவலர் ஒருவர் அவ்வாறான ஒரு செயலைச் செய்யின் அவரின் மிக நெருங்கிய தலைவர் அல்லது மற்றுமொரு அதிகாரியினால் மேற்போந்த அலுவலர் பணிபுரியும் அமைச்சின் செயலாளருக்கோ அல்லது அவரின் ஒழுக்காற்று அதிகாரிக்கோ தாமதமின்றி அது பற்றி அறிக்கையிடல் வேண்டும்.

அலுவலர் ஒருவர் தனது தனிப்பட்ட கருமங்களுக்கும் அரச கருமங்களுக்கும் இடையில் முரண்பாடுகள் தோன்றக் கூடிய எந்தவொரு செயலையோ அல்லது உத்தியோகபூர்வ நடவடிக்கைகளுக்கு இடைஞ்சல்களை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு செயலையோ செய்தலாகாது. அவர் எப்போதிலும் அத்தகைய முரண்பாடுகளோ அல்லது தடைகளோ ஏற்படுவதற்கு இடமளிக்காத வண்ணம் நடந்து கொள்ளல் வேண்டும். அவர் விசேடமாக தாபன விதிக்கோவையின் XXIX ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளை மிக அவதானமாகக் கடைப்பிடித்தல் வேண்டும்.

அரச சேவையின் நியமனங்கள் பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் தொடர்பில் அலுவலர் ஒருவர் நேரடியாகவோ அல்லது பிற நபர்கள் மூலமாகவோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்ட ரீதியற்ற வகையிலான உதவி கோருதலானது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவோ அல்லது அரசியலமைப்புச் சட்டத்தின் 60 ஆவது இலக்க சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு வழக்குத் தாக்கல் செய்யத் தூண்டும் துர்நடத்தையாகக் கருதப்படும். அலுவலர் ஒருவர் முறைதவறிய நலன்களைப் பெற வேண்டி கடமைகளைப் பரிமாறிக் கொள்ளவோ அல்லது அதற்கு முயற்சித்தலோ அவருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்குக் காரணமாக அமையும்.

அலுவலர் ஒருவர் பொதுமக்களுடன் கண்ணியமான முறையில் நடந்து கொள்ள வேண்டும். கடமைகளின் நிமித்தம் அரசாங்க அலுவலகங்களுக்கு வருகின்றவர்களுக்கு தயங்காது உதவி புரிதல் வேண்டும். தனது கடமைகளின் போதும் கடிதத் தொடர்புகளின் போதும் ஒழுக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும். கடிதத் தொடர்புகளின் போதும் அலுவலகப் பதிவுகள் மற்றும் அறிக்கைகளை எழுதும் போதும் உத்தியோகத்தர் பண்பாடானதும் ஒழுக்கமுடையதுமான மொழி வடிவை பயன்படுத்த வேண்டும். அலுவலரொருவர் பொதுமக்கள் தருமக்கொடை நிதிகளுக்காக தனது கீழ் ஊழியர்களிடமிருந்து பணம் சேகரிப்பதில் நேரடியாக ஈடுபடவோ அல்லது தன் கீழ் ஊழியர்களிடமிருந்து பணம் சேகரிக்க தன் குடும்பத்தவர்களுக்கு இடமளித்தலோ செய்யப்படலாகாது.

அலுவலரொருவரால் அலுவலக நேரத்தின் போதும் அதற்கு அப்பாற் பட்ட நேரத்திலும் செயலாளரின் விசேட அனுமதியின்றி தனிப்பட்ட கருமங்கள் எதற்கும் ஊழியர் ஒருவரை ஈடுபடுத்துவதும் அரச சொத்துக்களை பயன்படுத்துவதும் முழுமையாக தடை செய்யப்பட்டதாகும். செயலாளரின் விஷேட முன்னங்கீகாரமின்றி அரசுக்கு பொருட்களை விற்பனை செய்யவோ அல்லது அவற்றின் மாதிரிகளை சமர்ப்பிக்கவோ எந்தவொரு அலுவலரும் முயலக்கூடாது.

அலுவலரொருவர் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது அல்லது கடமையில் ஈடுபட்டுக் கொண்டிராத போது பணியாற்றும் அலுவலகச் சுற்றாடலில் அல்லது மற்றுமொரு அரச நிறுவனத்தில் குடிபோதையில் இருத்தல் அல்லது அத்தகைய இடமொன்றில் அலுவலர் ஒருவரிடமிருந்து மது அருந்திய நாற்றம் வீசுவது அல்லது நச்சுப் போதைப் பொருட்களை பாவித்திருத்தலானது பாரிய துர்நடத்தையாகும். அத்தகைய சந்தர்ப்பமொன்றில் சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவரும் சம்பந்தப்பட்ட ஒழுக்காற்று அதிகாரியும் அவ்வலுவலகருக்கு எதிராக கட்டாயமான முறையில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிபோதையில் இருந்தமை அல்லது மதுநாற்றம் வீசிக் கொண்டிருந்தமை தொடர்பில் மேற்கொள்ளப்படும் முறைசார் ஒழுக்காற்று விசாரணையொன்றின் போது அக்குற்றம் செய்யப்பட்டுள்ளதாக நிரூபிப்பதற்கு பதவிநிலை மட்டத்திலான அலுவலர்கள் இருவரின் சான்றுகள் போதுமானதாவதுடன் அந்த முறைசார் ஒழுக்காற்று விசாரணை மூலம் அவர் குற்றவாளியென தீர்மானிக்கப்பட்டால் அவ் அலுவலரை பதவி நீக்கம் செய்யவோ இக் கோவையின் 24.3 ஆம் உட்பிரிவின் கீழ் காட்டப்பட்டுள்ள பாரிய தண்டனையொன்றை விதிக்கவோ ஒழுக்காற்று அதிகாரிக்கு அதிகாரம் உண்டு. மேற்கூறியவற்றில் குற்றமொன்றுக்கு இரண்டாம் தடவையும் குற்றவாளியாகும் அலுவலரொருவர் கட்டாயமாக பதவி நீக்கம் செய்யப்படுவார். நச்சுப் போதைப் பொருட்கள் பாவிக்கப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படும் ஓர் அலுவலர் அக்குற்றத்தை புரிந்துள்ளார் என அரச மருத்துவ அலுவலரொருவர் அல்லது சட்ட மருத்துவரொருவரின் அறிக்கை மூலம் நிரூபணமாதல் வேண்டும். முறை சார் ஒழுக்காற்று விசாரணை மூலம் அலுவலர் அக்குற்றத்தை புரிந்துள்ளாரென நிரூபிக்கப்பட்டால் அவர் கட்டாயமாக பதவி நீக்கத்துக்க ஆளாவார்.

நன்றி

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
தாபன விதிக்கோவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளச்சார்பு மேலதிக வினா கட்டமைப்புக்கள்

மேற்படி போட்டிப் பரீட்சைக்கு உளச்சார்பு வினாத்தாளும் இடம்பெறுவதால் அது தொடர்பாக மாணவர்கள் பூரணமானதும் முழுமையானதும் பயிற்சியைப் பெறுதல் வேண்டும். இவ்வினாத்தாளானது, மத்திய அரசாங்கத்தினால் அதாவது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் வினாக் கட்டமைப்புக்களை விட சற்று வேறுபட்டனவாகும்.

அவ்வகையில் இம்மாகாண போட்டிப் பரீட்சையில் உளச்சார்பு வினாத்தாள் தொடர்பாக பரீட்சார்த்திகள் பின்வரும் விடயங்கள் தொடர்பாக மிகக் கூடுதலான கவனம் செலுத்த வேண்டுமென அறிவுறுத்தப்படுகின்றனர். இவை கடந்த காலங்களில் மாகாண மட்டத்தில் நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சை வினாத்தாள்களின் தன்மையைக் கருத்திற் கொண்டே ஆராயப்பட்டுள்ளது.

- எண் கோலங்கள்
- உருக்கோலங்கள்
- ஆங்கில எழுத்துக் கோலங்கள்
- எண்நெய்யரியில் விடுபட்ட இலக்கங்களைக் கண்டறிதல்
- இரகசியக் குறியீட்டுத் திறன் - எண்கள், உருக்கள், வாக்கியங்கள்
- கணித வினாக்கள்
- உறவு முறைகள்
- விடயம் ஒன்று தரப்பட்டு அதனூடாக கட்டமைக்கப்படும் கணித வினாக்கள்
- வேறுபட்ட உருவை இனங்காணல் - கட்புலனறிவு
- மொழித்திறன் வினாக்கள்

இவை தொடர்பான மேலதிக வினாக்கட்டமைப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாகாண அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில்**
**வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான**
**திறந்த போட்டிப் பரீட்சை – 2014 (2015)**

## உளச்சார்பு – 04

- 01 முதல் 10 வரையான வினாக்கள் கீழ்வரும் பந்தியை அடிப்படையாகக் கொண்டவை. தரவைக் கிரகித்து வினாக்களுக்கான விடைகளை எதிரேயுள்ள புள்ளிக் கோட்டில் எழுதுக.

A, B, C, D, E, F ஆகியோர் குறித்த தொடர்மாடியில் வசிக்கின்றனர். இவர்களுள் மூன்று எழுதுனர், ஒரு வைத்திய நிபுணர், ஒரு பொறிவலர், ஒரு வணிகர் அடங்குவர். இவர்களுள் இரு பெண்களும் இரு தம்பதிகளும் உள்ளனர். F என்பவர் வைத்திய நிபுணராவார். அவர் திருமணம் செய்த மகன், C என்பவருடன் வாழ்கிறார். D என்பவர் எழுதுநராவார். அவருடைய கணவர் தமது தந்தையாரைக் கவனித்து வருகிறார். A தமது வியாபார நோக்கங்களுக்காகத் தமது மனைவியின் உதவியை நாடுவார். இவரது வாகனத்தில் E யும் உடன் செல்வார். E யும் Aயின் மனைவியும் ஒரே இடத்தில் வேலை செய்கின்றனர்.

01. இவர்களுள் பொறிவலர் யார்? (..............................)

02. A யின் மனைவி யார்? (..............................)

03. இவர்களுள் எழுதுநர்கள் யாவர்? (..............................)

04. திருமணம் செய்யாத எழுதுநர் யார்? (..............................)

05. இவர்களுள் இரு தம்பதியரும் யாவர்? (..............................)

06. வணிகரின் மனைவி யார்? (..............................)

07. ஆண் எழுதுநர் / எழுதுநர்கள் யார்? யாவர்? (..............................)

08. பெண் எழுதுநர் / எழுதுநர்கள் யார்? யாவர்? (..............................)

09. C யின் கணவன் / மனைவி யார்? (..............................)

10. B என்பவர் திருமணமானவரா / தனியாளா? (..............................)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 11 முதல் 20 வரையான வினாக்கள் கீழ்வரும் பந்தியை அடிப்படையாகக் கொண்டவை. விடைகளை வினாக்களுக்கெதிரேயுள்ள புள்ளிக் கோட்டில் எழுதுக.

யாழ்ப்பாணத்திற்கும் வவுனியாவுக்குமிடையேயான தூரம் 90 மைல்கள். தனியார் பேருந்து ஒன்று இத்தூரத்திற்கான ஒரு வழிச்சேவையை 2 3/4 மணித்தியாலத்தில் பூர்த்தி செய்கின்றது. பேருந்துகள் காலை 4.30 முதல் 8.30 வரை வவுனியாவிலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் ஒவ்வொரு 30 நிமிட இடைவெளியில் சேவையை ஆரம்பிக்கின்றன. இப்பேருந்து சேவை ஒரே தனியார் கம்பனியினாலேயே நடாத்தப்படுகின்றது. ஒவ்வொரு ஒரு வழிச்சேவை முடிவுறும் பேருந்துகள் 45 நிமிடம் ஓய்வில் இருக்கும்.

11. ஒரு நாளில் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்கு எத்தனை சேவைகள் இடம்பெறும்? (..............................)

12. வவுனியாவிலிருந்து காலை 5.00 மணிக்குப் புறப்பட்ட பேருந்து இயந்திரக் கோளாறு காரணமாக 50 நிமிடங்கள் தாமதமானது. இப் பேருந்து புறப்பட்டது முதல் யாழ்ப்பாணம் சென்றடைய எடுத்த நேரத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து எத்தனை பேருந்துகள் புறப் பட்டிருக்கும்? (..............................)

13. யாழ்ப்பாணத்திலிருந்து காலை 9.00 மணிக்குப் புறப்பட்ட பேருந்தை வவுனியாவிலிருந்து புறப்பட்ட எத்தனை பேருந்துகள் வழியில் சந்திக்கும். (..............................)

14. இப்போக்குவரத்துச் சேவையை நடாத்துவதற்குக் குறைந்தபட்சம் எத்தனை பேருந்துகள் இக்கம்பனிக்குத் தேவை? (..............................)

15. காலை 5.30க்குப் புறப்படும் பேருந்து அன்றைய தினம் குறைந்தபட்சம் எத்தனை சேவைகளை மேற்கொள்ளும்? (..............................)

16. காலை 4.30க்கு யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா புறப்பட்ட பேருந்து ஒவ்வொரு சேவைக்கும் ரூபா. 1500/= வருமானமாகப் பெற்றால் அன்றைய தினம் அப்பேருந்து மூலம் பெறப்பட்ட வருமானம் எவ்வளவு? (................ ..........)

17. பேருந்துகள் வந்த சேர்ந்த ஒழுங்கில் மறுநாள் பிரயாணத்தை ஆரம்பித்தால் அதுவரை எவ்வளவு நேரம் தொடர்ந்து தரித்திருக்கும்? (..............................)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. வவுனியாவிலிருந்து புறப்படும் எத்தனை பேருந்துகள் இரவு 6.30இன் பின் யாழ்ப்பாணத்தை வந்தடைகின்றன? (..............................)

19. யாழ்பாணத்திலிருந்து புறப்படும் கடைசிப் பேருந்து வவுனியா சென்றடைந்ததும் பேருந்துத் தரிப்பிடவாசல் கதவு மூடப்பட்டுக் காலை முதலாவது பேருந்து சேவைக்காக பேருந்து சேவை ஆரம்பிப்பதற்கு 5 நிமிடத்திற்கு முன் வாசல் கதவு திறக்கப்படும் எனில் தரிப்பிடக் கதவு தினமும் எத்தனை மணிநேரம் மூடப்பட்டிருக்கும். (..............................)

20. ஒவ்வொரு தடவையும் பேருந்துகள் உட்செல்லும் போதும் வெளிச் செல்லும் போதும் வாயிலில் உள்ள தடைக்கம்பு ஒரு தடவை உயர்த்தப் பட்டு, மூடப்பட்டு வந்தல் அது தினமும் எத்தனை தடவைகள் உயர்த்தப்படும்? (..............................)

- 21 முதல் 30 வரையான வினாக்களுக்கு கீழ்வரும் எண் சட்டங்களைப் பயன்படுத்துக.

இவ் எண்சட்டங்கள் குறித்த ஒரு கோலத்தில் அமையும் வகையில் ஒவ்வொரு வரிசையினதும் ஒவ்வொரு நிரலினதும் கூட்டுத்தொகை சமமாக அமையும் வகையிலும் கிடையாக அல்லது நிலைக்குத்தாக ஒவ்வொரு வரிசையிலும் அல்லது நிரலிலும் ஒரே எண் ஒரு தரத்திற்கு மேல் இடம்பெறாத வகையிலும் ஆக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 2 | 1 | 6 |
| 3 | 5 | 1 |
| 4 | 3 | 2 |

| | | | |
|---|---|---|---|
| 6 | 3 | 5 | 2 |
| 3 | 7 | 1 | 5 |
| 5 | 1 | 7 | 3 |
| 2 | 5 | 3 | 6 |

| | | | | |
|---|---|---|---|---|
| A | 3 | 1 | B | 10 |
| 5 | 9 | C | 6 | D |
| E | 5 | 11 | 2 | F |
| 3 | G | H | 9 | 4 |
| 7 | K | 8 | J | 6 |

இதற்கமைய கீழ்வரும் குறியீடுகள் ஒவ்வொன்றும் குறித்து நிற்கும் எண்ணை அவ்வவ் வெழுத்துக்கு நேரே புள்ளிக்கோட்டில் எழுதுக

21. A:............ 22. B:............ 23. C:............ 24. D:............

25. E:............ 26. F:............ 27. G:............ 28. H:............

29. J:............ 30. K:............



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. ஒருவர் ஒரு வாரத்தில் அலுவலகமொன்றில் காலை 8.30 முதல் மாலை 4.15 வரை கடமையாற்றுகிறார். மதியம் 30 நிமிடங்கள் உணவிற்காக ஓய்வு பெறுகிறார். ஞாயிற்றுக்கிழமை ஓய்வு நாளெனில் அவர் வாரத்தில் எத்தனை மணித்தியாலங்கள் வேலை செய்கிறார்? (..........................)

32. ஒரு வட்டத்தின் விட்டம் மூன்று மடங்கானால் அதன் பரப்பு எத்தனை மடங்காகும்? (..........................)

33. 34 பேர் உள்ள ஒரு வரிசையில் A ஆரம்பத்திலிருந்து 12 ஆவதாகவும் Bமுடிவிலிருநது 12 ஆவதாகவும் காணப்பட்டால் A யிலிருந்து B எத்தனையாவதாக உள்ளார்? (..........................)

34. குறித்த ஒரு எண்ணினால் 1594, 1706, 1810 என்பன பிரிக்கப்பட்டபோது ஒரே மீதி வந்தது எனில் அம்மீதி யாது? (..........................)

35. ஒருத்தன் 4 ஆண்டுகளுக்குப் பின்னர் தனது மகனின் வயதின் நான்கு மடங்கு வயதைக் கொண்டிருப்பான். 7 ஆண்டுகளுக்குப் பின்னர் தனது மகனின் வயதின் மூன்று மடங்கிலும் 3 ஆண்டுகள் கூடிய வயதைக் கொண்டிருப்பான். அவனது தற்போதைய வயதென்ன? (..........................)

36. ஒரு அரைவட்டத்தின் விட்டம் 14cm அதன் சுற்றளவு என்ன? (..........................)

37. 5 x 3m தரை ஒன்றின் நடுவில் 460 x 276cm பரப்பளவு எஞ்சியிருக்குமாறு மீதித் தரைக்கு 12 x 10cm அளவுள்ள எத்தனை ஓடுகள் பதிப்பதற்குத் தேவை? (..........................)

38. பூச்சியம் அடங்காதவாறு 200க்குக் குறைவான மூன்று இலக்க எண்கள் எத்தனை உள்ளன? (..........................)

- 39 முதல் 40 வரையான வினாக்களுக்கு பின்வரும் பந்தியை அவதானிக்குக.

X, Y ஆகிய நகரங்களுக்கிடையேயுள்ள தூரத்தைச் சைக்கிளில் செல்வதிலும் நடந்து செல்ல இருமடங்கு நேரம் எடுக்கிறது. அரைவாசித் தூரத்தை நடந்தும் மீதியை சைக்கிளிலும் செல்ல 01 மணித்தியாலம் எடுக்கிறது. X, Y இன் இடைத்தூரம் 10km எனின்

39. சைக்கிளின் வேகம் என்ன? (..........................)

40. நடப்பவரின் வேகம் என்ன? (..........................)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பின்வரும் வினாவிற்கு தரவின் அடிப்படையில் விடையளிக்குக.

  எல்லா மனிதர்களும் நல்லவர்கள்

  எந்த நல்லவரும் கருமிகள் அல்ல

41. மேற்படி தரவுகளில் இருந்து பெறக்கூடிய சரியான முடிவு எது?
    (i) சில கருமிகள் மனிதர்கள் ஆவர்
    (ii) எந்த கருமிகளும் மனிதர்கள் அல்ல
    (iii) சில கருமிகள் நல்லவர்கள் அல்ல
    (iv) எல்லா நல்லவர்களும் மனிதர்கள் ஆவர் (..............................)

42. மாணவர் ஒருவர் 100 என்ற எண்ணில் எத்தனை தடவை 10ஐ நீக்க முடியும்? (..............................)

43. குறித்த ஒரு மாதத்தினுள் வரமுடியாத தினம் எது?


| | |
|---|---|
| (1) 17 சனி | (2) 12 செவ்வாய் |
| (3) 01 வெள்ளி | (4) 28 வியாழன் |

(..............................)


44. மணிக்கு 100 கி.மீ உச்ச வேகத்தில் ஓடக்கூடிய பேருந்து ஒன்று 06 பேரை ஏற்றிச்செல்லும். ஆட்களின் தொகையை அதிகரிக்க அதிகரிக்க ஒரு நபருக்கு மணிக்கு 2km வீதம் வேகம் குறைவடையும். 03 பேரை ஏற்றிச்செல்லும் போது அதன் வேகம் என்ன? (..............................)

45. நேற்றுக்கு முந்தைய நாளுக்கு முந்திய நாள் ஞாயிறு எனின் நாளைக்கு மறுதினத்துக்கு அடுத்த நாள் என்ன கிழமை? (..............................)


- 46 முதல் 50 வரையான வினாக்களுக்குரிய விடையை குறித்து நிற்கும் உருவின் எழுத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக.




உரு (i)




உரு (ii)



உரு (iii)



உரு (iv)



உரு (v)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46. ஆண்கள், நிர்வாகிகள், தமிழர்கள் (..............................)

47. அரச அலுவலர், பெண்கள், வேலையற்றோர் (..............................)

48. மாணவர்கள், பெண்கள், மகளிர் பாடசாலை மாணவிகள்(..............................)

49. பெண்கள், சேலை அணிந்துள்ள பெண்கள், பட்டுச்சேலை அணிந்துள்ள பெண்கள் (..............................)

50. பெண்கள், மனைவிக்கு பயந்தவர்கள், பயந்தவர்கள் (..............................)

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில்
## வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான
## திறந்த போட்டிப் பரீட்சை – 2014 (2015)

**உளச்சார்பு** | **05** | **1 மணித்தியாலம்**

- 01 தொடக்கம் 10 வரையான வினாக்களில் ? என அடையாளம் இடப்பட்ட இடத்தில் வரவேண்டிய இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

1. 2, 3. 5, 6. 8, 9, ? ( ..................... )


2. 118, 199. 226, ? 238 ( ..................... )

3. 5. 11, 24. 52, ? 240 ( ..................... )

4. 2700. 180, ?, 0.8 ( ..................... )


5. ? 2. 5. 9. 14, 20 ( ..................... )

6.




( ..................... )

7.




( ..................... )

8.





( ..................... )

9.

| | | | |
|---|---|---|---|
| 12 | 36 | 6 | 2 |
| 8 | 72 | 9 | 1 |
| 13 | 3 | 4 | ? |

( ..................... )

10.




( ..................... )




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


- கீழே உதாரணத்தில் காட்டியவாறு ஆங்கில எழுத்துக்கள் ஏதோ ஒரு வகையில் எண்களுடன் தொடர்புபட்டு ஒவ்வொரு சொற்களுக்குமான எண் பெறுமானங்கள் தரப்பட்டுள்ளது. அத் தொடர்பைக் கண்டறிந்து 11 தொடக்கம் 15 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.


உதாரணம் : APPLE = 85 MALINI = 104


11. TABLE = ....................
12. LION = ....................
13. PAPER = ....................
14. GOAT = ....................
15. BALAN = ....................


- பின்வரும் இரகசியக் குறியீடுகளைப் பயன்படுத்தி 16 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக. விடைகள் யாவும் இரகசியக் குறியீட்டிலேயே அமைதல் வேண்டும்.





16.  = ..........................

17.  = ..........................

18.  = ..........................

19.  = ..........................

20.  = ..........................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● பின்வரும் அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள எண்களுக் கிடையிலான தொடர்புகளை அவதானித்து K,L,M,N.P ஆகிய எழுத்துக்களுக்குரிய எண் பெறுமானங்களை முறையே 21 தொடக்கம் 25 வரையான வினாக்களுக்கு எதிரே எழுதுக.

21. K =

22. L =

23. M =

24. N =

25. P =

| I | | II | | III | | IV | | V | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| K | 9 | 5 | 25 | 7 | 49 | 9 | 81 | 11 | 121 |
| 42 | 21 | 60 | L | 88 | 44 | 45 | 90 | 154 | 77 |
| 45 | 24 | 65 | 35 | M | 51 | 54 | 99 | 165 | P |
| 69 | | 100 | | 146 | | N | | 253 | |

26. தாயின் வயது மகளின் வயதின் மூன்று மடங்காகும். 12 வருடங்களின் பின் தாயின் வயது மகளின் வயதின் இரு மடங்காக இருக்கும். இவர்களின் தற்போதைய வயது முறையே என்ன?

27. A, B, C ஆகிய மூன்று சிறிய வான்களில் 100 அரிசி மூடைகள் ஏற்றப்பட்டன. வான் A யில் வான் B யிலும் பார்க்க 5 அரிசி மூடைகள் கூடுதலாகவும் வான் C யிலும் பார்க்க 3 அரிசி மூடைகள் கூடுதலாகவும் இருந்தன. எனின் வான் B யில் எத்தனை அரிசி மூடைகள் இருந்தன?

28. ரூபா 480 என விலை குறிக்கப்பட்ட ஒரு புத்தகம் குறிப்பிட்ட ஒரு கழிவில் விற்கப்படுகிறது. புத்தகத்தின் கொள்விலை ரூபா 300 ஆகும். இக் கொள்விலை மீது வியாபாரி பெற்ற இலாபம் 36% ஆகும். எனின் குறிப்பிடப்பட்ட கழிவு வீதம் என்ன?

● பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 29ம், 30ம் வினாக்களுக்கு விடையளிக்குக.

நந்தனின் தோட்டத்தில் கடந்த நிஷா புயல் காரணமாக 60 வாழை மரங்கள் நாசமாகின. அத்துடன் நாசமான வாழைகளின் எண்ணிக்கையில் 20% மான பப்பாசி மரங்களும் நாசமான பப்பாசி மரங்களின் 2/3 பங்கு தென்னை மரங்களும் நாசமாகின.

29. நாசமாகிய மரங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

30. தோட்டத்தில் இருந்த இம் மூன்று வகை மரங்களினதும் மொத்த எண்ணிக்கை 320 எனின், நாசமான மொத்த மரங்களின் வீதம் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31 கனகாவின் பண்ணையில் சில மாடுகளும் சில கோழிகளும் வளர்க்கப்படுகின்றன. இவை எல்லாவற்றினதும் மொத்தத் தலைகள் 20 ஆகவும். மொத்தக் கால்கள் 48 ஆகவும் இருந்தது. எனின் பண்ணையில் இருந்த மொத்த மாடுகளின் எண்ணிக்கை யாது?

32. தர்சி ஒரு நாளில் செய்யும் வேலையை தர்சினி 2 நாட்களில் செய்வாள். அதே வேலையை 3 பயிற்சியாளர்கள் ஒரு நாளில் செய்வர். அவ்வாறாயின் 12 பயிற்சியாளர்கள் ஒரு நாளில் செய்யும் வேலை தர்சி எத்தனை நாள் வேலைக்குச் சமனாகும்?

33. மாலதி கணக்குப் பாடத்தில் மந்தம் அவளின் வகுப்பில் 40 மாணவர்கள் கல்வி கற்றனர். மாலதியை விட்டு ஏனைய மாணவர்கள் கணக்குப் பாடத்தில் பெற்ற சராசரிப் புள்ளி 70 ஆகும். மாலதியைச் சேர்க்கும் போது அவர்களின் சராசரிப் புள்ளி 69 ஆகியது. அவ்வாறாயின் அவள் கணக்குப் பாடத்தில் பெற்ற புள்ளி யாது?

34. முருகேசு டாக்டர் ஒருவர் நோயாளி ஒருவருக்கு 6 குளிசைகளைக் கொடுத்து அரை மணி நேரத்திற்கு ஒரு முறை 2 குளிசைகளை உட்கொள்ளுமாறு கொடுத்தார். முழு குளிசைகளையும் விழுங்குவதற்கு நோயாளிக்கு எடுக்கும் நேரம் யாது?

35. இரு எண்களின் கூட்டுத்தொகை 12 ஆகவும் அவ்விரு எண்களினதும் வர்க்கங்களின் கூட்டுத்தொகை 74 ஆகவும் இருக்கும் எனின், அவ்விரு எண்களும் யாவை?

- 36 தொடக்கம் 40 வரையான வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

  எழுதுனர் பரீட்சைக்கு விடையளிக்கும் மாணவர்களுள் கருணன் கண்ணனைவிட அதிகமாக எழுதி கமலனுக்கு பின் பரீட்சை நிலையத்தைவிட்டு வெளியேறுகின்றான். வண்ணன் கருணனை விட அதிகமாகவும் கமலனைவிட குறைவாகவும் எழுதி கருணனுக்கு பின்பாகவும் மன்னனுக்கு முன்பாகவும் வெளியேறினான். வருணன் முருகனைவிட குறைவாக ஆனால் கமலனை விட அதிகமாக எழுதி மன்னனுக்கு பின்பாக வெளியேறுகிறான். கண்ணன் வானவனைவிட அதிகமாக எழுதி கமலனுக்கு முன்பாக வெளியேறுகிறான்.

36 பரீட்சை நிலையத்தை விட்டு முதலில் வெளியேறியவர் யார்? ..........................................

37. இறுதியாக வெளியேறியவர் யார்? ..........................................

38. மிகக் குறைவாக எழுதியவர் யார்? ..........................................


39. மிக அதிகமாக எழுதியவர் யார்? ..........................................

40. மேலே தரப்பட் எட்டுப் பரீட்சாத்திகளுள் ஏழுபேரின் விடைத்தாள்கள் அவற்றின் அளவீட்டில் ஒப்பிடலாம். ஒப்பிட முடியாத பரீட்சாத்தியின் பெயர் என்ன?. ..........................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41.



இவ்வரைபடத்தில் எத்தனை சதுரங்கள் அடையாளம் காணலாம்?

..............................................................................


• 42 முதல் 45 வரையான ஒவ்வொரு வினாவிலும் உள்ள ஐந்து உருவங்களுள் நான்கு உருவங்கள் ஏதோ ஒரு வகையில் ஒத்தவை. வித்தியாசமான உருவங்களின் எண்ணை புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

42.



(1) (2) (3) (4) (5)

43.



(1) (2) (3) (4) (5)

44.



(1) (2) (3) (4) (5)

45.



(1) (2) (3) (4) (5)

• தரம் 9 வகுப்பில் உள்ள ஐந்து மாணவர்களான A, B, C, D, E ஆகியோர் ஒரு பரீட்சை எழுதினார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் பெற்றோருக்க தாம் பரீட்சையில் எத்தனையாம் மாணவன் என இரு வசனங்களில் கடிதம் எழுதினார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் எழுதிய வசனங்களில் ஒன்று பொய் மற்றையது உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A : D இரண்டாவது நான் மூன்றாவது

B : நான் முதல் C இரண்டாவது

C : நான் மூன்றாவது எனது நண்பன் B கடைசி

D : நான் இரண்டாவது E மூன்றாவது

E : நான் நான்காவது A முதலாவது

அவர்கள் உண்மையில் பெற்ற இடங்கள் எவை எனக் குறிப்பிடுக.

46. A = ....................................

47. B = ....................................

48. C = ....................................


49. D = ....................................

50. E = ....................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Rs. 400.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org